Azim Premji Foundation

# திசைமானி

ஒன்று கூடிய பயணம்

THISAIMAANI | VOLUME : 2 | ISSUE : 1 | AUGUST 2019

## ஆண்டு மலர் 2019







**EVS TEACHING**

**LEARNING CULTURE IN THE CLASSROOM**

**WORKING TOGETHER AS A SCHOOL COMMUNITY**



Working together as a school community
Learning culture in the classroom
Education philosophy to practice
Teaching ideas, projects, TLMs, assessments
















# Introduction

Medaiyil Thisaimani is an annual seminar, a platform for teachers and educators to share and discuss their classroom experiences and what they were able to achieve, reflect upon the practices and areas in which they faced challenges, and plan on what they intend to do differently in the future.

The April 2019 session of Medaiyil Thisaimaani, held in Kodaikanal, witnessed a wide range of presentations in various themes and included teaching ideas, projects, and assessment ideas for Language Math and EVS. Papers were also presented in the themes of learning culture in the classroom, Working as a school community emphasizing the importance of integrating the school and the community and other general factors that play a part in student learning and development. Stage presentations, classroom videos, and TLM exhibits were some of the modes through which teachers presented at the seminar.

Two plays, ‘Rose’ and ‘Pirambu upadesam’, were enacted by the teachers in the course of the seminar. These plays dealt with issues about the effects of ‘fear’ in the classroom and child centric education.

In this edition of Thisaimani, we present the papers from ‘Medaiyil Thisaimani – April 2019’, that focus on EVS teaching (activity based EVS classrooms, classroom experiences), Learning culture in the classroom (Democratic classroom culture, inclusive practices in a classroom), Working as a school community (Role of community in school development, Working along with the community, Role of SMC and PTA meetings), and other articles relating to School and classroom development.

We hope you enjoy reading these engaging articles written by teachers and get to learn new things which can help you improve your own teaching experience.

மேடையில் திசைமானி ஆண்டுக்கருத்தரங்கமானது, ஆசிரியர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் தங்களது கற்பித்தல் சாதனைகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கும், தாங்கள் எதிர்கொண்ட கல்விசார் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதற்கும் தாங்கள் திட்டமிட்டுள்ள புதுமையான, வேறுபட்ட முயற்சிகளைப் பிறரிடம் பகிர்ந்துகொள்வதற்கும்  ஒரு களமாக இருந்து வருகின்றது.

2019 -ம் ஆண்டிற்காக ஏப்ரல் மாதத்தில் கொடைக்கானலில் நடந்தேறிய, மேடையில் திசைமானிக் கருத்தரங்கில் வழங்கப்பட்ட படைப்புகள், ‘கற்பித்தல் நுட்பங்கள், செயல்திட்டங்கள், மொழிப்பாடம், கணிதம் மற்றும் சூழ்நிலையியல் பாடங்களுக்கான மதிப்பீட்டு முறைகள்’ ஆகியவற்றை முக்கியக் கருப்பொருள்களாகக் கொண்டிருந்தன. மேலும்  நேர்மறை ஒழுக்கத்தை வலியுறுத்தும் கற்றல் பண்பாட்டை உருவாக்குதல், பள்ளி - சமுதாயக் கூட்டமைப்பின் முக்கியத்துவம் மற்றும் பள்ளி ஒரு மாதிரிச் சமுதாயமாகச் செயல்படுதல் ஆகியவற்றைப் பற்றிய படைப்புகளையும் மாணவர்களின் கற்றல் மற்றும் மேம்பாட்டை நேர்மறையாகப் பாதிக்கக்கூடிய பொதுவான தலைப்புகளில் உள்ள படைப்புகளையும் ஆசிரியர்கள் வழங்கினர். ஆசிரியர்கள் தங்கள் படைப்புகளைக் கருத்தரங்கில் வழங்க,  ‘மேடைப் படைப்புகள், வகுப்பறை ஒளிப்பேழைகள், மற்றும் கற்றல் கற்பித்தல் மாதிரிகள்’ போன்ற முறைகளைப் பயன்படுத்தினர்.

‘ரோஸ்’ மற்றும் ‘பிரம்பு உபதேசம்’ ஆகிய இரு நாடகங்கள் ஆசிரியர்களால் நடத்தப்பட்டன. ‘வகுப்பில் குழந்தைகளின் பயம் மற்றும் ‘குழந்தை மையக்கல்வி’ ஆகியன தொடர்பான பிரச்சினைகளைப் பற்றி இந்த நாடகங்கள் பேசின.

இந்தத் திசைமானிப் பதிப்பில், நாங்கள் ‘மேடையில் திசைமானி ஏப்ரல் 2019’ ல் இருந்து படைப்புகளை வழங்குகிறோம். இந்தப் படைப்புகள்,  ‘சூழலியல் வகுப்புகளில் செயல் வழிக் கற்றல்-கற்பித்தல் அனுபவங்கள், அனைத்து மாணவர்களுக்குமான மக்களாட்சி பண்புகளைக் கொண்ட வகுப்பறை, பள்ளி ஒரு மாதிரிச் சமூகம், பள்ளி மேலாண்மைக்குழுவின் பங்கு மற்றும் பள்ளி மேம்பாடு’ ஆகியவற்றை மையப்படுத்தியதாக உள்ளன. ஈடுபாட்டையும் மனமகிழ்வையும் ஏற்படுத்தும் ஆசிரியர்களால் எழுதப்பட்ட இந்தக் கட்டுரைகள், உங்களது கற்பித்தல் அனுபவங்களை மேம்படுத்தக் கூடிய புதியனவற்றைக் கற்பதற்குப் பயன்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

Inspire and be inspired!

Azim Premji Foundation

Email your views and suggestions to: thisaimaani@azimpremjifoundation.org

# Medaiyil Thisaimaani April - 2019

www.azimpremjifoundationpuducherry.org

## EVS TEACHING

Integrating multiple skill based activities into classroom teaching Environmental Studies Panel Discussion—A Report 4

Children are generally curious. May be a few experience fear, but that may be due to the adults who are walking with them. The adults would have inflicted fear by overly warning them. The sense of fear among children is completely different than that of adults. Children perceive nature as a space where they can do unending explorations...

Enriching EVS classes through activities 6



வகுப்பறையில் அறிவியல் செயல்முறைகள் 10

அறிவியல் கண்காட்சி 12

நானும் எனது வகுப்பறையும் 13

Activity based learning in an EVS classroom 15

சூழலியல் பாடத்தைக் கைவினை செயல்பாடுகள் மூலம் கற்றல் 16



சூழலியல் கற்றலில் சுவாரசியமான அனுபவங்கள் 19

எங்களது உற்சாகமான வகுப்பறை 22

வரைபடங்கள் வரலாறுகள் மூலம் சூழ்நிலையியல் (EVS) பாடங்கள் 24

Correlating English language with EVS teaching 26

## LEARNING CULTURE IN THE CLASSROOM

Learning Culture in the Classroom Summary of Panel Discussion 28



The presentations on 'learning culture in the classroom' dealt with some of the following topics: addressing slow learners' needs, catering students with hearing impairments, incorporating farming in everyday classroom activities, dealing with students from disadvantaged backgrounds, and learning how appreciation can function as a tool to improve the classroom spirit...

Classroom Election: Towards an inclusive and democratic classroom 31

Handcrafted toys and puppets for a joyful learning experience 33

வாசிப்புத்திறன் - விடுகதையான மாணவர்கள் 35

Strategies to enhance the performance of slow learners 38

Appreciation : A key to locked doors 40

Creative Process 41

சேமிக்கப் பழக்குவோம் 44



செவித்திறன் குறையுடையோர்க்கானகல்வி 46

செயல்வழிக்கல்வி - ஒரு முயற்சி 50

கற்றுக்கொண்டே இருக்கிறோம் எம் குழந்தைகளிடம் !! கேள்விகளாய் குழந்தைகள் மாணவர்களாய் நாங்கள் 52

பள்ளி இடைநின்ற குழந்தைகளின் வளர்ச்சியில் நிகழ்த்துக் கலைகள் மற்றும் கைவேலைப்பாடுகளின் பங்கு 55

Positive learning culture in classrooms 60

Being a friendly teacher 62

கற்றலில் இனிமை சேர்த்தல் 64

குழந்தைகளுக்கான வகுப்பறை 66



குழந்தைதானே ....... 70

கற்றலில் மாணவரின் மனநிலை 72

வாசித்தலை மேம்படுத்துவோம்! வாரீர்! 74

கற்றல் எனது பார்வை 76

எனது பள்ளி அனுபவமும் அதன் தாகமும் 78

மாணவர்களை எப்படி அணுகுவது ? 80

## WORKING AS A SCHOOL COMMUNITY

Working as a School Community—Summary of Panel Discussion 84



A school is not only an integral part of the community, but it is also a community. As a result, there is a need for the school to work along with the community and work as a community. This involves different modes of engagements. ..

How do children perceive nature at different ages? 87

பள்ளியின் முன்னேற்றத்தில் சமூகத்தின் பங்கு 91

பள்ளி வாழ்க்கையில் எனது அனுபவங்கள் 94

புத்துயிர் பெற்ற பள்ளி 98

வாசிப்புத் திருவிழா 100



அரசுப்பள்ளியை அழகாக்கிய ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் 102

நாடோடிக் குழந்தைகளால் அலங்கரிக்கப்பட்ட பள்ளி 104

Building Nutrition and Environmental awareness 106

எம் பள்ளி மாணவர்களின் சதுரங்க விளையாட்டு சாதனையும் பள்ளிக்கூடம் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கூட்டாண்மையும் 108

பள்ளிக்கூடத்தில் ஓர் கதம்பம் 111

அரசு பள்ளியும் ஆசிரியர் - சமூக உறவும் 113

சிறப்புக் கல்வி ஒரு பார்வை 116

பள்ளி செயல்பாடுகளில் SMC, PTA அமைப்புகளின் பங்களிப்பு 118

கடமைகள் மெய்ப்பட... 120

கற்றலின் வித்தே பள்ளி செயல்பாடுகள் தான் !!! 125

மறுவாழ்வு தந்த மருத்துவ நிதி : ஒரு பகிர்வு 127

## GENERAL

Strategies employed to improve the attendance of low proficient learners 130

கற்றலும் அதற்கான உத்திகளும் 133

பாடல்கள் வழிப்பாடம் 135

பேசுதலும் கலந்துரையாடலும் -ஒரு பார்வை 137

மாற்றம் ஒன்றே மாற்றம் தரும் 141

சதீஜூடன் எனது பயணம் 144

வரைபடங்களும் என் வகுப்பும் 146

பிரம்புபதேசம் 149

ரோஸ் - நாடகம் 154

# Integrating multiple skill-based activities into classroom teaching

## Environmental Studies Panel Discussion—A Report

**The Panel discussion on EVS was facilitated by Poornima, from Marutham farm School, Thiruvannamalai.**

The discussion started by appreciating the presenters for having integrated multiple skill-based activities into classroom teaching. Further, various questions were raised by the audience, which were taken up for discussion. Initially, the queries pertained to the matter of syllabus completion, which is quite challenging for all teachers. Most of the teachers responded that they are not able to complete the syllabus. Panelist Poornima suggested that merging certain topics would be helpful to manage the time. Such a thing could be done as lessons are designed based on themes. The presenters also agreed with the suggestion and said that they had tried doing activities that addressed the combined objectives of two or three lessons (e.g., lessons pertaining to the theme of water; lessons on plants, etc.). They shared that this method allows the students to have more time to understand and explore the concepts in the lessons.

A few general questions, such as; on the importance of language in Environmental Studies (EVS) teaching and exposure to nature at early age, were addressed by Poornima.

EVS teaching should also focus on the language development of the students, and it should be bilingual. In her opinion, students should be able to read and comprehend first; it is only then that they can read extra academic texts. She added that observations and hands-on activities also help students to increase their vocabulary.

> **When students make observations, they come across novel ideas or objects that make them curious. Then, they tend to explore more, asking questions about the same. In course of time, they are able to learn new words. Once they learn by themselves, they don't forget them easily, and this is the natural way of learning language.**

When students make obser vations, they come across novel ideas or objects that make them curious. Then, they tend to explore more, asking questions about the same. In course of time, they are able to learn new words. Once they learn by themselves, they don't forget them easily, and this is the natural way of learning language. Language helps one to think and communicate. There is a need to create enough space for the students to think and communicate, leading to the natural development of language.

Creating crafts in the classroom can be one for giving stuents the opportunities to engage in craft activities, enable classroom conversation, which are instrumental in language development. Preethi shared that we should also question the relationship between activities and the syllabus. Since the activities are done to address the syllabus content, why should activities be looked as a standalone or a time-consuming element? It is indeed a part of the syllabus. Poornima pointed out the importance of using arts and crafts in the EVS classroom. Just as Sasireka had used a tree for teaching about plants, sand could be used for teaching about deserts. Poornima went on to do a presentation titled

‘How do children perceive nature at different ages?’ Poornima put forth a point that if children are taken to a forest, they don’t have a sense of fear (unlike the adults):

## Children perceive nature as a space where they can do unending exploration

Children are generally curious. May be a few experience fear, but that may be due to the adults who are walking with them. The adults would have inflicted fear by overly warning them. The sense of fear among children is completely different than that of adults. Children perceive nature as a space where they can do unending explorations. This helps in developing their observation skills. For a child below the age of 5, observation is more important than reading or writing. When children (age group of 5 to 10) come across something interesting, they ask curious questions, such as “Why does a lizard looks like this?”, “Why do ants go like this?”, etc. When they see something new, they try to compare it with what they have already seen or experienced.

She stated the example of how people perceive the idea of a seahorse—by comparing it with a terrestrial horse—because not many would have seen a sea horse. Only a few may have seen it on the television. So, when a teacher talks about a sea horse, chances are that the students relate it with the terrestrial horse that they know of. So, it is always imperative that the examples we provide be relatable to the children. It must be at their level. It is also important to engage in more experiential learning, so that the children are exposed to multiple things. The skills gained by observing nature (e.g., differentiating, questioning, etc.) and the knowledge gained in being exposed to nature will help the children in learning all subjects effectively.

Poornima also shared her thoughts on women’s rights. She talked about the "Feminist circle" that they initiated in Marudham school. The group was initially started only with girls; but, later, boys also joined. In this group, the children (both boys and girls) sit together and discuss issues like menstrual cycle, sexual harassment, etc. This is for understanding social reality from the female perceptive.

The participants spoke about the need to engage boys in understanding the concept of feminism, understanding women, which includes, menstrual cycle and other puberty-related issues. Poornima opined that the upbringing of the male child is very important when it comes to discussing feministic issues with them. She added that the relationship of boys and girls will strengthen when they understand each other. Such discussions will help them know and respect each other. In the school, the teachers have started to speak more with the boy students and this has opened up a path whereby boys have started speaking freely about the things they generally don’t speak about. The panel concluded that the onus of dealing with sexual discrimination, sexual violence, and other issues should not be only with the female students; male students should have equal awareness and responsibility.

---

**Team Thisaimaani**

# ENRICHING EVS CLASSES THROUGH ACTIVITIES



I have been working as a primary school teacher (PST) at Government High School, Kalmandapam, Pondicherry, for the past three years and have ten years of teaching experience in private as well as government schools. I like to teach environmental studies (EVS). I prefer to spend time with my students and like to create conducive environments for them to learn about and explore their surroundings.

**About Our Students:** Our students are mostly from families below the poverty line; their parents are daily wage labourers in farms, factories, construction sites and so on. The majority of these parents are poor. Hence, they spend less time with their children, due to which the students receive limited exposure to their surroundings. Thus, it is necessary for us to provide them with such kind of exposure in addition to our academic teaching.

**Teaching EVS**

It is an interesting subject as we learn about our environment through it. Children are mostly fond of nature (plants, trees and animals), and EVS classes can be quite lively if more observations, recordings and discoveries about nature are discussed. Moving the classroom to the ground or under a tree, or even making the students sit in a circle on the classroom floor, can create a different environment for EVS classes and provide the students an opportunity to explore their surroundings. Furthermore, it is necessary to expose them to the biodiversity and interdependence between every object in nature. I would like to share the experiences gathered from teaching a lesson in my EVS class.

**Teaching in the Classroom**

The lesson 'Super Senses' taught in Grade 5 deals with the special senses of animals. I planned this first lesson in order to cover various observations, recordings, outdoor explorations, games, origami activities and discussions.

**1. Engaging Discussion**

In our class, we discuss while sitting in a circle on the floor. We started with a discussion of the students' prior knowledge about animals, since they had learnt about birds and animals in the third and fourth grades. The students shared the features of birds such as beak, feathers, limbs and so on, as well as the features and habitats of many animals. They even imitated the sounds made by some animals; a dog, cat, cow, bird and lizard. Subsequently, the discussion extended to the specific characteristics of certain animals. When asked 'What does a dog do?', the students spoke from their observation, discussing its different ways of barking, finding its way home, following people to the shop or school, biting slippers, shaking its tail to express love licking, etc.

**2. Observation**

To engage in detailed observation, we observed the ants near our school kitchen for a while, after which the class had a discussion based on our observations. The children shared the following remarks: ants move in a queue and return with small bits of food; they also stop before other approaching ants and move away from them to find the correct path, etc.

Moreover, the students asked certain questions such as 'How does an ant reach a place where there is food?' for which some of them answered 'it uses it sense of smell to reach the food'. It is a fact that ants have a great sense of smell. All the students agreed with this point and listed animals with an enhanced smelling ability, i.e., dogs, cats, rats, among others.

**3. BOOST Game**

Each phrase related to the lesson (sense of smell, sense of sight, special call, sense of hearing, kite, tiger, eagle, silk worm, dog, snake, etc.) was written on three paper chits. After we sat in a big circle, all the papers were folded and dropped at the centre. Each child was allowed to pick three chits. Then, the students took turns to exchange a chit with one another; whoever collected three chits with same phrase had to shout 'BOOST' and would win the game. We continued till everyone had collected three chits with the same phrase. Interestingly, while playing this game, the students became familiar with the discussed phrases, which helped in improving the flow of the lesson.

**4. Picture Card Activity**

Picture cards (those of an eagle, dog, elephant, tiger, dolphin and snake) were distributed among the students, and the special senses of these animals were discussed. For instance, the sense of sight of eagles, kites and hawks that helps them in hunting effectively; the sense of smell of ants, dogs





and cats that helps them find their food. Afterwards, each child picked a picture card and shared his/her view regarding the senses possessed by the animal on the card.

**5. Video**

A video related to the super senses of animals (such as ants' sense of smell) was played. Following this, the students were divided into five groups of three, and five different topics such as the sense of sight, smell, feel and special call were given to each group. They discussed these topics within their respective groups and presented their ideas. Mostly, children are keen observers, which made it easy for them to discuss the senses of animals. I was extremely amazed to hear their insightful observations. A few of the points they shared were as follows: a cat comes when a fish is being cleaned due to its smell; a dog sniffs wherever it goes and smells the place for 'call of the nature'; different types of sounds (call or song) are produced by birds; a crab enters a hole when we go near it; a dog moves its ear on hearing the slightest sound even while asleep. Afterwards, the students observed the animals in and around their house, and at school, and shared their observations in class. They shared observations regarding lizards, which show immense patience when catching insects, and birds that visit the garden near their homes, which have a pleasant call. Following these activities, they spent most of their leisure time observing trees, birds and animals. Some of them even drew pictures of their observations, while some

**Reflections**

- In primary classes, language and mathematics are given more importance, whereas more significance is placed on science in higher classes. EVS is an equally important subject and plays a vital role in one's life, as it teaches human values, life skills, love for all living beings and develops one's responsibility towards the environment. Some teachers teach EVS in an interesting manner, which is worthy of great appreciation. This helps students develop a scientific temper from the early stages.
- My students are very fond of EVS and eagerly wait for its class. During the EVS period, they are always ready to go out and enjoy outdoor activities. Hence, when EVS is taught better, we can actively engage students in the learning process.
- Such engagements helped in the upcoming lessons pertaining to animals, such as the Snake Charmer's Story wherein the students recalled the characteristics of snakes discussed during the aforementioned lesson. Subsequently, for a water-themed lesson, they documented a nearby pond when taken for an exposure visit. Later, while doing bird-watching, they identified different birds and their nests on their own. They proactively participated in the activity. While discussing farmers' distress in the subsequent lessons, the students related it to the trends in the community, whereby farmers are shifting to other professions. In this way, when we deal with sensitising students to social and environmental concerns, they are able to delve deeper in this subject. This is evident from their involvement in sensitive topics such as gender equality, farmers' distress, people's rights and migration.



- I would like to plan the upcoming academic year similarly, wherein EVS classes are not only enriching but also exciting for my students.



shared with their friends and schoolmates the special nature of different birds, insects and animals.

**6. Origami Activity**

We did this activity step by step, wherein the teacher facilitated the making of cow-, dog- and snake-shaped origamis. In this way, the students created beautiful origami art. They were very excited and thoroughly enjoyed making the animals on their own. Each and every lesson or concept should be related to their life. The need for the concerned knowledge should also be linked with the same. In this way, we discussed laws pertaining to animals as well as information about the Red Cross, national parks and sanctuaries in class. A few questions addressed by these discussions are as follows:

*"Why should we protect animals and birds?"*

*"Why have some animals become extinct and some are endangered?"*

*"How are humans related or linked to animals through the food web?"*

The story The Queen's Garden (which the students were taught in third grade) was narrated, which helped them understand how animals are important in terms of biodiversity. Furthermore, values to be followed by the students were discussed, and related videos were shown to them. They realised the significance of respecting animals who also have life like us, and understood that one should not hurt or tease animals, thereby developing a 'love for animals'.

I am happy that my students showed care and affection towards animals, including insects, such as beetles and butterflies, bats and millipedes.

Nowadays, they switch off the fans any time bats and/or butterflies enter our classroom and wait till they fly out of the room before switching on the fans.

**7. Fun Activity**

The picture of some animals such as deer, tiger, lion and giraffe were distributed, which they coloured using the correct colours of these animals and displayed them in the classroom.



**S. KAYALVIZHI**
PST
GHS KALMANDAPAM

# வகுப்பறையில் அறிவியல் செயல்முறைகள்

## நோக்கம்

ஐந்தாம் வகுப்பு சூழ்நிலையியல் பாடம் மிகுந்த சவாலாக இருக்கும் என எண்ணி இருந்த எனக்கு செயல்வழி கற்றல் முறையில் பாடத்திட்டத்தைக் கொண்டு சென்றது. ஆண்டின் இறுதியில் மிகுந்த மனநிறைவைத் தந்தது. அதிலும் குறிப்பாக 'சயின்ஸ் கார்னர்' அமைத்ததன் மூலம் மாணவர்களின் முழுத்திறனையும் வெளிக்கொணர்ந்த பெருமிதமும் சேர்ந்து கொண்டுள்ளது. ஐந்து ஆண்டுகள் ஆசிரியப் பணியில் இந்த ஆண்டு தான், சூழ்நிலை-யியல் பாடம் நடத்துவதற்கான இனிய வாய்ப்பு அமைந்தது. மேலும், இந்த ஆண்டிற்கான அறிவியல் கண்காட்சியில் ஆசிரியர் பிரிவில் கலந்து கொண்டதை சிறப்பானதாகக் கருதுகிறேன். அதன் தொடர்ச்சியாக பெங்களூரில் நடந்த அறிவியல் கண்காட்சியில் பங்கேற்று, பிற மாநிலங்களின் அறிவியல் படைப்புகளைக் காண வாய்ப்புக் கிட்டியது. இதன் மூலம் கற்ற நல்ல விசயங்களை மாணவர்களுக்கு எப்படி அளிக்கலாம் என எண்ணிய போதுதான் 'சயின்ஸ் கார்னர்' அதற்கு ஒரு தீர்வாக இருக்கும் எனத் தீர்மானித்தேன்.

## 'சயின்ஸ் கார்னர்' அமைத்த அனுபவம்

உள்ளூர் சூழலில் கிடைக்கும் சிறுசிறு




பொருட்களைக் கொண்டே குறைந்த செலவில் இதனைத் தயாரிக்கத் தீர்மானித்தோம். தயாரிப்பு முறைகளைத் தெரிந்துகொள்ள ஆசிரியர்கள் திரு ராஜ்குமார், திரு ஜெய சுந்தர் ஆகியோரின் ஆலோசனைகளும் Youtube மற்றும் சில இணைய தளங்களும் உதவியாக இருந்தன. அதில் கிடைத்த தகவல்களை ஒன்று திரட்டி மாணவர்களிடம் காண்பிக்க, சிறந்தவற்றையும் எளிதானவற்றையும் அவர்கள் செய்து பார்க்கத் தேர்ந்தெடுத்தோம். பிறகு, அதற்குத் தேவையான பொருட்களை மாணவர்களும் ஆசிரியரும் சேகரித்துக் கொண்டு வந்து வகுப்பிலேயே அனைத்து ஆய்வுக் கருவிகளையும் உருவாக்கினோம். இவை பெரும்பாலும் எளிதில் கிடைக்கக்கூடிய மற்றும் தேவையற்றவை என்று ஒதுக்கப்படும் பொருட்களைக் கொண்டு செய்யப்பட்டன.

## கற்றல் வெளிப்பாடுகள்

இதில் கிடைத்த அனுபவம் மாணவர்களுக்கும் ஆசிரியரான எனக்கும் பேருதவியாக இருந்தது. சில அறிவியல் சோதனைகள் தோல்வியில் முடிந்த போதும் மாணவர்கள் அதற்கான காரணத்தை அறிய முற்பட்டபோது அறிவியல் சார்ந்த பல புது புது விஜயங்களை அரிய வாய்ப்பு தந்தது. இவ்வாறு science corner மூலமாக மாணவர்கள் அறிவியல் கற்றலில் ஆழமாக ஈடுபட முடிந்தது. இவ்வாறான செயல்பாடுகள் அவர்கள் உயர் வகுப்புகளுக்குச் செல்லும் போது பேருதவியாக அமைவதோடு, அவர்களின் அறிவியல் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் அமைந்தது. இதன் தொடர்ச்சியாக, தேசிய அறிவியல் தினமான பிப்ரவரி 28 - ஆம் தேதி அன்று அரங்கனூர் அரசு தொடக்கப் பள்ளியில் மிகச் சிறப்பாக அறிவியல் சோதனைகள் மாணவர்களால் பெற்றோர் முன்னிலையில் செய்து காண்பிக்கப்பட்டது. அப்போது காட்சிப்படுத்தப்பட்ட சில பின்வருமாறு: walking water, thirsty candle, elephant tooth paste, magic match stick - surface tension, penny dropper, Cheap microscope by laser light, Water race,



*Experiment on refraction of light in water*



*Experiment on density of water*

Who runs fast, Who blows candle, Floating card, Don't drop water, Upward movement of matchstick in water, Water air pressure in various heights of a medium, Floating principle by lemons, Floating depends on density, air pressure removes water, refraction of light in water, Magic Bubble.

## இதன் தொடர்ச்சி

பொதுவாகவே அறிவியல் பாடம் கற்பதன் நோக்கம் வாழ்க்கையில் பயன்பாட்டில் உள்ள அறிவியல் உண்மைகளை அறிவதும் மாணவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்துவதும் ஆகும். எனவே இந்த சயின்ஸ் கார்னர் அமைத்ததன் மூலம் மாணவர்கள் சிறப்பான அடைவை நோக்கி அடியெடுத்து வைத்து உள்ளதாகவே கருதுகிறேன். இது ஒரு சிறு தொடக்கமே. இதைத் தொடர்ந்து மேம்படுத்துவதன் மூலம் கூடிய விரைவில் ‘சயின்ஸ் கார்னர்’ என்பது ‘சயின்ஸ் லேப்’ ஆக மாற்றம் பெற்று மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தை உயர்த்தும் என்ற நம்பிக்கையோடு செயல்பட்டு வருகிறோம். இதற்குப் பேராதரவு அளித்து வரும் எங்கள் பள்ளி தலைமையாசிரியர் அவர்களுக்கும் சக ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்



**சபரி நாதன்**
தொ.ப.ஆ,
அ.தொ.ப, அரங்கனூர்

# அறிவியல் கண்காட்சி

எங்கள் பள்ளியில் ஆண்டுதோறும் அறிவியல் கண்காட்சியை நடத்துகிறோம். மாணவர்கள், ஆசிரியர் மேற்பார்வையில் தாங்களே அறிவியல் காட்சிப்பொருள்களைச் செய்கின்றனர். சமுதாயத்தில் உள்ள பிரச்சினைகளுக்கு அவர்கள் தீர்வு காண்கின்றனர்.

நமது பஞ்சபூதங்களில் நிலம், நீர் மற்றும் காற்று ஆகியவை தற்போது மிகவேகமாக மாசு அடைந்து வருகிறது. இதை வலியுறுத்தும் வகையில் அறிவியல் கண்காட்சியில் மாதிரிகளை உருவாக்கினோம். அதில் சிலவற்றைக் கீழே குறிப்பிட்டுள்ளேன்.

2016 - 2017 ஆம் ஆண்டு நடந்த மாநில அறிவியல் கண்காட்சியில் காற்று மாசைத் தடுக்கும் நவீன கருவி மற்றும் முறைகள் பற்றி ஒரு காட்சிப்பொருளை எங்கள் பள்ளி மாணவி செய்து இருந்தார். உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் உலக அளவில் 30 நகராட்சிகளில் காற்று மாசுபாடு அதிகமாக உள்ளது என்றும்



அதில் 22 நகரங்கள் இந்தியாவில் உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது. இதை வலியுறுத்தும் வகையில் கண்காட்சிக்கான மாதிரியைச் செய்து மூன்றாம் பரிசு பெற்றோம்.

2017 ஆம் ஆண்டு கண்காட்சியில் நீர்நிலைகள் கோடைக்காலத்தில் வற்றிப்போவதைத் தடுக்கும் முறைகள் மற்றும் அந்தந்த நீர்நிலைகளில் உள்ள நீர் ஆவியாகும் போது அந்த நீராவியை இழுத்து அதை குளிரடையச்செய்து மீண்டும் நீராக மாற்றி குடிநீராகப் பயன்படுத்தும் வகையில் ஒரு நவீன இயந்திரத்தைக் காட்சிப்படுத்தினோம். இது பலரின் பாராட்டைப் பெற்றது பார்வையாளர்களைக்



கவர்ந்தது. இதைச் செய்து விவரித்த மாணவன் மண்டல மற்றும் மாநில அளவில் முதல் பரிசு பெற்றான். 2018 - 19 ஆம் ஆண்டு நடந்த கண்காட்சியில் காற்று மாசுபடுதலைத் தடுக்கும் நவீன முறைகள் என்ற தலைப்பிற்கு ஏற்ற காட்சிப்பொருள்கள் செய்தான். நாம் பயன்படுத்தும் இருசக்கர வாகனத்தில் அளவுக்கு அதிகமாகப் புகை வந்தால் உரிமையாளருக்குக் குறுஞ்செய்தி அனுப்பி ஒரு வாரத்தில் புகை வருதலை சரி செய்ய வேண்டும் என எச்சரிக்கும். இல்லை எனில் RTO ஆபிஸ்க்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இப்படைப்பும் பலரால் பாராட்டைப் பெற்று பலரின் கவனத்தைக் கவர்ந்தது.

இவ்வாறு, எங்கள் அரசுப் பள்ளி மாணவர்கள் நிலம், நீர், காற்று மாசுபடுதலைத் தடுக்க பல்வேறு மாதிரிகளைத் தாங்களாகவே படைத்து வெற்றி பெற்று அசத்தினர்.



**செந்தில் குமார்**
தொ.ப.ஆ,
அ.தொ.ப, கிருமாம்பாக்கம்




# நானும் எனது வகுப்பறையும்

## அனைவருக்கும் வணக்கம்!

நான் கடந்த மூன்று ஆண்டுகளாகக் கோட்டுச்சேரி பேட்டை அரசுத் தொடக்கப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறேன். ‘கற்பித்தலில் புதுமைகளே கற்றலை வலுப்படுத்தும்’ என்பது என்னுடைய மாற்றமுடியாத கருத்து. அதனால்தான் ஒவ்வொரு வகுப்பறையையும் நான் மாணவர்களுக்குப் புதுமையாகக் கற்பிக்க முயற்சி செய்தேன். அதனால் பயனுள்ள விளைவுகளையும் உணர்கிறேன்.

உதாரணமாக, ஆங்கிலத்தில் இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு ஒலிப்புப் (Phonics) பயிற்சியளித்து அவர்களுடைய வாசித்தல் திறனை மேம்படுத்தினேன். அதுபோல் கணித வகுப்பிலும் தனித்துவமான, சிறப்பான துணைக்கருவிகளைப் பயன்படுத்தி ஒன்றாம் வகுப்பு மாணவர்களிடம் நல்ல அடைவினைக் கண்டு வருகிறேன்! இதேபோல் சூழ்நிலையியல் பாடத்திற்காகக் கடந்த ஆண்டு ஒரு குறும்படம் தயாரித்து அதை அசிம் பிரேம்ஜியில் வெளியிட்டு விளக்கமளித்ததையும் இங்கு நினைவு கூர்கிறேன். இந்த ஆண்டும் 4ஆம் வகுப்பு சூழ்நிலையியலில் ஒரு பாடத்தின் கற்பித்தல் அனுபவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள வந்திருக்கிறேன்!

‘கற்பித்தல் என்பது நான்கு சுவற்றுக்குள் முடிவதல்ல… அறிவு சார் வரத்தை அடையும் விசாலமான, விண்ணை நோக்கிச் செல்வதாகும்’ என்ற அடிப்படையில் இந்தப் பாடத்தைக் கற்பித்துள்ளேன்.

## பாடத்தின் நோக்கம்

‘Omana’s Journey’ என்ற பாடம் முதல் ‘Reached Grandmother’s house’ என்ற பாடம் வரை மூன்று பாடங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய பாடங்களாக, அஹமதாபாத்தில் பயணம் தொடங்கி கேரளாவில் முடிவதாக அமைந்திருக்கும்.

இந்தப்பாடத்தை மாணவர்கள் முழுமையாக உணர வேண்டுமெனில், அவர்களைக் கேரளாவிற்குக் கல்வி சுற்றுலா அழைத்துச் செல்ல வேண்டும் என விரும்பினேன். ஆனால், பல்வேறு நடைமுறைச் சிக்கல்களால் மாணவர்களை அழைத்துச் செல்ல இயலவில்லை. எனவே, வகுப்பறையையே ஓர் சுற்றுலாத்தலமாக மாற்ற விரும்பினேன்.

- முதலில் கரும்பலகையில் கேரளாவுடன் தொடர்புடைய முக்கியக் கூறுகளை வரைந்தேன். ஓணம் பண்டிகை, பட்டத்து யானை, மோகினியாட்டம், கதகளி, வல்லம் விளையாட்டு, தென்னைமரம், படகு போட்டி போன்றவற்றை வரைந்து அவற்றைப் பற்றிய பகிர்வும் உரையாடலும் நடந்தது.

- வகுப்பறை முழுவதும் தென்னை ஓலைகளால் அலங்கரித்தோம்.
- பூக்கோலமிட்டு அதன் நடுவினில் விளக்கேற்றி வைத்தோம்.
- மாணவர்கள் வீட்டில் செய்து கொண்டு வந்த குழாய்பிட்டு, கொண்டைக்கடலை, உன்னியப்பம் போன்ற கேரள உணவுகளை அனைவரும் ஒன்றாகச் சாப்பிட்டோம்!
- ஒரு நாள் மாணவர்களும் நானும் கேரள உடையில் பள்ளிக்கு வந்தோம். மிகவும் மகிழ்ச்சியுடனும் ஆரவாரத்துடனும் மாணவர்கள் இருந்தார்கள். மாணவர்களுக்கு மலையாளப்பாடல் ஒன்றை கற்பித்து அதனைப் பாடச் செய்தேன். கரும்பலகையில் உள்ள படங்கள் எவ்வாறு கேளராவுடன் தொடர்புடைவை என்பதை மாணவர்களுக்கு மீண்டும் மீண்டும் கூறி கற்றலை வலுப்படுத்தினேன்.

இவை அனைத்தையும் உள்ளூர் உணவோடும், கலையோடும், பண்பாட்டோடும் தொடர்புபடுத்தி அறிமுகப்படுத்தியதால் மாணவர்களுக்கு எளிதில் சென்றடைந்தது.

## கற்றலின் விளைவு

மாணவர்கள் அனைவரும் அன்று மகிழ்ச்சியுடனும் மிகுந்த ஆர்வத்துடனும் கற்றலில் ஈடுபட்டனர். கேரள மாநிலம் பற்றிய அனுபவக்கற்றல் அவர்களுக்குக் கிடைத்தது. இந்த அனுபவம் அவர்களால் மறக்க முடியாத அனுபவமாக இருந்திருக்கும் என்பதை நான் முழுமையாக நம்புகிறேன். அன்று அவர்கள் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சியும் ஆர்வமும் இன்றளவும் நினைவில் நிற்கிறது. அதன் பிறகு எப்பொழுது வகுப்பறைக்குச் சென்றாலும் அது போன்ற ஒரு சூழலை மீண்டும் உருவாக்கித் தரும்படி மாணவர்கள் கேட்பதுண்டு. இதன் மூலம் இந்தக் கற்றல் வழிமுறை அவர்களைக் கவர்ந்துள்ளது என்பதும் கேரள மாநிலம் பற்றிய வலுவான எண்ணம் அவர்கள் மனதில் தோன்றியிருக்கிறது என்பதும் தின்னம். மேலும், இதே போல் இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய தனித்தன்மை, மொழி, உணவு, உடை, கலை, பண்பாடு, பழக்கவழக்கம், விழாக்கள் போன்றவை உண்டு என்பதையும் மாணவர்களிடம் அறிமுகப்படுத்தினேன்.






**ஐ. விஜயலட்சுமி,**
தொ.ப.ஆ,
அ.தொ.ப, கோட்டுச்சேரி
பேட்டை, காரைக்கால்.

# ACTIVITY-BASED LEARNING IN AN EVS CLASSROOM

Our school is a French-medium high school with students from LKG through to tenth standard and a strength of over 200 students. Most of these students are from urban lower-middle-class families. Moreover, students who aspire to go to France, along with those who have applied for French nationality, study in our school, wherein all subjects are taught in French. In addition to French, Tamil and English are also taught. One of the primary challenges we face is that these students do not have a French-speaking environment.

As a primary school teacher, I teach all the subjects taught at the primary level. For students in the third standard, I teach English. The English textbook we teach is based on the Tamil Nadu State Board's syllabus. In the third standard, a lesson called 'The Cultural Expo' is taught, wherein the southern states of India are mentioned. However, while teaching this lesson, I observed the following issues among my students:

- They found it difficult to correctly identify the names of Indian states.
- They were not familiar with the geographical locations of these states.
- They could not recognise the four major directions given in maps.
- They also experienced difficulty in pronouncing the names of Indian states.

After due consideration, I realised that conventional teaching methods will not be effective in teaching these concepts to my students, so I decided to adopt an activity-based learning approach.



- Each student was assigned a state's name. Subsequently, instead of their own names, the state names assigned to them were mentioned during the roll call.
- I also prepared flash cards for all the states in which each direction was identified with separate colours:
    - o Southern states: Green
    - o Northern states: Orange
    - o Eastern states: Pink
    - o Western states: Brown
    - o Central states: Blue
    - o North-Eastern states: Yellow
- I drew a rangoli in my classroom, indicating the colours of the directions wherein all Indian states are located.
- Subsequently, the students were made to stand according to the colour of their respective flashcards.

**Conclusion**

My students were very curious to find the location of the states, which were assigned to them, in the rangoli. Following this activity, the students became very familiar with the directions wherein the Indian states are situated. Further, they were able recognise the four major directions and pronounce the names of Indian states properly.

**USHA S.**
PENSIONNAT DE JEUVES FILLES
GOVT. GIRLS FRENCH HIGH SCHOOL

# சூழலியல் பாடத்தைக் கைவினை செயல்பாடுகள் மூலம் கற்றல்

## எனது பள்ளி

நான் அரசு நடுநிலைப்பள்ளி, திம்ம நாயக்கன் பாளையத்தில் பணிபுரிகிறேன். எனது பள்ளியில் படிக்கின்ற அனைத்து மாணவர்களும் மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்கள். பல வகையான திறமைகளும், ஆற்றலும் கொண்ட 'இருளர்' இனத்தைச் சார்ந்த மாணவர்களும் படிக்கின்றனர்.

பெரும்பாலான பெற்றோர்களுக்கு மாணவர்களின் கற்றலைப் பற்றிய விழிப்புணர்வோ, அக்கறையோ இல்லை. பெற்றோர்களின் ஒத்துழைப்புக் குறைந்தே காணப்படுகிறது.

இத்தகைய சூழலில் மாணவர்களுக்குக் கற்பிப்பதோடு அவர்களை வகுப்பறைக்குள்ளேயே அனைத்து கற்றல் செயல்பாடுகளையும் செய்ய வைப்பது பெரும் சவாலாகவே உள்ளது. சில பெற்றோர்கள் காலைச் சிற்றுண்டி கூடக் கொடுக்காமல் மாணவர்களைப் பள்ளிக்கு அனுப்புகின்றனர்.

## என் வகுப்பறை

நான் மூன்றாம் வகுப்பிற்கு இந்த ஆண்டு சூழ்நிலையியல் பாடம் கற்பித்தேன். CBSE பாடத்திட்டத்தைக் கொண்டு சூழ்நிலையியல் பாடம் கற்பிப்பது இதுவே முதன்முறை.

எனது வகுப்பில் இருப்பது பதினோரு குழந்தைகள் மட்டுமே. அவர்களை ஒருசேர அமரவைத்து பாடத்தைக் கற்பிக்கும் போது அதில் இரண்டு அல்லது மூன்று மாணவர்கள் மட்டுமே பாடத்தைக் கவனித்துச் சரியான முறையில் ஒத்துழைப்பார்கள். மாணவர்களை வகுப்பறை சூழ்நிலைக்கு கொண்டு வருவதே மிகக் கடினமான செயலாக இருந்தது.

## கலகலப்பான சூழ்நிலையியல் பாடம்

சூழ்நிலையியல் என்பது நமது சுற்றுச்சூழலைப் பற்றி அறிந்து கொள்வது. தனது சுற்றுப்புறத்தைப் பற்றி மாணவர்கள் அவசியம் தெரிந்திருக்க வேண்டும். மாணவர்களை வகுப்பிற்கு வெளியே அழைத்துச் சென்று இயற்கையோடு இணைந்து கற்பிக்கக் கூடிய மற்றும் கற்கக் கூடிய கல்வியாக அமைய வேண்டும்.

சிறுசிறு விசயங்களைக் கற்பிப்பதன் மூலம் அவர்களின் அறிவியல் ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். எடுத்துக்காட்டாக, அவர்கள் பயன்படுத்தும் தினசரிப் பொருள்களைக் கொண்டே அறிவியலைக் கற்பிக்கலாம். பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்க மற்றும் மறுசுழற்சி செய்ய என்பதைக் கற்பிக்கலாம். வீட்டிலிருந்தோ அல்லது அவர்களின் சுற்றுப்புறத்தில் உள்ள சிறு செடிகளைக் கொண்டு வந்தோ வகுப்பறைக்குள் ஜாடியில் அல்லது பள்ளி வளாகத்தில் நடச் செய்யலாம்.

உரம் தயாரித்தல் ஆகிய செயல்களில் ஈடுபடச் செய்தல். தாவரங்கள் மற்றும் விலங்குகள், சிறுசிறு பூச்சி இனங்கள் ஆகியவை சுற்றுப்புறத்தில் எவ்வளவு முக்கியப் பங்காற்றுகின்றன என்பதை உணர்த்துவது அவசியம்.

தண்ணீரின் சேமிப்பு மற்றும் அவசியத்தை அறிய வைத்தல், மின்சாரச் சிக்கனம், பள்ளி சுற்றுப்புறத்தைத் தூய்மை செய்தல் ஆகிய சிறு சிறு செயல்களில் அவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் அறிவியலின் நோக்கம் மற்றும் பயன் ஆகியவற்றை அறியச் செய்யலாம்.

பாடப்புத்தகத்தில் இவை இடம்பெற்றிருந்தாலும் இதனை வகுப்பறைக்குள்ளேயே முடித்து விடாமல் சூழ்நிலையோடு இணைந்து கற்றல் வேண்டும்.

## கைவினை செயல்பாடு மூலம் கற்பித்தல்

வகுப்பறைக்குள் பாடப்புத்தகத்தைப் பயன்படுத்தியே ஆக வேண்டும்

என்ற சூழல் வரும்பொழுது அவர்களின் ஈடுபாட்டைப் பாடத்தில் கொண்டு வர வேண்டும்









என யோசித்தேன்.

பாடப்பொருளை வாய்மொழியோடு கூறுவதோடு மட்டும் நிறுத்தி விடாமல் அவர்கள் அனுபவித்துக் கற்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பாடப்பொருள்களுக்கும் ஏற்றாற்போல் கைவினைப் பொருள்கள் மூலம் அறிவியல் பாடப்பொருளைக் கற்பித்தேன். அதில் சில உதாரணங்களைப் பார்க்கலாம்.

## கைவினைச் செயல்பாடுகள்

1. மரம், செடி, விலங்குகள் பற்றிய பாடத்தை எடுப்பதற்காக நான் ஒரு முயற்சி செய்தேன். எனது வகுப்பறைச் சுவரில் ஒரு பெரிய மரம் வரைந்தேன். மாணவர்கள் காகிதம் கொண்டு இலைகளைச் செய்து அதை மரக்கிளையில் ஒட்டினார்கள். பிறகு அந்த மரத்தில் அணில், காக்கா, மைனா, கிளி, குரங்கு போன்ற விலங்குகளை ஒரு புத்தகத்திலிருந்து வெட்டி ஒட்டினார்கள். ஒரு மாணவன் அவன் வீட்டருகில் கிடந்த பறவைக் கூட்டை எடுத்து வந்தான். அதையும் அந்த மரத்தில் ஒட்டினோம். இந்த வரைபடம் சுவற்றில் நிரந்தரமாக இருப்பதால் அதை வைத்துத் தொடர்ந்து செயல்பாடுகள் செய்யப்பட்டன. உதாரணமாகப் பள்ளியில் இருக்கும் மரத்தில் இலைகள் காய்ந்து காணப்பட்ட போது இதில் இருக்கும் இலைகளுக்கு மாணவர்கள் பழுப்புநிறம் தீட்டினார்கள். அதேபோல் இலைகள் கொட்டிய போது இதில் இருக்கும் இலைகளைக் கிழித்தனர். இப்படியாக மாணவர்கள் வெளியில் இருக்கும் மரங்களை உற்று நோக்க ஆரம்பித்தனர்.

2. குடும்பம் (Families can be different) என்ற தலைப்பை மாணவர்களுக்குக் கற்பிக்கும் பொழுது குடும்ப நபர்களைப் பற்றிக் கற்பிக்க பிளாஸ்டிக் கப்புகளைக் கொண்டு அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, அண்ணன், தங்கை ஆகிய உருவங்களை உருவாக்கினோம். பிறகு வகுப்பறையில் மாணவர்கள் அவற்றைக் கொண்டு தங்கள் குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களைப் போல நடித்து காட்டினர். இதனால் வகுப்பறை கலகலப்பாக மாறியது மற்றும் குடும்பம் பற்றின மாணவர்களின் புரிதல் தெரிய வந்தது. அவர்களது புரிதலை வைத்தே பாடம் எடுக்கப்பட்டது.

3. Saying without speaking - என்ற பாடத்திற்காக உணர்வுகள் பல சார்ட்டில் வரைந்து தயாரித்தோம். மாணவர்கள் ஒரு சார்ட்டில் பல வட்டங்களாக வெட்டி அதில் நமது உணர்வுகளான கோபம், சிரிப்பு, அழுகை, பயம், ஆச்சரியம் ஆகியவற்றை வரைந்தனர். பிறகு அதை அவர்களாகவே நடித்தும் காட்டினர்.

4. A beautiful cloth என்ற பாடம் எடுக்கும் பொழுது காய்கறிகளைக் கொண்டு பல வடிவமைப்புகளைத் துணியில் வரைந்தனர். மாணவர்கள் வீட்டிலிருந்து உருளைக்கிழங்கு, வெங்காயம், வெண்டைக்காய் போன்ற காய்கறிகளை எடுத்து வந்தனர். அதைத் தண்ணீரில் ஊறவைத்து அதிலிருந்து வரும் சாயத்தைத் துணியில் அவர்களுக்கு ஏற்றாற்போல் பலவிதமாக வரைந்தனர்.

5. கடிதம் பற்றிய பாடம் எடுக்கும் பொழுது மாணவர்களுக்குக் கடிதம் எழுதும் பழக்கத்தை விதைக்கும் விதமாக எமது மாணவர்கள் இன்னொரு அரசுப் பள்ளி (கொடாத்தூர்) மாணவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். முதலில் கொடாத்தூர் பள்ளி மாணவர்கள் பானை வரைந்து எங்களுக்குப் பொங்கல் வாழ்த்துக்களைத் தபால் மூலம் அனுப்பினார்கள். அதற்கு எனது மாணவர்கள் பதிலளிக்கும் நோக்கத்தில் பானை, மாடு, கரும்பு வரைந்து அந்தத் தபாலை, பஞ்சு போன்ற பொருட்களால் அலங்கரித்து அட்டை தயாரித்தார்கள். இதைக் குழுவாக அமர்ந்து செய்தனர். ஒரு குழுவில் 3-5 மாணவர்கள் இருந்தனர். அவர்கள் ஒரு கடித அட்டையைத் தயாரித்தனர். மேலும் அச்சமயம் விலங்குகள் பற்றிய பாடம் வந்ததால் மாணவர்களை, அவர்கள் ஊரில் பார்த்த விலங்குகளை வரைய சொன்னேன். அதை வரைந்து அவர்கள் கொடாத்தூரில் இருக்கும் விலங்குகள் என்ன, அதனுடைய பெயர் மற்றும் வரைபடத்தைக் கேள்வியாகக் கேட்டு கடிதம் அனுப்பினர்.

## பிரதிபலிப்பு

இந்த அனைத்துச் செயல்பாடுகளையும் செய்யும் போது மாணவர்கள் தானாகவே முன்வந்து பங்கேற்றனர். இதன்மூலம் அவர்களின் படைப்பாற்றல் வெளிக்கொணரப் படுகிறது. கற்பனைத்திறன் வளர்ச்சியடைகிறது. மாணவர்களின் நேரம் பயனுள்ளதாகச் செலவிடப்படுகிறது. அதில் ஈடுபடும் பொழுது ஆசிரியராகிய எனக்கும் மாணவர்களுக்கும் நேரம் கடந்து செல்வதே தெரியாது.

அவர்கள் குழுவாகச் செயல்படுவதால் அவர்களிடம் குழு மனப்பான்மை, பொருள்களைப் பகிர்தல் கருத்துக்களைப் பரிமாறுதல் ஆகியவை நடைபெறுகின்றன. தன்னம்பிக்கையும் வளர்கிறது.

இதன் மூலம் அறிவியல் கருத்தை மாணவர்களிடம் கொண்டு சேர்ப்பதும் கற்றல் சூழலுக்குக் கொண்டு வருவதும் எளிமையான செயலாக அமைகிறது.

கைவினைப் பொருள்களைச் செய்வதன் மூலம் மாணவர்களுக்குப் பொருட்களைக் கையாளும் திறன்கள் (motor skills) வளர்ச்சியடைகிறது. கைகள், விரல்கள் பக்குவமடைகிறது.



**B. சசிரேகா**
தொ.ப.ஆ,
அ.ந.நி.ப, T.N. பாளையம்

# சூழலியல் கற்றலில் சுவாரசியமான அனுபவங்கள்

## களப்பயணம்

மூன்றாம் வகுப்பு EVS பாடத்தில் தாவரங்கள், பறவைகள், விலங்குகள் பற்றிப் பரவலான தகவல்கள் உள்ளன. சூழ்நிலையியல் பாடத்தை வகுப்பறையில் கற்பதோடு அதன் செயல்பாடுகள் நிறைவடைவதில்லை. தன்னை சுற்றியுள்ள நில அமைப்பை, தாவரங்களை, பறவைகளை, விலங்குகளை அறியும்போது மட்டுமே நிறைவடைகிறது. மாணவர்கள் இலைகளின் அமைப்பை அறிந்துகொள்ள பள்ளி வளாகத்தில் உள்ள செடிகள், மரங்களை உற்று நோக்கி வரைதல், வடிவங்களை அறிதல், பூக்கள், இலைகளைக் கொண்டு அலங்கரித்தல் போன்ற செயல்பாடுகள் குழந்தைகளுக்குக் களிப்பூட்டுவதோடு மட்டுமல்லாமல், கற்றலை மேம்படுத்துகின்றன.

களப்பயணம் போன்ற செயல்பாடுகள் மாணவர்களை மேலும் மகிழ்ச்சியடையச் செய்கின்றன மற்றும் உற்சாகமாகக் கற்க வழிவகுக்கின்றது.

## களப்பயணத்தின் முக்கியத்துவம்

- சுற்றுச்சூழலைப் பார்த்து, அனுபவித்துக் கற்றல்
- பள்ளிக்கு வெளியே செல்லும் பொழுது சமூகத்தினரிடம் பேசி கற்க ஒரு வாய்ப்பு அமைகிறது.
- சமூகத்தைப் பற்றி புரிந்துகொள்ள ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு இது ஒரு வாய்ப்பு
- வகுப்பறையில் உற்சாகமான உரையாடல் அமைய வழிவகுக்கிறது

இதில் ஒரு முயற்சியாகச் சுற்றுப்புறத்தில் உள்ள தாவரங்கள், பறவைகள் பற்றி விரிவாக அறிந்துகொள்ள அருகில் உள்ள வயல்வெளிக்குக் களப்பயணம் சென்றோம்.

## பறவைகளை இரசிப்போம்

சிறு வயது முதல் நிறையப் பறவைகளைப் பார்த்திருந்தாலும் பைனாகுலரில் பார்க்கும்போது தனி அழகுதான். இரண்டு வாரங்களுக்கு முன்பு பறவைகளைப் பார்வையிடக் களப்பயணம் சென்றோம்.

கடந்த முறை களப்பயணம் செய்யும்போது வயல்வெளிகளில் நெற்கதிர்கள் அறுவடைக்கு தயார்நிலையில் இருந்தது. ஒரு வயலில் நாற்று விடப்பட்டு இருந்தது. இப்பொழுது அந்த நாற்று



நடவு செய்யப்பட்டு வயல்கள் பச்சைப்பசேல் எனக் காட்சியளித்தன.

இக்களப்பயணத்தில் மாணவர்கள் பறவைகளைப் பைனாகுலரில் பார்வையிட்டு அதன் எண்ணிக்கையைத் தங்களது நோட்டு புத்தகத்தில் எழுதிக் கொண்டனர். பறவைகள் எழுப்பும் ஒலி, அவற்றின் நிறம் மற்றும் உடலமைப்பு ஆகியவற்றையும் குறித்துக்கொண்டனர். மாணவர்களுடன் நானும் புல்புல், பன்சுருட்டான், போன்ற பறவைகளை முதன்முறையாகக் கண்டேன். பலமுறை தூக்கணாங்குருவிகளைப் பார்த்திருந்தாலும், முதன்முறையாக பைனாகுலரில் பார்க்கும்போது அதன் வயிற்றுப்பகுதியின் மஞ்சள் நிறம் அவ்வளவு அழகு. ஆள்காட்டி பறவையும் அப்படியே. அங்கு மயில் இருக்கும் மிஸ், அதையும் பார்க்கலாம் என்றார்கள். ஆனால் அது கண்ணில் படவே இல்லை. எப்படியாவது அந்த மயிலையும் பார்த்தே ஆகனும். மஞ் சள் நிற பூக்கள் கொண்ட ஒரு செடியை இனம் காணமுடியவில்லை. அது இன்னும் என் மூளையைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருக்கிறது.




மாணவர்களின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. வகுப்பறை தாண்டினாலே கொண்டாட்டம்தான். கீழே கிடந்த தூக்கணாங்குருவி கூடுகளைச் எடுத்தது, சவுக்கு விதைகளைச் சேகரித்தது. நத்தை குஞ்சுகளைக் கண்டு இரசித்தது, வாய்க்கால் தண்ணீரில் விளையாடியது என மிக இனிமையாக நகர்ந்தது நேரம்.

இப்படியான சூழல்கள் அதிகம் அமைவதில்லை. இப்பொழுது பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு போல அனைத்து வகுப்புகளுக்கும் மற்ற பள்ளி ஆசிரியர்களைக் கொண்டு தேர்வு நடத்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. முதல் வகுப்பு குழந்தைகளுக்கும் உட்பட. குழந்தைகள் கற்பது இது போன்ற செயல்பாடுகளில்தான் அன்றி தேர்வுகளில் அல்ல என்பது என் திடமான நம்பிக்கை.

## குழந்தைகளை இனிமையாகக் கற்கச் செய்வோம்.

களப்பயணம் முடிந்து பள்ளிக்கு வரும்போதும் வழியில் உள்ள உண்ணி பூக்கள், துத்திச் செடி, ஆமணக்கு செடி போன்றவற்றை இரசித்துக் கொண்டே வந்தனர். வழியில் கண்ட பிள்ளையார் கண்ணு விதைகளையும் சேகரித்துக் கொண்டனர். பின்னர் வகுப்பறைக்கு வந்ததும் தாங்கள் கண்ட பறவைகளை ஓவியங்களாக வரைந்து, பெயர் எழுதி, வண்ணம் தீட்டினர். அதோடு மட்டுமல்லாமல் சார்ட்டில் (Poster) உள்ள பறவைகளோடு ஒப்பிட்டுப் பெயர்களை அறிந்து கொண்டனர். இவ்வாறாகக் களப்பயணம் மிக இனிமையாக நிறைவடைந்தது. களப்பயணம் பற்றி தங்கள் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

சூழலியல் பாடத்தில் வரும் பல்வேறு தலைப்புகளுக்குக் களப்பயணம் பொருந்தும். நம்மைச் சுற்றியுள்ள சமுதாய கட்டமைப்பு, தொழில்களைப் புரிந்துகொள்ள வீடுகள், மரம், செடி, கொடி மற்றும் விலங்குகள் ஆகியவற்றைப் பாடத்துடன் தொடர்புப்படுத்த களப்பயணம் உதவும்.

புறாவின் மூலம் தூது சென்ற காலம் கடந்து தபால் அட்டை, அஞ்சல்தாள், மணிஆர்டர் காலமும் கடந்து, இன்று இமெயில், வாட்ஸ்அப்,












இன்டர்நெட் பேங்கிங் யுகத்திலும் பேனா நண்பர்கள் தாக்கம் தீரவில்லை. ஏம்பலம், அரசு பள்ளி மாணவர்கள் எழுதிய கடிதங்களை ஆசை தீர படித்துப் பதில் எழுதிய எம் மாணவர்கள். Here comes a letter என்ற பாடத்திற்கு அஞ் சல் அட்டை செய்து அதில் முகவரி எழுதி தன் நண்பர்களுக்குக் கடிதம் எழுதி கடிதங்களைப் பரிமாறிக். கொண்டனர். தானே அஞ்சல் அட்டை உருவாக்கி கடிதம் எழுதியும், தபால் நிலையத்தில் வாங்கிய அஞ்சல் அட்டையில் கடிதம் எழுதியும் அனுபவம் பெற்றனர்.

### மாணவர்களுக்கு 10 ரூபாய் மணிஆர்டர் ஊக்கப்பரிசு.

- Perform their activities with perfection (including classroom activities, projects, and so on);
- Demonstrate discipline;
- Possess good moral values;
- Participate and win in competitions, discussions, programs, among others;
- Possess good handwriting;
- Score good marks in examinations.

The student who receives the maximum number of stars in a month is selected as the star student of the month




and is awarded a batch of appreciation.

**Positive Outcomes of Innovation**

The students avoided taking leave. Moreover, they came to school punctually and dressed neatly. Their handwriting improved considerably, and they completed their homework regularly. Further, they participated in more competitions and started learning on their own. It is true that a person who feels appreciated always does more than what is expected. My students also felt appreciated and did more than what I expected from them.



**S. KESAVARDHINYE**
PST
MGGGMS, NELLITHOPE

# CREATIVE PROCESS

One day, while I was conversing with my daughter, she said, 'Amma, if you give me paper, a balloon, some strings and glue, I can make a lampshade.' Her simple statement prompted a train of thoughts, which made me think that craft, art, drama and dance are all considered creative activities, and we even have creative writing as a separate subject in schools to support 'creativity'. However, as I observe my daughter make many things in a day as a part of her daily life, for her own needs and those of her friends, or see her create new things for the sheer joy of it, I wonder if creativity is actually separate from our daily routines.

Somehow, it seems as though creativity does not need its separate time or space to be used in practice. Rather, it is something we bring to our everyday routines. For instance, what if we don't regard cooking as merely a task to be performed but as a process whereby we use simple basic ingredients to create a transformational end product (such as flour, water and yeast together create wholesome bread)? We can also look at how the single activity of cooking caters to so much diversity, i.e., diversity of culture, diets, different age groups and so on. Various recipes can be analysed for the way they contribute to the nutritional requirements of our body, wherein one meal fulfils all of them at once. This activity becomes even more meaningful when we use locally grown ingredients and/or grow our own food, thereby caring for the earth and using less resources. While collecting something from the garden or even a pot in the balcony, one might observe a caterpillar or butterfly and pause for a moment to enjoy its beauty. And, all these aspects of the said experience coalesce when we complete the process of cooking a meal. Do we recognise that this is also a creative process?

For the aforementioned example, we could consider that a lot of creativity goes into a small group activity such as cooking for one's family. Can we also identify similar processes in the larger contexts we inhabit such as a school? In such a setting, each individual, students and teachers alike, comes with their own different daily routine from the separate contexts of their homes. How can we bring together these separate contexts to not only accommodate but also nurture each person's creative growth in the shared space of a school? Isn't constructing such a space also a creative process?



For instance, at the start of each academic year in a school, the activity of arranging every classroom is undertaken. When creating shelves for the classrooms in our school, we opted to use bricks and kadappa slabs. This was different from most of the spaces that had pre-constructed shelves, which already defined the space that could be utilised. It became more meaningful when we co-created, along with the students, the space that would be required based on their needs. This made it flexible for us to accommodate the practical aspects pertaining to the concerns regarding where bags and books would be kept, in addition to the creation of nooks and spaces for each child's interest (library, craft space, storage for collectibles, among others).



**In its essence, creativity seems to arise from constant movement and change. When we think about our everyday lives, we deem them as mundane and consider ourselves as prisoners of those tasks. What we fail to recognise is the fact that not only does every task present an opportunity to demonstrate our creativity but also show that we are actively engaging in creative processes while still possibly labelling them as ordinary.**

Furthermore, I looked up the definition of 'creative process'. It is regarded as a process whereby new ideas are developed to solve problems; we require an incubation time to absorb such ideas, following which they flourish. This definition can be understood as creativity – something of a particular quality that should be cultivated when the need arises, which, however, does not come to us naturally. This leads us to judge and compare people based on whether they fit this definition regarding the characteristics of a creative person. We often think they are people who think out of the box or create art for an audience in some form. To me, feminist movements are one of the most creative processes because all the women involved have challenged power creatively and continued to bring care and nurturance to their responsibilities as they go about their daily lives. Women can develop a voice out of their own collective initiative rather than that of a leader who commands.

In Andhra Pradesh, during the 1990s, there was a women's movement against arrack (local liquor) trade. The women involved in the campaign for the ban of arrack employed the methods of rights protection, political activism as well as social action and/or legal reform. In 1991, a literacy drive that began in a village conveyed, as its lesson, a tale of an angry wife who forced the closing of an arrack shop. This inspired several women readers in Dubagunta to set fire to the arrack outlets in their village. They later ambushed the delivery trucks sent to replenish the supply and emptied the bottles on the road. Without a designated leader or formal coordination, a mass movement swept across the countryside, with women in other towns following the example set by the women of Dubagunta.

They rampaged the local liquor stores and confiscated alcohol. They also staged strikes by refusing to cook, wash clothes and even engage in intercourse with their husbands. Soon, women from every social class and political party joined this movement.

Hence, these women got an opportunity to spread education through the opening up of different creative processes (in the form of discussions, readings, sharing as observed in the aforementioned case). If one analyses this incident carefully, these women actually chose, after gaining much understanding of these processes, to carry on with their daily lives but still developed a creative way to protest, wherein they refused to tolerate the injustice they were facing. This created a way to successfully sustain the movement and it was not just a one-time activity involving the demonstration of creativity. One could see that the women were internalising new experiences, by finding creative ways to tackle the issue at hand. This generated considerable resourcefulness as the women approached their husbands differently, while working at a larger policy level, i.e. at the panchayat and state level, which brought together so many women through one experience.

In its essence, creativity seems to arise from constant movement and change. When we think about our everyday lives, we deem them as mundane and consider ourselves as prisoners of those tasks. What we fail to recognise is the fact that not only does every task present an opportunity to demonstrate our creativity but also shows that we are actively engaging in creative processes while still possibly labelling them as ordinary. Most often, we all get trapped in a state of stagnancy. In turn, this stagnancy cripples movement and change. Thus, we lose the magical moments of joy, fulfilment and curiosity.

Creative processes are nurtured when we connect with ourselves and, at the same time, with the life around us. However, this does not involve separating our daily lives from the space of creativity. This recognition fosters intrinsic personal growth, which in turn has an impact on the way we approach a problem, even if we do not arrive at a positive outcome each time.

***Cooking Workshops***

The cooking workshops held in our school have been highly interesting in the light of the creative process. These workshops did not have a fixed idea in mind, and the whole activity kept taking shape based on the students' suggestions and the seasonal changes in the garden and food supplies. The end product in our mind was never separate from the process itself. The students would come to the workshop on a particular day, after which we would collectively choose the dish that we all wanted to prepare. Subsequently, this process involved the formation of groups, wherein a group of students would go to the community store to weigh and procure the grains and flour needed to make the respective dishes. This activity familiarised them with the processed ingredients available in their community, its sources and so on. Meanwhile, another group of students would go to the garden to collect fruits or vegetables depending upon the decided menu, which familiarised them with the produce and its relationship with the seasons, water availability, among others. These groups would then gather in the kitchen to chop the vegetables and collect firewood, following which the cooking process would be started.



This kind of an everyday activity was fun and meaningful when performed together. It deconstructed the notion of cooking as a task and helped in developing familiarity with the different processes involved prior to the creation of the end product. Moreover, such kind of participation also generated interest and confidence among the students to handle and appreciate a so-called mundane task. Many a times, the students would even stay back beyond the allocated time for the workshop and suggest improvisations, resulting in the creation of newer dishes. For example, the last few chappatis would become Kotthu parotta when onions and tomatoes were fried along with the torn bits of chappatis.

**POORNIMA**
MARUDAM FARM SCHOOL,
TIRUVANNAMALAI

# சேமிக்கப் பழக்குவோம்



## நோக்கம்

-சேமிக்கும் பழக்கம் மாணவர்களிடையே ஏற்படுத்துதல் .

-வீண் செலவுகளைத் தவிர்த்து நற்செயலுக்குப் பயன்படுத்துதல் .

-பெற்றோர் மற்றும் சமூகத்தினரிடையே நற்பெயர் பெறுதல்.

## மாணவர்களின் பின்புலம்

பெரும்பாலும் நம் மாணவர்கள், குறிப்பாகக் கிராமப்புற மாணவர்களின் பெற்றோர்கள் கூலி வேலைக்குச் செல்பவர்களாக உள்ளனர். எங்கள் பள்ளியிலும் இதே போல பெரும்பாலான பொற்றோர்கள் கூலி வேலைக்குச் செல்கின்றனர். அவர்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதிலேயே அவர்களின் முழு கவனமும் உள்ளது. இந்தக் கடின சூழலுக்கு இடையில் வேலைக்குச் செல்வதற்கு முன் அவர்கள் தங்கள் குழந்தைளுக்குத் தினமும் தின்பண்டங்கள் வாங்கித் திண்பதற்கு 1 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை கொடுத்து பள்ளிக்கு அனுப்பி வைக்கின்றனர்

## உடல் மற்றும் சுற்றுபுறப் பாதிப்பு:

பிள்ளைகள் பெற்றோர் கொடுத்த அந்தக் காசுகளைக் கொண்டு உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய KURKURE, LAYS போன்ற பாக்கெட் உணவுகளை வாங்கி உண்ணுகின்றனர்.

இவ்வகையானத் தின்பண்டங்களால் குழந்தைகளின் உடல் பாதிப்படைவது மட்டும் அல்லாமல் நம் பள்ளியின் விளையாட்டு மைதானம் மற்றும் வகுப்பறை குப்பை நிறைந்து அசுத்தம் அடைகிறது.

குழந்தைகள் சேமிப்பு வங்கி:

இதுபோன்ற பாதிப்புகளிருந்து குழந்தைகளை நல்வழி படுத்துவதற்காகக் குழந்தைகள் சேமிப்பு வங்கி (Children Savings Bank) என்ற திட்டத்திற்கு ஏற்பாடு செய்தேன். மாணவர்களுக்குக் கிடைக்கும் காசுகளை வகுப்பாசிரியரான நான் பெற்றுக்கொண்டு அவர்கள் பெயரில் வரவு வைத்து வந்தேன்.

## மாணவர்களிடையே போட்டி மனப்பான்மை

மாணவர்கள் தங்களுக்குக் கிடைத்த காசுகளைச் சேமிப்பாகக் கொடுக்க ஆரம்பித்தனர், ஒரு கட்டத்தில் மாணவர்களிடையே யார் அதிகப் பணம் சேமிப்பதென்று போட்டி மனப்பான்மை உருவாகியது. இதனால் மாணவர்கள் தின்பண்டங்கள் வாங்கி உண்ணும் பழக்கம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் துவங்கியது. இதனால் குப்பைகள் குறைந்து பள்ளியும் சுத்தமாகக் காட்சியளித்தது.

## சேமிப்பின் பயன்கள்

மாணவர்களின் நினைவுத் திறன் சிறந்து விளங்கியது. தாம் எவ்வளவு சேமித்து வைத்துள்ளோம், தம்முடைய நண்பர்கள் எவ்வளவு வைத்துள்ளனர் என்பதை நன்கு அறிந்து வைத்து, மேலும் கணக்கு வைப்பதிலும் உதவி செய்தனர்.

மாணவர்களின் சிறுகச் சிறுகச் சேமித்த காசுகள் பெருந்தொகையாய் ஆனதை எண்ணி மகிழ்ந்தனர்.

மேலும், மாணவர்களே சேமித்த பணம் என்பதால் பணத்தின் மதிப்பு பற்றி அவர்களுக்குப் புரிந்தது. இப்பணத்தை வீண்செலவாக்கப் போவதில்லை எனவும் சில மாணவர்கள் தெரிவித்தனர்.

## வகுப்பறையில் நடந்த நிகழ்வுகள்

**நிகழ்வு 1** எங்கள் பள்ளியில் 5ஆம் வகுப்பு மாணவர்களைக் கொண்டு கல்விச் சுற்றுலா செல்வதற்குத் திட்டமிட்டோம். அதன்படி மாணவர்களிடமிருந்து பணம் வசூல் செய்தோம். இதில் ஒரு மாணவனுக்குச் சுற்றுலா செல்வதற்குப் பணம் கிடைக்கவில்லை. இறுதியில் அம்மாணவனின் தம்பி 2ஆம் வகுப்பு நம் பள்ளி-யிலேயே படித்துவருகிறான். அம்மாணவன் தான் சேமித்த பணத்தில் இருந்து தன்னுடைய அண்ணனுக்குக் கொடுத்து சுற்றுலா அனுப்பி வைத்தான்.




**நிகழ்வு 2** எங்கள் பள்ளியில் பெற்றோர்-ஆசிரியர் சந்திப்பு மார்ச் மாதம் நடைபெற்றது. இதில் என் வகுப்பு (2ம் வகுப்பு) மாணவியின் பெற்றோர் தன்னுடைய பிள்ளை ‘அதிகம் வாங்கித் தின்கிறாள்’ என்று புகார் தெரி-வித்தனர். உடனே நான் ‘உங்கள் பிள்ளை, நீங்கள் கொடுக்கும் பணத்தைக் கொண்டு அவள் வாங்கி உண்ணவில்லை. சிறுகச் சிறுகச் சேமித்து வைத்துள்ளாள்’ என்று என்னிடம் உள்ள Children's Savings Sheet-ஐ காண்பித்தேன். உடனே அம்மாணவியின் பெற்றோர் தன் மகளை எண்ணி பூரித்தனர். மேலும் பிற பெற்றோர்களும் அம்மாணவியைப் பாராட்டினர்.

## அடுத்த இலக்கு

வரும் கல்வியாண்டு முதல், தபால் நிலையத்தில் மாணவர்களின் பெயரில் சேமிப்புக் கணக்கைத் துவக்கி, மாணவர்களிடமிருந்து பெறப்படும் பணத்தை மாதத்திற்கு ஒரு முறை மாணவர்களின் பெயரில் வரவு வைக்க திட்டம் உள்ளது. வரும் கல்வியாண்டின் தொடக்கத்தில் பெற்றோரிடத்தில் ஒப்படைத்து மாணவர்களுக்குத் தேவையான எழுது கோல், நோட்டுப் புத்தகம், பள்ளிச் சீருடை தையற்கூலி போன்றவற்றிக்குப் பயன்படுத்தச் செய்ய வேண்டும்.

## வளமான பாரதம்

குழந்தைகளுக்குக் கிடைக்கும் பணத்தை வீண் செலவுகளுக்குப் பயன்படுத்தாமல் நற்செயலுக்குப் பயன்படுத்தச் செய்வதனால் குழந்தையின் நடத்தையில் மாற்றங்கள் நிகழ்கிறது. இது போன்ற மாற்றங்களால் தான் வளமான பாரதம் உருவாக்க முடியும்.

இன்றைய சமூகத்தில் நிகழ்கிற அனைத்து அசம்பாவிதங்களுக்கும் காரணம் இன்றைய கல்விச் சூழல். கல்வி என்பது படித்து வெறும் மதிப்பெண் பெறுவது என்றில்லாமல் மாணவர்களின் நடத்தையில் நல்ல மாற்றங்களைக் கொண்டு வந்தால் நம் சமூகத்தில் நடைபெறும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும் .



**கோகுலா .சு**
தொ.ப.ஆ
அ.தொ.ப. மணமேடு

# செவித்திறன் குறையுடையோர்க்கான கல்வி

கல்வி என்பது மனிதனின் சிறப்புரிமையாக இல்லாமல் அடிப்படை உரிமையாகக் கருதப்படுகிறது. அடிப்படைக் கல்வியைப் பெரும்பாலானோர் பொதுவாகப் பள்ளிக்குச் சென்று கற்றலின் மூலம் பெற்று விடுகின்றனர். ஆனால், செவித்திறன் குறையுடைய குழந்தைக்கு இது எளிதாகச் சாத்தியப்படுவதில்லை. ஏனென்றால், காதுகேளாத காரணத்தால் செவித்திறன் குறையுடைய குழந்தைகள், மற்ற குழந்தைகளைப்போல தன் தாய்மொழியைத் தன்வீட்டிலிருந்தோ அல்லது சுற்றுச்சூழலில் இருந்தோ முழுமையாகக் கேட்டு பேசுவதற்கு அறிந்து கொள்வதில்லை. இதனால் அவர்களின் மொழிவளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகிறது. பள்ளிக் கல்வியில் உள்ள பாடங்களைக் கற்பதற்கு மொழி இன்றியமையாததாக இருப்பதால் செவித்திறன் குறையுடைய குழந்தைகளுக்கு மற்ற மாணவர்களுடன் பள்ளிக்குச் சென்று கல்வி கற்பது மிக மிக கடினமானச் செயலாக உள்ளது. எனவே, தான் அவர்களுக்குக் கல்வி போதிப்பதற்குச் சிறப்பு ஆசிரியர்களைக் கொண்ட சிறப்புப் பள்ளி அத்தியாவசியமாகிறது.

காது கேளாமை என்பது ஒரு கண்ணுக்குப் புலப்படாத குறைபாடு ஆகும். அதனால் தான் அதனை கண்டறிவது சற்று கடினமாக உள்ளது. ஆனாலும் பெற்றோர் சற்றே கவனத்துடன் குழந்தையைக் கவனித்தால் அது ஒன்றும் அப்படி ஒரு கடினமான செயல் அல்ல. நான்கு



ஐந்து மாத குழந்தை தன் பெயரைக்கேட்டு திரும்பி பார்க்காமல் இருந்தாலோ, சத்தம் வரும் திசையை நோக்கி தலையைத் திருப்பாமல் இருந்தாலோ அல்லது பெரிய சத்தத்தைக் கேட்டு கண் இமைக்காமல் அதிர்ச்சி அடையாமல் இருந்தாலோ அந்தக் குழந்தைக்குக் கேட்கும் திறன் குறை இருக்கலாம் என தாய் சந்தேகப்படவேண்டும். அப்படி ஒரு சந்தேகம் ஏற்பட்டால் தாமதிக்காமல் அக்குழந்தையை ஒரு நல்ல ஆடியோலாஜிஸ்டிடம் அழைத்துச் சென்று பரிசோதனை செய்ய வேண்டும்.

செவித்திறன் குறை உள்ளது என்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டால், அக்குழந்தைக்குப் பொருத்தமான காது கருவி அணிவிக்க வேண்டும். காது கருவி என்பது நம் மூக்கு கண்ணாடியைப் அணிந்த போன்றது அல்ல. மூக்குக் கண்ணாடி அணிவிக்க உடன் நம் பார்வைக் கோளாறு திருத்தப்பட்டு நமக்குப் பார்வை நன்றாகத் தெரியும். ஆனால் காது கருவி அணிந்த குழந்தைக்கு வெளிஉலக சத்தங்களை , மொழியைக் கேட்பதற்கும், பேசுவதற்கும், புரிந்து கொள்வதற்கும் சிறப்புப் பயிற்சி மிக மிக மிக அவசியமாகிறது. இந்த பயிற்சியை நாம் செவித்திறன் குறையுடைய குழந்தைகளுக்கு எவ்வளவு சீக்கிரம் அதாவது எவ்வளவு சிறுவயதில் ஆரம்பிக்கிறோமோ அந்த அளவிற்கு அவர்கள் மொழி வளர்ச்சியையும், கேட்கும் திறனில் மேன்மையையும் சிறப்பாக உதட்டப்பியாசம் செய்யும் திறனையும் மற்றும் தெளிவாகப் பேசும் திறனையும் மற்ற மாணவர்களுக்குச் சமமாகப் பெற்று அவர்களுடன் சேர்ந்து பள்ளிக் கல்வியைச் சிறப்பாகத் தொடரமுடியும். இதன் மூலம் செவித்திறன் குறையுடைய மாணவனின் தன்னம்பிக்கையும் நன்றாக மேன்மையடையும். எனவே தான் இக்குழந்தைகளிடம் உள்ள செவித்திறன் குறையை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கண்டறிந்து பொருத்தமான காது கருவி அணிவித்து சிறப்புப் பயிற்சியை ஆரம்பிப்பது மிக மிக இன்றியமையாததாகும்.

மேலே கூறப்பட்ட திறன்களை எல்லாம் வளர்த்துக் கொள்வதற்கு வேண்டிய பயிற்சியைச் செவித்திறன் குறையுடைய குழந்தைகள் சாதாரண பள்ளியில் பெறுவது என்பது சாத்தியமற்றதாகும். வகுப்பில் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் இருப்பதாலும், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் இந்த மாணவர்களுக்கு என்ன, எப்படி பயிற்சி அளிப்பது என்கிற விபரங்கள் போதிய அளவில் இல்லாமல் இருப்பதாலும் செவித்திறன் குறையுடைய மாணவர்களுக்குச் சாதாரண பள்ளியில் மொழி வளர்ச்சிக்கானப் பயிற்சியும், பேச்சு பயிற்சியும் அளிப்பது என்பது மிக மிக கடினமானக் காரியமாக உள்ளது. எனவேதான் இந்தக் குழந்தைகள் குறைந்தபட்சம், ஆரம்பக் கல்வியையாவது, சிறப்புப்பள்ளியில் பயிற்சி பெறுவது அவசியமாகிறது. செவித்திறன் குறையுடைய மாணவர்கள் பெருமளவில் தற்போது அனைவருக்கும் கல்வித்திட்டத்தின் கீழ் மற்ற மாணவர்களுடன் சேர்ந்து கல்வி கற்க ஆரம்பித்துள்ளனர்.

இதற்கும் பல காரணங்கள் உண்டு. ஒன்று சிறப்பு பள்ளிகளின் எண்ணிக்கை மிக மிக குறைவு. பல இடங்களில் சிறப்புப் பள்ளிகள் இல்லவே இல்லை என கூறலாம். எனவே செவித்திறன் குறையுடைய மாணவர்கள் சிறப்புப் பள்ளிகளைத் தேடி அதிக தூரம் பயணப்பட வேண்டியுள்ளது. செவித்திறன் குறையுடைய மாணவர்களின் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் சிறப்புப் பள்ளியில் கல்வி பயில்வதைக் குறைவாக, அவமானமாக எண்ணி அவர்களைத் தங்கள் வீட்டிற்கு அருகிலேயே உள்ள சாதாரண பள்ளியில் சேர்த்து விடுகின்றனர். அங்கு அவர்களால் கல்வியைச் சிறப்பாகக் கற்க முடியுமா?. அவர்களின் தேவைகள் தான் என்ன? என்பதை எல்லாம் அறியாதவர்களாக பெற்றோர்கள் இருக்கிறார்கள். மேலும் தன் பிள்ளையிடம் உள்ள குறையை ஏற்றுக்கொள்ளும் மனோதிடமும் இல்லாமல் அதை சமூகத்திடம் இருந்து மறைக்கும் எண்ணத்துடன் அவர்களைச் சிறப்புப் பள்ளிக்கு அனுப்பாமல் சாதாரண பள்ளியில் சேர்த்து விடுகிறார்கள். இப்படி பெற்றோர்கள் அறியாமையில் மூழ்கி கிடப்பதோடு , அவர்களுக்கு வேண்டிய ஆலோசனையைச் சரியாக, முறையாக, வழங்கப்படாததுமே நம் சமுதாயத்தில் உள்ள ஒரு பெரிய குறைபாடாகும். இப்படி சாதாரணப் பள்ளியில் சேர்க்கப்பட்ட மாணவர்களில். ஒருசில மாணவர்கள் ஓரளவு

பயன்பெற்றாலும் பெரும்பாலான செவித்திறன் குறையுடைய மாணவர்கள் எதையுமே கற்க முடியாமல் மிகவும் சிரமப்படுகின்றனர் என்பதுதான் உண்மை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் சாதாரண பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் தன் வகுப்பில் ஒரு செவித்திறன் குறையுடைய மாணவன் இருந்தால் என்ன செய்வது? எப்படி அவர்களுக்கு உதவுவது? என்பதை அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகிறது.

நம் வகுப்பில் ஒரு செவித்திறன் குறையுடைய மாணவி இருந்தால் ஆசிரியர்களாகிய நாம் செய்ய வேண்டியது என்ன?.

20, 30 மாணவர்கள் இருக்கும் ஒரு வகுப்பில் ஒரு மாணவியை மட்டும் கவனிப்பது என்பது இயலாத காரியம் தான். அந்த மாணவிக்கு மட்டும் தனியாகக் கற்பிப்பது என்பதும் கடினமான காரியம்தான். அதனால் என்ன செய்யலாம்? ஆசிரியர்கள் தங்கள் மனநிலையில் எண்ணத்தில் கொண்டு வரும் ஒரு சிறிய மாற்றம், செவித்திறன் குறையுடைய மாணவர்களின் கல்வியில் ஒரு பெரிய ஏற்றத்தை நிச்சயமாக அளிக்கும். அப்படியானால் ஆசிரியர்களாகிய நாம் செய்ய வேண்டியது தான் என்ன என்று பார்ப்போமா?

- செவித்திறன் குறையுடைய மாணவி தினமும் காது கருவி தவறாமல் அணிந்து வருகிறாளா? கருவி ஒழுங்காக வேலை செய்கிறதா? என்பதை தினமும் காலையில் கவனிக்க வேண்டும்.
- செவித்திறன் குறையுடைய மாணவியை, ஆசிரியர் தனக்கு எதிரில் முதல் வரிசையில் உட்கார வைத்தல் சிறப்பு. இது அந்த மாணவி ஆசிரியரின் பேச்சைக் கேட்பதற்கும், உதட்ப்பியசம் செய்வதற்கும் பெரும் உறுதுணையாக இருக்கும்.
- வகுப்பறையில் வெளிச்சம் ஆசிரியரின் பின் பக்கத்தில் இருந்து வராமல் முகத்தில் விழும்படி இருத்தல் அவசியம். இது செவித்திறன் குறையுடைய மாணவர்கள் ஆசிரியரின் முகபாவங்களைத் தெரிந்து கொள்வதற்கும், உதட்டு அசைவினை புரிந்துகொள்வதற்கும் எளிதாக இருக்கும்.
- வகுப்பறையில் எப்பொழுதும் பேச ஆரம்பிப்பதற்கு முன்பு ஆசிரியர் செவித்திறன் குறையுடைய மாணவியின் கவனத்தை தன் பால் ஈர்த்துப் பின்பு பேசவேண்டும்.
- வகுப்பில் உள்ள சகமாணவர்களுக்குச் செவித்திறன் குறையுடைய மாணவியைப் பற்றிய விவரங்களை அதாவது அந்த மாணவியால் என்னென்னவெல்லாம் செய்ய முடியும் எதை செய்வது கடினம், அவர்கள் எப்படி அந்த மாணவிக்கு உதவ முடியும் என்பதை எல்லாம் எடுத்துக்கூற வேண்டியது மிக அவசியம்.
- செவித்திறன் குறையுடைய மாணவர்களின் பெற்றோர்களுடன் உள்ள தொடர்பைத் திடப்படுத்திப் பெற்றோர்களை அவ்வப்பொழுது ஊக்குவித்துக் கொண்டே இருக்க வேண்டும்.
- வீட்டில் நடக்கும் நிகழ்வுகளை எல்லாம் செவித்திறன் குறையுடைய மாணவியுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியதின் அவசியத்தைப் பெற்றோர்களுக்கு வலியுறுத்துதல் அவசியம்.
- பெற்றோர்கள் மூலமாகவோ அல்லது ஆசிரியர்(Resource Teacher) மூலமாகவோ மறுநாள் கற்பிக்கப்போகும் பாடத்தைச் செவித்திறன் குறையுடைய மாணவிக்குச் சற்று முன்னுரை கொடுத்தால், வகுப்பில் பாடத்தைப் புரிந்து கொள்வது மாணவிக்குச் சற்று எளிதாக இருக்கும்.
- பாடம் கற்பிக்கும்போது ஆசிரியர் நடந்து கொண்டிருக்காமல் ஒரே இடத்தில் நின்று பேசுவது நல்லது. மேலும் கரும்பலகையில் எழுதும்போதும் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.
- பாடம் கற்பிக்கும் போது செவித்திறன் குறையுடைய மாணவி தன்னுடன் இருக்கிறாளா என்பதை அவ்வப்பொழுது சிறுசிறு கேள்விகள் கேட்பதன் மூலம் உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.
- தேவைப்படும்போது வாய்மொழித் தேர்வைத் தவிர்த்து எழுத்துத்தேர்வு எழுதச் சொல்லலாம்.

- வகுப்பில் நடக்கும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் செவித்திறன் குறையுடைய மாணவியையும் ஈடுபடுத்தி அவளுடைய தன்னம்பிக்கையை வளர்க்கலாம்.

- வகுப்பறை வேலைகளிலும் மற்ற மாணவர்களுடன் செவித்திறன் குறையுடைய மாணவியையும் ஈடுபடுத்த வேண்டும். பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும்.

- செவித்திறன் குறையுடைய மாணவியுடன் வேறு ஒரு மாணவியையும் இணைத்து அந்த மாணவி தவற விடுகின்ற விஷயங்களை எடுத்துக் கூறவோ அல்லது எழுதித்தரவோ உதவும் படி கேட்டுக் கொள்ளலாம்.

- பள்ளியில் வள ஆசிரியர் இருந்தால் அவர்கள் மூலம் ஆசிரியர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வு தேடலாம்.

- செவித்திறன் குறையுடைய மாணவர்களுக்கு அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கும் சலுகைகள் பற்றியும் ஆசிரியர் தெரிந்து கொள்வது அவசியம்.

மொத்தத்தில் செவித்திறன் குறையுடைய மாணவியை நன்றாகப் புரிந்து கொண்டு அவளைக் குறையுடைய மாணவியாகப் பார்க்காமல், அவளுடையத் திறமைகளில் ஆசிரியர் தன் கவனத்தைத் திருப்பி அந்த திறமைகளை வளர்க்க வேண்டியதற்கான முயற்சிகளில் ஈடுபடுவாரேயானால் செவித்திறன் குறையுடைய மாணவியும் மற்ற மாணவர்களைப் போல அவர்களுடன் சேர்ந்து கல்வி பயின்று வெற்றிகரமாகத் தன் பள்ளிப் படிப்பை நிறைவு செய்வாள் என்பதில் எந்த விதமான ஐயமும் இல்லை.



**சரஸ்வதி**
தொ.ப.ஆ
ஸ்ரீ பச்சையப்பன் செவித்திறன் குறையுடையோர் பள்ளி



# செயல்வழிக்கல்வி - ஒரு முயற்சி

### பள்ளி மாணவர்வகள்-பின்புலம்:

என் பெயர் தமிழரசி. நான் தாணாம்பாளையம் அரசு தொடக்கப்பள்ளியில் கடந்த மூன்று ஆண்டுகளாக ஆசிரியராகப் பணியாற்றி வருகிறேன். பலதரப்பட்ட, பின்தங்கிய மாணவர்கள் எங்கள் பள்ளியில் பயில்கின்றனர். பெரும்பாலான பெற்றோர் கூலித்தொழிலாளிகள். அவர்களால் தங்கள் குழந்தைகளின் கற்றலுக்குப் பள்ளிக்கூடம் அனுப்புவதைத் தவிர வேறெந்த வகையிலும் உதவ முடிவதில்லை. ஆகையால், குழந்தைகளின் கற்றல் ஆர்வத்தைப் பாடல்கள் மற்றும் சிறு செயல்பாடுகள் மூலம் வளர்க்க மேற்கொண்ட முயற்சியை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விழைகிறேன்.

### வகுப்பறைச் சவால்கள்:

- முன்மழலையர் வகுப்பிலிருந்து முதல் வகுப்பிற்கு வரும்போது அவர்களை ஓர் இடத்தில் அமரவைத்து அவர்களின் கவனத்தை ஈர்த்தல்.
- முன்மழலையர் மற்றும் முதல் வகுப்பு மாணவர்களுக்கு ஒரே வகுப்பறை.
- கற்றலில் ஆர்வமில்லாத சில மாணவர்கள்.

### பாடல்கள் மூலம் கற்றல்:

வருட ஆரம்பத்தில் ஒன்றாம் வகுப்பு மாணவர்களைப் பாடல்கள் மூலம் முதலில் பேசவைத்து, அவர்களை வகுப்பறைச் சூழலுக்குப் பழக்கப்படுத்தி அதன் பின்னரே மொழித் திறனை வளர்க்கும் திறனில் குழந்தைகளை ஈடுபடுத்தினேன். முன் மழலையர் மற்றும் முதல் வகுப்பு மாணவர்களுக்கு ஒரே வகுப்பறை என்பதால் குழந்தைகளின் கவனம் சிதறாத வண்ணம் குறைவான நேரத்தைக் கொண்ட செயல்பாடுகளின் மூலம் கற்பித்தலுக்கான அடித்தளம் அமைக்கப்பட்டது.

### கற்றல் வெளிப்பாடு:

இதன்மூலம் குழந்தைகளின் படைப்பாற்றல், சொற்களஞ்சியப் பெருக்கம், உள்வாங்கும் திறன் போன்றவை பெருகியது. வார்த்தைகள் மற்றும் படங்களைப் பார்த்து இரு வரிப் பாடல்கள் இயற்றும் அளவிற்கு வளர்ச்சி அடைந்தனர். உதாரணமாக மயில்,யானை,முயல் போன்ற

வார்த்தைகளைக் கொடுத்த போது குழந்தைகள்,

மயில் மயில் மயில்

நீலக் கலர் மயில்.

யானை யானை யானை

நீண்ட மூக்கு யானை.

முயல் முயல் முயல்

கேரட் சாப்பிடற முயல் என்று பாடினர்.

படங்களைப் பார்த்து கதை கூறுதல், கதை சொல்லக்கேட்டு அதில் தம் சொந்தக் கற்பனைகளை இணைத்து கதை கூறுதல் போன்ற திறன்களை வளர்த்துக்கொண்டனர். பாடல்களைக் கற்பிக்கும் போது முதலில் பாடலுக்குத் தொடர்புடைய நிகழ்வுகளைப் படமாகக் கரும்பலகையில் வரைந்து,வார்த்தைகள் சிலவற்றையும் எழுதி, பாடலைப் பாடி, பின்னர் புத்தகத்தைப் படிக்கும் போது கற்றல் திறம்படவும், எளிமையாகவும் அமைகிறது.

## பெற்றோர் ஈடுபாடு:

வகுப்பில் ஒரு மாணவன் கற்பதில் ஆர்வமில்லாமல் காணப்பட்டான் . அம்மாணவனின் தாய் பள்ளிக்கு வந்து கலந்தாலோசித்தபோது , வகுப்பறைச் செயல்பாடுகளைப் பகிர்ந்து கொண்டேன். அதைத் தொடர்ந்து செயல்படுத்தியதால் அம்மாணவன் தற்போது வகுப்பறைச் செயல்பாடுகள் அனைத்திலும் ஆர்வமுடன் பங்கேற்கிறான். மேலும் அவனுடைய முயற்சிகளைப் பாராட்டும் போது அப்பாராட்டு அவனை மேலும் ஊக்குவிக்கிறது.

இதைப்போலவே மற்றொரு மாணவியும் வகுப்பறைச் செயல்பாடுகளான வாசித்தல் மற்றும் எழுதுதல் போன்றவற்றில் ஆர்வம் குறைந்து காணப்பட்டாள். அவளது சகோதரியை அழைத்து (எம் பள்ளி ஐந்தாம் வகுப்பு மாணவி ) உதவுமாறு கூறினேன். அவளும் தன் சகோதரிக்குப் பக்கபலமாக இருந்து உதவியதால் மாணவியின் கற்றலில் முன்னேற்றம் ஏற்பட்டது. அவளது செயல்களைப் பாராட்டும்போது சகோதரியையும் அழைத்துப் பாராட்டியது நல்ல முன்னேற்றத்திற்கு வழி வகுத்தது. பாராட்டுதலும், அங்கீகாரமும் மாணவர்களை முன்னேற்றப்பாதையில் அழைத்துச் செல்லும் என்பதற்கு இந்நிகழ்வுகள் சான்றாகின்றன.



**தமிழரசி**
தொ.ப.ஆ
அ.தொ.ப, தாணாம்பாளையம்.

# கற்றுக்கொண்டே இருக்கிறோம் எம் குழந்தைகளிடம் !!
# கேள்விகளாய் குழந்தைகள் மாணவர்களாய் நாங்கள்

## அறிமுகம்

நாள் முழுக்க புத்துணர்வைத் தக்கவைக்க குழந்தைகளுடன் உரையாடுவதன் மூலமே சாத்தியம் என்பதை உணர வைத்தவர்கள் எம் பள்ளிக் கூட குழந்தைகள்

தங்கள் வசம் கவனத்தை ஈர்க்கும் யதார்த்தமான வித்தையை அறிந்தவர்கள் குழந்தைகள்.

ஆசிரியர்களாகிய எங்களை உயிர்ப்புடன் வைத்திருக்கும் எம் பள்ளிக்கூட குழந்தைகளின் உரையாடல்களை நிறைய நேரம் உணர்ந்து கொண்டிருக்கிறோம்.

## மாணவராகிய ஆசிரியரின் பகிர்வுகள்

அவற்றுள் நான் அனுபவித்த சில பதிவுகள் இங்கே:

## வகுப்பறை கேள்விகள்

Dictation Rough Note வைத்துவிட்டு மறுபடி Dictation Note - ல் எழுதச் சொன்னதற்கு அதுக்கு First இதில் எழுதலாமே என்றான் இரண்டாம் வகுப்பு மாணவன்.

குடிப்பதற்குத் தண்ணீர்ப் பந்தல் எங்கே என்று கேட்டுக் கொண்டே நான் தேடுகின்றேன், கிடு கிடு என ஓடிவந்து இந்தா குடி என்று தன் தண்ணீர் பாட்டிலை நீட்டியது ஒரு லிரிநி குழந்தை.

ஔவை ஆயா ஏன் கோல் வச்சிருக்காங்கனு கேட்டதற்கு சட்டென்று மாடு மேய்க்க என்று கூறினான் LKG சிறுவன். ஒரு LKG குழந்தை அழுவதைப் பார்த்து ஏன் அழுவற? அழுவாதன்னு சமாதானம் செய்ததும் மற்றொரு குழந்தை

நானோ Blocks ( விளையாட) எடுத்து அழுத குழந்தையிடம் கொடுக்க, அழுதால் Blocks கொடுப்பார்கள் என்றெண்ணி வேறொரு UKG குழந்தை வீரென்று அழத்தொடங்கியது.

இப்படிப் பல தருணங்களில் என்னைத் திக்குமுக்காடவும், சிந்திக்கவும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் எம்பள்ளிக்கூட குழந்தைகள்

Duster - Board அளக்கிற Rubber
கருப்பு எறும்பை - கூசற எறும்பு
ஆலமரத்தை - தொங்கும் மரம், ஊஞ்சல் மரம்
Flag Pole - சுத்தர மரம்
கற்றாழை - கொழுகொழச்செடி
Computer - படம் காட்டற Board
Hose Pipe - தண்ணீ வர பாம்பு
Seeing Tubelight through Scale - Rainbow Scale
Ashoka Tree - ராஷாமரம்
முருங்கைமரம் - கீரமரம்
வாழைமரம் - இலைமரம்
வேப்பமரம் - சாமிமரம்
அணில், காகிதம் - சாப்பாட்டு Friends
Addition and Multiply - அக்கா, தங்கை
Subtraction and Divide - அண்ணன் தம்பி
Daily Consolidated Attendance Reg. - Number போடுற Note
Notice Board - Prayer செய்ற Board

எம் பள்ளிக்கூட குழந்தைகளின் பல்வேறு மொழி வழக்குகள் சில மேலே கூறப்பட்டுள்ளது.

தவறே செய்யாமல் அப்படிச் செய்யக்கூடாது என்று முன்னெச்சிரிக்கைக் கொடுத்து என்னிடம் முதல் வகுப்பு குழந்தை வாதிட்டது. V.good என்று கூறுவதோடு நிறுத்திக் கொண்ட என்னிடம் தாமாகக் கைக்குலுக்கல் செய்து பாராட்ட, கையை நீட்டியது UKG குழந்தை. நேற்றுக் கொடுத்த Home Project நீங்க பார்க்கல அதுக்குள்ள நாளைய H.W. கொடுக்கறீங்க என்று கேட்டான் 3 - ம் வகுப்பு மாணவன்.

Story சொல்ல UKG குழந்தையை அழைத்து போது Miss இருங்க மனசுக்குள்ள ஒரு தடவை சொல்லிட்டு வரன் என்று சொன்னான்.

நீ யாரையெல்லாம் விளையாட சேர்த்துக்

கொள்வாய் ? என்று நான் கேட்க 3 - ம் வகுப்பு மாணவன் பிரவீன்குமார்கள் என்று எழுதினான் கேட்டதற்கு இரண்டு பிரவீன் இருக்கா அதான் பன்மையில் எழுதினேன் என்று கூறினான்.

கல் - கற்கள் அப்ப சேவல் - சேவற்கள் என்று விளக்கினான் 3 வகுப்பு மாணவன் இக்குழந்தைக்குப் புரிய வைக்க மாணவனாய் மாறி சிலரிடம் எப்படி விளக்க வேண்டும் என்று கேட்டப் புரியவைத்தேன்.

EVS நல்லாதானா இருக்கு ஏன் 1, 2 ல EVS Book கொடுக்கல ? என்றான் 3 வகுப்பு மாணவன்.

3 - ஆம் வகுப்பு மாணவர்களுடன் வகுப்பாசிரியராய் இருப்பதால் அதிகநேரம் அவர்களுடன் உரையாட நேரிடும் பொதுவாக Classworks / Home Works Open Ended கேள்விகளாகக் கேட்டேன் அவர்களின் ஒவ்வொரு பதிலும் வித்தியாசமாக விசித்திரமாக சிந்திக்கச்செய்வதாக இருக்கும்.

## நூலகச் செயல்பாடுகள்:

2018-19-ம் கல்வியாண்டின் தொடக்கநாளில் புதிதாய் வந்த பாடப்புத்தகங்களைக் குழந்தைகளுக்குக் கொடுக்க அடுக்கி வைத்திருந்தோம். என்ன Iron பண்ணீங்களா? என்றான் 1 ஆம் வகுப்பு மாணவன்.

புதிதாய் வாங்கிய Library Book-களை அரைநாள் குழந்தைகளிடம் பார்வைக்கு வைத்து இந்த Book-லாம் பார்த்தீங்கல்ல என்னலாம் தோனுது சொல்லுங்க என்று கேட்டேன் அவர்கள் அளித்த சில பதில்கள் பின்வருமாறு

- வரையனும்
- ஸ்படிக்கனும்
- புக் உள்ள புகுந்து போகனும்
- அதில் இருக்க படம் மாதிரியே இங்கயும் வேணும்
- என் பேர போட்டுணு புக் எழுதனும்
- எல்லா புக்கையும் வீட்டுக்கு அள்ளிட்டு போயிடனும்
- பக்கம் எண்ணிப் பார்த்து சரியாக இருக்கா என்று பாக்கனும் தோனுச்சி
- புக்க சாப்பிடனும் போல இருக்க
- புக்கல இருக்கிற Handwriting மாதிரிஎழுதனும்
- நீங்க படிங்க நாங்க கேட்டு கதையைச் சொல்றோம்.

பொதுவாகப் புத்தகங்களைப் படித்துவிட்டு அடுக்கி வைக்கும் எம் பள்ளி குழந்தைகள் புது புத்தகங்களை ஆராயும் வேலையில் வாங்கிவந்த அந்த ஒரு வாரம் களைத்தப்படி வைத்திருந்தனர். இனி உங்களுக்குக் கிடையாது என்று பொய் கோபத்தோடு கூறிய என்னைக் கண்டு முகம்வாடியும் முகத்தில் அதிர்ச்சியும், வைத்துக்கொண்டு ஏன் Miss என்று கேட்டவர்களிடம் அவர்களையே பதில் அளிக்குமாறு கூறினேன். அவர்கள் கூறிய காரணங்கள் என்னைப் பிள்ளைகள் புரிந்து கொண்டது அவ்வளவு தானா என்ற வருத்தத்தையும் பிள்ளைகள் பொறுப்பாகக் கத்துக்கிட்டு இருக்கிறார்கள் என்ற நிம்மதியையும் கொடுத்த காரணங்கள் பின்வருமாறு.

- Book பழசாயிடும்னு, வாசனை போயிடும்னா,
- Book அழுக்காயிடும்னு
- Book நாங்க கிழிக்கிலேயே அப்புறம் ஏன் miss.
- Book Corner கூட Fold பண்ணலயே அப்புறம் எதுக்கு மிஸ்
- Book ஒரு நாள் வீட்லேயே வச்சிட்டனே அதனாலயா
- Book ஏதாவது குறைஞ்சிடுச்ச, காணடிச்சிட்டோமா
- Book நாங்க தான் தினமும் படிக்கறோமே அப்புறம் என்ன,
- Book தமிழ் ஆங்கிலம்னு பிரிச்சு வைக்க மறந்துட்டோம் அதுவா

இல்லடா நாம புக்குல அழகாக அடுக்கி வைக்கல அதனால் தாண்டா திருத்தி என்று

பெருமூச்சுவிட்டான் மூன்றாம் வகுப்பு மாணவன்.

## பொதுவான கேள்விகள்:

மதிய உணவு உண்ணும் போது என்னது இது ? நான் கடலை என்றேன். ஏன் வேவல ஒழுங்கா சமைக்கமாட்டியா? என்றது LKG குழந்தை, நாளையிலேர்ந்து நல்லா சமைக்கறேன் ! செல்லம் என்றேன் நான்.

வகுப்பறையில் LKG குழந்தை ஒன்று, ஏன் கூட Ball விளையாட வரியா? நான் புது பனியன் போட்டிருக்கேன் பார்த்தியா? நான் தான் நைட்டே தூங்கிட்டேனே? என்ன ஏன் இப்ப (மதியம்) தூங்க சொல்ற? Block ல நான் Train மாதிரி வீடு கட்டியிருக்கேன் என்றது.

காலைப் பேரவையில் Exercise செய்யும் போது செய்யாமலிருந்த LKG குழந்தையிடம் செய்யச் சொல்லி நான் சைகை காட்ட இல்ல பரவால்ல இருக்கட்டும் என்பது போல பதிலுக்கு அவனும் தலையை அசைத்தான்.

இன்னிக்கு எல்லாரும் நல்லா இருக்கீங்களா என்று நான் கேட்க, பள்ளிக்கு முதல்ல நான் வந்தேன். யாருமே இல்ல நான் வந்தப்ப அதனால் நான் மகிழ்ச்சியாக இல்லை என்று கூறிய முதல் வகுப்பு குழந்தையின் அம்மாவிடம் மிகவும் சீக்கிரமாக 8.30 பள்ளிக்கு அனுப்ப வேண்டாம் என்று கூறினேன்.

சோறு ஊட்டிவிடறியா என்று கேட்கும் LKG குழந்தைகள் மடியில் பொத்தென்று உட்கார்ந்து எழுதப்படிக்கக் கேட்கும் UKG குழந்தைகள், எந்நேரமும் மரம், செடிகளையே சுற்றிக் கேள்வி கேட்கும் 1 ஆம் வகுப்பு குழந்தைகள், கண் பார்க்க உடனே தாளிலோ கரும்பலகையிலோ வரைந்து கண்டுபிடிங்க பார்ப்போம். இதென்ன அதென்ன என்று கேட்கும் 2 வகுப்பு குழந்தைகள் Lib-BookShelf யே சூழ்ந்து கொண்டு கதையோ, செயல்பாடோ அதையே கட்டிக்கொண்டு என்னைக் கதைக்கூறக்கேட்கும் 3 வகுப்பு குழந்தைகளும் எனது பள்ளி ஆசிரியர்களையும் என்னையும் நீங்களும் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களே என்பதை அடிக்கடி பல சூழலில் நினைவுப்படுத்துகிறார்கள்.

## முடிவுரை:

குழந்தைகளின் ஆச்சரியமும், கோபமும் கொண்ட பல கேள்விகள் பொதுவாக இவை முட்டாள் தனமானவை என நம்மில் பலரால் புறக்கணிக்கப்படும். இக்கேள்விகள் தத்துவம் தோன்றிய நாளிலிருந்து மாபெரும் சிந்தனையாளர்களும் ஞானிகளுமே விடை காண முடியாமல் போராடிவரும் கேள்விகளாக உள்ளன. என்பதை உணர்ந்தவளாய் குழந்தைகளின் குறைகளைப் பட்டியலிடத் தனிப்பட்ட முறையில் பெற்றோர் அழைத்துப் பேசும் நாம், குழந்தைகளின் திறமையைப் பாராட்டவும் ஊக்கப்படுத்தவும் பெற்றோரை அவ்வப்போது அழைத்துப் பேச வேண்டும் என்பதை வேண்டுகோளாய் வைத்தும் இக்கட்டுரையை முடித்துக்கொள்கிறேன்.



**அனிதா**
தொ.ப.ஆ
அ.தொ.ப, அகரம்

# பள்ளி இடைநின்ற குழந்தைகளின் வளர்ச்சியில் நிகழ்த்துக் கலைகள் மற்றும் கைவேலைப்பாடுகளின் பங்கு

முதலில் பயிரைப் பற்றி அறிமுகம் செய்கிறேன். பயிர் என்பது கிராமப்புற வளர்ச்சிக்காக, கிராம மக்கள் வாழ்வின் பல்வேறு பரிமாணங்களிலும் ஆக்கப்பூர்வமான, இயன்றளவு மாற்றங்களை உருவாக்கும் ஓர் எளிய அமைப்பாகும். அறுபதுக்கும் மேற்பட்ட சுற்றுப்புறக் கிராம மக்கள் இணைந்து, தேவையான கல்வி, சுகாதார, ஆரோக்கிய, பொருளாதார, நிர்வாக, கட்டுமான, விவசாய, நீர் வள, காடு வள, இன்னும் பிற மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வரும் ஒரு சிறிய சமூகமே பயிர்.

## பயிர் மேற்கொள்ளும் பணிகளின் உதாரணங்கள்:

- ஒவ்வொரு வீட்டிற்கும் தெருவிற்கும் நேரில் சென்று விசாரித்து உடல்நலப் பிரச்சனைகளுக்குக் கூட்டுத்தீர்வு காண்பது,
- பாரம்பரிய மருத்துவ முறைகளை மீண்டும் மக்களிடையே கொண்டு செல்வது,
- உடல் மற்றும் நலம் சார்ந்த கல்வியை அனைவருக்கும் வழங்குவது,
- ஊட்டச்சத்து வழங்குவது,
- மருத்துவப் பரிந்துரை மூலம் தேவையற்ற செலவுகளைத் தவிர்த்து ஏற்ற சிகிச்சை பெற உதவுவது,
- மாலை நேரக் கல்வி அளிப்பது,
- அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் கலை இலக்கிய விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது வழியாக இவற்றின் அனுபவங்களைப் பெற வாய்ப்பு ஏற்படுத்துவது,
- ஆசிரியர் எண்ணிக்கை குறைவாக உள்ள அரசுப் பள்ளிகளுக்குக் கூடுதல் ஆசிரியர் வழங்குவது,
- அரசுப் பள்ளி மாணவர்களில் மிகவும் ஊட்டச்சத்து குறைவானவர்களுக்குப் பள்ளியிலேயே இணை உணவு வழங்குவது,
- பயிர் வளாகத்திலேயே ஓர் ஆரம்பக் கற்றல் மையம் நடத்துவது,
- பள்ளி இடைநின்ற குழந்தைகளுக்கான உண்டு உறைவிடக் கற்றல் மையம் நடத்துவது,
- கிராம மக்களுக்கான வேலைவாய்ப்பு ஏற்படுத்துவது, (பைகள் தைப்பது, உணவுப்பொருள் உற்பத்தி)
- இயற்கை விவசாயம் செய்வது மற்றும் அதற்கான பயிற்சி அளிப்பது,
- கால்நடைகளுடன் கூடிய ஒருங்கிணைந்த பண்ணை உருவாக்குவது
- பஞ்சாயத்துடனும் மாவட்ட நிர்வாகத்துடனும் இணைந்து மேம்பாட்டுப்பணிகளை மேற்கொள்வது,
- கிராமத்திற்கு வேண்டிய கட்டுமான வசதிகளில் இயன்றதைச் செய்து தருவது,
- மரங்கள் நட்டு பாதுகாப்பது,
- நீர்வழிப் பாதைகளை மறுசீரமைப்பது,

என்று வாழ்வின், சமூகத்தின் பலமுனைகளிலும் வேண்டிய மாற்றத்திற்கான கருவியாகப் பயிர் சமூகம் இயங்கி வருகிறது.

## பயிரில் குழந்தைகள்:

பயிர் சமூகஅமைப்பில், குழந்தைகள் இன்றியமையாத ஓர் அங்கம். குழந்தைகளும் பெரியவர்களும் ஒரே சமூகமாக இயங்குகின்றோம். பள்ளிக்கும் மற்ற பணியிடங்களுக்கும் நடுவே இங்கு மதில் சுவர்கள் இல்லை. எங்கள்

பணிகளைக் காண பல ஊர்களில் இருந்தும், பிற நாடுகளிலிருந்தும் நண்பர்களும் ஆர்வலர்களும் வருகின்றனர். இங்குள்ள குழந்தைகளுடன் பேசிப் பழகுகின்றனர். குழந்தைகளும் பல்வேறு கருத்துக்களையும் நடைமுறைகளையும் தொழில்களையும் கலாச்சாரப் பின்னணிகளையும் இளம் பருவத்திலேயே உணர்ந்து அனுபவிக்கும் ஒரு பெரிய வாய்ப்பினை எங்கள் வளாகம் ஏற்படுத்துகிறது.

பயிர் வளாகத்தில் 2 விதமான பள்ளிகள் உள்ளன. ஒன்று சுற்றுப்புறக் கிராமக் குழந்தைகள் வந்து போகும் முன்மழலையர் தொடக்கப் (நர்சரி பிரைமரி) பள்ளி , மற்றொன்று பள்ளியில் இருந்து இடை நின்ற குழந்தைகள் தங்கிப்பயிலும் உண்டு உறைவிடப் பள்ளி. எங்கள் குழந்தைகள் விவசாயம், ஆடு வளர்ப்பு, செங்கல் சூளை, நாடோடி மரபு, கட்டுமான வேலை போன்ற பல்வேறு தொழில் செய்கின்ற குடும்பப் பின்னணியிலிருந்து வருபவர்கள்.

தொடர்ந்து பள்ளி செல்லும் குழந்தைகளே பல சவால்களைச் சந்திக்க நேரிடும்போது, இடைநின்ற குழந்தைகளின் சவால்கள் இன்னும் அதிகம்.

- ஆரம்பப் பள்ளியிலேயே இவர்களுக்குப் படிப்பதில் சிரமம். ஆனால், அச்சிரமத்தை அகற்ற யாரும் போதுமான அல்லது சரியான முறையில் முயலவில்லை. சிறப்பு கவனம் அளித்து, அருகில் அமர்ந்து ஏன் புரியவில்லை என்றாராய்ந்து உதவ நேரமில்லை / மனமில்லை. மாறாக, உனக்குத் தெரியவில்லை, வராது, முட்டாள், அடங்காதவர்கள் போன்ற பட்டங்களையும், பிற குழந்தைகளுக்கு முன்பாகவே இவற்றைச் சொல்லி அவமானத்தையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறோம். அடியைப் பற்றி சொல்லவே வேண்டாம்.....

- குடும்பச் சூழல் குழந்தைகளுக்கு ஏற்புடையதாய் இருக்காது. அம்மா அல்லது அப்பா யாரேனும் ஒருவர் இறந்திருப்பார்; தாய் தந்தை பிரிந்திருப்பர்; மிகுதியான சண்டை சச்சரவு; குடியும் வன்முறையும்; தாயோ தந்தையோ திருமணத்தைத் தாண்டிய உறவுகளில் இருப்பர்.



**பயிர் சமூகஅமைப்பில், குழந்தைகள் இன்றியமையாத ஓர் அங்கம். குழந்தைகளும் பெரியவர்களும் ஒரே சமூகமாக இயங்குகின்றோம். பள்ளிக்கும் மற்ற பணியிடங்களுக்கும் நடுவே இங்கு மதில் சுவர்கள் இல்லை.**

- பள்ளிக்கூடம் போகாமல் ஊர் சுற்றிக்கொண்டும், முரட்டு கௌரவத்தில் காரணமற்ற வம்புகள் செய்தும், இளைஞர்களுடன் சேர்ந்து வண்டிகளில் சுற்றியும், எப்போதும் செல்போன் உபயோகிப்பது, புகையிலை, சிகரெட், ஹான்ஸ் உபயோகிப்பது என்று, பல்வேறு ஆர்வமிக்க பொழுதுபோக்குகளில் பழகிப்போயிருப்பர்.

அன்பற்ற குழந்தைப்பருவம். பலருக்கும் குழந்தைப்பருவ மன அழுத்தம். இவையனைத்தும் அவர்கள் தன்னம்பிக்கையை நொறுக்கி, தாழ்வு மனப்பான்மையை நிரப்பி, இந்த வயதிற்கு மிகக் கொடியதான பாதுகாப்பற்ற உணர்வை ஊட்டி, தகாத பழக்கங்களுக்கு எளிதில் ஆளாக்கிவிடுகின்றன.

இக்குழந்தைகள் RSTC (உண்டு உறைவிடக் கற்றல் மையம்) வந்தவுடனேயே, இவர்கள் 'அடங்கி' வகுப்பில் அமர வேண்டும்; வகுப்பறை ஒழுக்கம் இருக்க வேண்டும்; வாசித்து எழுத வேண்டும் என்றெல்லாம் பள்ளியும், ஆசிரியர்களும், அரசுக் கல்வி அமைப்புகளும் எதிர்பார்க்கிறோம். இடைநின்ற குழந்தைகள் எல்லோரும் துவக்கத்தில் வகுப்பறையில் ஆர்வம் கொள்வதில்லை. வகுப்பறையைப் புறக்கணிப்பதே அவர்களுக்குத் தேவையானது. எங்காவது ஓடி ஒளிய வேண்டும்; காட்டுக்குள் சுற்றித்திரிய வேண்டும்; சொல்வதைச் செய்யக்கூடாது; வேண்டாததைச் செய்து வம்படிக்க வேண்டும்; அடிதடியில் இறங்க வேண்டும். இவ்வனைத்துச் செயல்களும் நமது பொறுமையை வெகுவாக சோதிப்பதாகவே அமையும். இவர்கள்மேல்

கோவமும், எதிர்மறை கருத்துகளுமே வலுக்கும். ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்ற சிந்தனை எரிச்சலின் ஊடே நமக்கு வருவதில்லை.

இக்குழந்தைகளுக்கு நேரடியாக பள்ளிச்சூழல் ஒத்துவருவதில்லை என்பதறிந்து RSTC அமைப்புகளை உருவாக்கியிருந்தாலும், RSTC அமைப்பிற்குள் இம்மாதிரி குழந்தைகளுக்கு எப்படிப்பட்ட அணுகுமுறை வேண்டும், எப்படிப்பட்ட கற்பித்தல் நுட்பங்கள் ஏற்புடையதாக இருக்கும், இவர்கள் நாம் தர விரும்பும் கல்வியை நோக்கித் திரும்பி வர எவ்வளவு நாட்கள் தேவை என்பனவற்றிலெல்லாம் போதிய தெளிவு இல்லை.

இங்கும் ( RSTC ), "நீ இந்த இடத்திற்குத் தகுதி இல்லாதவன் (அ) இல்லாதவள்; நீ ஒழுங்காக இல்லை; உன்னை கண்காணித்துக்கொண்டே இருக்கிறேன்" இப்படியொரு செய்தியை நேரடியாக (அ) மறைமுகமாகப் பெறும் ஒரு குழந்தை, தொடர்ந்து பாதுகாப்பற்ற உணர்வுடன் இருக்கிறாள் (அ) இருக்கிறான். ஏற்கனவே இருக்கும் இவ்வுணர்வு மீண்டும் வலுக்கிறது; அந்தச் சூழ்நிலைகளைத் தவிர்க்கத் தூண்டுகிறது ( அ ) எதிர்மறை நடத்தைகளுக்குள் தள்ளுகிறது. அதிலிருந்து மீள அதீத மன வலிமை தேவை; பெரியவர்களுக்கே இல்லாத ஒன்று; பாவம், குடும்பத்திலும் அடிபட்டு வரும் குழந்தைகள் வேறெப்படி சமாளிப்பார்கள்? முரட்டுத்தனமும், கேலிகிண்டலும், பின்வாங்குதலுமே அவர்களைக் காப்பாற்றுவதாக எண்ணுகிறார்கள். அவர்களை மதிக்காத, ஏற்றுக்கொள்ளாத சூழலைத் தவிர்க்கப் பார்க்கின்றனர். அன்பை எதிர்பார்க்கும் குழந்தைகள், அவர்கள்பால் நம் கவனம் திரும்ப வேண்டும் என்றே வம்பு செய்துகொண்டிருப்பர். அவர்களுக்கு நேர்ந்த வன்முறையைத்தான் அடுத்தவர்கள் மேல் திணிக்கிறார்கள். நமக்கு எவ்வளவுதான் குழந்தைமேல் கோவமோ தவறான அபிப்ராயமோ இருந்தாலும் ஒவ்வொரு குழந்தைக்கும் அன்பும் அரவணைப்பும் ஆறுதலும் ஏற்றுக்கொள்ளப்படுதலும் அத்தியாவசியமான மனிதத் தேவையே. அதற்காகவே குழந்தைகளும் ஏங்குகிறார்கள்.

## இங்குதான் நிகழ்த்துக் கலைகள் எங்களுக்குக் கைகொடுத்தன.

- எல்லாக் குழந்தைகளுக்கும் ஆடல் பாடலில் தீராத ஆசை. துவக்கத்தில் பறை பயிற்சிக்கு அனுப்பினோம். மூன்று நாள் பயிற்சிக்குப் பின்பு அவர்கள் பறை குறித்தே பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் ஆர்வத்தைத் தக்க வைத்து, அவர்களுக்குத் தொடர் பயிற்சி அளித்தோம். வேறெந்த கற்றல் செயல்பாடுகளில் பங்கு பெறாவிட்டாலும், பறை பயிற்சியில் மட்டும் பங்குகொள்வர். அவர்களுக்கு மேடையில் அரங்கேற்றும் வாய்ப்புகள் பல அளித்தோம். அவர்கள் பெருமை கொண்டனர்.
- கராத்தே மாஸ்டர் ஒருவர் 20 கி.மீ. தொலைவில் அமைந்த எங்கள் பள்ளிக்குக் குறைந்த ஊக்கத்தொகைக்கு வந்ததனால், கராத்தே கற்றுத்தர முடிந்தது. ஒவ்வொரு வருடமும் மாவட்டப் போட்டிகளில் பரிசுகள் வென்றனர். பெல்ட் மாற்றும் போதெல்லாம் அவர்களுக்குப் பூரிப்பு…
- சறுக்கு, ஊஞ்சல் எல்லாம் கொண்ட ஒரு விளையாட்டு மைதானம் அவர்களுக்குப் பெரும் பொழுதுபோக்கு. அவர்கள் பல விளையாட்டுகளைக் கற்றுக்கொண்டனர். மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்கு அழைத்துச் செல்வோம். தினமும் மாலை விளையாட நேரம் உண்டு.
- மனித பிரமிடுகள் செய்வர். தீ வளையம் தாண்டுவர் ; ஓடு உடைப்பர்; தலைகீழாக நிற்பர்; உடலை வளைத்து வளைத்து உயிர் சிற்பங்கள் வடிப்பர்; யோகா செய்வர். அவர்களுக்கு அத்தனை ஆனந்தம். இவற்றை செய்வதற்கு அவர்கள் வாசிக்கவோ எழுதவோ வேண்டாமே! அவர்களுக்கு வராத விஜயம் இல்லையே…
- இவர்கள் விரும்பி திறம்பட வெளிக்காட்டும் திறமைகளுக்கு, மேடைகள் அரங்குகள் கொடுத்தோம். கை தட்டல்களும் பாராட்டுக்களும் ஊக்கப்படுத்தின. மேலும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்தனர். தன்னம்பிக்கை கிடைத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு ஆனந்தமான குழந்தைப் பருவம் அவர்களுக்குக் கிடைத்தது.

- வானொலியில் நாடகம், வில்லுப் பாட்டு, பாடல் நிகழ்ச்சிகள் நடத்தினர். அந்நிகழ்ச்சி ஒளிபரப்பானது அவர்களுக்கு மேலும் நம்பிக்கை ஊட்டியது.
- கைவேலைகளுக்கு முக்கியத்துவம் வழங்கினோம். வாரம் 2 அல்லது 3 முறையேனும் கைவினை பயிற்சிகள் பெறுவர். ஒவ்வொரு முறையும் அவர்கள் செய்யும் பொருட்களை அனைவருக்கும் காண்பித்து பெருமிதம் கொண்டனர். திருவண்ணாமலை மருதம் பள்ளியும் ஒரு அழகிய வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது. ஒவ்வொரு வருடமும் 8 நாட்கள் எண்ணற்ற கலைகள் கற்றுக்கொள்ளும் திருவிழாவே நடத்துகிறார்கள். அங்கு செல்லும் குழந்தைகளுக்கு என்ன ஒரு குதூகலம்.... எத்தனை புதிய நபர்கள், எத்தனை புதிய கலைப் பொருட்கள்...
- எங்கள் வகுப்பிலும் பாடல்கள் முக்கிய இடம் பெற்றுள்ளன. தினமும் அசைவுகளுடன் பாடல்கள், கும்மியுடன் பாடல்கள் என்று செயல்பாடுகள் நிறைந்த வகுப்பறை.
- மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கின்றனர். பஞ்சம் நிறைந்த எங்கள் ஊரில் தண்ணீர் இருக்கும்போதெல்லாம் குழந்தைகள் காய்கறி விளைவிக்கின்றனர். அருகிலிருக்கும் வனப்பகுதிக்கு வாராவாரம் நடைப்பயணம் சென்று விளையாடுவது, அங்குள்ள மரம், செடி, கொடிகள், பறவைகள் நிலப்பரப்புகளைக் கவனிப்பது என்று இயற்கையோடு தொடர் பயணம்.

எங்கள் ஆசிரியர்களுக்கும் இந்தப் பயணம் இலகுவானதாக இல்லை. அவர்களும் கிராமச்சூழலில் அரசுப்பள்ளிகளில் படித்து வந்தவர்கள்தான். எரிச்சலடையாமல், பரிவிரக்கத்துடன் (empathy) குழந்தைகளை அணுகுவது எளிதல்ல. தொடர்ந்து எப்படி குழந்தைகளுடன் கலந்து பேசுகிறோமோ, அதுபோலவே ஆசிரியர்களுடனும் விளக்கவேண்டியுள்ளது. ஆசிரியர்களும் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்துகொண்டு குழந்தைகளைக் கையாளக் கற்றுக்கொள்கிறார்கள். மிக முக்கியமாக அதிக மதிப்பெண், எல்லோரும் தேர்ச்சி (பாஸ்) என்று பள்ளி அளவில் அழுத்தம் கொடுக்காததால் அவர்கள் குழந்தைகளுடன் நட்புடன் பழகுவதும் குழந்தைகளுக்குப் பெரியளவில் உதவி செய்கிறது.

கலைகளுடன் பயணிப்பது குழந்தைகளைக் கவர்கிறது; ஊக்கமளிக்கிறது; தன்னம்பிக்கையளிக்கிறது; அவர்களை மீண்டும் கற்றலை நோக்கித் திரும்பி வரச் செய்கிறது; கற்றலும் எளிதாகிறது.

## கலைகள் ஏன் குழந்தைகளை இத்துணை அளவு பாதிக்கின்றன?

பொதுவாகவே நகரத்தில் பிறந்து வளரும் குழந்தைகளைக்காட்டிலும், கிராமத்துக்குழந்தைகள் தசை (அ ) உடலியக்கத் திறன்களில் திறமை மிக்கவர்களாக உள்ளனர். எதிலும் நுழைந்து, ஏறி, இறங்கி, தொங்கி, குதித்து, ஓடி விளையாட, சேட்டைகள் செய்ய கிராமத்துக் குழந்தைகள் அஞ்சுவதில்லை. மேலும், கையில் கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்தி பழம் பறிக்கும், ஓணான், குருவி அடிக்கும், மீன்பிடிக்கும் கருவிகளாகவும், விளையாட்டுப் பொருட்களாகவும் வடிவமைத்து விடுவதில் வல்லவர்களாக இருக்கிறார்கள்.

கிராம மக்கள், இயல்பாகவே இசை, நடனம், விளையாட்டு இவற்றில் அதிக ஆர்வமும், திறமையும் கொண்டவர்கள். கிராம வாழ்வியலிலும் நாட்டுப்புறக் கலை வடிவங்கள் இன்றியமையாத இடம் கொண்டிருந்தன. நடவு, அறுப்பு, தாலாட்டு, சடங்குகள், விளையாட்டு, திருவிழா, கோவில் என்று எதிலும் பாட்டும் கும்மியும், பிற நாட்டுப்புறக் கலைகளும் கலந்தே இருந்திருக்கின்றன. பல குடும்பங்களில் கலைஞர்கள் இருந்தனர்.

முதலாளித்துவ கட்டமைப்புகளுக்கானச் சேவைகளுக்குச் சந்தையாக மாறிவரும் கிராமங்களில் இக்கலை வடிவங்களின் சுவடுகள், வெறும் ஞாபகங்களாய் சுருங்கி விட்டன. இன்றைய குழந்தைகளுக்கோ திரைகள் மட்டுமே எஞ்சியுள்ளன. இந்நாட்டுப்புறக் கலைகள் அழிந்து வருகின்றன என்பது மட்டுமில்லை நம் அக்கறை; நல்வாழ்விற்கு, மனநலம் காப்பதற்கு, மனித வளர்ச்சிக்கு, இணக்கத்திற்கு மிக முக்கியமான

இக்கருவிகள் தொலைந்து போவதே பேரிழப்பு.

இப்படியாக, குழந்தைகள் பெரியவர்கள் மத்தியில் கலைவடிவங்கள் நடைமுறையில் மறைந்து வந்தாலும், நமது இரத்தத்தில், உயிரின் உணர்வின் ஆழத்தில் இவற்றிற்கான தேவையும் தேடலும் இன்னும் கதகதப்பாக உயிருடனேயே இருக்கின்றன.

## அரசுக்கல்விமுறையில் இக்கலைகள் என்ன ஆயின?

நமக்கான கல்வி முறையை வகுக்காமல், ஆங்கிலேயர் அளித்த கல்வி முறையை நாடு முழுவதும் பின்பற்றிவருவதின் விளைவாய், பாரம்பரிய கிராமப்புற வாழ்வியலின் சிறப்பம்சங்களிலிருந்து குழந்தைகளை அந்நியப்பத்திக்கொண்டிருப்பதைக்கண்கூடாகப் பார்க்க முடிகிறது. விட்டுவிலக வேண்டிய, கிராமங்களில் புரையோடியிருக்கும் எதிர்மறை சமூகப் பரிமாணங்களான சாதி, மத, வர்க்க அம்சங்களை விட்டுவிடாமல் பத்திரமாக, சமூகமும் கல்வியும் பள்ளியும் கட்டிக்காத்துவரும் அதே வேளையில், மனித மாண்பை வளர்க்கும் கலைத்துவமான, இயற்கையோடு ஒன்றிணைந்த மகிழ்ச்சிகரமான, திறன்களை வளர்க்கும் பற்பல அம்சங்களிலிருந்து, இன்றையக் கல்வி குழந்தைகளை வலுக்கட்டாயமாகப் பிரித்து வைத்திருக்கிறது.

பள்ளியிலிருந்து இடைநின்ற குழந்தைகளுக்கு மட்டுமல்ல, எந்த குழந்தைக்கும் கைவேலைகளும் உடலியக்கக் கலைகளும், குழந்தைப்பருவத்தின் வளர்ச்சியில் பிரிக்கமுடியாத அங்கம். எங்கள் முன்மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளியிலும் கலை வழி அணுகுமுறையே மகிழ்ச்சியான, தன்னம்பிக்கை நிறைந்த மாணவர்களாக வளர வழிவகுக்கும் நடைமுறை சாத்தியமாக உணர்கிறோம்.

---

**ப்ரீத்தி**

பயிர்



# POSITIVE LEARNING CULTURE IN CLASSROOMS

**Introduction**

A classroom can be said to be a micro representation of society, which has students from all socio-economic backgrounds. The learning culture we build inside a classroom does determine the students' academic outcomes and more importantly, shapes them as social beings. Further, several factors such as the classroom seating arrangement, fear-free learning environment, feedback, motivation and so on, determine the learning culture of a classroom.

**Seating Arrangement**

It plays a vital role in the classroom dynamics. I always make it a point to change every students' place as well as the placement of benches and desks, to arrange them in a round, square or semi-circular manner. I do so to ensure rotation of the seating arrangement among students. This technique helps a teacher maintain eye contact with all students and provides students the opportunity to interact with one another. Most importantly, it helps in creating smooth and healthy relationships among all students. The main idea is that everyone must meet and talk to each other. This technique worked for few students in my class. A boy who was very passive initially and did not interact much with his classmates started to open up, owing to the change in his seating arrangement. The classroom participation of another boy, who was good in academics but often hesitated to speak, also improved due to the same. The students' seats were changed regularly because of which they were compelled to talk to the student sitting next to them. Hence, during the course of a period, all the students conversed amongst themselves.

**Peer Learning**

Consequently, the seating arrangement has an impact on peer learning. This technique fosters a good learning environment among students.

They help each other in clarifying doubts. In particular, it is amazing to see such behaviour among second-graders. This creates a culture wherein the students support each other in times of need, and it gradually builds a positive learning culture inside the classroom. Moreover, such seating changes, which were implemented in my class on a regular basis, were accompanied by the placement of struggling learners next to the proficient students. By virtue of this technique, one or two of the latter were assigned to oversee the classroom participation of a struggling learner; their duty was to help and guide them. Following this process in my class, two girls were appointed as the guides of a few struggling learners. They looked after them and started guiding them well. Moreover, the students enjoyed learning from their friends rather than the teacher. Thus, this technique worked out well.



## School/Classroom Environment

A friendly environment is necessary to ensure positive learning in a classroom. Hence, we have wall paintings in each and every classroom of our school. Furthermore, the walls outside the classrooms are painted in a thematic manner. By seeing such paintings, our students develop the habit of drawing pictures in their notebooks and describing the same, which nurtures good thoughts in them. It also inspires them to be artistic and creative.

## Feedback

Providing feedback to students helps them in remaining on track and improving their learning. They can gain confidence quicker when their teacher provides them with more feedback. However, it is crucial for teachers to phrase their feedback carefully, as certain students can be quite sensitive to negative feedback. I provided individual feedback to all my students, such as 'you are doing well in reading', 'you have performed well in maths', 'you have shown good writing skills' and so on. It is more like appreciation rather than evaluation. The students feel more motivated when they are given such compliments. Subsequently, they start to demonstrate greater involvement in academics. At times, I also give small gifts/ tokens of appreciation to my students in order to motivate them. Consequently, just to receive such gifts from me, the students compete in order to perform well in their subjects.

## Conclusion

As teachers, the unique learning culture we have created in our school supports our students' learning and holistic development. A classroom that has a facilitator, rather than a teacher, has more impact on its students. Let us celebrate our students and help them continue to grow in a positive learning culture.



**NITHYA. M.**
PST
GPS ABHISHEKAPAKKAM

# BEING A FRIENDLY TEACHER

Recently, I had taken a two-day leave from school. When I re-joined school after my leave, I thought my students would be happy to see me. However, on entering the classroom, I found some of them hiding from me, while a few others ignored my presence, and it seemed the rest greeted me only from a sense of fear. This incident made me feel insulted and casted a shadow on my dream to become a lovable teacher. I felt upset and started to analyse the reason behind my students' awkward reaction. Being a strict teacher, I used to scold and punish my students whenever they failed to complete their assignments. However, after due consideration, I realised that this method of compelling students to finish their assignments and studies would not be fruitful in the long run. Moreover, they did not like me since I had adopted such an approach. Thus, I had to determine a way to make them studious without inducing their hatred towards me, i.e., I had to be a friendly and approachable teacher.

**Appreciation As a Tool**

Initially, I used to believe that academic improvement can be achieved through disciplined studies and corporal punishment is inevitable for this purpose. However, now that I have realised its ill effects, I seek ways to win my students' hearts, which in turn enhances their liking towards studies as well, and appreciation is the method I selected to achieve this goal. It is a zero investment/low-cost technique employed by teachers to create a learner-friendly classroom.

First, I started by presenting



stars to those students who completed their homework. However, this method was fruitful only to a certain extent. With time, they slowly started to enjoy their classroom activities and assignments. Eventually, four or five disinterested students joined the stream and started to work for these stars. "But, stars are only meant for toppers," the low-proficiency learners commented, being lethargic. They thought that trying for the stars was a waste of their time. Knowing their mind all too well, I bought a set of famous cartoon stickers corresponding to the number of students in my class. Subsequently, the student who finished his/her homework perfectly, without any error, was allowed to choose his/her favourite cartoon character from the lot. In this way, everyone was sure to get a sticker, one by one. By the end of the class, I gave the leftover cartoon stickers to the slow learners though they had not completed their work. Once they started to receive such stickers, they began to believe that they too are worthy of getting a star/sticker.

Further, I gave small smiley cards to those students who answered the questions I posed randomly during lessons. This technique made the students happy and attentive. In addition, I showed them a set of pictures from the lesson prior to teaching the same. Subsequently, when I asked a few questions from that lesson while teaching, the students who answered correctly were given the chance to colour the respective pictures. In this way, the students answered my questions eagerly in order to get the opportunity to colour their favourite picture.

**Initially, I used to believe that academic improvement can be achieved through disciplined studies and corporal punishment is inevitable for this purpose. However, now that I have realised its ill effects, I seek ways to win my students' hearts, which in turn enhances their liking towards studies as well, and appreciation is the method I selected to achieve this goal.**



### Balancing Studies With Recreational Activities

Being a class teacher, it is possible for me to schedule lessons as per my will. Thus, I decided to incorporate recreational activities within the school schedule, for which I set certain criteria. One of these was that I allowed my students to play as soon as they completed the work assigned to them. When I write a question and its answer on the board, my students feel bored when instructed to copy those down; some of them are always found to be lazy. However, when I inform them that those who complete the classwork can go for PET afterwards and play in the ground, I observe a sudden urge in them to complete the given activity. Keeping these points in mind, I have assigned around an hour for extracurricular activities in the class timetable, such as singing, dancing and mimicry.

### Reflection

I observed that appreciation, instead of punishment, is the best way to make a place in my students' hearts. When I began to consider their needs, they started to respect me more. I was able to replace the fear and hatred they had towards me with love through the said activities. Instead of making them sit and study throughout the school hours, allowing them to engage in recreational activities improved their academic performance as well. Such activities do not disturb their studies, rather these create interest among the students to learn a new subject and/or revitalise them for the next class. Once I started to employ these techniques, more than 80% of my students began to complete their classwork and homework on time. Even the very small token of appreciation I gave motivated them to achieve more. In this manner, I was able to become a friendly teacher. When students love their teachers, they also end up loving the subjects taught by them.



**MANJUPARKAVI. V.**
PST
GSPS KATTERIKUPPAM

# கற்றலில் இனிமை சேர்த்தல்

எம் பள்ளியில் 235 மாணவர்கள் படிக்கின்றனர். 8 ஆசிரியர்களும் தலைமையாசிரியரும் தங்கள் பணியைச் செம்மையாய் செய்கின்றனர். எம் பள்ளியில் கல்வி பயிலும் பெரும்பாலான மாணவர்கள் நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள்.

குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தவைகளாக நான் உணர்வது கதைகள், நாடகம், பாடல் போன்றவை. இவற்றைப் பிடிக்காத மாணவர்களே இருக்க முடியாது. குழந்தைகளுடன் நெருக்கத்தை ஏற்படுத்தவும் அவர்களை மகிழ்ச்சியுடன் கற்றலில் ஈடுபடுத்தவும் சிறந்ததாக எனக்குத் தோன்றியது பாடல்கள் எனக் கூறுவேன். ஒவ்வொரு நாளும் பாடலுடனே என் வகுப்பு தொடங்கும். அந்த மகிழ்ச்சி, மாணவர்களின் ஆர்வம் அந்த நாள் முழுவதும் வகுப்பில் நிலைத்திருக்கும்.

## அனுபவப் பகிர்வு

சென்ற ஆண்டு என் வகுப்பறையில் மாணவர்களுடன் பிணைப்பை ஏற்படுத்த சில உத்திகளைக் கையாண்டேன்.

- வகுப்பறைப் பாடப்புத்தகங்களைத் தவிர மாணவர்களுடன் அதிக நேரம் பேசுதல். உதாரணத்திற்கு நன்னெறிக் கதைகளை மாணவர்களுக்கு எடுத்துரைத்து அதன் கருப்பொருளைப் பற்றி உரையாடல் செய்தல்.
- வருகைப் பதிவேட்டில் உள்ள வரிசையின் அடிப்படையில், நாள்தோறும் ஒவ்வொரு மாணவரும் ஒரு கதை அல்லது ஒரு செய்தி அல்லது ஒரு பொது அறிவு போன்றவற்றைக் கூறுதல்.
- மாணவர்கள் அவர்கள் செய்ய வேண்டும் என நினைப்பதை, ஒரு தாளில் எழுதி பரிந்துரைப் பெட்டியில் பெயரைக் குறிப்பிடாமலே போடுதல்.
- மாணவர்களைக் குழுக்கற்றலில் ஈடுபடுத்தி குழுக்களை அடிக்கடி மாற்றி, மாணவர்களின் நட்பு வட்டத்தைப் பெரிதாக்குதல்.
- மாணவர்கள் அவர்களின் விருப்பங்களை, பிடித்தவற்றை, பிடிக்காதவற்றை ஒரு கடிதம் மூலம் எழுதும் பழக்கத்தை ஏற்படுத்துதல். இப்பழக்கமானது வாரத்திற்கு இரண்டு கடிதங்களுக்கு மேல் எழுதி எனக்குக் கொடுக்கும் அளவுக்கு அவர்களை வளர்த்தது.



## வகுப்பறைச் சவால்கள்

தொடக்கத்தில் சில மாணவர்கள் செய்தி கூற, கதை சொல்ல முன்வராமல் இருந்தனர். அவர்கள் முறை வந்த பொழுதும் அதனை செய்யத் தயங்கினர். அதற்கான காரணங்களை அறிய மாணவர்களிடம் அதிக நேரம் கலந்துரையாடினேன். பிறகு நன்னெறிகள் பற்றியக் கதைகளை மாணவர்களுடன் கலந்துரையாடினேன்.

## மாணவர்களிடம் நான் அறிந்த மாற்றம்

இதன் விளைவாக, மாணவர்கள் தாங்களாகவே சிறு சிறு பாடல்கள் எழுதி என்னிடம் வந்து பாடிக் காட்டினார்கள். இதே போன்று ஒரு மாணவி எனக்காக ஒரு பாடல் எழுதி ஆசிரியர் தினத்தன்று எல்லோர் முன்னிலையிலும் பாடிக் காட்டினாள். இது எனது வாழ்நாளில் மிகவும் நெகிழ்ந்த தருணம்!

இது மாணவர்களைக் கதைகள் மற்றும்

நாடகங்களைத் தாங்களாகவே இயற்றி, ஆளுக்கொரு கதாபாத்திரத்தில் நடிக்க உதவியது. “போரைத் தடுத்த புலவர்” எனும் நாடகத்தை மாணவிகள் காலை வழிப்பாட்டுக் கூட்டத்தில் பெற்றோர்கள் முன்னிலையில் நடித்துக் காட்டுமளவிற்கு வளர்த்தது.

## மாணவர்களிடம் ஏற்பட்ட நன்மாற்றங்கள்

- ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து அன்பாக இருக்கும் பழக்கம் ஏற்பட்டது.
- உதவி செய்யும் பண்பும், நட்புடன் இருக்க வேண்டும் என்ற பழக்கமும் ஏற்பட்டது.
- அனைத்து மாணவர்களின் கல்வித் தரமும், நற்குணங்களும் அதிகமாகி இருந்தது.

## புகாரைக் கையாளுதல்

ஒரு பெற்றோர் அவள் மகளைப் பற்றி சில தீய குணங்கள் இருப்பதாகவும் நீங்கள் தான் கண்டிக்க வேண்டும் எனவும் கூறினார். அவை பின் வருமாறு:.

- காலையில் நேரம் தாழ்த்தி எழுகிறாள்.
- சிறு வேலை சொன்னாலும் செய்ய மறுக்கிறாள்.
- பள்ளிக்கு உரிய நேரத்தில் கிளம்ப மறுக்கிறாள்.

அந்த மாணவியை வகுப்பின் தலைவியாக நியமித்தேன். அதன் விளைவாக:

- அவள் வகுப்பில் அனைத்துப் பணிகளையும் பொறுப்பாகவும், சுறுசுறுப்புடனும் செய்தாள்.
- அந்த மாணவியைப் பிற மாணவர்கள் முன்னிலையில் பாராட்டிப் பரிசளித்தேன்.

சில நாட்கள் கழித்து அவளது பெற்றோர் இப்போது தங்கள் மகள் நன்கு மாறிவிட்டதாகவும், சீக்கிரம் எழுந்து தன் வேலைகளை அவளே பொறுப்புடன் செய்வதாகவும் கூறினர். ஒரு முறை பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தின் போது சில பெற்றோர்கள் கூறியதாவது:

- தங்கள் குழந்தைகள் தினமும் கதை



கூறுவதாகவும், பாடல் பாடுவதாகவும் கூறினார்கள்.
- பள்ளியில் நடப்பதை தினமும் சொல்லிக் கொண்டே இருப்பதாகவும் கூறினார்கள். இந்தச் செய்தி என்னை மிகவும் மகிழ்ச்சியாக மாற்றியது.

## மாணவர்களின் செயல்பாடு

- வில்லுப்பாட்டுக்கானப் பாடலை மாணவர்களே இயற்றிப் பாடலாகப் பாடியது.
- அட்டைகளைக் கொண்டு உருவங்களை உருவாக்கி, கதை உருவாக்கி, மாணவர்களே பொம்மலாட்டம் நிகழ்த்தியது.

மாணவர்களுடன் அதிக நேரம் உரையாடுதல், மதித்தல், அவர்களால் முடியாத செயல்களுக்குக் காரணம் என்ன என்பதை ஆராய்தல், அவர்கள் உண்மையில் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா, என்பன போன்றவற்றை அறிய பாடல், உரையாடல், நாடக செயல்பாடுகள் இன்றியமையாதவையாக உள்ளன. இதுபோன்ற செயல்பாடுகள் மாணவர்களுக்கு நல்லெண்ணங்களையும், நல்ல தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றன என்பது எனது நம்பிக்கை.

---

**தேவி**
தொ.ப.ஆ
பெண்கள் அரசு தொடக்கப் பள்ளி,
திருக்கனூர்



# குழந்தைகளுக்கான வகுப்பறை

நம் வகுப்பறைகள் குழந்தைகளுக்கான வகுப்பறைகளா? மனிதர்களுக்கான வகுப் பறைகளா? மழலைத்தன்மையைச் சிதை க்காத வகுப்பறைகளா நம்முடையவை? நம் கல்வி முறை குழந்தைகளின் மழலைத்தன்மையைப் பாதுகாக்கிறதா? ஆசிரியர்களாகிய நாம் அதற்காக என்ன செய்கிறோம்? போன்ற கேள்விகளோடு தொடங்கியது என்னுடைய தேடல்.

எம்மாணவர்களின் பெற்றோர்கள் அதிகாலை யிலேயே வேலைக்குச் சென்றுவிடுவதால் பெரும்பாலும் பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் கிடைக்காமலேயே வளர்கிறார்கள். சமூகப் பின்புலத்திலும் பொருளாதாரத்திலும் பின்தங்கிய என்னுடைய மாணவர்கள் தங்களுடைய அன்றாடத் தேவைகளையும் கடமைகளையும் பெரும்பாலும் தாங்களாகவே நிறைவேற்றிக் கொண்டும் குழந்தைகளுக்கே உரிய மழலைப்பருவ விளையாட்டுக்களையும் மகிழ்ச்சியான அனுபவங்களையும் இழந்துதான் பள்ளிக்கு நாள்தோறும் வருகிறார்கள். மேலும் தற்கால வகுப்பறைகளும் குழந்தைகளுக்குத் தேவையான மகிழ்ச்சியை அளிக்காமல் அவர்களின் மழலைத் தன்மையைப் பாதிக்கின்ற வகையிலேயே உள்ளன. எனவே அன்பும் அரவணைப்பும் இல்லாமல் வளரும் என் மாணவர்களின் கற்றலுக்கு வகுப்பறை அனுபவங்கள் மட்டுமே துணைநிற்கும் சூழலில், அவர்களின் மழலைத் தன்மையை மாற்றாமல் கற்றல் - கற்பித்தல் செயல்பாட்டை எப்படிக் கற்கண்டாக இனிக்கச்செய்வது என்ற என்னுடைய தேடலின் முடிவே விளையாட்டு வழிக்கற்றல் ஆகும். என் வகுப்பறையில் கற்றல் - கற்பித்தலுக்காகப் பயன்படுத்திய சில பாரம்பரிய விளையாட்டுக்களும் அதன்வழி கிடைத்த அனுபவங்களும் இக்கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளன.

## விளையாட்டு வழிக் கற்றலால் விளையும் நன்மைகள்

1. குழந்தைகள் தங்களுடைய மழலைத் தன்மையை மாற்றிக் கொள்ளாமல்

மகிழ்ச்சியுடன் கற்கின்றனர்.

2. கற்றல் - கற்பித்தல் செயல்பாட்டில் குழந்தைகளின் ஆர்வம் அதிகரிக்கின்றது.

3. 'கற்கிறோம்' என்ற கற்றல் சுமையில்லாமல் குழந்தைகள் கற்கின்றனர்.

4. குழுவில் சேர்ந்து விளையாடும்போது குழுத்திட்டமிடல், சமூகப்பண்புகளான விட்டுக்கொடுத்தல், நேர்மையாக நடத்தல் ஒருவரையொருவர் அனுசரித்து நடத்தல் ஆகிய பண்புகள் வளர்கின்றன.

5. கையாளும் திறன்கள், சிந்தனைத் திறன்கள், யூகித்தல், நினைவுபடுத்துதல் திறன்கள், ஆகியவை மேம்பட்டு கற்பவை பசுமரத்தாணி போல மனதில் பதிகின்றன.

6. விழைந்து (விரும்பி) ஆடும் ஆட்டமே பின்னர் மருவி விளையாட்டு ஆனதாக தேவநேயப்பாவாணர் கூறுகின்றார். விழைந்து செய்யும் எதுவும் மனதிற்கு மகிழ்ச்சியைத் தானே தரும் !

7. பலரோடும் ஒரு குழுவாகச் சேர்ந்து செயல்படுவதற்கான வாய்ப்பை விளையாட்டு அளிக்கிறது.

8. விளையாட்டினால் கவனம் ஒரு முகப்படுத்தப்படுகிறது.

9. விளையாட்டுகள் குழந்தைகள் உடலிற்கும் மனதிற்கும் புத்துணர்ச்சியைத் தந்து குழந்தைகளின் கற்றலுக்கு வழி வகுக்கின்றன.

குழந்தைகளின் விளையாட்டில் வெற்றி, தோல்வி என்பதெல்லாம் முக்கியமில்லை, விளையாடுவதால் குழந்தைகளுக்கு ஏற்படும் மகிழ்ச்சியே முக்கியம்.

## மொழிப்பாடங்களைக் கற்க உதவும் விளையாட்டுகள்

மொழிப்பாடங்களைக் கற்க உதவும் இந்த விளையாட்டுக்கள் அனைத்தும் குழந்தைகள் அவர்களின் நண்பர்களோடு விளையாடக்கூடிய விளையாட்டுக்கள் ஆகும். இந்த விளையாட்டுக்கள் அனைத்தும் திரு. முருகேசனின் 'தினுசு தினுசா விளையாடலாமா' என்ற புத்தகத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை.

1. பந்து எறிதல்

இந்த விளையாட்டின் மூலம் பூக்கள் , பழங்கள், காய்கறிகள், இரண்டெழுத்து, மூன்றெழுத்து வார்த்தைகள், உயிரெழுத்தில்/மெய்யெழுத்தில் தொடங்கும் வார்த்தைகள் போன்றவற்றைக் கற்கலாம். மாணவர்களை வட்ட வடிவில் நிற்கச் செய்து ஒரு மாணவனிடம் பந்தைக்கொடுத்து அடுத்துள்ள நபர்களிடம் அப்பந்தை எறியச் செய்ய வேண்டும். குழுத்தலைவர்அல்லது ஆசிரியர் 'நிறுத்து' (Stop) என்றதும், யார் கையில் பந்து உள்ளதோ அவர் பூக்களின்/பழங்களின் பெயரைக்கூற வேண்டும். பூக்களின்/பழங்களின் பெயர்களைக் கூறாதவர்கள் ஆட்டத்தை விட்டு வெளியேற வேண்டும். தொடர்ந்து விளையாட வேண்டும், யார் கடைசிவரை தொடர்ந்து பெயர்களைக்கூறி விளையாட்டில் நிலைத்து நிற்கிறார்களோ அவரே வெற்றி பெற்றவர் ஆவார்.

2. வார்த்தை வட்டம்:

விளையாட்டு மைதானத்தில் ஏதாவது ஒரு இடத்தில் ஒரு பெரிய வட்டமொன்றைப் போட வேண்டும். சற்று தூரமாக விளையாடுபவர்கள் எல்லோரும் நின்று கொள்ள வேண்டும். இரண்டிற்கும் நடுவே மாணவர் ஒருவர் ( பிடிப்பவர்) நிற்க வேண்டும். ஆசிரியர் நடுவே ஒருவர் நிற்க வேண்டும். ஆசிரியர் ஏதாவது ஒரு எழுத்தைக் கூறியவுடன் மாணவர்கள் முதல் எழுத்தைக் கொண்டு தொடங்கும் ஏதாவது ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டு வட்டத்திற்குள் போய் நிற்க வேண்டும் . பதில் சொல்லாதவரை (பிடிபடுபவர்) நடுவில் நிற்கும் மாணவர் துரத்திச் சென்று பிடிக்க வேண்டும். பிடிபடும் மாணவன் போட்டியை விட்டு விலக வேண்டும். எந்த மாணவன் கடைசிவரை தோல்வியடையாமல் இருக்கிறானோ அவனே வெற்றியாளன். பிடிபடும் மாணவனையே பிடிப்பவனாக மாற்றிச் சுழற்சி முறையிலும் இந்த விளையாட்டை விளையாடலாம், இம்முறையில் எந்த மாணவனையும் விளையாட்டை விட்டு நீக்க வேண்டிய அவசியம் இருக்காது.

## கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களைக் கற்க உதவும் விளையாட்டுக்கள்

### 1. சரியான இணையைக் கண்டுபிடி

இது இரு மாணவர்கள் விளையாடும் விளையாட்டு. இரு வகை அட்டைத் தொகுப்புகளை மாணவர்கள் முன் கவிழ்த்துப்போட வேண்டும். இவற்றில் ஒருவகை அட்டைகளில் இரு எண்களின் கூட்டல் மதிப்பும் மற்றொரு வகை அட்டைகளில் இரு எண்கள் கொண்ட கூட்டல் மதிப்பிற்கான கணிதக் கேள்விகள் இருக்கும். கவிழ்த்து வைக்கப்பட்டுள்ள அட்டைகளில் முதல் மாணவன் இரண்டு அட்டைகளை எடுக்க வேண்டும். அட்டைகள் இரண்டும் பொருத்தமாக இருந்தால் அந்த அட்டையை அம்மாணவன் வைத்துக்கொள்ள வேண்டும். சரியில்லை எனில் அந்த அட்டைகளை எடுத்த இடத்திலேயே திரும்பி வைக்க வேண்டும். அடுத்த மாணவன் ஆட்டத்தைத் தொடர வேண்டும். இறுதியில் யார் அதிக அட்டைகளை வைத்து இருக்கிறார்களோ அவர்களே வெற்றியாளர். எண்களின் கூட்டல் மதிப்புகளை விரைவாகக் கண்டறியும் திறனை வளர்க்க இந்த விளையாட்டு உதவும். மேலும் கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்ற கணக்குகளுக்கும் இந்த விளையாட்டை நாம் பயன்படுத்த முடியும்.

அட்டை I - 5+2 ; அட்டை II - 7

### 2. எண்மதிப்பு விளையாட்டு

வட்டமாக மாணவர்களை நிற்கச் செய்த பிறகு ஆசிரியர் கையைத் தட்டி ஓடவைக்க வேண்டும். மாணவர்கள் ஓடிக்கொண்டிருக்கும் போது இரண்டு என்று சத்தமாகக் கூறினால் ஓடிக்கொண்டிருக்கும் பிள்ளைகள் ஓட்டத்தை நிறுத்திவிட்டு இரண்டு, இரண்டு பேராகச் சேர்ந்து கொள்ள வேண்டும் ; ஒன்று என்றால் தனித்தனியாக நிற்க வேண்டும் ; 3 என்றால் மூன்று மூன்று பேராக நிற்க வேண்டும், பூஜ்யம் என்றால் உட்கார்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு எண்ணிற்கும் உரிய சரியான மதிப்புகளை இதன்வழி மாணவர்கள் அறிந்து கொள்வார்கள்.



### 3. வடிவ விளையாட்டு

சிறுசிறு அட்டைத்துண்டுகளில் ஒரே மாதிரியான இரு வடிவங்களை வரைந்துகொள்ள வேண்டும் (உ.ம்) சதுரம் செவ்வகம்/முக்கோணம். இவ்விளை யாட்டினால் வடிவங்களின் பெயர் களையும் அவற்றிற்கு இடையேயுள்ள வேறுபாடுகளையும் மாணவர்கள் அறிந்து கொள்கிறார்கள். பெரிய வட்டம் வரைந்து அதில் பிள்ளைகளை நிற்கச் செய்ய வேண்டும். ஒவ்வொரு பிள்ளையிடமும் ஒவ்வொரு வடிவ அட்டைத்துண்டைக் கொடுக்க வேண்டும். கீழே தரையிலும் அதே வடிவங்கள் வைக்கப்பட வேண்டும். கையைத்தட்டி குழந்தைகளை ஓடச் செய்து, மறுபடியும் கையைத்தட்டும் போது பிள்ளைகள் தங்கள் கையிலுள்ள உருவம் மாதிரி கீழே எங்குள்ளது எனப்பார்த்து அதன் பக்கத்தில் தன் அட்டையையும் வைக்க வேண்டும். சரியாக வைக்காதவர்கள் ஆட்டத்திலிருந்து வெளியேற வேண்டும்.

மொழி மற்றும் கணிதத்திறனை மேம்படுத்தும் ‘பல்லாங்குழி, கைத்தட்டல் விளையாட்டு, பகடை விளையாட்டு, ரிமோட் நம்பர், புது வார்த்தை விளையாட்டு போன்ற பல்வேறு விளையாட்டுக்கள் திரு. முருகேசன் அவர்கள் எழுதிய ‘தினுசு தினுசா விளையாடலாமா‘ எனும் புத்தகத்தில் உள்ளன.



## சந்தித்த சவால்கள்

புதிய பாடப்பொருளைக் கற்பிக்கச் சிரமமாக உள்ளது. ஏனெனில் புதிய பாடப்பொருள் பற்றிய சரியான புரிதல் மாணவர்களுக்கு ஏற்படாத சூழலில் , அதை மையமாக வைத்து விளையாடும் பொழுது அவர்களுக்குக் குழப்பம் ஏற்படுகிறது.

மாணவர்கள் பாடப்பொருளைப் புரிந்து கொண்டபின், அதை மாணவர்கள் மனதில் பதியச்செய்து அந்நினைவுகளை மென்மேலும் உறுதியாக்கவே பெரும்பாலும் விளையாட்டு வழிக்கற்றல் முறை துணைபுரிகிறது.

விளையாட்டு வழிக்கற்றல் செயல்பாட்டில் ஈடுபட அதிக நேரம் தேவைப்படுகிறது. கலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளின்படி பணியாற்றும் பொழுது நேர மேலாண்மையைச் சரியாகக் கடைப்பிடிக்க முடியவில்லை.

இத்தகைய சவால்கள் இருப்பினும், மாணவர்களின் மகிழ்ச்சியைப் பார்க்கும் போது சவால்கள் அனைத்தையும் சாத்தியப்படுத்தி, விளையாட்டு வழிக் கற்றல் மூலம் குழந்தைகளின் கற்றல் செயல்பாட்டை செம்மைப்படுத்த முடியும் என்பதில் எள்ளவும் சந்தேகமில்லை.

## கற்றல் தாக்கங்கள்

- மாணவர்களுக்கு இடையேயான உறவுமுறை மேம்படுகிறது.
- ஆசிரியர் - மாணவர்களுக்கு இடையேயான உறவுமுறையும் மேம்படுகிறது.
- மாணவர்கள் மகிழ்ச்சியுடனும் ஆர்வமுடனும் கற்கின்றனர்.
- மாணவர்களின் குழந்தைத் தன்மையைப் பாதிக்காமல் கற்பிக்க முடிகிறது.
- மாணவர்களின் உடலியக்கத்திறன்கள் மேம்படுகின்றன.
- கை - கண் - மூளை இணைந்து செயல்படும் திறன் மேம்படுகிறது.
- மொழி மற்றும் கணிதச் செயல்பாடுகளை விளையாட்டு வழிக் கற்றலின் மூலம் மாணவர்கள் அதிக ஈடுபாட்டுடன் கற்கின்றனர்.



**மு. மகேஸ்வரி,**
தொ.ப.ஆ
அ.தொ.ப. கலிதீர்த்தாள்
குப்பம் பேட்

# குழந்தைதானே .......

## முன்னுரை

எழுத்து வடிவம் என்பது ஆதாரபூர்வமான ஒன்று. நாம் எழுதும் எழுத்து உண்மையின் உயிர் வடிவம். நிகழவேண்டும் என விழையும் எண்ணங்கள் யாவும் விடியல் காண இந்தக்கட்டுரையை எழுதுகிறேன். “ஆசிரியப்பணி” அறப்பணி அதற்கு உன்னையே நீ அர்ப்பணி. இந்த வாசகத்தைப் பணியில் சேருவதற்கு முன்பே நான் கேட்டிருக்கிறேன். எப்பணி செய்யினும் அதைச் செம்மையான முறையில் செய்வதே சாலச்சிறந்தது.

## குறிக்கோள்

குறிப்பாக ஆசிரியர் என்பது பணி அல்ல. நம் கடமை எனக் கருதிச் செய்ய வேண்டிய தவம். நம்மிடம் வரும் பிள்ளைகள் களிமண்ணும் அல்லர், பட்டைத் தீட்டுவதற்காக அனுப்பப்பட்ட வைரங்களும் அல்லர். உயிரும் உணர்வும் நிறைந்த மழலைச் செல்வங்கள். அவர்கள் இவ்வுலகில் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள வழிகாட்ட வேண்டியது ஆசிரியர் பெருமக்களான நம் அனைவரின் கடமை.

## அவர்களால் முடியும்

ஒரு குழந்தையால் 3 முதல் 6 மொழிகளை மிக எளிமையாகக் கற்றுக்கொள்ள முடியும் என்பது அறிவியல் பூர்வமான உண்மை. ‘சின்னக் குழந்தைதானே’ - இது குழந்தைகளைக் குறைத்து எடைபோடும் வாசகம். அதற்காக அவர்களை சுமைதாங்கியாக்கி நம் கருத்துகளையும் கனவுகளையும் அவர்கள் மேல் திணிக்கச் சொல்லவில்லை. அவர்களை அவர்களின் போக்கில் விடுங்கள் பாதை மாறும் போது மடைமாற்றுங்கள் அவ்வளவே.

## உச்சி முகர்தல்

தன் பெண்டு தன் பிள்ளை என்பதைக் கடந்து ஊரார் பிள்ளையையும் தன் பிள்ளையாகக் கருதும் உன்னதமே ஆசிரியர் உள்ளம். தன் கண்களுக்கு என்றும் குழந்தையாகவே தெரியும் பிள்ளைகள் சாதித்து சான்றோர்களாகி நம்முன் வந்து நிற்கும் போது நாம் அவர்களை உச்சி முகர்ந்து ஆசி வழங்குவோம்.

இன்று பிள்ளைகள் சின்னதொரு, தோல்வியைக் கூட பார்த்து விடக்கூடாது என்பதில் நாம் மிகவும் கவனமாக இருக்கிறோம்.

## தோல்வி நல்லது

தோல்விகளைப் பிள்ளைகள் ருசி பார்க்கட்டும். பாகற்காய் கசப்பு தான் ஆனால், உடலை உறுதி செய்யும். தோல்விகள் துவளச் செய்யும் இருப்பினும் துவளும் ஒவ்வொரு பொழுதும் மீண்டும் பல மடங்கு உறுதியுடன் போராடும் படிப்பினையை அவர்களுக்கு வழங்கிடும். வகுப்பில் முதல் மதிப்பெண் பெறும் மாணவர் விளையாட்டுப் போட்டிகளில் சந்திக்கும் சிறு தோல்வி கூட மனதளவில் அவரைப் பெரிதும் பாதிக்கிறது. இதே நிலைதான் விளையாட்டில் முதலிடம் வகிக்கும் மாணவருக்கும் படிப்பில் ஏற்படுகிறது. எனவே இளம்பருவம் முதலே நம்மைத் தாக்கும் தோல்விகள் நம்மை மென்மேலும் பலப்படுத்தும் என்ற நம்பிக்கையை மாணவர்கள் மனதில் விதைக்க வேண்டும்.

## சுட்டிக்காட்டுங்கள் விதைக்கப்படும்

குழந்தைகளின் தவறுகளை அன்பு கலந்த கண்டிப்போடு சுட்டிக்காட்டுங்கள். நீங்கள் பேசிய வார்த்தைகள் அவர்கள் மனதில் விதைக்கப்படும், மற்றொருமுறை தவறு செய்ய மாட்டார்கள். தவறும் போது அவர்கள் மனதில் பதிந்த வார்த்தைகள் அவர்களை நல்வழிப்படுத்தும். உளவியல் நிபுணர்கள் இன்று குழந்தைகளைக் கண்டிப்பதில் தவறொன்றுமில்லை என்று கூறுகிறார்கள். இத்தகைய அணுகுமுறை தற்கொலை போன்ற எதிர்மறையான சிந்தனைகளைத் தவிர்க்க உதவும்.செம்மைப்படுத்தப்பட்ட நெஞ்சம் சீரான பாதையில் செல்லும்.

## மாதா, பிதா, குரு, தெய்வம்

தெய்வத்திற்கு முன் குருவை வைத்து அவர் பெருமை உணர்ந்த பெருமக்கள் இன்று இல்லை.

நம் பள்ளிப் பருவத்தில் ஆசிரியரிடம் தண்டனை பெற்றால் அதை வீட்டில் சொல்ல பயப்படுவோம். ஏனென்றால் நீ என்ன செய்தாய் ஆசிரியர் தண்டிக்கும் அளவிற்கு ? என்ற கேள்விக்குப் பதில் கூற முடியாமல் திணறுவோம்.

ஆனால், இன்றோ திணறுவது பிள்ளைகள் இல்லை ஆசிரியர்கள். வேண்டாம் வம்பு. படித்தால் படிக்கிறான் படிக்காவிட்டால் போகிறான் பாடம் நடத்துவது தான் உன் வேலை அதை மட்டும் செய் என்ற நிலையில் தள்ளப்பட்டுள்ளனர் ஆசிரியப் பெருமக்கள்.

## மத்தளம் - போன்ற வாழ்க்கை

திடீரென முளைத்த வேலிகள், இந்தச் சட்டதிட்டங்கள், மாணவர்களைக் கண்டிப்பதா? இல்லை கண் முன்னே அவர்களின் எதிர்காலம் வீணாவதைப் பார்த்து கைக்கட்டி நிற்பதா? கனிவோடு கண்டிப்போம் . நம் பிள்ளையிடம் நாம் எடுத்துக் கொள்ளும் உரிமையோடு பாசம் காட்டுவோம். நான் பெறாவிட்டாலும் நீயும் என் பிள்ளை தான் என்ற அன்போடு.

## முடிவுரை (மன உரை)

மேலே, சொல்லியவை அனைத்தும் பல்வேறு தருணங்களில் பல்வேறு நபர்களிடம் பேச எண்ணியவை ஆனால், பேசவில்லை. பேசினால் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையும் இல்லை. அதனால் எழுதினேன் பேசிய வார்த்தை காற்றில் கரையலாம், எழுதிய எழுத்துக்கள் காற்றில் கரையாது உங்கள் மனதில் கலந்திடும் என்ற நம்பிக்கையில் முடிக்கிறேன்.

---

**காயத்ரி கண்ணன்**

தொ.ப.ஆ

அ.பெ.தொ.ப. பாகூர்.

# கற்றலில் மாணவரின் மனநிலை

இன்று, ஒரு சில அரசுப்பள்ளிகள் சமூகங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கானதாக மாறிக்கொண்டு வருகின்றன. எங்கள் பள்ளி, தமிழ்நாட்டுக்கும் புதுவைக்கும் இடையில் உள்ள வடுவக்குப்பம் என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. எம்பள்ளி மாணவர்களின் பெற்றோர்களால் மாணவர்களுடைய மனநலன் மற்றும் மன வளர்ச்சிக்கு பெரும்பாலும் நேரம் ஒதுக்க முடிவதில்லை. வீடுகளில் நடக்கும் சிறிய பிரச்சனைகள் கூட மாணவர்கள் மனதில் ஆழமாகப் பதிகின்றன. இதனால் நாம் வகுப்பறையில் கற்பிக்கவிருக்கும் கருத்துக்களை ஏற்கும் மனநிலையில் மாணவர்கள் இல்லை. கவனச்சிதறல் உண்டாகிறது. எனவே, நான் என் மாணவர்களுடைய குடும்பச்சூழலைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாய் இருந்து கற்பிக்க வேண்டிய தேவை உள்ளது.

## குடும்பச்சூழலைக் கண்டு கொள்ளல் :-

மாணவர்களின் கற்றலில் ஏற்படும் முன்னேற்றம் மற்றும் தொய்வு நிலைக்கு மிகமுக்கியக் காரணமாக குடும்பச்சூழ்நிலை இருப்பதாக நான் கருதுகிறேன். 2012 -ல் என்னிடம் ஐந்தாம் வகுப்புப்படித்த மாணவன் ஒருவனுக்குக் குடும்பச்சூழ்நிலை சரியில்லை (அப்பா, அம்மா இரண்டுபேரும் சண்டைபோட்டுப் பிரிந்திருந்தனர்.) இதனால், நன்றாகப்படித்து முதல் மதிப்பெண் எடுத்துக் கொண்டிருந்த அவனால், அனைத்து வகுப்புகளிலும் சரியாகப் படிக்கவில்லை. அவனால் இயல்பாக மற்ற மாணவர்கள் போல் செயல்பட முடியவில்லை. இதனைப் பார்த்த நான் அவனை ஒரு பத்துநாட்கள் கவனித்து வந்தேன். ஆனாலும், அவனது செயல்பாடுகள் மற்றும் படிப்பில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. நான் அவனிடம் பேசும்போது, அவனின் குடும்பத்தைப் பற்றிக் கேட்டபோது அவனது பெற்றோரின் பிரிவை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை என்பதை உனர்ந்தேன்.

உடனே நான் அவனுடைய பாட்டியை அழைத்துப் பிரச்சனையைக் கேட்டேன். பின்னர், அவனது அப்பாவை (மதுவிற்கு அடிமையானவர்) அழைத்துப் பேசினேன். பின்னர், அவன் அம்மாவை அழைத்து நிகழ்ந்ததைப் பற்றிக் கூறி அவர்களுக்கு ஆலோசனை அளித்தேன். பின்னர் அவர்கள் இருவரும் ஒன்றாக இணைந்து வாழ்ந்தார்கள். மாணவனின் நடத்தை மற்றும் படிப்பில் நல்ல மாற்றம் ஏற்பட்டது. இதனை நான் எனது அனுபவத்தில் கண்டேன். அந்த மாணவன் இப்பொழுது பத்தாம் வகுப்பில் 480 மார்க் எடுத்து அரசுப் பள்ளியில் இரண்டாம் இடம் வந்தான். தற்பொழுது 12- ஆம் வகுப்பு எழுதியுள்ளான். அவன் (school pupil leader) ஆகவும் இருக்கிறான் எப்பொழுது என்னைப் பார்த்தாலும் ஒரு மரியாதையுடன் பார்த்துப் பேசிவிட்டுத் தான் போவான்.

## மற்றுமொரு மாணவிக்கு உதவி

மேற்கூறியது போல தற்பொழுது என்னிடம் படிக்கும் மாணவி ஒருத்திக்குக் குடும்பப் பிரச்சனை. அதாவது நன்கு சம்பாதித்துக் கொண்டு சுறுசுறுப்பாக இருந்த அவளது அப்பாவிற்கு திடீரென உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது. அதனால் அவரது கண்பார்வையை இழந்தார். திடீரென்று இது நடந்துவிட்டதால் இப்பொழுது அவளது அம்மா தான் வேலைக்குப் போய் சம்பாதித்து வீட்டைப் பாதுகாத்து வருகிறார். இதனால் மனம் உடைந்த மாணவி, அதுவரை நல்ல பழக்கவழக்கங்களுடன் இருந்தவள் மனமாறி பணப்பற்றாக் குறையால் திருட ஆரம்பித்து விட்டாள். மாணவர்களிடம் இருந்து பென்சில், பேனா, இரப்பர் போன்றவைகள் எடுக்க ஆரம்பித்த அவள், சில நாட்கள் கழித்து, ஆசிரியர்களின் பையில் இருந்து பணம் எடுக்க ஆரம்பித்து விட்டால். நாங்கள் இதனைக் கண்டறிந்து அவளைக் கண்டித்தோம். ஆனாலும், திருடுவதைக் குறைத்துக் கொண்டாளே தவிர நிறுத்தவில்லை. ஆசிரியர் வைத்திருக்கும் பென்சில், பேனா, இரப்பர், கலர் பென்சில் போன்றவைகளையும் எடுக்க ஆரம்பித்தாள். நான் அவள் மீது கவனம் செலுத்தி அக்கறையுடன்

நடந்து கொண்டேன்.

பின்பு, அவளுக்குப் படிப்பில் ஆர்வம் அதிகரித்தது. முதல் ரேங்க் எடுத்தாள், மற்றவர்களுக்கு உதவும் குணம் அதிகமாக உள்ளது. அவளாகவே முன்வந்து அனைத்து வேலைகளும் செய்வாள். வகுப்பில் கொடுக்கும் அனைத்து வேலைகளையும்அவள்தான் முதலில் முடிப்பாள்.

## சிறிய செயல்கள் பெரிய விளைவுகள்

என்னுடைய பணி அனுபவத்தில் ஒவ்வொரு வருடமும் மாணவர்களின் மனநிலையில் மாற்றம் கொண்டு வந்துள்ளேன். இந்த வருடம் என்னுடைய 5-ம் வகுப்பில் மகேஷ் (பெயர் மாற்றப்பட்டுள்ளது), சந்தியா (பெயர் மாற்றப்பட்டுள்ளது), என்னும் இரண்டு மாணவர்கள் தமிழ் எழுத்துக்களின் பெயர்கள் கூட தெரியாமல் வந்தார்கள். நான் அவர்களுக்குத் தனியாகக் கவனம் செலுத்திக் கற்றுக்கொடுத்தேன் ஆனால், நல்ல முன்னேற்றம் கிடைக்கவில்லை. அவர்கள் கற்றுக்கொள்ளவே கஷ்டப்பட்டார்கள்.

ஆனால், அவர்களுக்குக்காகத் தமிழ் எழுத்துக்கள் உள்ள chart-ஐ வாங்கி உங்களுக் காகத்த இதை வாங்கினேன். இதை நிறையப் பணம் கொடுத்து வாங்கினேன் என்று சொன்னவுடன், அவர்களாகவே அதைத் தினமும் எடுத்துப் படித்தார்கள். அதனை எழுதிப்பார்த்தார்கள் நான் எந்த தமிழ் Model செய்தாலும் இதை உங்களுக்காகத்தான் செய்தேன் என்றதும் மற்ற மாணவர்களைவிட அவர்கள் அதிக சிரமத்தை எடுத்துப் படித்தார்கள்.

இப்பொழுது அவர்களால் தமிழை ஓரளவுக்குச் சரளமாகப் படிக்க முடிகிறது. அதனைப் பாராட்டும் பொழுது அவர்களுக்கு English-ஐ விட தமிழில் மிகுந்த ஆர்வம் அதிகமாகிவிட்டது. அந்தக் குழந்தைகளிடம் “உங்களுக்காகத் தான் இதை கொண்டுவந்தேன்” என்று நான் சொன்னதனால் “நம்மீது அன்பு செலுத்தவும், அடையாளம் கண்டுகொள்ளவும் ஓர் ஆள் இருக்கிறார்” என்ற நம்பிக்கையை விதைத்திருப்பேன். அதன் மூலம் எங்கள் உறவு மேம்பட்டது. இப்படிச் சிறு சிறு செயல்கள் மூலம், மாணவர்களின் மனதை மாற்றியதால் அவர்கள் வகுப்பறையில் முன்பைவிட அதிக ஆர்வம் காட்டி இப்போது நன்றாகக் கற்றுக்கொள்கிறார்கள்.



**மஞ்சுளா**
தொ.ப.ஆ
அ.தொ.ப. வடுவக்குப்பம்



# வாசித்தலை மேம்படுத்துவோம்! வாரீர்!

## முன்னுரை

வகுப்பறை கற்றலையும் தாண்டி பள்ளியில் மாணவர்களின் வாசித்தலை மேம்படுத்தப் பல களங்களில் பல்வேறு உத்திகளையும், அணுகுமுறைகளையும் கையாண்டு வெற்றி நடைபோடும் எம் அனுபவங்களைப் பகிர்வதில் பெருமையும், மகிழ்வும் அடைகிறேன்.

புதுவை - நைனார்மண்டபம் அரசு தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியையாகப் பணியாற்றும் நான், பள்ளி வளர்ச்சிக்கான திட்டமிடல் (school developmental plan - motto) மூலம் வரும் 2020 க்குள் 'பள்ளி மாணவர் அனைவரும் அவரவர் பயிலும் வகுப்பிற்கேற்ப, வாசித்தலில் தன்னிறைவு பெறுவது என்றும் அதற்கு நூலக நூல்களையும், வாசிப்பறை நூல்களையும் பயன்படுத்தியோ, அல்லது வாசித்தல் தொடர்பான செயல்பாடுகளில் ஈடுபட்டோ வாசித்தலில் 100% என்ற இலக்கை அடைவது' என்ற குறிக்கோளைப் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் தீர்மானமாகக் கொண்டு வந்து செயல்படுத்தி வருகிறோம்.

## வாசித்தலை மேம்படுத்தக்கூடிய சில வழிமுறைகள்

வாசித்தலை மேம்படுத்தும் முதல் களமாக எங்கள் பள்ளி காலைப் பேரவைக் கூட்டம் இயங்கி வருகிறது. வாரம் ஒரு திருக்குறள், பொது அறிவு வினாக்கள், செய்தித்தாள் வாசித்தல், விடுகதைகள் கேட்டல், கொடுக்கப்படும் எளிய தலைப்பில் 5 அல்லது 6 வாக்கியங்கள் பேசுதல் போன்றவை மாணவர்களுக்கு “வாசித்தல்” என்ற அரங்கத்தின் நுழைவாயில்களாக உள்ளன. இதன் மூலம் பாராட்டைப் பெறும் மாணவர்கள் மேலும் ஊக்கமடைந்து தாங்களே முயன்று முக்கிய நாட்களான (உலக நீர் தினம், சிட்டுக்குருவிகள்

தினம், உலக காடுகள் தினம் மற்றும் பாரதியார், நேரு, வ.உ.சி. அப்துல் கலாம் போன்ற தலைவர்களின் பிறந்த நாட்கள்) குறித்து வீட்டில் அறிந்தும், விவரங்கள் சேகரித்துக் கொண்டும் வந்து காலைப் பேரவையில் படிப்பது பெரு மகிழ்வைத் தருவதாகவுள்ளது.

அனைத்து மாணவர்களும் பள்ளியில் மதிய உணவருந்திய பின் எனது கண்காணிப்பில் வாசித்தல் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். சிறுவர் மலர், செய்தித்தாள்கள், அழைப்பிதழ்கள், விளம்பரங்கள், நூலகத்திலிருந்து சிறு கதைப் புத்தகங்கள், அசிம் பிரேம்ஜி பவுண்டேஷன் நூலகப் படக்கதைகள் என மாணவர்கள் அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப எடுத்து வாசிக்கின்றனர். ஒரு சிலரின் வாசிப்பு பிற மாணவர்களுக்கு முன்னுதாரணமாக அமைந்து ‘வாசித்தல்’ ஓர் மகிழ்வான நிகழ்வாகவும் இருந்து வருகிறது.

பள்ளியில் நடைமுறையில் உள்ள Reading Corners - வாசிப்பறைகளும் அந்தந்த வகுப்பு மாணவர்களின் திறமைக்கேற்ப நூல்களை வழங்கும் ஒரு வரப்பிரசாதமாக விளங்குகின்றன. வாரத்தில் இரு நாட்கள் “வாசிப்பறை வாசித்தல்” பயிற்சி கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

நைனார்மண்டபம் மக்கள் நல இயக்கம் மாணவர்களின் திறமைகள், ஆர்வம், ஈடுபாடு இவற்றை அறிந்து அவர்களைப் பாராட்டி தினமும் “பட்டம்” நாளிதழ் வாங்கித்தந்து (sponsored by A. Sathiaraj, President of Nainar Makkal Nala Iyakkam) வாசித்தலை ஊக்குவித்து, ஒவ்வொரு பருவமும் பொது அறிவு வினாடிவினா போட்டிகள் நடத்தி, பரிசுகள் வழங்கியும் வருகின்றனர் என்பது பெருமைக்குரியச் செயலாக உள்ளது.

பள்ளியின் கல்வி செயல்பாடுகளுக்குப் பின் அது குறித்து மாணவர்களின் feedback அவ்வப்போது பேச வைப்பதும் அவர்களாகவே எழுதுவதும் அவர்களின் கற்றல் வெளிப்பாட்டை அறியும் அளவு கோலாக உள்ளது. இது மாணவர்கள் எளிதாகக் கோர்வையாகப் பொருள் விளங்கப் பேசவும், வாக்கிய அமைப்புடன் திருத்தமாகப் பேசவும், எழுதிக் கற்பதையும் உறுதிபடுத்துவதாக உள்ளது. மாணவர் சென்று வந்த களப்பயணம்,


புதுச்சேரி
17-9-18
மதிப்பிற்குரிய ஐயா
வணக்கம். என் பள்ளியில்
1.9.18 முதல் 15.9.18 வரை நடந்த தூய்மை
பிறைகாலம் செயல் பாடுகள் மூலம் தூய்மையின்
அவசியத்தை நாங்கள் கற்றுகொண்டோம்.
நான் தூய்மையாக இருப்பேன். என் ஊரை தூய்மையாக
வைத்திருப்பேன். நான் என் நாட்டை தூய்மையாக
வைத்திருப்பேன். நான் என் உலகத்தை தூய்மையாக
வைத்திருப்பேன். நான் பசுமையை உருவாக்குவோம்
மரங்களை வளர்ப்போம். இப்படிக்கு கிஷோர் ...

விழிப்புணர்வு பேரணி, உலக மகளிர் தினம், தூய்மை வரக் கொண்டாட்டம் ஆகியவற்றின் விமர்சனங்கள் குறிப்பிடத்தக்கன. இதன் நீட்சியாக முதல் வகுப்பு மாணவர்களும் தமிழ் எழுத்துகளை அடையாளம் கண்டு புதிய சொற்களைக்கண்டறியும் செயல்பாடுகளில் மகிழ்வுடன் ஈடுபட்டு, வாசித்தலை நேசிக்கவும் தொடங்கி உள்ளனர்.

## முடிவுரை

இத்தகு வகுப்பறைக்கு அப்பாற்பட்ட தொடர்ச்சியான, மாணவர் விருப்பத்திற்கு உகந்த வாசித்தல் செயல்பாடுகள் அவர்களின் வாசிப்புத்திறனை வளர்த்து மகிழ்வானக் கல்விக் கற்றலை உறுதிபடுத்தும் என்பதை அனுபவரீதியாக உங்கள் முன் வைக்கிறேன். தொடர்பணியாக வரும் கல்வி ஆண்டிலும் வாசித்தல் செயல்பாடுகள் மூலமாக மாணவர்களைச் சிறந்த வாசிப்பாளர்களாக உருவாக்கப் புதுவை அரசு கல்வித்துறை Samagra Shiksha மூலம் வழங்கப்பட்ட Library Grant-ன் நூல்கள் வாங்கவும், மாணவர்கள் புத்தகங்களை வீட்டிற்கும் எடுத்துச் சென்று வாசித்தலை வளப்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

அடுத்தக் கல்வி ஆண்டில் பள்ளியில் ‘வாசிப்புத் திருவிழா’ ஏற்பாடு செய்து மாணவர்களை ஊக்கப்படுத்தி உயர்விக்கவும் திட்டமிட்டுள்ளோம்.



**அனந்தநாயகி**
தலைமை ஆசிரியை
அ.தொ.ப. நைனார்மண்டபம்

# கற்றல் எனது பார்வை

கற்றல் என்பது மனிதனின் முழு ஆளுமைப் பண்பையும் வளர்க்கக் கூடியதாக இருக்க வேண்டும். வயதுக்கேற்ற தகுதியும் திறமையும் வளர வேண்டும். இப்படிப்பட்ட ஒரு வகையான பாடத்திட்டமும் கலைத்திட்டமும் நாம் உருவாக்க முனைய வேண்டும்.

சமூக சந்தர்ப்பச் சூழலைச் சரியான காலத்தோடும் ஏற்ற அணுகமுறையோடும் சந்திக்க வேண்டும் ஒவ்வொரு குழந்தைகளும். அதற்கு தற்போது நடக்கும் பள்ளிச் சூழலை மாற்றி அமைக்க வேண்டியது ஆசிரியராகிய நமது கையில் உள்ளது. அதனைப் பூர்த்தி செய்ய கீழே சில ஆலோசனைகளைத் தர உங்கள் முன் வந்திருக்கிறேன்.

1. படிப்பில் ஆர்வம் இல்லாத மாணவர்களை அவனுக்குப் பிடித்த இடத்தில் இருந்து அதாவது அவனது வீடோ அல்லது விளையாட்டு இடமோ போன்ற இடங்களில் இருந்து தான் ஆரம்பிக்க வேண்டும்.

**உதாரணமாக:** மாணவர்களுக்கு உணவு என்கின்ற பாடத்தை நடத்துவதற்கு முன்னர் அவர்களுக்கு எந்த உணவு பிடிக்கிறதோ அதனைப் பற்றிய தகவல்களாகிய உணவு தயாரிக்கும் முறை, அதற்குத் தேவைப்படும் பொருட்கள், விளைவிக்கும் முறைகள் பற்றிய உரையாடல் இன்றியமையாததாக இருத்தல் அவசியமாக இருத்தல் வேண்டும். அந்த உணவிலிருந்து தொடங்குவது அவசியமான ஒன்றாகும்.

2.இன்றைய காலங்களில் குழந்தைகளைக் குடும்பங்கள் வளர்த்த காலங்களை விட சமூகங்கள் தான் வளர்க்கின்றன. எனவே நடந்த நல்ல சம்பவங்களை மட்டுமே நாம் அவனிடம் அடிக்கடி எடுத்து விவரிக்க வேண்டும்.

3. சமூகப் பிரச்சனைகளை வயதுக்கேற்றவாறு வரிசைப் படுத்தி எந்த எந்த வகுப்பு மாணவர்களுக்குக் கூற வேண்டுமோ அதனை அவர்களின் குடும்பச் சூழலில் நடப்பது போன்று நினைத்து அதனை எவ்வாறு அணுக வேண்டும் என தீர்வை எட்ட வேண்டும். உதாரணமாக: காலைப் பேரவையில் அனைத்து வகுப்பு மாணவர்கள் இருக்கும் வேளையில், எந்த மாணவரின் சிந்தனையையும் கலைக்காதக் கருத்தாக நாம் பதிவிடுவது அவசியமான ஒன்றாகும்.

### பள்ளியில் ஏற்படும் பொது பிரச்சனைகளை:

- பெரும்பாலான மாணவர்களுக்கு அப்பா கிடையாது . அப்பா எப்படிஇறந்தார் என்றால் அவர்கள் நடக்கும் தூரத்தில் தான் அரசு மதுபானக் கடைகளும் தனியார் கடைகளும் உள்ளன.
- ஒரு சில மாணவர்கள் கையில் காலியான மது பாட்டில்களை எடுத்து வருகின்றனர். இது ஏது என்றால் நான் விளையாட செல்லும் போது கீழே கிடந்தது என்கிறான் . இது எப்படி சாத்தியமாயிற்று என்றால் எங்கள் பள்ளியிலிருந்து 1 கிலோமீட்டர் சுற்றளவிற்குள் கிட்டத்தட்ட 15 க்கும் மேற்பட்ட மதுக்கடைகள் உள்ளன.
- கடையில் வாங்கிக் கொண்டு வந்து பள்ளியின் விளையாட்டு மைதானம் , வயல் வெளிகளில் அமர்ந்து குடிக்கிறார்கள் . இதனால் சிறு பிள்ளைகளும் தவறானப் பாதைக்குச் செல்கிறார்கள்..

### மாணவர்களுக்கு ஏற்படும் சவால்கள்:

- மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட வயது சென்ற உடன் ஆசிரியரையும், பெற்றோரையும் விட்டு விலகிச் செல்ல ஆரம்பிக்கிறார்கள்.
- சமுதாயமும் அவனை வழி நடத்தத் தயாராக இல்லை. உடன் பழகும் நண்பர்களும் மனதை ஒருமுகப்படுத்த வழி சொல்வதில்லை.
- தொலைக்காட்சி பார்ப்பது தான் “இன்றைய

இடை நிலை மாணவர்களின் சரியான வழிகாட்டியாக உள்ளது" . அதனை எதிர்கொள்வது நமது பெரும் சவாலாக உள்ளது.

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பது போல நாம் கற்ற கல்வி நமது வாழ்க்கைக்கு உதவாது. அத்தகைய கல்வித்திட்டத்தை மாற்றி அமைக்க முடியாவிட்டாலும் சமூகத்துடன் இணக்கமாக வாழ எவ்வாறு தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று குழந்தைகளுக்கு ஒவ்வொரு ஆசிரியரும் சொல்லித்தருவது நமது முதல் கடமை.

## கல்வி குறித்த எமது பார்வை:

என்னைப் பொறுத்தவரையில் சமூகத்தில் நடக்கும் ஒவ்வொரு பிரச்சனைகளுக்கும் ஆசிரியர் தான் முழு பொறுப்பு. "சரியானத் தலைவனைத் தேர்ந்தெடுப்பது சரியான குடிமக்களின் கையில் உள்ளது. சரியானக் குடிமக்களை உருவாக்குவது ஆசிரியரின் கையில் உள்ளது."

பிரச்சனைகளைச் சரியான முறையில் தீர்வு காண தெரியாமல் இருப்பதும் அவனது பள்ளிப் பருவத்தில் சரியான முடிவு எடுக்கக் கற்றுக் கொடுக்காத ஆசிரியரின் கையில் தான் உள்ளது.



**தி.செந்தமிழ்செல்வன்**
தொ.ப.ஆ
அ.உ.நி.ப, குருவிநத்தம்

# எனது பள்ளி அனுபவமும் அதன் தாகமும்

## எமது பள்ளி

LKG முதல் 2 ஆம் வகுப்பு வரையிலான 19 குழந்தைகள் அரசு தொடக்கப்பள்ளி சேலியமேடு பேட்டில் உள்ளனர். 2017 ஆம் அண்டு சூலை திங்கள் முதல் 4 வகுப்புகள் கொண்ட இப்பள்ளிக்கு ஆசிரியர் நான் ஒருவன் மட்டுமே. கல்வி நிலையில் ஓரளவு வளர்ச்சியடைந்த கிராமம் ஆயினும் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிய மக்களை அதிக அளவில் கொண்டது. அனைத்து நிலையிலும் ஆண்டாண்டு காலமாகவும் பலநூறு வருடமாகவும் அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்ட பஞ்சமர்கள் எனும் ஆதிதிராவிடர்கள் உள்ள பகுதி, அன்பிற்குக் குறைவில்லாமல், அழகுத்தமிழ்பெயர்களும், பேச்சில் தூய தமிழ்ச்சொற்கள் பல உயிர்ப்புடன் உள்ள பகுதி.

## மாணவர்களுக்கு ஏற்றார் போல

குழந்தைகள் ஒவ்வொருவரும் தனித்தனித் திறனைத் தன்னகத்தே தாழிட்டு வைத்திருப்பர். இது அனைவரும் அறிந்ததே என் பள்ளிக் குழந்தைகளும் இக்கருத்திற்குச் சளைக்காதவர்களே. ஏனோ அவர்களுள் சிலருக்கு சிலசெயல்களில், வெளிப்பாடுகளில் சிறு தயக்கம் உண்டு, அதுவும், பல நூற்றாண்டுகளின் மரபுப்பிழையோ! அதனை உணர்ந்த நான் குழந்தைகளின் மனத்தாழினைத் திறந்து, சிறகுகளை விரித்து உன் திறத்தினை உலகிற்கு உணர்த்து ! என்று குழந்தைகளின் அனைத்துத் திறன்களும் வளர என்னால் இயன்ற வரை செய்து வருகிறேன்.

என்னால் மட்டுமே இதனைச் செய்து விட முடியவில்லை. கற்றல் கற்பித்தல் முதலான அனைத்துச் செயல்களிலும் என் தோளோடு தோளாய், இரட்டிப்புப் பலமாக இன்னொரு நபரும் எம் பள்ளியில் உள்ளார். அவர் அண்ணன் திரு. இரா. முருகன் தினக்கூலி ஊழியர். ஆனால் எங்கள் பள்ளியில் அவரும் மற்றுமொரு ஆசிரியரே. அத்தனை அறம் சார்ந்த உணர்வோடு இப்பிஞ்சுகளுக்காக அயராது உழைப்பவர். ஓர் ஆசிரியர் பள்ளியாக இருந்தும் இப்பள்ளி சிறப்பாக இயங்க இவரும் மிக முக்கியக் காரணம். இது எங்கள் பள்ளித்துணை ஆய்வாளர் ஐயா திரு. செ. பக்கிரிசாமி அவர்களும் நன்கு அறிவார்.

எ.கா., எங்கள் பள்ளியின் சிறப்பு, சூரியபிரகாஷ் எனும் மாணவனே மூளைவளர்ச்சி குறைவு, துவக்கத்தில் பேசத்தெரியாதவனாய் இருந்தான். மற்றவருடன் சேர மாட்டான். எது சரியான செயல் தவறான செயல் என்பதனை அறியாதவனாய் இருந்தான். ஆனால் இன்று நாம் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிப்பான். வினாவும் எழுப்புவான். உணர்வுகளை ஓரளவு தெளிவாக வெளிப்படுத்துகிறான். மாணவ - மாணவியரோடு இணைந்து செயல்பட்டதால் அனைவரின் பெயர்களையும் கூறுகிறான் இவை எங்கள் பள்ளி மாணவ - மாணவியர் ஆசிரியர், ஊழியர், மற்றும் பெற்றோரின் கூட்டு முயற்சிக்குக் கிடைத்த வெற்றியே ஆகும்.

## வழிகாட்டி ஆசிரியராகிய நான்

நமது பள்ளிப்பருவத்தில் பலவிதமான ஆசிரியர்களை அனைவரும் கண்டிருப்போம். நான் கண்ட பலரில் என்னை அடையாளம் கண்டு, அரவணைத்து என்னை மேம்படுத்தி என் வாழ்வின் திசையை மாற்றிய எனது பன்னிரண்டாம் வகுப்பு ஆசிரியர் முதலியார் பேட்டை திரு.வி.க. நகரைச் சேர்ந்த திரு. முருகானந்தம் அவர்களே, நான் ஆசிரியர் ஆக வேண்டும் என்ற உந்துதளுக்கு அவரே காரணம். சராசரி மாணவர்கள் பலரைச் சாதிக்கவைத்தவர். என்னைப் பொறுத்தவரை அவர் ரட்சகர் என் வாழ்வைத் திசைமாற்றிய வழிகாட்டி. அவ்வாறே நானும் எனக்குக் கிடைக்காத அனைத்தையும் என் மாணவ - மாணவியருக்குக் கிடைக்கச்செய்து, நல்ல வழிகாட்டியாக இருந்து வருகிறேன்.

## வகுப்பறை ஒருங்கிணைப்பு

இரண்டாம் வகுப்பிற்குக் கூட்டல் மற்றும் கழித்தல் போன்றவற்றைக் கற்பிக்கும் பொழுது ஒன்றாம்

வகுப்பு மாணவ - மாணவியரும் அதனைக் கவனிக்கின்றனர். அவ்வாறான நிலையில் இரண்டாம் வகுப்புக்கான அனைத்தையுமே ஒன்றாம் வகுப்பு மாணவ - மாணவியரும் கற்று திறனடைவைப் பெறுகின்றனர். மேலும், அவர்கள் இரண்டாம் வகுப்பிற்குத் தேர்ச்சி பெற்று வரும் பொழுது அனைத்துமே எளிமையே என்ற உணர்வைப் பெறுகின்றனர். ஒன்றாம் வகுப்பிற்குக் கற்றல் - கற்பித்தல் நடைபெறும் சூழலில் அதனை LKG & UKG குழந்தைகளும் கவனிக்கின்றனர் திறனடைவும் பெறுகின்றனர்.

சில நேரங்களில் ஒன்றாம் வகுப்பிற்குக் கற்பித்தல் நடைபெறும் போது இரண்டாம் வகுப்பு மாணவ - மாணவியரை LKG & UKG குழந்தைகளுக்குப் பயன்படுத்திக் கற்றுக்கொடுக்கச் சொல்வதும் உண்டு, அது குழந்தைகளின் கற்றலை எளிமையாக்குவதுடன் ஓராசிரியர் பள்ளியின் ஆசிரியரான எனக்கும் உறுதுணையாக உள்ளது.

## செயல்பாடு

ஆங்கிலத்தில் ஒரு பாடம் கற்பிக்கும் முன்பு அப்பாடம் தொடர்பான பல்வேறு சொற்களை உணர்த்தும் பல படக்காட்சி அல்லது படங்களை மாணவ - மாணவியரிடம் காண்பித்து அதன் பெயரை அவர்களைக் கூறச்செய்து அதனைக் கரும்பலகையில் எழுதி வாசிக்கச் செய்கிறேன். அடுத்துப் பாடத்தின் கதைக்கருவினைத் தெளிவாகத் தாய்மொழியில் ஆங்கில வார்த்தைகள் கலப்புடன் கூறும்பொழுது மாணவ - மாணவியர் ஆர்வத்துடன் கவனிக்கின்றனர். கலந்துரையாடுகின்றனர். இறுதியாகப் புத்தகத்தில் உள்ளதை வாசிக்கும் போது மாணவர்களுக்கு எளிமையானதாகவும் நல்ல புரிதலும் ஏற்படுகிறது. இதனை நான் என் வகுப்பில் கண்கூடாகப் பார்த்து வியந்திருக்கிறேன்.

## கல்வி யாருக்கு?

கல்வி என்பது ஒருவன் தன் வாழ்வை நிலைநிறுத்தவும், மேம்படுத்தவும் உதவும் மாபெரும் சக்தி வாய்ந்த ஆயுதம். அவ்வாயுதம் அவனைத் தற்காத்துக் கொள்ளவும் பகுத்தறிவோடு செயலாற்றவும் துணைபுரிய வேண்டும். கல்வி ஒரு மாணவனுக்கு அவன் சார்ந்த புவியியல், வரலாறு, சமூகம் மற்றும் அரசியல் போன்றவற்றை அவன் கற்கும் வாய்ப்பினை அளிப்பதாக அமைய வேண்டும். அவ்வாறு கல்வியானது அமையுமானால் மனிதர்கள் அனைவரும் சமமானவர்களே, உயர்வு, தாழ்வு மற்றும் பாலின வேறுபாடு பார்ப்பது முட்டாள் தனம் என்பதை உணர்வாள், பிறருக்கும் உயர்த்துவான் இவ்வாறான மாற்றம் ஏற்படுமாயின் அனைவருக்கும் முன்னேற்றமே ஒளிரும். தற்காலக் கல்வி மேற்கூறியவற்றைச் செய்கிறதா? என்பதை உங்களின் முடிவிற்கே விட்டுவிடுகிறேன்.



**கலைவாணன்**
தொ.ப.ஆ
அ.தொ.ப, செளியமேடு

# மாணவர்களை எப்படி அணுகுவது ?

## மாணவனாக எனது அனுபவம்

மாணவர்களை எப்படி அணுகுவது என்று எனக்கும் தெரியாது. ஆனால், மாணவர்களை எதிர்கொள்ளும் போது எனக்கு என் நினைவில் இருக்கும் இரு ஆசிரியர்கள் ஆறாம் வகுப்பு ஆசிரியர் திரு. அழகேசன் அவர்கள் மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியை திருமதி. ஆனந்தநாயகி அவர்கள்.

ஆறாம் வகுப்பில் ரேங்க் இல்லாத ரேங்க்கார்டில் என் அப்பாவிடம் கையொப்பம் பெற பயந்து கொண்டு அதை வீட்டிலும் மறைத்து இருக்க முடியாமல் பள்ளிக்குச் செல்வதாகக் கூறி விட்டு பள்ளிக்கு அருகிலேயே ஒளிந்து கொண்டு இரண்டு மூன்று நாட்கள் கண்ணாம்பூச்சிக் காட்டுவேன். நான் பள்ளிக்கு வராததால் என் பள்ளி தோழர்களை என் வீட்டிற்கு அனுப்பி வைத்தார் அழகேசன் சார். என் அம்மா எனக்குப் பூசைகள் வைத்துப் பள்ளிக்குத் தரதரவென இழுத்துச்சென்று அழகேசன் சாரிடம் “சார் இவன் கண்ணை மட்டும் விட்டு விட்டு தோலை உரிச்சி உப்புக்கண்டம் போட்ருங்க சார். நான் வந்து கேட்கமாட்டேன்” எனச்சொல்லிவிட்டு விட்டு வந்தார். அழகேசன் அறிவுரை கூறியதாக எனக்கு நினைவில் இல்லை. ஆனால் அவர் என் மீது கொண்ட அக்கறை என்னை ஏதோ செய்தது நான் தவறுகள் செய்யாமல் இருக்க எண்ணில் மனத்தடையை உருவாக்கி இருந்தது.

பத்தாம் வகுப்பு வரை ஆர்வமின்றி படித்த நான். மேல்நிலைப்பள்ளியில் படிப்பில் ஆர்வம் கொண்டு படித்ததால் என் வகுப்பில் முதன்மையானவனாக விளங்கினேன். ஆனால் அது பன்னிரண்டாம் வகுப்பில் பாதி வரை தான் தொடர்ந்தது. படிப்பில் கவனம் சிதறி வகுப்பைப் புறக்கணித்து பள்ளி விளையாட்டு மைதானங்களில், மரத்தடிகளிலேயே தஞ்சமடைந்தேன். என் தோழர்களின் மூலம் என்னை வகுப்பிற்குள் அழைக்கும் ஆனந்தநாயகி டீச்சரின் அனைத்து முயற்சிகளும் தோல்வியால் முடியவே ஒருநாள் அவரே நேரில் வந்துவிட்டார். “ஏன்டா இப்படி பண்ற?” என்று எனக்காக அவர் விட்ட கண்ணீர் பிற எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு, படிப்பில் கவனம் செலுத்தி பழையபடி நான் முதல் மாணவன் என்ற நிலையை மீண்டும் எட்ட முடிந்தது.

இந்த இருவரும் அவர்கள் அறியாமலேயே என் வாழ்வின் திசைக்காட்டிகளாக அமைந்தார்கள்.

## பாடமான எனது அனுபவம்

இந்த இரு ஆசிரியர்களின் அணுகுமுறை தான் என் மாணவர்களின் ஒவ்வொரு தவறின் போதும், பள்ளிக்குச் சரியாக வராத போதும் அவர்களின் வீட்டுச்சூழலையும் அவர்களின் மனநிலையையும் அவர்கள் தரப்பு நியாயத்தையும் மனதில் கொண்டு இயங்கச் செய்தது. என் மாணவர்களின் பெற்றோர்களுடன் தொடர்பில் இருந்து கொண்டே இருப்பேன். என்னைச் சூழ்ந்து கொண்டு அவர்கள் விருப்பம் போல எது பற்றி வேண்டுமானாலும் என்னிடம் பேசுவதற்கு ஏற்றதை போல் உரிமையானவனாக என்னை மாற்றியது.

## யாருக்கும் அடங்காத மாணவன்?

பள்ளியில் ‘யாருக்கும் அடங்காதவன்’ என்ற அடையாளத்தோடு ஒரு எட்டாம் வகுப்பு மாணவனிடமிருந்து பெரும்பாலான ஆசிரியர்கள் விலகியிருந்த நிலையில், பெரும்பாலான மாணவர்கள் ‘அவன் எப்படியாவது இந்தப் பள்ளியை விட்டுப்போய் விட்டால் போதும்’ என்ற எண்ணமும், அவனும் அந்த வருடத்தோடு பள்ளியை விட்டு விலகுவது என்ற முடிவிலும் இருந்தான். காரணம் அவனைவிட பெரிய வகுப்பு பையன்களைக்கூட அவன் அடித்துவிடுவது, அவனால், தினம் பள்ளியில் ஏதேனும் பிரச்சனை. பள்ளிக்கு வெளியே நெறி பிறழ்ந்த நபர்களுடனான அவனது தொடர்பும் அவனை அந்நிலைக்குக் கொண்டு வந்திருந்தது. அவன் வகுப்பிற்கும் எனக்கும் எந்தத்தொடர்பும் இல்லாத நிலையில் அவன் நடவடிக்கைகளைக் கவனித்த எனக்கு அவனாக யாரிடமும் வம்புக்குச் செல்லாததும்

அவனை சீண்டுபவர்களிடம் மட்டும் வரம்பிற்கு மீறி, மூர்க்கத்தனம் காட்டுவதும் புரிந்தது. பின்னர் என் தலைமையாசிரியரிடம் பேசி ‘அவனுக்கு நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் அவன் என்ன தவறு செய்தாலும் அவை அனைத்தையும் நானே அவனிடம் கேட்கிறேன். பிற ஆசிரியர்கள் அவனைக் கண்டிக்க வேண்டாம்’ எனக்கேட்டுக் கொண்டேன். அதற்கு என் தலைமையாசிரியரும் அனுமதியும் ஒத்துழைப்பும் வழங்கினார்.

பின்னர், நான் அவனிடம் தனிப்பட்ட முறையில் நெருங்கிப் பழகினேன். அவனுக்கு என் மீது நம்பிக்கை ஏற்படும்படி நடந்து கொண்டேன். சில சமயம் அவன் மீது வந்த புகார்களைக்கூட ‘அவன் மீது தவறில்லை, எதிராளி மீது தான் தவறு இருக்கிறது’ எனக்கூறினேன். அவன் மீது புகார் தெரிவித்தவர்களிடம் தனியாகச்சென்று ‘அவன் மீது தவறிருந்தும் அவனை நல்வழிப்படுத்த வேண்டியே அவ்வாறு கூறினேன்’ எனப் புரியவைத்து ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொண்டேன்.

பின்னர் அவன் என்னிடம் கொஞ்சம் கொஞ் சமாகப் பேச ஆரம்பித்தான். அவன் தாத்தா பாட்டியிடம் வளர்கிறான். தாய், தந்தையைப் பிரிந்து வேறுவொருவரை திருமணம் செய்து கொண்டார். அவனுக்கு அப்பாவைப் பிடிக்கும். அம்மா மீது வெறுப்பு அவனுடைய அம்மா பொருட்டுச் சமூகத்தில் அவன் சந்தித்த கேளிப்பேச்சுகள் அவனை முரடனாக அனைவரின் மீதும் வெறுப்பை உமிழ்பவனாக மாற்றி இருந்ததை அறிந்தேன். பிறகு அவனது அம்மாவைப் பள்ளிக்கு அழைத்த போது, ‘அவன் மீது அவ்வளவு பாசம். என்னுடன் வர மறுக்கிறான். என்னுடன் வந்தால் நான் அவனை ராஜா மாதிரி வைத்திருப்பேன்’ என அழுதார். பின்னர் அவன் அம்மா தரப்பு நியாயத்தை அவனிடம் கூற வைத்தேன். தலைமையாசிரியரின் மகள் பயிற்சி மருத்துவராக இருந்ததால் என் தலைமையாசிரியரின் வழிகாட்டுதல் படியும் அறிவுரையின் படியும் என் தலைமையாசிரியரின் மகள் உதவியோடு அம்மாணவனை மனநல மருத்துவரிடம் ஆலோசனைகள் வழங்கப்பட்டது. அம்மாணவனின் நடத்தையில் மாற்றம் ஏற்படத் துவங்கியது. ‘எட்டாம் வகுப்பைத் தாண்டவே மாட்டான். பள்ளிப்படிப்பைத் தொடர மாட்டான்’ எனக் கணிக்கப்பட்ட மாணவன் தற்போது பத்தாம் வகுப்பை ஓரளவு நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சி அடைந்து சென்று விட்டான். ஆனால், பத்தாம் வகுப்பில் இடையில் அவனது நடத்தையில் சில விரும்பத்தகாத நடத்தைகள் தென்படத்துவங்கியது. ஒன்பதாம் வகுப்போடு அவனுக்கும் எனக்குமான உறவில் தடை ஏற்பட்டது. பத்தாம் வகுப்பில் சென்றவுடன் மாணவர்கள் தனித்தீவாக ஆக்கப்படுகிறார்களோ, அவர்களுடைய பாடங்கள் அவர்களுக்குப் பாடம் நடத்தும் ஆசிரியர்கள் என அவர்கள் உலகம் சுருங்கிவிடுகிறதோ என்ற அச்சம் கலந்த சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது.

## 2.பதின்பருவ சிக்கல்களை அணுகுதல்

வேறு ஒரு நிகழ்வில் சந்தர்ப்பத்தில் ஒன்பதாம் வகுப்பில் குறிப்பிட்ட ஒரு மாணவனும் மாணவியும் ‘பள்ளி தொடங்கும் நேரத்திற்கு வெகு முன்பாகவே (8.30 க்கு) பள்ளிக்கு வந்து விடுகிறார்கள். அவர்கள் உட்காரும் பலகைகளின் மறைவில் உட்கார்ந்து கொண்டு சிலவற்றைச் செய்கிறார்கள்’ என ஒரு சில மாணவிகள் பயத்தோடும் தயக்கத்தோடும் என்னிடம் கூறினார்கள். அவர்கள் அவ்வாறு கூறியது எனக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. சமூகத்தில் ஏற்படும் தாக்கம், சினிமா, தொலைக்காட்சி, சமூக ஊடகங்களும் சமூகப்பின்னனியும் பள்ளிச்சூழலில் இது போன்ற தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளாக அமைந்துவிடுகின்றன. இந்த நிலையில் இச்சூழலை எவ்வாறு கையாள்வது என எனக்குச் சிறு தடுமாற்றம் ஏற்பட்டது. பின்னர் ஒருவாரமாக யோசித்து ஒரு Life Oriented Education வகுப்பு வேளையில் வெள்ளைத்தாள்களுடன் குறிப்பிட்ட வகுப்பிற்குச் சென்றேன். அனைவருக்கும் ஒரு தாளினைக் கொடுத்து இதில் யாரும் உங்களுடைய பெயரைக் குறிப்பிட வேண்டாம். நமது பள்ளியில் உங்களுக்குப் பிடித்தவை, பிடிக்காதவை, வகுப்பில் பிடித்தவை, பிடிக்காதவை, உங்களுக்குப் பிடித்த ஆசிரியர் ஆசிரியை அதற்கான காரணம், உங்களுக்குப் பிடிக்காத ஆசிரியர் ஆசிரியை அதற்கான காரணம் என எழுதுங்கள் எனக்கூறினேன்.

**'அவனுக்கு நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் அவன் என்ன தவறு செய்தாலும் அவை அனைத்தையும் நானே அவனிடம் கேட்கிறேன். பிற ஆசிரியர்கள் அவனைக் கண்டிக்க வேண்டாம்' எனக்கேட்டுக் கொண்டேன். அதற்கு என் தலைமையாசிரியரும் அனுமதியும் ஒத்துழைப்பும் வழங்கினார்.**




ஏறத்தாழ 35 மாணவ - மாணவியர் படித்த அந்த வகுப்பில் பாதிக்கும் மேற்பட்டோர் இந்த நிகழ்வைக் குறிப்பிட்ட மாணவ - மாணவியின் பெயரைக் குறிப்பிட்டு நேரடியாகவும் , வேறு சிலர் வகுப்பில் சில விரும்பத்தகாத செயல்கள் நடக்கிறது அது பற்றிப் பேச எனக்கு விருப்பம் இல்லை என மறைமுகமாகவும் குறிப்பிட்டிருந்தனர். இப்படியொரு நிகழ்வைப் பற்றிக் கூட்டமாகப் பேசி அந்நிகழ்வைப் பற்றி தெரியாத மாணவர்களும் தெரிந்து கொள்ளுதல் அல்லது வேறுவிதமான எதிர்வினைகளை உருவாக்குவதைக் காட்டிலும் நான் செய்தமுறையே சரி என எனக்குத் தோன்றியது. பின்னர் அந்த வகுப்பில் இவ்வாறு நடந்தது குறித்தும் மாணவர்கள் எழுதிக்தந்தது குறித்தும் அந்த வகுப்பின் வகுப்பாசிரியரிடம் கலந்து ஆலோசித்தேன். 'என் வகுப்பில் இவ்வாறு நடக்க வாய்ப்பே இல்லை' என மறுத்தார்.மேலும், நான் அச்சம்பவத்தில் குறிப்பிட்ட மாணவன் முதல் மதிப்பெண் எடுக்கும் மாணவன் மிக நல்லவன் எனக்குறிப்பிட்டார். பின்னர் மாணவர்கள் எழுதியதை அவரிடம் காண்பித்தேன்.

பின்னர், அதனைத் தலைமையாசிரியரின் கவனத்திற்குக் கொண்டு சென்றேன். இது மிகவும் உணர்வுப்பூர்வமான நிகழ்வு. 'பதின் பருவத்து மாணவர்கள் குறித்த இப்பிரச்சனையை மிகுந்த எச்சரிக்கையுடன் கையாள வேண்டும்' என அறிவுரை வழங்கினார். தொடர்ந்து 'முதலில் நான் அந்த மாணவர்களிடம் தனித்தனியாகப் பேசுகிறான் சார். நீங்கள் எனக்கு உறுதுணையாக இருங்கள்' எனக்கேட்டுக் கொண்டேன். 'இந்தப் பிரச்சனைக் குறித்து எல்லோருக்கும் தெரிந்துவிட்டால் சம்மந்தப்பட்ட மாணவ மாணவியர் சங்கடமாக உணர்வார்கள். அது எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்திவிடும். இந்த மாணவர்களின் பெற்றோர்களிடம் இது குறித்துப் பேசலாம்' என அறிவுரை வழங்கினார். அதன்படி முதலில் அந்த மாணவனிடம் இது குறித்து கேட்டபொழுது எடுத்த எடுப்பிலேயே ஒப்புக்கொண்டான். 'நான் தவறு செய்துவிட்டேன் இனிமேல் ஒழுங்காக இருக்கிறேன். இது குறித்து என் பெற்றோரிடமோ தலைமையாசிரியரிடமோ கூறவேண்டாம். என் மீது மதிப்பு வைத்திருக்கிறார்கள், அது கெட்டுவிடும்' என அழுதான். அந்த நிகழ்விற்கு முன் நான் அந்த மாணவனைப் பெயரிட்டு அழைத்து நன்றாகப் பேசும் உறவு வைத்திருந்தேன். இந்த நிகழ்வின் பிறகு அவன் என்னிடம் 'மீண்டும் நீங்க என் கிட்ட பழைய படி நல்லா பேசுவீங்களா சார்' எனத் திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டிருந்தான். 'நீ இனிமேல் ஒழுங்காக இருந்தால் நன்றாகப் பேசுவேன்' என உறுதியளித்தேன். அவன் அன்பு என்னையும் கட்டிப்போட்டது. அவன் பழையபடி படிப்பில் கவனம் செலுத்தத் தொடங்கினான்.

உடனடியாக எளிதாக மாணவர்களிடம் பேசமுடிந்த என்னால் குறிப்பிட்ட மாணவியிடம் இது குறித்து பேசத்தயக்கம் இருந்துகொண்டே இருந்தது. பெண் ஆசிரியைகளே இது குறித்து தயக்கம் காட்டினர். நாம் தலையிட்டு ஏதேனும் எதிர்மறையாக நிகழ்ந்து விட்டால் என்ன செய்வதென்ற நியாயமான தயக்கமாகவே அது எனக்குப்பட்டது. பின்னர் இரண்டு பெண் ஆசிரியர்களைச் சற்று தொலைவில் ஏதேனும் பேசிக்கொள்வது போல் நின்று கொண்டிருங்கள் என அவர்களிடம் நான் கூறிவிட்டு அதே, வராண்டாவில் அந்த மாணவியை அழைத்து மற்றவர்கள் காதில் விழாத அளவு சத்தத்தில் அந்த மாணவியிடம் இது குறித்துக் கேட்டேன். அந்த மாணவி ஆற்றிய எதிர்வினை எனக்குப்

பெரும் அதிர்ச்சியினை அளித்தது. அந்த மாணவி என்னிடம் கேட்ட கேள்வி “மற்றவர்கள் சொல்கிறார்கள் என்பதை வைத்துக்கொண்டு என்னிடம் எப்படி நீங்கள் இந்தக் கேள்விகள் கேட்கலாம். நான் ஏதும் தவறு செய்யவில்லை” என வாதிட்டார். அதில் பொய் இருப்பதை நான் உணர்ந்தாலும் அவருடைய பதில் எனக்கு பயத்தைக் கொடுத்தது. “சரிம்மா, நீ சொல்றதை நான் நம்புறேன். இப்படி ஒரு பேச்சு வந்தது. உன் நன்மைக்காக உன்னிடம் நேரடியாகக் கேட்டு விட்டால் நல்லது என எனக்குத் தோன்றியது. நீ சொல்வது போல் தவறேதும் செய்யாமல் இருந்தால் மகிழ்ச்சி தான்” என்று கூறி அனுப்பி வைத்தேன். மறுநாள் அந்த மாணவி பள்ளிக்கு வராதது எனக்கு உயிர் பயத்தைக் கொடுத்தது. ஏதேனும் விபரீதம் நடந்திருக்குமோ என என் மனம் குழம்பிப் போனது. பதினோரு மணியளவில் தலைமையாசிரியர் அழைப்பதாக எனக்கு அழைப்பு வந்தது. பயந்து தலைமையாசிரியர் அறையை நோக்கிச் சென்றதும் அங்கே அந்த மாணவி, அவரின் அம்மா, அவரின் மாமா ஆகியோர் இருந்தனர். மாணவியின் அம்மா யாரோ ஒரு ஆசிரியர் தன் பெண்ணைப் பற்றி தவறாகக் கூறியதாகவும் அதை விசாரிக்க வந்ததாகவும் கூறினார். ஒரு முறை அந்த மாணவி வீட்டிற்குச் செல்ல உதவிய வகையில் அவரின் அம்மாவிற்கு நான் அறிமுகம் ஆகியிருந்ததால், “நான் தான் அந்த குறை சொன்ன ஆசிரியர்” என தைரியமாகக் கூறினேன். பின்னர் அந்த மாணவியை வெளியே அனுப்பிவிட்டு நடந்தவற்றைக் கூறினேன். முதலில் அவர் நம்பாதது போல் மறுத்து பின்னர் மாணவர்கள் எழுதியவற்றை அவரிடம் காண்பித்து “உங்கள் மகள் மீது குறை கூற எங்களுக்கு எந்த உள்நோக்கமும் இல்லை எங்கள் கவனத்திற்கு வந்த செய்தியை உங்களிடம் தெரிவிக்கிறோம். எங்களோட வேலை அது தான்” எனக்கூறினோம். அதுவரை அமைதியாக இருந்த அவருடைய மாமா இதேபோன்ற ஒரு பிரச்சனை வந்ததால் தான் சென்ற கல்வியாண்டு இடையிலேயே பள்ளியை மாற்றி இந்தப்பள்ளியில் சேர்த்தோம். இங்கேயும் இதே பிரச்சனை மாற்றுச்சான்றிதழ் கொடுத்து விடுங்கள் பெண்கள் மட்டுமே பயிலும் பள்ளியில் சேர்த்து விடுகிறோம் எனக்கூறி மாற்றுச்சான்றிதழ் பெற்று, சென்று விட்டனர். பின்னர், அருகில் உள்ள பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அம்மாணவி சேர்ந்து விட்டதை அப்பள்ளியிள் துணைமுதல்வர் மூலம் எங்கள் பள்ளி தலைமையாசிரியர் உறுதி செய்து கொண்டர்.

## முடிவுரை:

ஆசிரியராக நாம் இது போன்ற பிரச்சனைகள் அல்லது நிகழ்வுகளில் அவ்வப்பொழுது ஈடுபட வேண்டியுள்ளது. மாணவர்கள் மீது அக்கரைப்படும் பொழுது தவிர்க்க முடியாததாகவும் ஆகிவிடுகிறது. ஆசிரியர் பாடம் நடத்துவதைக் கடந்து இது போன்ற பிரச்சனைகளில் தலையிடுவது பற்றி பொதுவான புரிதல், நிலைப்பாடு, வரையறை என்று எதுவும் கல்வித்துறையால் வழங்கப்படவில்லை. கல்வித் துறையின் வழிகாட்டுதல் இருக்கும் பொழுது அவற்றை பின்பற்றுவது சுலபமாக இருக்கும். அது மட்டுமல்ல ஆசிரியர் அதில் ஈடுபட வேண்டும் என்ற கட்டாயம் இருக்கும். அப்பொழுது மாணவர்கள் நெறிப்படுத்துதல் முறைமைக்குள் வர வாய்ப்புள்ளது.



**செந்தில்குமார்**
தொ.ப.ஆ
அரசு உயர்நிலைப்பள்ளி,
கணுவாபேட்.

# Working as a School Community—Summary of Panel Discussion

A school is not only an integral part of the community, but it is also a community. As a result, there is a need for the school to work along with the community and work as a community. This involves different modes of engagements. Hence, this session on 'Working as a School community' aimed at highlighting the different process involved in the functioning of schools holds importance.

There were presentations on various facets of the school community: collaborating with community members for organizing regular school-level events, helping students claim insurance during an emergency, providing support to first-generation learners hailing from the gypsy community, involving parents and neighborhood community in students' learning, teaching in Tamil medium, working of voluntary teacher groups on developing educational resources, and highlighting the role of the School Management Committee in the school's overall development. The presentations initiated discussions on the different roles a community can play in students' learning and in the process of school development. The importance of working collaboratively within the school, among the teachers and staffs in school, and with the communities was stressed upon in these presentations. Further, the positive influence these can have in students' learning and in the functioning of schools was also highlighted.

The panel discussion was moderated by J. Krishnamoorthy, Palli Kalvi Pathukappu Iyakkam and Thennavan, Panchayat Union Primary school, Othakadai, Madurai district. The discussion was initiated with the clarifications to questions that arose regarding the presentations. Given below is a summary of the discussions that took place.

**Mediclaim procedures:** The Mediclaim facility is available for students, and it can be availed irrespective of the place where the accident or the injury takes place (i.e., within the city or in other cities). In case of an accident or injury, the students need to be taken to a government hospital for an initial report, and, then, they can be admitted to a government or a private hospital as the situation demands. The bills are to be maintained properly. For claims within Rs. 5000, teachers can approach the Samagra Siksha team. Approval letters need to be submitted to the DIS office.

**Education in Tamil medium:** Many researches have proven that students are able to connect many things easily and their thinking ability improves when they are taught in their mother tongue. In the United States, the school management and teachers insist parents to often converse in their mother tongue in their homes with their children, keeping in mind that English teaching will be taken care of in school. The students undergoing Tamil medium education are not left out of English knowledge, they learn English as a language subject. In fact, many students from Thai Tamil palli, where Tamil is the medium of instruction, have gone to other states for the purpose of higher education and jobs. Hence the medium of education does not restrict students. The current director of education spoke in Tamil in a function and encouraged to teach in Tamil in classrooms most of the times.

**Sirpigal group and their work:** Teachers from this group shared the details of some of their work in their

presentation. They had created a video of Savitribai Phule's story and conducted a Memorial Day for Savitribai Phule. Apart from that, they had also made an animation video for an English lesson titled 'Giving tree'. They also conducted a workshop on crafts in the schools and an audio narration of Vikramathithan's stories. Also 'puthagam pesuthu' event was organized in the school, where students would sing the song 'puthagam pesuthu' and discuss about it in the school assembly. (J. Krishnamurthy presented a book to the teachers of the group.)



**School Development**: The School Management Committee (SMC) is to be used effectively as it is the last weapon to save government schools from degradation. If something is good for the school, and the SMC approves it, we can proceed with that. The SMC is so powerful that even the Courts cannot question it. But, sometimes there are chances of facing oppositions or roadblocks from the public, and some of the opposition might even be in the form of legal memos. However, somehow, teachers who do good work always get support for the legal systems. Thennavan shared his experience with a court case, in which the judge had stated "Thennavan is doing good and don't disturb him", and, later, the judge had helped the school in different ways. The school used to be littered with alcohol bottles and food waste. There were instances of theft of school belongings and even damage of the school's water tank during weekends. After this issue was discussed in the SMC, volunteers from the Stainless Steel Vessels' Manufacturers Association had started to stay in the school premises at night and on weekends, after which the incidents started to reduce. Thennavan added that although he has legal memos against his name, the decisions by SMCs, their co-ordination and their show of positive progress in schools will support his case. Other teachers also shared the positive developments in their schools that were achieved with coordination from the SMC.

**Students' attendance:** Just like teachers, students also have the right to take leaves. The students need to be motivated, but not compelled, to attend schools. There have been some instances when students did not take leaves even when they were asked to do so by their parents. We have to understand that students should be present both physically and mentally in the classrooms. We also need to think and reflect on the expectation of making students have 100% attendance. We should develop the attitude among students; that is, students should take leave only when it is needed. However, it is the students who should decide on what they would like to do. And, we should also allow students to take leaves since students can learn even from doing housework, attending festivals, doing farm work, and other things.

After the presentations, the participants shared their experiences on the session, which are as follows:

- Senthil, Stainer School, Bangalore said, "The learning from this session was rich and immense. The amount of work done in government schools in Puducherry is impressive, and the Azim Premji Foundation should expand its wings to other places in need."

- Saraswati, Pachaiyappan Special School, said, "Thanks for inviting and allowing me to share about our school. My view on education has been changing slowly, and I am implementing the learnings wherever I can. Personally, I would also request the foundation to help our special school in whatever way it can."

- J. Krishnamoorthy said, "There is no failure for aims. Good aims always move forward. So, keep on with your good work. Two suggestions for the Azim Premji foundation are 'School of drama' and 'Children publications'. I would like to see these initiatives being started by Azim Premji Foundation. All of us shared our experiences with an elated spirit. The most difficult thing is to sustain such a spirit. So, let us all stay as burning match sticks till we meet next year in such a forum."

Below are some of the feedback from teachers.

- "The motive of this session was to present teachers' experience. But apart from sharing our experiences, we also engaged in learning. The work done by Thennavan is impressive. This kind of work will change the face of government schools."

- "The Pirumbu vathiyar drama was a realization. We still use sticks to threaten students to make them silent. But, now, I strongly feel that sticks shouldn't be there in the class at all."

- "Here, learning is more important than sharing our experiences. And, many of us came with that kind of expectation that learnings from here will help us in our profession and practices. This session has satisfied our expectations. It has shown us the paths we can take towards moving in the positive direction."

The session concluded with Head Teacher Malliga singing Pattukottai Kalyanasundranar's song "Ellarum ellamum pera vendum…".

---

**Team Thisaimaani**



# HOW DO CHILDREN PERCEIVE NATURE AT DIFFERENT AGES?

We would like to share our experiences and joy of being in and learning from nature. A sentence from the book *Where the Wild Things Are* by Maurice Sendak, comes to mind – 'a forest grew and grew . . . and became the world all around.' Nature is the world all around for children. It's all encompassing. It's everywhere.

Little children love to be outdoors; they need to be out and about. It orients them, grounds them, teaches them relationships, connections, the scale of things and offers a rich sensory feedback.

Children perceive nature from the ground up, because the ground is that much closer to them – or they are to the ground – that's their most immediate influence. The picture of a toddler comes to mind, crouching on the ground for endless moments, intensely following an ant or inspecting a dry leaf. Thus, their perception goes from the totality of impressions, through all the senses, to focusing on a single tiny object in a seemingly effortless manner.

It's noted that the first sense humans develop is that of touch; in many ways, it is the sense that governs one's experience of nature – touching the soil, picking rocks, playing in the sand, feeling the wind and sun on one's face, sensing the wetness of water. Of course, the senses of smell and taste follow closely and are very strong, which explains children's irresistible urge to put things in their mouth – an exploration in its own right. However, this is not to say that children don't perceive nature through their sight and hearing. Nevertheless, we believe that the way they perceive through touch is broader than that. These senses are used more equally and collectively than in the case of older people.

As children grow and learn to move about more efficiently – from being immobile to crawling, sitting, standing, walking, jumping, running and climbing – their perception of nature broadens. They are able to explore further, with nature providing the playground wherein they can practice and develop all their new moves. The sense of where your body is in space, referred to as proprioception, is then often at the centre of a child's perception of nature.

Aged five to seven, they start to become more conscious of the difference between themselves as 'humans' and the other elements of nature. They move from a purely sensory mode of interaction to a curious inquiring mode, which we note in the way they begin to make and articulate detailed observations at this age. They look for patterns in

insects, ask questions about birds and hold a vast amount of curiosity about any element that interests them. At this age, it is critical for an educator [whether in school or at home] to hone this curiosity without stifling the spontaneity of the child. The capacity and ability of children to engage with new experiences and derive meaning from them is phenomenal at this age, and nature offers unlimited opportunities to utilise this capacity. For instance, when we visit a forest with children, every one of its aspects fascinates them. They have to deal with different textures, thorns, sludges, dry leaves and the like. They must understand different concepts such as camouflage, diversity, temperature and so on. As with the young ones of any species in a forest, they experience something new each moment and try to understand it. And, just like all young creatures, they learn a lot by observing the behaviour of the adults around them. All young creatures know that they must be alert, and their parents teach them to be silent when faced with something new, i.e., to assess a situation carefully before acting.

Children are naturally alert. Thus, they are able to observe things in detail. In their excitement and curiosity, they rush to explore more; for instance, reaching out to touch any plant or animal that



*Lunar Moth*

excites them, plucking flowers, exploring birds' nests, chasing after a snake and so on. At the same time, children are aware of the fact that they share this space with the other beings in their environment. This provides an opportunity for educators to explain the need for silent observation and respecting all creatures as well as the spaces we share.

At this age, the role of educators is crucial to help children grow into caring empathetic students of nature, without curbing their enthusiasm or spontaneity. By doing so, we can harness their natural curiosity and extend observation into study by encouraging attention to detail. For example, a six-year-old engaged in studying ants noticed how they were moving homes and taking food from one point to another, which made the child guess that the ants were doing so because it was about to rain. Another child studied a praying mantis and came back to class, marvelling at how different it looked from the pictures she had seen. When presented with a 'formal' book with real diagrams [ostensibly meant for older children], she was satisfied. This example also reminds us that children don't need to be spoken down to when engaged in study born out of their own curiosity; they learn to derive meaning from whichever material is handed to them. Therefore, we need to be responsible and provide them with accurate and sensible resources.

In the age group eight to ten, this engagement with nature develops further, aided by the greater understanding of the world that children start to develop. They realise that they are part of a food chain, and their experiences of nature are altered by this realisation. They also start to consider the concept of interdependence among species. By observing a farm ecosystem, pond, or forest, they can develop food webs, which help them understand these dependencies in terms of the intricate relationships between the producer, consumer and decomposer. At this age, we see that they are able to draw connections on their own. They can infer and interpret their observations and engage in a higher degree of questioning. For instance,



*We often ask children to be careful of the common krait*

while observing a pond ecosystem, their questions are not limited to purely what they see; they start to envision hypothetical situations as well – what will happen when this pond dries up? How does life return when it rains and the pond fills up once again?

Aged 10–12, children start to formalise their knowledge. The study of ecosystems, and the further realisation that some beings are ecosystems unto themselves [a fig tree supporting hundreds of species], prompts the first concrete understanding and appreciation of concepts such as adaptation, reproduction, migration, ecological niche, among others.

Furthermore, they can engage with classification, categorisation and taxonomy at their own level, i.e., as per their own understanding and observation. For instance, a ten-year-old can be given a group of assorted seeds and asked to categorise them. Their categorisation may not match a formal framework, and each child may have a different approach, but it does have an internal logic based on their experiences.

At around 12 or 13 years, their engagement with nature starts to take on a more 'adult' form. Developing from the aforementioned characteristics, they also start to clearly see human participation in the environment as different and more damaging than that of the other creatures in nature. At this stage, children are ready to comprehend the concept of evolution and begin to perceive our destructive interaction with nature.



**Children are naturally alert. Thus, they are able to observe things in detail. The role of educators is crucial to help children grow into caring empathetic students of nature, without curbing their enthusiasm or spontaneity.**

This kind of an understanding leads to a more personal relationship with nature – one that features empathy and responsibility as much as excitement and curiosity. Moreover, it takes several forms, such as the relationships with pets and houseplants for urban children, and many more aspects for children living closer to nature. Even the simple facts of one's surroundings that have always been considered 'normal' start to take on a greater significance. The cockroaches, lizards and ants that have habitually lived in our houses are no longer just creatures that we share our space with; they are now a part of our own local ecosystem. Further, there is an understanding of privilege and the gravity of being a part of this system – an aspect that has been experienced in the past with less intensity as well as less conscious thought.

Another aspect of this same growth is that sensorial experiences begin to be perceived differently; it goes a level deeper, affecting one at an emotional level. A person's enjoyment of a phenomenon, for instance, can decrease with participation. We observe that younger children's experience

of rain may be joyful because they love to play in the rain, whereas an older child can look at the falling rain, see other children playing in it and enjoy these aspects internally, while understanding the significance of the life support that rain provides. Moreover, children start to express their connection with nature in the form of poetry, and the said connection deepens, since the child is fully ready to understand the concept of ecology and nature conservation.

This process is continuous, and it requires support and encouragement from children's parents or guardians. This support can take many forms and, at its core, needs to manifest itself in the form of sharing a child's excitement; parents needs to be participants in this journey, not merely observers. When children come up with certain observations, their parents should express interest and ask questions that further their child's interest. It is important that parents provide as much access to nature and animals as possible, regardless of the context. Even urban parents have plenty of opportunities to do so; for example, walks in parks and visits to nearby water bodies. If possible, families should try to adopt a pet, as it is a wonderful learning experience. However, even if that is not possible, one should introduce children



*We find them on rocks often sticking their necks out*

to books and videos about animals, take walks with and feed stray dogs as well as observe animals within their homes. These observations could be backed up with some basic equipment [a small magnifying glass, a diary to note or sketch observations, paper cuttings, etc.] as well as a space they can call their own – where they can keep their 'collections' and so on. Small actions such as having a bird feeder and a few plants around the house go a long way in providing a child with materials to learn from and engage with. Moreover, these are all excellent ways to foster ideas of nature conservation and the development of respect and empathy for nature. We can learn more by observing small insects and other creatures instead of killing them for no reason.

In his book *Sapiens*, Yuval Noah Harari writes, 'The most important thing to know about prehistoric humans is that they were insignificant animals with no more impact on their environment than gorillas, fireflies or jellyfish.'

Keeping the natural fascination of children alive is the most important task. It is a wonderful journey for every child to engage with nature, and when supported by the people around them, it has the potential to result in some of the most meaningful relationships in their lives.

**LEELA ARNON & POORNIMA ARUN**
MARUDAM, TIRUVANNAMALAI

# பள்ளியின் முன்னேற்றத்தில் சமூகத்தின் பங்கு

## பள்ளியைப் பற்றி

எங்கள் பள்ளியில் 180 மாணவ-மாணவியர்கள் பயில்கின்றனர். ஒன்பது ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். எங்கள் பள்ளி மிகவும் குறுகிய வாடகை கட்டிடத்தில் இயங்குகிறது. மாணவர்கள் விளையாட விளையாட்டுத் திடல் இல்லை. எங்கள் பள்ளியில் பெரும்பாலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய முஸ்லீம் மாணவர்கள் பயில்கின்றனர். பெற்றோர்களை மாணவர்களின் கற்றல் திறனிலும் கல்விச் செயல்பாடுகளிலும் ஈடுபடுத்துவது என்பது சவாலாக இருந்தது.

## பள்ளி மற்றும் கற்பித்தல் குறித்த கண்ணோட்டம்

மாணவர்கள் மகிழ்ச்சியாக தாங்களாகவே கற்கும் சூழலை ஏற்படுத்த வேண்டும். பள்ளி என்பது பாடத்தை மட்டும் போதிக்காமல் மாணவர்களிடம் ஒழுக்கத்தையும் நற்பண்புகளையும் அவர்கள் விரும்பும் வண்ணம் அனைத்து விதமான திறமைகளையும் வளர்க்கும் இடமாக இருக்க வேண்டும்.

## கடந்த ஆண்டு பள்ளியில் முயற்சிகள்

நோக்கம் : பள்ளிச் செயல்பாடுகளில் பெற்றோர்களை ஈடுபடுத்தி பள்ளியையும் மாணவர்கள் கற்றல் திறனையும் மேம்படுத்துதல். இதன் மூலம் பள்ளியில் மேற்கொள்ளப்படும் கற்றல் மற்றும் இதர செயல்பாடுகளிலும் ஒத்துழைப்பு கோருதல். மாணவர்களின் சேர்க்கையும் அதிகரிக்கச் செய்தல்.

சென்ற கல்வி ஆண்டில் 134 மாணவர்கள் படித்த எங்கள் பள்ளியில் இவ்வருடம் 180 மாணவர்கள் படித்தனர். ஜூன் 2ஆம் நாள் பள்ளி தொடங்கி, முதல் நாள் புதுவகுப்பு புகுவிழா. அன்று திரளான பெற்றோர்கள் கலந்து கொண்டனர். பள்ளியில் புதிதாகச் சேர்ந்த மாணவர்களுக்கு இனிப்புகள் மற்றும் பூக்கள் கொடுத்து வரவேற்பு அளிக்கப்பட்டது. பள்ளியில் மாணவர்கள் சேர்க்கை பற்றியும் பள்ளிச் செயல்பாடு பற்றியும் கலந்துரையாடப்பட்டது. மேலும் பெற்றோர்கள் பள்ளி அருகாமையில் இருப்பதாலும் இலவச ஆங்கில கல்வியாலும் இப்பள்ளியைத் தேர்ந்தெடுத்தாகக் கூறினர்.

## 1. பெற்றோர் ஆசிரியர் கூட்டம்

ஆசிரியர்கள் தனித்தனியாக பெற்றோர்களை வரவழைத்து, பள்ளி செயல்பாடுகள், விழாக்கள் பற்றி கூறி அவர்களைப் பள்ளியில் ஆர்வம் கொள்ள வைத்தனர். ஒவ்வொரு மாதமும் பெற்றோர்- ஆசிரியர் கூட்டம் நடைபெற்றாலும் அனைத்து பெற்றோர்களையும் ஒவ்வொரு



பருவத்திற்கும் ஒரு முறை வரவழைத்து அவர்களின் குழந்தைகள் நிலை பற்றியும் பள்ளியில் செயல்படுத்தப் போகும் திட்டங்கள் பற்றியும் பகிரப்படும். இவை தொடர்பான அவர்களின் கருத்துகளையும் கேட்டு அறிந்து கொண்டோம். பள்ளிக்கு நிற்காமல் வரும் மாணவர்களின் பெற்றோர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும் என்றும் முடிவு செய்தோம். இதனால் மாணவர்கள் விடுப்பின்றி பள்ளிக்கு வருதல் அதிகரித்தது. சில பெற்றோர்கள் வரப் போகும் நிகழ்ச்சிகளுக்கு முன்னரே மாணவர்களைத் தயார்படுத்துவதும் பொருட்கள் வாங்குவதும் என்று ஆர்வமாக ஈடுபட்டனர். மேலும் பெற்றோர்கள் பலர் தங்கள் குழந்தைகளின் கற்றலிலும் ஆர்வம் செலுத்தி வீட்டிலும் அவர்களைக் கண்காணித்தனர்.

## 2. அறிவியல் கண்காட்சி

எங்கள் பள்ளியில் ஆகஸ்ட் மாதத்தில் அறிவியல் கண்காட்சி நடத்தினோம், பெற்றோர்கள் அறிவியல் கண்காட்சியில் கலந்து கொண்டு மாணவர்களின் அறிவியல் மனப்பான்மையையும் கற்றல் திறனையும் அறிந்து கொண்டு மாணவர்களின் செயல்பாடுகளையும் பாராட்டினர்.

## 3. தூய்மை இந்தியா இருவார விழா

பெற்றோர்கள் தானே முன்வந்து பள்ளியைச் சுத்தம் செய்தல், மரம் நடுதல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டும் துடைப்பம், சோப்பு, கழிவறைப் பொருட்கள், போன்றவற்றை வாங்கியும் கொடுத்தனர். மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தனித்தனியாக ‘தூய்மை இந்தியா’ என்ற தலைப்பில் ஓவியப் போட்டி நடைபெற்றது. மாணவர்களுக்கும் பெற்றோர்-ஆசிரியர் கழகத் தலைவரே பரிசுகளை வாங்கிக் கொடுத்து ஊக்குவித்தார். மேலும் சிறப்பாகச் செயல்பட்ட பெற்றோர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் பெற்றோர்கள் தூய்மையைப் பற்றியும் பள்ளியில் நடைபெறும் விழாக்களைப் பற்றியும் அறிந்துக் கொண்டனர்.

## 4. பாஷா சங்கம்

இந்திய மொழிகள் விழாவிற்காக நவம்பர் 22 முதல் திசம்பர் 21 வரை தினமும் ஒரு இந்திய மாநிலத்திற்குரிய ஆடையை அணிந்து மாணவர்கள் அந்தந்த மொழியைப் பேசினர். ஆசிரியர்கள் மொழிகளை மாணவர்களுக்குக் கற்பித்தனர். சில மொழிகளைப் (உருது, ஹிந்தி, மலையாளம், தெலுங்கு) பெற்றோர்கள் பள்ளிக்கு வந்து மாணவர்களுக்குக் கற்பித்தனர்.



சில மாணவர்கள் தங்கள் பெற்றோர்களுக்கும் மொழிகளைக் கற்பித்தனர். இவ்வாறு பெற்றோர்கள் இந்திய மொழிகளையும் மாணவர்களின் கற்றல் திறனையும் அறிந்தனர்.

## 5. ஆண்டுவிழா

அனைத்து மாணவர்களின் பெற்றோர்களும் கலந்துகொண்ட ஆண்டுவிழாவில் விளையாட்டு, கற்றல் மற்றும் ஒழுக்கத்தில் சிறப்பாக செயல்பட்ட மாணவர்களுக்கும் விடுப்பு எடுக்காமல் வந்த மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் பரிசுகள் வழங்கி கவுரவித்தோம். இந்த பரிசுகள் மாணவர்களை ஊக்குவிப்பதாகவும் அவர்களுக்குப் பயனுள்ள தாகவும் அமைந்தது. மேலும், அடுத்த ஆண்டு பள்ளியில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்பாடுகள் குறித்தும் சிலர் பேசினர்.

## விளைந்த நன்மைகள்

- மாணவர் எண்ணிக்கை உயர்ந்தது. கிட்டத்தட்ட 40 மாணவர்கள் தனியார் பள்ளியில் இருந்து

வந்தனர்.

- ஒரு சமூக அமைப்பு, பள்ளியில் இடிந்த பெண்கள் கழிவறையை ரூ. 40,000/- செலவில் புதுப்பித்தனர்.
- ஆசிரியர்களுக்கான நாற்காலிகள், மழலை மாணவர்களுக்கான நாற்காலிகள், மின்விசிறிகள், வெள்ளைநிற பலகை (கரும்பலகைக்கு மாற்றாக), போன்றவற்றை ரூ.15,000/- செலவில் வாங்கி தந்தனர்.
- பள்ளியின் சுவரில் படம் வரைய வண்ணம் தீட்டித் தந்தனர்.
- ஆசிரியர் தினத்தன்று அவர்களாகவே வந்து அனைத்து ஆசிரியர்களையும் கவுரவித்து பாராட்டி பேசினார்கள்.
- வட்ட அளவில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் எம் பள்ளி மாணவர்கள் பல பரிசுகளை வென்றனர்.
- மாணவர்களின் வருகைப் பதிவு அதிகரித்தது; அவர்களுடைய கற்றல் திறமைகளும் அதிகரித்தன.
- பள்ளிச் செயல்பாடுகளில் தாங்களாகவே முன்வந்து பல வேலைகளைச் செய்தனர். பெற்றோர் ஒருவர் தானாகவே முன்வந்து பள்ளியின் அருகே உள்ள புதர்கள் மண்டிய காலி மனையைத் தூய்மை படுத்திக் கொடுத்தார்.

## எழுந்த சவால்கள்

- பெற்றோர்கள் அடிக்கடி பள்ளிக்கு வந்து பாடம் நடத்தும்பொழுதே மாணவர்களை வீட்டிற்குச் செல்கிறோம் என்றும் ஊருக்குச் செல்கிறோம் என்றும் அழைத்துச் சென்றனர். பாடவேளையின் இடையே அடிக்கடி மாணவர்களை வந்து சந்தித்தனர்.
- இதனைப் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் கலந்துரையாடி மாணவர்களைப் இடை வேளையிலும் பள்ளி முடிந்த பின்பும் சந்திக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. மேலும் மதிய உணவு இடைவேளையில் மழலை குழந்தைகளுக்கு உணவூட்ட விரும்பும் பெற்றோர்களுக்கு, அருகில் தனியாக ஒரு அறை ஒதுக்கியும் தரப்பட்டது.



## பள்ளியைப் பற்றி பெற்றோர்களின் தற்போதைய கண்ணோட்டம்

- வெளியூர்களில் குடிபெயர்ந்த பெற்றோர்களும் பள்ளியின் செயல்பாடுகளைப் பார்த்து மீண்டும் தங்கள் பிள்ளைகளை இந்தப் பள்ளியிலேயே படிக்க வைக்கின்றனர். மாணவர்கள் உறவினர் வீட்டில் இருந்து கொண்டு படிக்கின்றனர்.
- பெற்றோர் ஒருவரின் பகிர்வு: “தனியார் பள்ளியில் ஏழாம் வகுப்பு படிக்கும் எனது மகனை விடவும் இந்தப் பள்ளியில் மூன்றாம் வகுப்பு படிக்கும் எனது மகள் நன்றாகப் படிக்கிறாள். பள்ளியின் செயல்பாடுகளும் நன்றாக உள்ளது”
- ‘தனியார் பள்ளிகளுக்கு நிகராக இந்தப் பள்ளி உள்ளது’ என்றும் வரும் ஆண்டில் தங்கள் பிள்ளைகளை எங்கள் பள்ளியில் சேர்ப்பதாகச் சில பெற்றோர்கள் கூறியுள்ளனர்.
- இங்கு படிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் அவர்கள் பகுதியில் உள்ள மேலும் சிலரிடம் பள்ளியைப் பற்றி எடுத்துக்கூறி அவர்களின் குழந்தைகளை இந்தப் பள்ளியில் சேர்க்க ஊக்குவித்து வருகின்றனர்



**மா. ராமகிருஷ்ணன்**
தொ.ப.ஆ
அ.தொ.ப, சுல்தான்பேட்டை




# பள்ளி வாழ்க்கையில் எனது அனுபவங்கள்

## எனது கல்விப் பணியின் தொடக்கம்:

1977-79இல் ஆசிரியர் பட்டயப் படிப்பை முடித்து 04-03-1981 வரையிலான காலத்தில் நான் ஆரம்ப கல்வி பயின்ற எனது சொந்த ஊரான கீழ்பரிக்கல்பட்டில் அமைந்திருந்த அரசு தொடக்கப்பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக தலைமை ஆசிரியர் திரு ழி.வேணுகோபால் அவர்களின் அனுமதியுடன் ஐந்தாம் வகுப்பு ஆசிரியராக ஆணையின்றி பணியாற்றினேன். பள்ளிக்கு வருகை தந்த மூன்றாம் பள்ளித்துணை ஆய்வாளர் திரு. இராஷகோபாலன் அவர்கள் என்னுடைய ஊதியமில்லா பணியினைப் பாராட்டிச் சென்றார். பின்பு பணியில் சேர்ந்த 45 நாட்களிலேயே என் உடல்நிலை கருதி என் ஊருக்கு அருகிலுள்ள பள்ளிக்கு மாற்றல் ஆனேன்.

## பள்ளி ஆசிரியராக எனது பணிகள்:

06-03-1981 அன்று முற்றிலும் மீனவ கிராமமான நரம்பையிலுள்ள அரசு தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப்(SET) பணியில் சேர்ந்தேன். அப்பள்ளியில் எனது அனுபவம் எனக்கு புதுவிதமாகத் தோன்றியது. காலையில் பள்ளிக்கு வரும் மாணவர்கள் மதிய உணவு அருந்திய பிறகு பள்ளிக்கு வராமல் கடலுக்குச் சென்று விடுவார்கள். மாணவர்கள் சரியான ஆடை அணிந்து பள்ளிக்கு வருவது கடினம். அப்போது சீருடை இல்லாத காலம். ஆசிரியர்கள் ஐவரும் புத்தம் புதியவர்கள் என்பதால் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் அனைத்து மாணவர்களும் இருவேளையும் தவறாமல் பள்ளிக்கு வரவும் அனைவரும் முழுமையான,சுத்தமான ஆடைகளுடன் பள்ளிக்கு வரவும் இளங்கலை பட்டம் பெற்ற பஞ்சாயத்துத் தலைவர் திரு. மஞ்சினி அவர்களின் உதவியுடன் முயற்சி எடுத்து வெற்றியும் பெற்றோம்.

16-06-1981அன்று அப்பள்ளியை விட்டு மாற்றலாகி அரசு நடுநிலைப்பள்ளி, கொரவள்ளிமேடு (தற்போது தியாகி ரிஸி. சுப்ரமணிய படையாட்சியார் மேல்நிலைப்பள்ளி) சென்றேன். ஏழாம் வகுப்பு ஆசிரியராக பணியாற்றினேன். மிகவும் இளையவன் என்பதாலும் பணியின் மீதுள்ள ஆர்வத்தாலும் காலை 8:30 மணிக்கே பள்ளிக்குச் சென்று பள்ளி சிறப்பாக செயல்பட சில ஏற்பாடுகளைச் செய்வேன். அன்பான மாணவர்கள், பாசமுள்ள பெற்றோர்கள், அருகில் உள்ள கிராமம் என்பதால் என் தந்தைக்கு அறிமுகமானவர்கள் ஆகிய நல்ல சூழலில் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வந்த நிலையில் பெண் தலைமையாசிரியரின் தேவையற்ற

தலையீடுகளால் ஒரு ஆண்டிலேயே 01-07-1982ல் மாற்றலாகி அரசு ஆண்கள் நடுநிலைப்பள்ளிக்குச் சென்றேன்.

அப்பள்ளியே எனக்கு மிகவும் புதுமையாக இருந்தது. ஒவ்வொரு வகுப்பிலும் மூன்று பிரிவுகள், முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை இரு மொழிப்பாடத் திட்டம்; பணியில் முப்பது ஆசிரியர்கள்; அர்ப்பணிப்புடனும் கண்டிப்புடனும் பணியை தினந்தோறும் நிறைவாக செய்யும் தலைமையாசிரியர் திரு. நி. பழனி (மாநில நல்லாசிரியர் விருதினைப் பெற்றவர்) அவர்களின் தலைமை தான் என்னை சீர்படுத்தி நெறிப்படுத்தி அர்ப்பணிப்புடன் பணியாற்ற வழிவகுத்தது.

அவருடன் பணியாற்றிய காலம் எனக்கொரு பொற்காலம். அவரும் 8ம் வகுப்பில் இரண்டு பிரிவுகளுக்கும் அறிவியல் பாடம் கற்பிப்பார். எனக்கு எட்டாம் வகுப்பில் ஆங்கிலம் மற்றும் கணிதம் கற்பிக்கும் வாய்ப்பைக் கொடுத்தார். பள்ளி நேரம் முடிந்ததும் மாலையில் சிறப்பு வகுப்புகள், சனி ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் சிறப்பு பயிற்சி, காலந்தவறாமை ஒழுக்கம் மாணவர்களிடம் கண்டிப்புடன் கற்பித்தல் போன்ற செயல்பாடுகளால் அப்பள்ளியில் இருபத்தேழு ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி அனைவர் மனதிலும் இடம் பெற முடிந்தது. கணித ஆசிரியர் என்றாலே அங்கே கண்டிப்பும் அரவணைப்பும் ஒருங்கே அமைந்திருக்கும். விருப்பமுடன் மாணவர்களின் நிலைக்கே அவர்கள் புரிந்து கொள்ளும் வரை கணிதம் கற்பித்த காரணத்தால் பாகூர் பகுதியில் அதிக கணிதப் பட்டதாரிகளை உருவாக்க முடிந்தது. எட்டாம் வகுப்புப் பொதுத் தேர்வு இருந்த காலக் கட்டத்தில் இரவுப் பள்ளி, தேர்வு நேரத்தில் மாணவர்கள் பள்ளியிலேயே தங்கி பயிற்சி பெற வாய்ப்பு. தமிழ் இலக்கிய மன்றம், கணித மன்றம், அறிவியல் மன்றம் போன்ற அமைப்புகள் செயல்பட்டன. பாகூர் பகுதியில் பெரும்பாலும் அனைவரும் என்னுடைய மாணவர்கள் தான். பெரும்பாலருக்கு என் பெயர் தெரியாது. என்னுடைய சுருக்கு பெயர் நி.ரி. சார் என்பது தான் சிறு பிள்ளை முதல் பெரியவர் வரை அறிந்தது. தற்பொழுது வட்டம் மூன்று முழுவதும் பரவி வருகிறது. இன்றும் அப்பள்ளி எனக்கு தாய்வீடு தான். என்னைக் கல்விப் பணியில் திறம்பட செயலாற்றவும் கடமை உணர்வுடன் செய்யவும் மனநிறைவுடன் பணியாற்றவும் புடம் போட்டு தங்கமாக உருவெடுக்கச் செய்த அப்பள்ளியை மறக்க இயலாது.






## தலைமை ஆசிரியராக எனது பணிகள்

தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியராக பணியாற்ற வாய்ப்புக் கிடைத்த பொழுது நான் விரும்பி, தேர்வு செய்து 12-10-2009ல் அரசு பெண்கள் தொடக்கப்பள்ளி, பாகூரில் பணியில் சேர்ந்தேன். காற்றோட்டமில்லாத இடவசதி இல்லாத பள்ளியைத் திறம்பட நடத்துவதற்கு ஏதுவாக இல்லாத ஒரு சூழல். வாடகை இடத்தில் இயங்குவது போன்ற உணர்வில் பாகூரில் அரசு நடுநிலைப்பள்ளிக்குச் சொந்தமான கட்டிடத்தில் எங்கள் பள்ளி LKG முதல் ஐந்தாம் வகுப்பு வரை ஏழு வகுப்புகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பது வேதனைக்குரியது. 1883ல் பிரஞ் சுகாரர்களால் ஆரம்பிக்கப்பட்ட இப்பள்ளிக்குச் சொந்த கட்டிடம் இல்லை.

இப்பள்ளிக்கான இடம் 2000 ஆண்டிலேயே பாகூர் தர்கா வீதியில் தேர்வு செய்யப்பட்டு கையகப்படுத்தப்பட்டு கல்வி துறையிடம் ஒப்படைக்கப்பட்டப் பிறகும் தனியொருவரின் ஆக்கிரமிப்பில் இருப்பதால் பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கோ, சுற்றுச் சுவர் கட்டுவதற்கோ முடியாத சூழலில் பலமுறை தார்மீக ரீதியாக, பள்ளி மேலாண்மைக் குழு, பெற்றோர்-ஆசிரியர் சங்கம் போன்ற பள்ளி சார்ந்த அமைப்புகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மூலமாகவும் முயற்சி செய்தும் எங்களால் எதுவும் செய்ய முடியாத சூழல். விளையாட, காலைப் பேரவை நடத்த, காலைச்சிற்றூண்டி மதிய உணவு அருந்த இடமின்றி தத்தளித்துக் கொண்டு பள்ளியைச் சீரும் சிறப்புமாகப் புதுவையில் ஒரு சிறந்த பள்ளியாக எல்லா நிலையிலும் உருவாக்கி கொண்டிருக்கிறோம். LKG, UKG மட்டும் இருபாலரும், 1 முதல் 5 வரை பெண்கள் மட்டுமே பயிலக் கூடிய பள்ளியாக விளங்குகிறது. தலைமை ஆசிரியராகப் பணியாற்ற ஆரம்பக்காலத்தில் ஒரு சில இடர்பாடுகள் இருந்தாலும் நாளடைவில் அனைத்தையும் சரி செய்து அனைத்து ஆசிரியர்களும் அர்பணிப்புடன் பணியாற்றும் ஒரு சூழலை உருவாக்க முடிந்தது. மாணவர்களின் விழா, குழந்தைகள் தின விழா, மழலையர் விழா என எந்த போட்டியானாலும் எங்கள் பள்ளி மாணவர்கள் எல்லா நிலைமைகளிலும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வெற்றிபெறுவர்.

எங்கள் பள்ளி மாணவர்கள் போட்டிக்குச் சென்றாலே 'வந்துட்டீங்களா, கட்டைப் பையை எடுத்துக்கிட்டு வந்துட்டீங்களா. எல்லா பரிசுகளும் உங்களுக்கு தான்' என்ற முணுமுணுப்பு, போட்டி நடைபெறும் இடங்களில் ஒலித்துக் கொண்டிருக்கும். பல முறை மற்ற பள்ளிகள், நடுவர்களிடம் 'எல்லா பரிசுகளும் அவர்களுக்கு தானா?' என்று வாதிட்டு பரிசுகளைப் பெற்றுச் சென்ற நிகழ்வையும் பார்த்திருக்கின்றோம். பலமுறை குழந்தைகள் தின விழா போன்ற நிகழ்வுகளில் இயக்குநர் முதல் அனைவராலும் கைதட்டி பாராட்டும் வண்ணம் நாட்டுப்புற நடனங்களை மேடையில் அளித்திருக்கிறோம். தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக 2015-16 முதல் 2018-19 வரையில் Indian Talent examination ல் golden school விருதும் state topper விருதுகளும் பெற்று கல்வி உதவித்தொகை பெற்று வருகிறோம். மேலும் தூய்மையான பள்ளிக்கான விருதுகளை 2016-17, 2017-18 ஆகிய ஆண்டுகளில் பெற்றுள்ளோம். 2015, செப்டம்பர் 15ல் மாநில நல்லாசிரியர் 'டாக்டர். இராதாகிருஷ்ணன்' விருதினைப் பெற்ற பள்ளி.

## இவற்றை எல்லாம் எப்படி சாதிக்க முடிந்தது

- தினந்தோறும் காலை 8:30 மணிக்கே வந்து பள்ளிக்குத் தேவையான பணியைச் செய்தல். அனைவரும் சென்ற பிறகே மாலை 6:30

மணிக்கு மேல் பள்ளியை விட்டுச் செல்வது.

- காலைப் பேரவையின் முன்பே அனைத்து மாணவர்களையும் அமரவைத்து வாய்ப்பாடுகள், வினைச்சொற்கள், சிறு சிறு வாக்கியங்கள் வாசிக்க பயிற்சி அளித்தல். மாலைப் பள்ளி முடிந்த பிறகு மெல்ல பயிலும் மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தல்.

- ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது இரண்டு மாணவிக்கு மேல் நவோதயா பள்ளியில் சேர தேர்வுக்குத் தயார்படுத்துதல்

- மழலையர் விழா போட்டிகளில் வட்ட, இடைவட்ட அளவில் ஒவ்வொரு ஆண்டும் அதிகப்படியான பரிசுகளைப் பெறச் செய்தல். ஆண்டுவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடுதல்.

- இந்தக் கல்வியாண்டில் எங்கள் வட்டப் பள்ளித்துணை ஆய்வாளரின் அறிவுரையின் படி வாசித்தல் திருவிழாவை நடத்தி அனைவரின் பாராட்டையும் பெற முடிந்தது.

- சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்கள் என்று கூட பார்க்காமல் 2ஆம் பருவ விடுமுறை நாட்களில் பயிற்சி கொடுத்த எங்கள் ஆசிரியர்களை கண்டிப்பாக பாராட்டியே தீர வேண்டும். மேலும், 25-03-2019 திங்கள் கிழமையன்று காலைப் பேரவை முடிந்தவுடன் அந்த வாரம் வெள்ளிக்கிழமை (29-03-2019) அன்றே ஆண்டு விழா நடத்தலாம் என்று ஆசிரியர்கள் அறிவித்ததைக் கண்டு நான் அதிர்ந்து போனேன். இப்படிப்பட்ட துடிப்பான ஆசிரியர்கள் எங்கள் பள்ளியில் பணிபுரிகிறார்கள். இறுதியாக அனைத்து அனுமதிகளையும் பெற்று 30-03-2019 ல் பள்ளி ஆண்டு விழாவைச் சிறப்பாக நடத்தினோம்

- எந்தவொரு அலுவலக வேலையையும் (கற்பித்தல் வேலையைத் தவிர) ஆசிரியர்களிடம் வாங்காதிருப்பது.

## நான் ஒருவன் மட்டும் சாதனைகளைச் செய்யமுடியுமா?

அர்ப்பணிப்பு, கடின உழைப்பு, சேவை செய்யும் மனப்பக்குவம், கடமை உணர்வு, உயரிய சிந்தனை, உயர்ந்த நோக்கம் இவையாவும் ஒருங்கே பெற்ற எங்கள் பள்ளியில் பணியாற்றும் ஏழு ஆசிரியர்களைப் பெற்ற நான் உண்மையில் ஒரு சாதனையாளன்.

கடந்த மூன்று ஆண்டுகளாக முன் மழலையர் வகுப்பில் 60க்கும் மேற்பட்ட மாணவர்களின் பராமரிப்பாளர் (ஆயா) பணி அமர்த்தப்படவில்லை. இதற்காக ஆசிரியர்களின் பங்களிப்புடன் தனியாக ஆள் வைத்து மாதச் சம்பளம் கொடுத்து மாணவர்களைப் பராமரித்து வருகிறோம்.

எதிர் வரும் 31-08-2019ல் பணிநிறைவு பெறப்போகும் நான் மனநிறைவுடன் எனது ஆசிரியர் பணியினைச் செய்துகொண்டு இருக்கிறேன்.

---

**கிருஷ்ணமூர்த்தி**
தலைமை ஆசிரியர், (Rtd.)
அரசு பெண்கள் தொடக்கப்பள்ளி,
பாகூர்.

# புத்துயிர் பெற்ற பள்ளி

## பொறுப்பாசிரியராகப் பொறுப்பேற்றல்

கடந்த 3 ஆண்டுகளாக சி.எம் அஷ்ரப் அரசு தொடக்கப்பள்ளி முல்லா வீதி பள்ளியில் நான் தொடக்கப்பள்ளி ஆசிரியராகவும், பள்ளி பொறுப்பாசிரியராகவும் பணியாற்றுகிறேன். இப்பள்ளியில் கடந்த 2016 பிப்ரவரி முதல் அக்டோபர் வரை தொடக்கப்பள்ளி ஆசிரியராக இருந்தேன். அச்சமயம் தலைமையாசிரியையாக இருந்த திருமதி. விஜயாள் அவர்களை திடீரென்று வாய்மொழி உத்தரவின் பேரில் அரசு தொடக்கப்பள்ளி, சித்தன் குடிக்கு மாற்றப்பட்ட காரணத்தால் அக்டோபர் 18, 2016 முதல் பள்ளிபொறுப்பாசிரிராகப் பொறுப்பேற்றேன்.

## பள்ளியை மூடவேண்டும் - அதிர்ச்சித் தகவல்

முதலில் பெற்றோர்களுடன் கலந்துரையாடி;



அவர;களின் மனதில் நன்மதிப்பைப் பெற்றேன். எங்கள் பள்ளிக்கட்டிடம் மிகவும் பழுதடைந் திருந்தது. மாணவர்களின் எண்ணிக் கையும் மிகவும் குறைவாக (32) இருந்ததால் பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் சிவகுமார் ஐயா அவர்கள் பள்ளியைப் பார்வையிட்டு வரும் கல்வியாண்டில் இப்பள்ளியை மூட வேண்டும் அனைத்துப் பெற்றோர்களிடமும் தெரிவித்துவிடுங்கள் என்று கூறிவிட்டுச் சென்றார். இத்தகவல் அறிந்து மாணவர்களின் பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர்.

## பெற்றோர் எதிர்ப்பு

எங்கள் நானா அண்ணன் ஏழை முஸ்லிம் மாணவர்களின் வாழ்வாதாரத்தை மனதில் கொண்டு தர்ஹாவுக்குச் சொந்தமான இந்த இடத்தில் அரசாங்க வாடகையின்றி ஏழை மாணவர்களுக்காகப் பள்ளி நடத்தித் தரவேண்டும் என்று வாக்களித்துள்ளார். எங்கள் சமூகத்தைச் சேர்ந்த மூதாதையர்கள் மூன்று, நான்கு தலைமுறையாக இந்தப் பள்ளியில் தான் பயின்றுவந்துள்ளோம். ஆகவே இப்பள்ளியை மூட விடமாட்டோம் என்று போராட்டம் செய்தனர்.

## பள்ளிக் கட்டிடத்தை சீர் செய்ய மேற்கொண்ட முயற்சி

பள்ளி பொறுப்பசிரியராக என் தரப்பில் இப்பள்ளிக்கு என்ன செய்யலாம் என்று யோசித்து முதலில் என் சொந்தச் செலவில் சுண்ணாம்பு வாங்கி வெள்ளையடித்தேன். விடுமுறை நாட்களில் பள்ளி அருகில் வசிக்கும் 5-ம் வகுப்பு மாணவர்களின் உதவியோடு உடைந்து தொங்கிய ஓடுகளைக் கூலி ஆள் வைத்து மாற்றினேன், திடீர்வருகை புரிந்த எமது




வட்டம் - 2 பள்ளித்துணை ஆய்வாளர், திருமதி. மல்லிகா கோபால் அவர்கள் பள்ளி பளிச்சென்று இருப்பதைக் பார்த்து ஆச்சரியமடைந்தார். என்னைப் பாராட்டிவிட்டு அத்துடன் நில்லாமல் இயக்குநர் ஐயா அவர்களிடமும் எனது பணியைப் பற்றி கூறியிருக்கிறார்.

பிறகு அரசாங்கப் பள்ளி மாணவர்களாகிய எம் பள்ளி மாணவர்களும் தனியார் பள்ளி மாணவர்களைப் போல் தினமும் பள்ளிக்கு வரவேண்டும் என்பதற்காக ஆசிரியர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எங்களது சொந்த செலவில் குழந்தைகளுக்கு Identity Card, Belt மற்றும் காலணி ஆகியவற்றை ஏற்பாடு செய்து கொடுத்தோம். பெற்றோர்கள் அனைவரும் இதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர்.



## வட்ட அளவில் நடைபெறும் போட்டிகளில் மாணவர்கள் பங்கேற்றல்

மேலும் வட்ட அளவில் நடைபெறும் விளையாட்டுப்போட்டிகள் அறிவியல் கண்காட்சிகள் மற்றும் பல்வேறு போட்டிகளில் மாணவர்களைப் பங்குபெறச் செய்து வெற்றிகள் பெற்றோம். மழலையர் விழாவில் குழு நடனத்தில் தங்கள் குழந்தைகள் பங்கு பெற்றது இதுவே முதல்; முறை என்று பெற்றோர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர். 2017 - 18 ம் ஆண்டில் எங்கள் பள்ளி வட்ட அளவில் நடைபெற்ற மழலையர் விழாப்போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றது எங்கள் அனைவருக்குமே. பேரானந்தத்தை ஏற்படுத்தியது. 32-ஆக இருந்த மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து தற்பொழுது 40 ஆக உயர்ந்துள்ளதைக் கண்டு பள்ளித் துணைஆய்வாளர் மல்லிகா கோபால் அவர்கள் இயக்குநர் ஐயா அவர்களிடம் பேசி எம்பள்ளியை மூடவேண்டும் என்ற எண்ணத்தை தகர்த்தெரியச் செய்தார்.

பிறகு அருகில் இருக்கும் வீரர் வெளி (சைமன் கார்டின்) அரசு பள்ளி வளாகத்திற்கு இடமாற்றம் செய்து கொள்ளலாம் எனப் பள்ளிக்கல்வித்துறை முடிவு செய்து அதற்கான ஆணையைக் கடந்த 2018 செப்டம்பர் மாதம் ஆணை பிறப்பித்தது. அதன் பிறகு ஜனவரி 21 தேதி புதுமனை புகுவிழா நடத்தி எங்கள் பள்ளியை அனைத்து வசதிகளும் உடைய வீரர் வெளி பள்ளிக்கு இடமாற்றம் செய்தோம். தற்சமயம் எம் மாணாக்கர்கள் அனைவரும் மிகவும் ஆனந்தத்துடன் கல்வி கற்க வருகிறார்கள்.



**சு.மோகனாம்பாள்**
தொ.ப.ஆ
சி.எம்.அஷ்ரப்.அ.தொ.ப.

# வாசிப்புத் திருவிழா

2018 - 2019 கல்வியாண்டில் நான் முதல் வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலம் பாடத்தை எடுக்க முடிவு செய்தேன். ஆங்கில வாசிப்பு என்பது முதல் வகுப்பு மாணவர்களிடம் எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்ற கேள்வி ஆசிரியர்களான அனைவரிடத்திலும் இருக்கக் கூடியது தான். முதல் வகுப்பு மாணவர்களிடமும் வாசிப்பு என்பது சாத்தியமே என்றதொரு பகிர்வு தான் இக்கட்டுரை.

## வாசிப்பு திருவிழாவிற்குத் தயாராதல்

எங்கள் பள்ளி வட்டம் III-ல் உள்ளது. எங்கள் வட்டத்திலுள்ள ஒவ்வொரு பள்ளியிலும் வாசிப்பு விழா நடத்த அறிவுறுத்தினார் பள்ளி இணை ஆய்வாளர் பக்கிரிசாமி அவர்கள். முன்மழலையர் எங்களுடைய கவனத்தை எட்டியது. இதுபோன்ற காரணங்களாலும் மாணவர்கள் மீது நாங்கள் கொண்ட அக்கறையும் இந்த வாசிப்பு திருவிழா வாய்ப்பினை நல்லதொரு வாய்ப்பாக அமைத்தது.

## சில செயல்பாடுகள்

முதலில் மாணவர்கள் நன்கு அறிந்த சொற்களைக் கண்டறிய (Frequency words worksheets) நிறையப் பதிவிறக்கம் செய்து மாணவர்களைப் படிக்க வைத்தேன்.

Work sheets மூலமாக மாணவர்கள் சொற்களைப் படிக்கச் சொல்லும் போது அவர்களின் கவனச்சிதைவைக் கண்டறிந்தேன். அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தேன். அவர்களுக்குத் தெரிந்த சொற்களைப் பல்வேறு கற்றல் கற்பித்தல் துணைக்கருவிகளாக மாற்றி ஆங்காங்கு தொங்க விட்டேன். பூக்கள் வடிவில் நிறைய வண்ணக்காகிதங்களை வெட்டி அதில்




வகுப்பிற்குப் பிறகு, மாணவர்களின் கற்றலில் குறைபாடு இருப்பதாகக்கூறிப் பெற்றோர்கள் அவர்களை முதலாம் வகுப்பிற்கு வேறொரு பள்ளிக்குச் சேர்க்கப்போவதாக அவர்கள் பேசியது

ஈரெழுத்து வார்த்தைகள் மற்றும் மூன்றெழுத்து வார்த்தைகளை எழுதி வகுப்பறையில் தொங்கவிட்டேன்.

மாணவர்களுக்குத் தெரிந்த சொற்களைப் பல்வேறு துணைக்கருவிகள் மூலமாகக் கொடுத்தேன். அவற்றுள் சில,

·Word pencil (75 வார்த்தைகள்)
·Sight word charts (75 வார்த்தைகள்
·Question words Tree
· Action words balloons (50 வார்த்தைகள்)
· Sentence magic box (எளிதான வாக்கியங்கள்)
· Sentence Stripes

## Rhyming Words தொடர்பான துணைக்கருவி

Rhyming Words எங்களுக்குப் பெரிதும் பயன்பட்டது. மாணவர்கள் ஏதாவது ஒரு சொல்லை வாசிக்கத் திணறினால், நான் அந்தச் சொல்லுக்கு இணையான வார்த்தைகளைக் கூறும் பொழுது அவர்கள் உடனே வாசிப்பார்கள்.

இது போன்ற துணைக்கருவிகளைப் பயன்படுத்தி மாணவர்களை வாசிக்கச்செய்தேன். மாணவர்கள் சொற்களைப் பார்த்த உடனே படித்தார்கள். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. என்னுடைய வகுப்பில் பின்தங்கிய நிலையிலிருந்த மாணவி, சொற்களைப் பார்த்து எழுத்துக் கூட்டி படிப்பதைப் பார்த்த பொழுது மிகவும் வியப்பை அளித்தது. அன்று எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

எம் பள்ளி In-charge என்னுடைய மாணவர்கள் ஆங்கிலம் கற்றலில் எந்நிலையில் உள்ளனர் எனக் கேட்டார். நான் நீங்களே என் வகுப்பறைக்கு வந்து சோதித்துப் பாருங்கள் என்றேன். அவரும் வந்து சோதித்துப் பார்த்தார். மாணவர்கள் நன்றாகச் சொற்களை வாசித்துக்காட்டினர். அவருக்கு ஒரு யோசனைத் தோன்றியது. என்னை அழைத்து, “முதல் வகுப்பு மாணவர்களுக்கு ஒரு நாள் Reading Day வைக்கலாமா?” என்றார். பெற்றோர்கள் அனைவரையும் அழைப்போம், மாணவர்கள் வாசிப்பதைப் பார்க்கட்டும் என்றார். நானும் சரி என்றேன். அதற்கான தயாரித்தலுக்காக எனக்கு 7 நாட்கள் தேவைப்பட்டது.

## வாசிப்புத் திருவிழா நாள்

வாசிப்புத் திருவிழா நாள் அன்று என்னுடைய முதலாம் வகுப்பு மாணவர்கள் தயார் நிலையில் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் காணப்பட்டனர். ஆனால், எனக்கோ சிறிது பயமாகவே இருந்தது. மாணவர்களின் பெற்றோர் கேட்கும் சொற்களை வாசித்துக்காட்டுவார்களா என்று ஒரு ஐயம் மனதில் ஓடிக்கொண்டே இருந்தது.

பெற்றோர்கள் எனது வகுப்பறைக்குள் நுழைந்தனர். பெற்றோர்கள், மாணவர்களை ஒவ்வொருவராக மாற்றி மாற்றி சொற்களைக் கேட்க கேட்க மாணவர்கள் மிகச்சரியாகப் படித்துக் காண்பித்தனர்.

## மட்டற்ற மகிழ்ச்சி

ஒவ்வொரு பெற்றோரின் முகத்திலும் அப்படி ஒரு மகிழ்ச்சி கலந்த சிரிப்பு. என்னுடைய மகள் இப்படிச் சொற்களை மிகச்சரியாகப் படிக்கிறானே என்று அதில் ஒரு மாணவியின் அம்மா கண் கலங்கினார். என்னைப் போலவே என் மகளும் படிக்காமல் போய்விடுவாளோ என்று எண்ணி இருந்தேன். ஆனால், அவளும் ஆங்கிலச் சொற்களைப் படிக்கிறாள். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறது என்று கூறினார். பெற்றோரின் முகத்தைப் பார்த்த போது, எனக்கு ஏதோ சாதித்தது போன்ற உணர்வு எனக்குள் ஏற்பட்டது.

மற்றொரு மாணவரின் பெற்றோர் அவருடைய குழந்தை முன்மழலையர் வகுப்பில் படிப்பதாகவும் அடுத்த கல்வியாண்டு மற்றொரு பள்ளிக்கு மாற்றலாம் என இருந்ததாகவும் கூறினார். இந்த வாசிப்புத் திருவிழாவில் மாணவர்களின் செயல்பாடுகளைப் பார்த்த பின்பு, அவருடைய மற்றொரு குழந்தையையும் அடுத்த கல்வியாண்டு எங்கள் பள்ளியிலே சேர்ப்பதாகக் கூறியது எங்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.



**து. நளினி தேவி**
தொ.ப.ஆ
அ.தொ.ப, நோனாங்குப்பம்.

# அரசுப்பள்ளியை அழகாக்கிய ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள்



எமது பள்ளியின் தோற்றம் சுவரோவியங்கள் வரைவதற்கு முன்பும் பின்பும்.

நானும் , எனது தோழி Nithiya ஆகியோரும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பள்ளிச்சுவர் ஓவிய பணிகளுக்காகப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டோம். அனைத்து முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்தன. கடந்த நவம்பர் மாதம் உமாபதி சாரை சிக்னலில் பார்த்த போது "சார் ஒரு பள்ளிக்கு அவுட்லைன் ஸ்கெட்ச் போட்டுத் தர்றீங்களா ? "என நான் விளையாட்டாகக் கேட்க, "கண்டிப்பாகச் செய்றேன்" என்றார். அவர் தன்னம்பிக்கையோடு களத்தில் இறங்க, எனக்கு உள்ளுக்குள் மிகுந்த பயம்.

இரண்டு மாடிக்கட்டிடம், பத்து வகுப்பறைகள், மிக நீண்ட மதில்சுவர் என எனது பள்ளியின் பிம்பம் என்னை அச்சுறுத்தியது. "தேவையில்லாம வாய் விட்டு மாட்டிகிட்டமோ" என நினைத்தேன். இரண்டாம் பருவ விடுமுறையில் பணிகளை மேற்கொள்ளலாம் எனத் திட்டமிட்டோம். உமாபதி சாரின் வழிகாட்டலில் படங்கள் தேர்வு செய்து, பிரிண்ட் எடுத்து, ஓவியர்களைத் தேடி அலைந்தோம். இது ஒரு பக்கம் இருக்க பெயின்ட் வாங்க எஸ்டிமேட் போடப்பட்டு நன்கொடை கேட்கும் வேலையும் நடந்தது. இந்தப் பணிகள் குறித்து எங்கள் வட்டப் பள்ளி துணை ஆய்வாளர் திரு. பக்கிரிசாமி சாரிடம் விவாதித்தோம். அவர் சில ஆலோசனைகள் கூறி, "நல்ல முயற்சி, என்னால் முடிந்த உதவிகளைச் செய்கிறேன்" என்றார். எங்கள் பள்ளி தலைமையாசிரியர் திருமதி. குணா மிகுந்த உறுதுணையாக இருந்தார். அலுவலக ஊழியர் திரு. பாண்டு அண்ணா எங்களை விட ஆர்வத்துடன் செயலாற்றினார்.

பள்ளி தேர்வுகள் முடிந்து விடுமுறையும் வந்தது. எனது அக்கா KeerthiVasan நன்கொடையாக ரூ. 5000 அளித்தார். ஆனால் ஓவியர்கள் யாரும் கிடைக்கவில்லை. பொங்கல் விடுமுறையில் ஆரம்பிக்கலாம் என நானிருந்தேன். உமாபதி சார் "இப்பொழுதே ஆரம்பிக்கலாம். நல்ல படியாக முடியும் "என்றார். சிறிது தயக்கத்துடனே ஆரம்பித்தோம். முதல் நாள் உமாபதி சார் ஓவியப்பணியில் மும்முரமாக இறங்க, பாரதியார் பல்கலைக்கூட. மாணவர்கள் சிவா, சிவராமன் கிருஷ்ணன், செழியன், மணிகண்டன், கோடீஸ்வரன் ஆகியோர் ஓவியம் வரைந்தனர். தோழி சின்மயாவும் இப்பணியில் இணைந்து கொள்ள எங்களுக்குள் உற்சாகம் பிறந்துள்ளது. எங்களுக்கு மட்டுமல்ல, சாலையில் எங்கள் பள்ளியைக் கடந்து சென்ற அனைவருக்கும் வரைய ஆர்வமாக இருந்தது.

மறுநாள் எங்கள் தலைமையாசிரியரின் கணவர்



திரு இளங்கோ, நித்யாவின் கணவர் திரு. ஆனந்தராஜ், பெற்றோர் திரு. லிங்கேஸ்வரன், ஆசிரியர் திரு. பிரபு இப்பணியில் இணைந்து செயலாற்றினர். பின்னர் பாரதியார் கூட மாணவர்கள் சரவணன், தமிழ்ச்செல்வன் ஆகியோரும் இணைந்து கொண்டனர். கிட்டத்தட்ட ஒன்பது நாட்கள். புத்தாண்டு தினம், ஞாயிற்றுக்கிழமை எனப் பாராமல், பணிகள் நடைபெற்றது. பின்னர் எங்கள் பள்ளி துணைஆய்வாளர் உதவியுடன் ஆசிரியர் திரு. அன்புநிலவன் எழுத்துப் பணிகளைச் செய்தார். இதுவரை கீழ்த்தளம் மற்றும் முதல் தளத்தில் ஒரு வகுப்பறை வரை பணிகள் நிறைவடைந்துள்ளன.

எங்கள் பள்ளியில் முதற்கட்ட சுவரோவியப் பணிகள் நிறைவடைந்த நிலையில் அடுத்த கட்டமாக முதல் தளம் மற்றும் உட்புறச் சுவர்களில் ஓவியப்பணியினைத் தொடங்கியுள்ளோம்.

“தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன்

மெய்வருத்தக் கூலிதரும்.”

- என்ற வள்ளுவர் பெருந்தகையின் கூற்று மெய்யானது. எங்கள் பள்ளியில் நடக்கும் இந்த மாற்றத்தில், துவக்கப்புள்ளியாக இருந்து வழிகாட்டிய உமாபதி, இரண்டாம் கட்ட சுவரோவியப் பணிக்குத் தலைமை ஏற்று நடத்திக்கொண்டிருக்கும் சன்ஃபைன் ஆர்ட்ஸ் அகாடமியின் நிறுவனர், கலைமாமணி திரு. ஆர். ரவி, மற்ற ஓவியர்கள் திரு. இளமுருகன், திருமதி. லீனா, திரு. தேவராஜ், திரு. மதிவாணன், திரு. அன்புநிலவன் இப்பணிக்கான பெயின்ட் பொருட்களை வழங்கிய புதுச்சேரி கலாம் அறக்கட்டளை, வசந்த்ராஜ், பெற்றோர்கள் திரு. பெருமாள் மற்றும் திரு. ரமேஷ், ஈருடல் ஓர் உயிராய் திகழும், ஓவியர். ரவி ஐயா மற்றும் அவர்களின் துணைவி திருமதி. காந்திமதி, ஆறு நாட்கள் ஓய்வின்றி ஓவியப்பணியாற்றிய சின்மயா, சிவா மற்றும் உதவிய அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

பெரும்பாலும் சுயநலமான ஒரு வாழ்க்கை முறையைத் தேடி பயணிக்கும் இன்றைய நிலையில், சமூக மாற்றத்திற்காக, எந்த எதிர்பார்ப்புகளும் இல்லாமல், குறிப்பாக அரசுப் பள்ளிகளை மேம்படுத்தும் முயற்சியில் முன்வந்து செயல்பட்ட அனைவரையும் அங்கீகரிப்பது முக்கியமாக உள்ளது. என் நன்றியைத் தெரிவிக்கக் கடன் பட்டுள்ளேன். கைவண்ணங்களால் அழகானது எங்கள் பள்ளி சுவரோவியங்கள். ஒருவருக்கொருவர் உற்ற துணையாய், ஓவியப்பணியில் ஓய்வின்றி, பணி ஓய்வு பெற்ற பிறகும் அரசுப் பள்ளிகளுக்காகத் தினமும் உழைத்துக்கொண்டிருக்கும் அனைவரு க்கும் என் நிறைவான வாழ்த்துகள்.



**து. சங்கரதேவி**

தொ.ப.ஆ

அ.தொ.ப, அபிஷேகப்பாக்கம்

# நாடோடிக் குழந்தைகளால் அலங்கரிக்கப்பட்ட பள்ளி

## எங்கள் பள்ளி பற்றி:

புதுச்சேரியில் இருக்கும் பள்ளிகளில் எங்கள் பள்ளி சற்று வித்தியாசமானது என்று கூறலாம். எங்கள் பள்ளியில் ஏறத்தாழ ஐம்பது சதவீத மாணவர்கள் குறவர் சமூகத்திலிருந்து படிக்கும் மாணவர்கள். நாடோடிகளாக வாழும் இம்மக்களின் குழந்தைகள் படிக்கும் சில பள்ளிகளில் எங்கள் பள்ளியும் ஒன்று. இந்த மாணவர்களுக்கு கற்பிப்பது என்பது எங்களுக்கு பெரிய சவால் நிறைந்ததாக இருந்தபோதிலும் எங்களுக்கு மனநிறைவு அமைந்ததாக இருக்கிறது. இம்மாணவர்களுக்குக் கற்பிக்கத் தொடங்கிய பின் நாங்கள் நிறையக் கற்றுக்கொள்ளத் தொடங்கினோம். இந்த அனுபவங்களின் வாயிலாக, அடுத்தடுத்த கல்வியாண்டுகளில் வந்த மாணவர்களை கையாள எளிமையாக இருந்தது. இருந்தபோதிலும் நாங்கள் இன்னும் கற்றுக்கொண்டே இருக்கிறோம்.

## யார் இந்தக் குறவர்கள்

இச்சமூகத்தில் பெரும்பான்மையான மக்கள் நாடோடி வாழ்க்கை வாழும் மக்களே. பரவலாக இம்மக்களை மலைவாழ் மக்களாகவேக் கருதுகின்றனர். வெவ்வேறு ஊர்களில் நடக்கும் வெவ்வேறு திருவிழாக்களில் இச்சமூக மக்களை எளிமையாக அடையாளம் காண இயலும். அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் கிடைக்கப்பெறாத மக்கள்.

## குழந்தைகளின் தனி உலகம்

கடும் போரட்டங்களுக்குப் பின், இம்மாணவர்களின் காலடித் தடத்தை எங்கள் பள்ளி சுமந்தது. ஆரம்பகால நாட்களில் அவர்கள் பெரும்பாலும் குளிக்காமலே பள்ளிக்கு வந்தனர். இவர்களுக்கு எவ்வாறு சுத்தமாக இருப்பது என்று சொல்லிக்குடுப்பதே பெரிய சவாலாக இருந்தது.

மற்ற மாணவர்களுடன் இவர்கள் பேசுவது என்பதே அரிதாக இருந்தது. இருந்தபோதிலும் அவர்களை மற்ற குழந்தைகளுடன் இனக்கமாக வேண்டும் என்பதற்காக ஒன்றாக உட்கார வைத்தோம், குழுசெயல்பாடுகளில் அதிகமாக ஈடுபடுத்தினோம். மற்ற குழந்தைகள் இவர்களை இம்மாணவர்களை ஏற்றுக்கொண்ட போதிலும், இம்மாணவர்கள் பள்ளியை தனி உலகமாகவேக் கண்டனர், சாதாரண மாணவர்கள் வேற்றுலகத்தில் இருந்து வந்தவர்கள் போல் இருந்தனர். அது அவர்களின் தவறாகவும் நாங்கள் கருதவில்லை.

## இடைநிற்றல்

இம்மாணவர்களிடம் பள்ளிக்குத் தொடர்ச்சியாக வருதல் என்பதே பிரச்சனையாக இருந்தது. பெற்றோர்களுடன் மற்ற ஊர் திருவிழாக்களுக்கு சென்று விடுவர் அல்லது உறவினர் வீடுகளில் குழந்தைகளை பெற்றோர் விட்டுச்செல்வர். தொடர்ச்சியாக பள்ளிக்கு வராததால் அவர்கள் மறுபடியும் பள்ளிக்கு வரும் பொழுது ஆசிரியர்கள் முதலில் இருந்து கற்பிக்க வேண்டியதாக இருந்தது.

பெரும்பாலான சமயங்களில் இடைநிற்றலும் நிகழ்கிறது. இருந்தபோதிலும் இச்சமூக மாணவர்களின் சில பெற்றோர்கள் படித்தறிவு பெற்றவர்களாகவும் படிப்பறிவு தங்கள் குழந்தைகள் பெற வேண்டும் என்று ஆர்வமாக இருப்பதால் இடைநிற்றலை ஓரளவிற்கு எங்களால் சமாளிக்க முடிகிறது.





## உணவுமுறை

இச்சமூக மாணவர்களின் உணவு முறையைப் பொறுத்தமட்டில், அவர்களுக்கு காய்கறிகளை உண்ணுதல் என்பது மிகவும் புதுமையான விசயமாக இருக்கக்கூடுமோ என்ற ஐயம் என்னுள் இருந்தது. அவர்கள் பள்ளியில் வழங்கப்படும் மதிய உணவில் காய்கறிகளை உண்ணுவது என்பது அரிதிலும் அரிதாக இருந்தது.

## மொழிப் பாடங்கள் படுத்திய பாடு

மொழிப்பாடங்களைக் கற்பிப்பதும் எங்களுக்கு சவாலாக இருந்தது. அவர்களுடைய குடும்பங்களில் பேச்சு மொழி ஒன்றாகவும், பள்ளிகளில் பேச்சு மொழி வேறு ஒன்றாகவும் உள்ளதால் அவர்களுக்கு மொழிக் கற்றலில் பெரும்பாலும் ஈடுபாடு இருப்பதாக எனக்கு தோன்றவில்லை.

ஆங்கில மொழிக் கற்பித்தல் என்பது எங்களுக்கு இமாயலாய சவாலாக இருந்தது. நாங்கள் கற்பித்த, அவர்கள் முயன்று கற்றுக்கொண்ட எழுத்துக்கள் அனைத்தும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் அவர்கள் மறந்து விடுவது எங்களின் விடாமுயற்சிகளுக்கு கிடைத்த பரிசு.

## கணக்குப் புலிகள்

இம்மாணவர்கள் கணிதப்பாடங்களை மற்ற மாணவர்களைக் காட்டிலும் மிகவும் எளிமையாகக் கற்றுக் கொண்டனர். மற்ற அனைத்துப் பாடங்களும் இவர்கள் கற்றுக் கொள்ள கடினமாக இருந்த பொழுது, கணிதம் மட்டும் எவ்வாறு இவ்வளவு எளிமையாக இருக்கிறது என்று ஆராய்ந்தோம். மதகடிபேட்டில் வாரந்தோறும் நடக்கும் சந்தைகளில் இக்குழந்தைகளின் பெற்றோர்கள் வியாபாரம் செய்கிறார்கள். இச்சமயங்களில் இக்குழந்தைகளும் அவ்வப் பொழுது நாணயங்களையும் ரூபாய் நோட்டுக்களையும் கையாண்டுள்ளனர். இதை அறிந்துகொண்ட பின்னர் நாங்கள் கணக்குப் பாடங்களுக்கு நாணயங்களைப் பயன்படுத்தும் பொழுது மிகவும் எளிதாக அறிந்து கொண்டனர்.

## EVS

இப்பாடத்தினைப் பொறுத்தமட்டிலும், இச்சமூக மாணவர்களுக்கு சுற்றுப்புறசூழல் பற்றிய அறிவு அதிகமாகக் காணப்பட்டது. இருந்தபோதிலும், அவர்களுடன் இப்பாடங்கள் குறித்து உரையாட எங்களுக்கு மொழி ஒரு தடையாக இருந்தது.

## கலக்கல் மாணவர்கள்

ஆண்டு விழா, கலை நிகழ்ச்சிகளின் பொழுது இம்மாணவர்கள் தங்களைத் தாங்களே அலங்கரித்துக் கொள்ளும் அழகைக் கண்டால் மெய்சிலிர்க்கும். விளையாட்டுப் போட்டிகளில் இம்மாணவர்களின் திறம் அசாத்தியமானது. இவர்களின் ஓட்டப் பந்தயத் திறமை மிகவும் வியக்கவைத்தது.

---

**வத்சலா,**
தலைமை ஆசிரியை,
அ.தொ.ப, மதகடிபேட்.

# BUILDING NUTRITION AND ENVIRONMENTAL AWARENESS

In order to generate awareness among our students regarding the importance of consuming nutritious food and the need to conserve nature, we organised two major events.

**FOOD FESTIVAL**

The food festival organised by our school was an extended activity of the lesson Unavu Thiruvizha provided in the Tamil textbook for Class V. It was conducted to inculcate the habit of eating healthy and traditional foods in the students.

The fifth-graders took the initiative to get dishes prepared by their families and put up stalls for each dish. They brought dishes such as dried ginger water, ragi puttu, ragi porridge, sundal, coconut balls, millet adai, black gram kali and so on. They even explained the recipes of these dishes. Lastly, the fifth-graders shared their food with the students from all other classes.




Everyone enjoyed eating the dishes that they had brought. Their parents also visited the festival, tasted the dishes and appreciated the students' efforts. Furthermore, the headmaster and other teachers also appreciated those students who actively participated in the festival and, subsequently, selected three of the best healthy dishes. Through this food festival, the students were able to better understand the need to consume healthy and nutritious food.



**SCIENCE DAY**

As a part of the Science Day function, the teachers selected the topic 'Conservation of Nature' based on which the students performed a drama on stage. Through this drama, we were able to achieve the following objectives:

- Sensitise the students about the vital role of plants and trees; encourage them to plant the same.
- Create awareness among them regarding the importance of conserving water.
- Make them realise the hazardous effects of using plastic, including plastic bags; encourage them to say 'no' to plastic.

**Outcome**

Nowadays, our students have become more conscious about using water in toilets and for washing their hands and utensils. They have also realised the deleterious effects that plastic can have on their environment. Since they live near the sea, they even feel sorry for aquatic creatures such as turtles, jelly fish and the like. In fact, one day, they even cleaned the school's backyard and the neighbouring beach. Later, they also conducted an exhibition based on the excessive use of plastic and its ill effects on aquatic beings.



**ARULJYOTHI**
PST
GMS, NALLAVADU

# எம் பள்ளி மாணவர்களின் சதுரங்க விளையாட்டு சாதனையும் பள்ளிக்கூடம் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கூட்டாண்மையும்

எம் பள்ளி, சத்ய பார்த்தி மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி, சிவகங்கை மாவட்டம், பாப்பாக்குடி எனும் குக்கிராமத்தில் அமைந்துள்ள பள்ளி. அப்படிப்பட்ட பள்ளியிலிருந்து மாணவர்கள் சதுரங்க விளையாட்டில் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்போடு மற்றும் மாவட்ட, மாநில அளவில் சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்கள். அதற்கு காரணம் பள்ளிக்கூடமும் பெற்றோர் ஆசிரியர் கூட்டமைப்பும் ஆகும்.

## சதுரங்கமும் எம் பள்ளி மாணவர்களும்

நம் பண்டைய மன்னர்கள் ஆட்சி செய்த விதம் பற்றி நம் கண் முன்னே கொண்டு வரும் விளையாட்டு. அரசன் வீழ்ந்தால் இந்த ஆட்டம் முடிவடையும். மற்ற வீரர்கள் அரசனைக் காத்து நிற்பர். இந்த விளையாட்டின் சிறப்பு அம்சமே பொறுமை மற்றும் அறிவுக் கூர்மை ஆகும்.

எம்மாணவர்களுக்குச் சதுரங்கப் போட்டியை நான்கு வருடம் முன்பு என்னுடைய லேப்டாப் இல் அறிமுகம் செய்தேன். கிராமப்புறங்களில் இருந்து வரும் மாணவர்கள் பாடவேளை போக மீதம் இருக்கும் நேரங்களில் சதுரங்க விளையாட்டினைக் கற்று அதில் தொடர்ந்து பயிற்சியும் எடுத்து வந்தனர்.

எங்களுடைய கிராமம் மிகவும் வெகு தூரத்தில் உள்ளதால் பயிற்சியாளர்கள் வர தயங்குகிறார்கள். மாணவர்களைக் பயிற்சி செய்ய வெளிய இருந்து கோச் வர செய்ய இயலாத நிலையில் மாணவர்கள் தங்களுடைய பொழுது போக்கு நேரத்தில் என்னுடைய லேப்டாப் இல் விளையாடப் பழகினர். மேலும் வீட்டில் பெற்றோர்களிடம் கூறி சதுரங்க விளையாட்டு உபகரணங்களை வாங்குவதற்கு ஏற்பாடு செய்ததன் மூலமாக மாணவர்கள் வீட்டிலும் சதுரங்கப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## போட்டிகளில் பங்குபெறுதல்

நான்கு வருடம் முன்பு சதுரங்கப் போட்டியில் பரிசு ஏதும் வாங்காத மாணவர்கள், இரு வருடம் முன்பு வரை நடந்த போட்டி அனைத்திலும் பரிசு வென்றனர். போட்டியில் பெண்களின் பங்கேற்பு ஆண்களுக்கு நிகராகப் பாதிக்குப் பாதி உள்ளது. மாணவர்கள் குறிப்பிட்ட மாவட்டங்களில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொண்டு அதில் சிறப்பான முறையில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்துகின்றனர். மற்ற பள்ளி மாணவர்களுடன் கலந்து விளையாடும் போது தன் திறனை அதிகரித்துக் கொண்டு விளையாடும் விதத்தினைக் கற்கின்றனர். அடுத்த நிலையிலான மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்கின்றார்கள். இதில் பலர் பரிசுகளைப் பெறுகின்றனர். மற்றவர்கள் பங்கேற்பு சான்றிதழ் பெறுகின்றனர்.

## செல்வகணபதி ஒரு சாதனை மாணவன்

எங்கள் பள்ளியில் கடந்த ஆண்டு ஐந்தாம் வகுப்பு பயின்ற செல்வகணபதி என்ற மாணவன் சிறப்பான முறையில் சதுரங்க விளையாட்டினை விளையாடி பல பரிசுகள் பெற்றுள்ளான்.

சிறு வயது முதலே சதுரங்க விளையாட்டில் ஆர்வம் கொண்ட அந்த மாணவன் தன் தந்தையிடம் கேட்டு கைப்பேசி வாங்கி அதில் விளையாடிப் பழகினான். தன் கிராமத்தில் தன் வீட்டில் இருக்கும் ஓய்வு நேரங்களில் அதைக் கொண்டு விளையாட்டினைத் தொடர்ந்தான். மாநில அளவிலானப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகளும் பெற்றான்.

ஒரு கிராமத்தில் இருந்து மாநில அளவிலான போட்டிகளில் பரிசு பெற்ற மாணவனைப் பல செய்தித்தாள்கள் படம் பிடித்துக் காட்டின.

## The better India

எங்கள் பள்ளி மாணவனின் திறமையை அறிந்த 'The Better India' நிறுவனம் மாணவனின் கிராமத்தில் உள்ள வீடு மற்றும் எங்கள் பள்ளிக்கு வந்து மாணவனை நேர்காணல் எடுத்துச் சென்றது. இது எங்கள் பள்ளிக்கும் அந்த மாணவனுக்கும் கிடைத்த பெருமை.

வீடியோவைக் காண YouTube இல் The Digital Grandmaster (https://bit.ly/2vRFMid) என சர்ச் செய்யவும்

சதுரங்கப் போட்டியின் நேர்மறையானத் தாக்கங்கள் அனைத்து மாணவர்களிடமும் காணப்பட்டன. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், சத்யன் எனும் மாணவன் வழக்கமாக யாரிடமும் பேசாமல் அமைதியாக இருப்பவன், அவனுடைய தலைமைப் பண்பு மற்றும் பிரச்சினையைத் தீர்க்கும் திறன் ஆகியவை அவனிடம் மேம்பட்டு தற்போதெல்லாம் அனைத்து வகுப்பறை மற்றும் கல்வி நடவடிக்கைகளிலும் அவனுடைய ஈடுபாடு அதிகரித்துக் காணப்படுகின்றது.

தொடர்ந்து இரண்டு வருடம் போட்டிகளில் கலந்து கொண்டு தோல்விகளைச் சந்தித்தாலும், மனம் தளராமல் அடுத்தடுத்தப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக எங்களுடைய உத்வேகத்தை அதிகப்படுத்திக்கொண்டோம்.

## பெற்றோர் - ஆசிரியர் ஒத்துழைப்பு:

எங்கள் பள்ளி மாணவர்களின் சதுரங்க விளையாட்டில் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்பு மிகவும் அதிகமானது. ஆசிரியர், போட்டிக்குத் தேர்வாகிய மாணவர்களை முன்பதிவு செய்த பின் போட்டி நடைபெறும் இடம், நாள், நேரம் போன்றவற்றை பெற்றோருக்குத் தெரியப்படுத்துதல். மேலும், பெற்றோர்கள் விடுமுறை நாட்கள் என்றும் பாராமல் தங்கள் குழந்தைகளை ஆசிரியர் கூறிய வழிமுறையில் கூட்டிச் சென்று பங்கேற்கச் செய்தல். மாணவர்கள் வெற்றி பெறும் தருணம்





பெற்றோர்களின் மனதில் ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவில்லை! இது மட்டுமில்லாமல் பெற்றோர்கள் தாங்களே திட்டமிட்டு எங்கள் பள்ளியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தங்களுடைய செலவில் பள்ளி ஆண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். தவறாமல் ஒவ்வொரு பெற்றோர் ஆசிரியர் கூட்டத்திலும் பள்ளியில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொள்கின்றனர். பொது மக்கள் மற்றும் பெற்றோர்கள் அரசு பள்ளிக்குக் கல்வி சீர் கொண்டு செல்வதை இப்போது பல நேரங்களில் நிறைய இடங்களில் காண முடிகிறது. அதுவே எங்கள் பள்ளி பெற்றோர்களும் பள்ளி வளர்ச்சியிலும், மாணவர்களின் வளர்ச்சியிலும் தாங்களாகவே முன் வந்து பல நல்ல காரியங்களைப் பள்ளிக்காகச்

செய்ய அவர்களை ஊக்கப்படுத்தியுள்ளது என்றால் அது மிகையாகாது.

அதிலும் இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் கிராமத்தில் பெண் குழந்தைகளை வெளியில் எங்கும் அனுப்ப பெற்றோர்கள் மிகவும் யோசிப்பார்கள். ஆனால் எங்கள் பள்ளியில் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர் ஒத்துழைப்பில் நிறைய போட்டிகளில் கலந்து கொண்டு, வெற்றி வாகை சூடி வருபவர்கள் பெண் குழந்தைகளே. எங்கள் பள்ளி, பெண் குழந்தையின் கல்விக்கே முதல் முக்கியத்துவம் கொடுக்கிறது. ஒரு பெண் கல்வி கற்றால் அந்தக் குடும்பமே கல்வி கற்ற மாதிரி என சும்மாவா சொல்லியுள்ளார்கள்.

இந்தியாவில் சதுரங்க விளையாட்டில் பல மேதைகள் உள்ளனர். உலக அரங்கில் விஸ்வநாத ஆனந்தின் பெயர் எல்லா இடங்களிலும் பரவி உள்ளது. அதே போல் எங்கள் பள்ளியின் கிராமத்து மாணவர்களில் இருந்து பல சதுரங்க மேதைகளை வருங்காலத்தில் காணலாம். எங்களுடைய அடுத்த இலக்கு பள்ளியில் உள்ள 205 மாணவர்களுக்கும் சதுரங்க விளையாட்டைக் கற்றுக் கொடுப்பதுதான். பின் அந்த 205 மாணவர்களைக் கொண்டு அவரவர் ஊரில் உள்ளவர்களுக்கு சதுரங்க விளையாட்டைக் கற்றுக் கொடுத்து சதுரங்க விளையாட்டின் முக்கியத்துவத்தைப் பரப்பவும் மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் சிந்தனைத் திறன்களை மேம்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

**ராஜ் கமல்**

தலைமையாசிரியர்

சத்ய பார்த்தி மழலையர் மற்றும்

தொடக்கப் பள்ளி

பாப்பாக்குடி, சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு.

# பள்ளிக்கூடத்தில் ஓர் கதம்பம்

கடந்த வருடம் எங்கள் பள்ளியில் நடந்த பல சிறப்பு வாய்ந்த நிகழ்வுகளில் சிலவற்றை இங்கு தருகிறேன்.

1. கனவு நாயகன்

   அப்துல் கலாமின் கனவு இந்தியாவைப்பற்றி, விழிப்புணர்வு வீடியோ ஆல்பத்தை எனது சொந்த செலவில் இலட்சிய இந்தியனின், சபதமேற்போமே என்ற தலைப்பில் சுமார் ரூ. 85,000 மதிப்பீட்டில், விழுப்புரம் ஆசிரியர்கள் மற்றும் எங்கள் ஒலக்கூர் ஒன்றிய ஆசிரியர்கள், கோனேரிக்குப்பம் பள்ளி மாணவர்களை வைத்துத் தயாரித்து வெளியிட்டோம். இந்த ஆல்பத்தின் நோக்கம், அப்துல் கலாம் கண்ட கனவு இந்தியாவை நமது அரசுப் பள்ளியின் மாணவர்கள், ஆசிரியர்கள் இவர்களால் மட்டுமே நினைவாக்க முடியும் என்ற விழிப்புணர்வினை ஆழமாய் உணரவைத்து, கனவு இந்தியாவின் நோக்கத்தோடு பயணிக்க வைத்தோம்.

2. பாடத்தலைப்பிற்கு ஏற்றாற் போல், பாடக் கருத்துக்களை வீடியோவாகத் தயாரித்து, மாணவர்கள் பாடத்தை ஆர்வமோடு கவனித்து புரிந்துகொள்ள, தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி கற்றுத் தருகிறோம்.

3. தமிழ், ஆங்கிலம், கணக்கு பாடப்புத்தகப் பாடலுக்கு இசைக்கருவிகளைப் பயன்படுத்தி இசையமைத்து, மாணவர்களுக்குச் சொல்லி கொடுத்து, வீடியோக்கள் தயார் செய்து தமிழக அளவில் நமது ஆசிரியர்களுக்குப் பகிர்ந்து வருகிறோம்.

4. கலாமின் பெயரில் அறிவியல் மன்றம் உருவாக்கி, மூன்று மாதத்திற்கு ஒருமுறை 1 மற்றும் 2-ம் வகுப்பு குழந்தைகளுக்கு கண்காட்சிகள் வைத்து, அறிவியல் ஆர்வத்தை முதல் வகுப்பிலிருந்தே ஊக்குவித்து வருகிறோம்.

5. சினிமாவின் தாக்கத்தால் அழிந்து வருகின்ற, நமது பண்பாடு மற்றும் கிராமியக்கலைகளைக் காப்பதற்காக, எங்கள் பள்ளியில் மாணவர்கள் கிராமியக் கலைக்குழு தொடங்கி இசைக்கருவிகளைப் பள்ளிக்காக வாங்கி, நமது பண்பாட்டு கலைகளைப் பள்ளியில் கற்றுத்தருகிறோம். மேலும் மே மாத விடுமுறையில் கிராமியக்கலைகளின் மீது ஆர்வமுள்ள ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், நமது பண்பாட்டுக் கலைகளை இலவசமாகப் பயிற்சி அளித்து, நமது கலைகளை மீட்டெடுத்து வருகிறோம்.

6. ஒவ்வொரு மாணவரின் வீடு மற்றும் மூன்று கிராமத்தில் உள்ள முன்னால் மாணவர்கள் வீட்டிலும், பழ மரக்கன்றுகள் நட்டு, புதிய தலைமுறை தொலைக்காட்சி நம்மால் முடியும் குழுவோடு இணைந்து பசுமையைக் காக்க சமுதாயப்பணியில் அடிக்கடி இணைந்து வருகிறோம். இதற்கு முழு ஒத்துழைப்பு தருபவர்கள் மூன்று கிராம இளைஞர்களும் இளம்பெண்களும் தான்.

7. மலைமேட்டில் பள்ளி இருந்ததால், எங்குப் பார்த்தாலும் பாறைகளாக இருந்தது. அந்த கற்களை அகற்றினோம். பள்ளி வளாகத்தை நல்ல விளையாட்டு மைதானமாக்க மண்ணைப் பள்ளி வளாகத்தில் கொட்டி, சமன்செய்தோம். இதற்கு கோனேரிக்குப்பம் கிராம மக்கள் உதவினார்கள்.

8. தமிழ் வளர்க்கும் நோக்கத்தோடு திருக்குறள் பயிற்சி அனைத்து, வகுப்பு மாணவர்களுக்கும் வழங்கி வருகிறோம். திரு. தமிழ்மகிழ்னன் அவர்களை சிறப்பு ஆசிரியராக நியமித்து, வாரம் ஒரு நாள் மட்டும் திருக்குறள் பயிற்சி தருகிறோம். மேலும் திருக்குறள் கற்பிக்கும் ஆசிரியருக்கு ஊதியம் தருகிறோம்.

9. மதநல்லிணக்கத்தை வளர்க்க ஒவ்வொரு கிறிஸ்துமஸ் பண்டிகையிலும் எங்கள் பள்ளியில் படிக்கும் பழங்குடியின மாணவர்களுக்கும், பெற்றோரை இழந்த மாணவர்களுக்கும் கல்வி ஊக்கத் தொகையாக, ஒவ்வொரு மாணவருக்கும் ரூ.1000 வழங்கி வருகிறோம்.

10. தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலம் பேசும் திறனை அதிகரிக்க திறன் வகுப்பறை துணையோடு ஒவ்வொரு நாளும் ஆங்கிலம் கற்றுத் தருகிறோம்.

11. தமிழக அரசின் தன்னிறைவுத்திட்டம் பற்றி விழிப்புணர்வு பாடல் குறுந்தகடு தயாரித்து, வடசிறுவளுர் நடுநிலைப்பள்ளி சார்பாகப் பள்ளிக்கல்வித்துறை செயலர் கரங்களால் வெளியிட்டோர், இயல், இசை, இயக்கம் ஆரோக்கியராஜ் மற்றும் ம. மகிமைராஜேஷ். இந்தக் குறுந்தகட்டின் நோக்கம், தமிழக அரசின் திட்டங்களைப் பயன்படுத்தி, அரசுப்பள்ளியின் தரத்தை நாமே உயர்த்துவது என்ற உயர்ந்த நோக்கத்தை உணர்த்துவது மட்டுமே.

12. பள்ளியின் சிறப்புகள் பற்றிய தொலைக்காட்சி தொகுப்புகள்

தந்தி தொலைக்காட்சி என்னை பற்றியும், பாடல் மூலம் கற்பிக்கும் எனது கல்விமுறைப் பற்றியும், இப்படிக்கு நிகழ்ச்சியில் கோப்பாக வெளிவந்தது.

**ஸ்டாலின்**



ஊராட்சி ஒன்றிய
நடுநிலைப்பள்ளி,
கோனேரிக்குப்பம், விழுப்புரம்
மாவட்டம்.

# அரசு பள்ளியும் ஆசிரியர் - சமூக உறவும்

அரசு பள்ளிகள் ஓர் ஊரின் பொதுச்சொத்து. அரசு பள்ளிகளைப் பாதுகாப்பது என்பது இன்றைய காலக்கட்டத்தில் இன்றியமையாதது. என்னதான் தரமான கல்வித்திட்டம் இருப்பினும், தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் இருப்பினும் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை என்பது குறைந்து கொண்டேதான் வருகிறது. இதற்குப் பல்வேறு உலகமயமாதல், தனியார்மயமாதல், போன்ற பல்வேறு காரணங்கள் இருப்பினும் ஆசிரியர் சமூகம் சார்ந்த உறவுக்கு இடையில் உண்டான பெரும் இடைவெளியும் முக்கியக் காரணமாகும். ஆசிரியர்களின் பிள்ளைகள் தனியார் பள்ளிகளில் படிப்பதாலும், ஊதிய உயர்வு காரணமாகவும் இந்த இடைவெளி தொடர்ந்து அதிகமாகிக் கொண்டே வருகிறது.

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிரியர் பணி மாறுதலுக்கான கலந்தாய்வில் அரசு தொடக்கப்பள்ளி நோணாங்குப்பத்தைத் தேர்வு செய்தேன். என் வீட்டிலிருந்து 2 கி.மீ என்பதால் தேர்வு செய்தேன். அதற்கு முன்பு வரை அந்தப் பள்ளியை நான் பார்த்தது இல்லை. முதல் நாள் பள்ளியில் சேர சென்ற எனக்குப் பெரும் அதிர்ச்சி. பள்ளி என்ற பெயரில் அங்கு இருந்தது ஒரு பாழடைந்த கட்டிடம். பள்ளிக்குப் பெயர் பலகை கூட இல்லை. மாணவர்களுக்காக வாங்கிச் சென்ற மிட்டாய் பாக்கெட் எனக்கு மிகவும் கனத்தது. வகுப்பறையில் மாணவர்களுக்குப் பெஞ்ச் இல்லை. கட்டாந்தரையில் ( சிமெண்ட் பூசப்படாத ஜல்லி தட்டப்பட்ட தரை) அமர்ந்திருந்தனர். பள்ளிச்சூழல் என்னை மிரளச்செய்தது. கழிவறையில் அடைப்பு ஏற்பட்டு நீர் தேங்கி துர்நாற்றம் வீசியது. ஒரு அரசு பள்ளி இப்படி கவனிப்பார் அற்றுக் கிடந்தது என்னை ஒரு நோயாளியைப் போல உணரச்செய்தது.

என்னுடன் அப்பள்ளியைத் தேர்வு செய்த அங்கு பணிமாறுதல் பெற்ற என் சக ஆசிரியர்களுடன் சேர்ந்து இவ்வுரையாடல் மூலம் துவங்கியது எங்கள் பள்ளிப் பணி. இந்நிலையை மாற்ற என்ன செய்யலாம் என்று யோசித்தோம். இது குறித்து கல்வித்துறைக்கும், பொதுப்பணித்துறைக்கும் கடிதம் எழுதலாம் என்று முடிவு செய்து பழையக் கோப்புகளைத் தேடினோம். கடிதம் முன்பே கொடுக்கப்பட்டிருந்தது. துரித நடவடிக்கை எடுக்கப்பட அடுத்த கட்டச்செயலில் உடனடியாக இறங்கினோம்.

நாங்கள் தேர்வு செய்த அடுத்தத் திட்டம் பெற்றோர் ஆசிரியர் சங்கம். அவசரக் கூட்டம் ஒன்றிற்கு அழைப்பு விடுத்தோம். பெற்றோர் ஆர்வமாய் வந்து பங்கேற்றனர். புதிய ஆசிரியர்கள் என்ன சொல்லப்போகிறார்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்திருக்க வேண்டும். பெற்றோர் ஆசிரியர் சங்கத்தலைவர் மற்றும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தோம். பள்ளியின் நிலை இப்படி இருப்பதைக் குறித்தும் மாற்றத்திற்கான நம் முயற்சி என்னவாக இருக்க வேண்டும் என்பதாக அந்தக் கூட்டம் நடந்தது.

மீண்டும் அடுத்தக் கூட்டத்தில் அனைவரும் ஒரு செயல்திட்டத்துடன் வருவதாக உறுதியளித்தனர். பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் மற்றும் பெற்றோர் இணைந்து சென்று துணைமுதல்வர், தொகுதி சட்ட மன்ற உறுப்பினரைப் பார்த்துப் பள்ளியின் நிலைக் குறித்து முறையிட்டனர். கல்வித்துறை அமைச்சர், தொகுதி சட்ட மன்ற உறுப்பினர், மற்றும் கல்வித்துறை இயக்குனர் பள்ளிக்கு வருகைப் புரிந்து பள்ளியின் நிலையை நேரில் ஆய்வு செய்தனர். உடனடியாக நடவடிக்கை எடுக்க உறுதியளித்தனர்.

முதல் கட்டமாகக் கழிவறையைப் பொதுப் பணித்துறையினர் சரிசெய்தனர். எங்களுக்குப் பெரும் நிம்மதியாக இருந்தது. அடுத்தக் கட்டமாகக் கட்டிடம் பழுது பார்க்கப்பட்டது. இந்நிலையில் இந்து நாளிதழில் வெளியான எம் பள்ளி பற்றிய கட்டுரையைச் சட்டமன்ற உறுப்பினர் அமைச்சரவையில் சுட்டிக்காட்டி புதிய கட்டிடம் கட்ட பரிந்துரைத்தார். இதனால் நிதியும் ஒதுக்கப்பட்டது.

அடுத்தக் கல்வியாண்டில் கட்டிடம் பழுது




மாணவர்களின் நாடக விழா

நீக்கப்பட்டு சீர் செய்யப்பட்டது. எனினும் பாழடைந்த ஒரு கட்டிடம் எப்பொழுதும் இடிந்து விழலாம் என்ற நிலையில் இருந்தது. மீண்டும் பெற்றோர் ஒன்று கூடினர். மீண்டும் பள்ளியின் பக்கம் கவனம் ஈர்க்கப்பட்டது. பழைய கட்டிடம் இடிக்கப்பட்டு புது வடிவம் பெற்றது பள்ளி.

இதற்கிடையில் ‘Roundtable’ தன்னார்வலர் குழுமம் மூலம் பள்ளிக்குப் புதிய RO system பொறுத்தப்பட்டது. ஒவ்வொரு விழாவிற்கும் பெற்றோர்கள் வரவழைக்கப்பட்டனர்.அவர்களிடம் கலந்துரையாடி அவர்களின் கருத்துகளை ஏற்றே பள்ளியில் எல்லா விழாக்களும் நடத்தப்பட்டது. பள்ளி விழாக்களில் பெற்றோர்கள் பல பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டு ஒருவர் பந்தல், ஒருவர் ஒலிபெருக்கி என அவர்கள் பள்ளியின் செயல்பாடுகளில் தாங்களாகவே ஆர்வம் காட்ட, அடிக்கடி நடத்தப்பட்ட பெற்றோர் ஆசிரியர் சங்க கூட்டம் பெருந்துணைப் புரிந்தது.

‘Reading corner’ திட்டம் துவக்க விழாவின் போது பெற்றோரை வரவழைத்தோம் . புத்தக வாசிப்பின் அவசியம் மற்றும் தேவைக் குறித்த ஒரு விழிப்புணர்வு நாடகத்தை ஆசிரியர்கள் நடத்தினோம். எங்கள் துணைமுதல்வரும் பள்ளித்துணை ஆய்வாளரும் மற்றும் பெற்றோரும் ஆசிரியர்களின் இம்முயற்சியை வெகுவாகப் பாராட்டினர். மாணவர்களுக்காக ஆசிரியர்கள் நாடகம் நடிப்பதைப் பார்த்து உற்சாகம் அடைந்தனர்.

எங்கள் பெற்றோர் ஆசிரியர் சந்திப்புக் கூட்டம் என்பது பெற்றோருடனான எங்கள் உறவை நெருக்கப்படுத்தியது. குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளைக் குறித்த விழிப்புணர்வு கூட்டம் ஒன்றைத் திட்டமிட்டோம். குழந்தைகளுடன் இவ்வகையான விழிப்புணர்வு உரையாடல்கள், ‘Child line’ வழியாக விழிப்புணர்வு படங்களைத் திரையிடல் என இதன் நீட்சியாக பெற்றோர் ஆசிரியர் சந்திப்பை ஏற்பாடு செய்தோம். முதலில் சற்றுத் தயக்கத்துடன் தொடங்கிய நிகழ்ச்சி குழந்தைகள் பாதுகாப்பு, பெற்றோரின் கவனம் என்ற தலைப்புகளுக்குள் செல்லும் பொழுது, பெற்றோர் தங்கள் தயக்கங்களை உடைத்து சந்தோஷமாகக் கலந்துரையாடத் தொடங்கினர்.

எங்கள் வகுப்பு குழந்தைகள் சிலர் கவலையுடனும் , சில நேரங்களில் அழுது கொண்டும் வந்தனர். இதற்குக் காரணமாக, வீடுகளில் பெற்றோர்

சண்டை மற்றும் தந்தையின் குடிப்பழக்கம் இருந்தது. அடுத்தக் கூட்டத்தில் குடும்ப அமைப்பு மற்றும் குழந்தைகள் மனநலன் எனும் தலைப்பில் பெற்றோருடன் உரையாடினோம். பெற்றோருக்குள் ஏற்படும் சண்டை, சச்சரவுகள் எவ்வாறு இளம் குழந்தைகளைப் பாதிக்கிறது என்பதைப் பற்றியும், அதனால் ஏற்படும் விளைவுகளையும் விவாதித்தோம். அடுத்தக் கூட்டத்தில் அப்பாக்களை மட்டும் அழைத்து இன்னும் விரிவாக அவர்களுக்குப் புரிய வையுங்கள் என சில குழந்தைகளின் அம்மாக்கள் கோரிக்கை வைத்தனர். அடுத்தக் கல்வியாண்டில் குடும்ப நல உளவியாளர் எவரையேனும் அழைத்து இப்பெற்றோர்களுடன் கலந்துரையாடச் செய்யலாம் என முடிவு செய்துள்ளோம்.

எந்த விழாவையும் நாங்கள் தவற விடுவதில்லை. மாணவர் தின விழா, குழந்தைகள் தின விழா, ஆசிரியர் தின விழா, ஆண்டு விழா, கற்றல் விழா, நாடக விழா என மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த மேடையை அமைத்துக் கொடுத்தோம். பெற்றோர் மற்றும் ஊர்மக்கள் பார்வையாளர்கள். பெற்றோரைத் தொடர்ந்து பள்ளிச் செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சியில் பங்கு கொள்ள வைக்க இந்த பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டமும், பள்ளி விழாக்களும் கைக்கொடுத்தன.

மாற்றம் நம்மிலிருந்தே துவங்க வேண்டும் என இம்முயற்சிகள் மூலம் தெரிந்துக்கொண்டோம். எங்கள் பள்ளியின் ஆசிரியர்கள் குழுவாக இணைந்து செயல்பட்டதும், ஒவ்வொரு





பள்ளியின் மாற்றம்

நிகழ்விலும் பெற்றோர்களை இணைத்து செயல்பட முடிந்ததையும், முக்கியமானதாக உணர்கிறேன். கூட்டு வாழ்க்கை மனப்பான்மை மற்றும் கூடிச் செயல்பட்டலால் எம்பள்ளி மாணவர்களுக்கு நல் உதாரணமாக வாழ்கிறோம்.

இவ்வளவு மாற்றங்கள் செய்த பின்னரும் பள்ளியின் மாணவர் சேர்க்கை என்பது கைக்கூடாமல் இருப்பதாகத் தோன்றியது . எனவே இந்த ஆண்டு மீண்டும் பெற்றோருடன் கலந்துரையாடி வண்ண சுவரோவியங்கள் வரையலாம் என முடிவு எடுக்கப்பட்டது. பெற்றோர் தங்கள் பிள்ளைகள் படிக்கும் பள்ளிச் சூழலைக் குழந்தைகளைக் கவரும் வண்ணம் மாற்றம் செய்ய முடிவு எடுத்துவிட்டனர். அதன்படி சுவரோவியப் பணி நடந்து கொண்டிருக்கிறது.

சனி ஞாயிறு என வார விடுமுறை நாட்களில் ஆசிரியர்கள் சுவரோவியப் பணியில் ஈடுபட்டிருப்பதைப் பார்த்து ஊர் பஞ்சாயத்தாரும் பள்ளி வளர்ச்சியில் பங்குபெற்றுள்ளனர்.

எங்கள் பள்ளியில் கடந்த மூன்று ஆண்டுகளில்



**சுபாஷினி**
தொ.ப.ஆ
அ.மே.ப. நோனாங்குப்பம்.

# சிறப்புக் கல்வி ஒரு பார்வை

## சிறப்புக் கல்வியில் பெற்றோர், ஆசிரியர், சமூகத்தின் பங்கு

உயர்நிலை மற்றும் மேனிலைக்கல்விக்கு அடிப்படை ஆதாரமாக இருப்பது தொடக்கக் கல்வியேயாகும் அத்தொடக்கக் கல்வியை கற்பிப்பதில் ஆசிரியரின் பங்கு அளப்பற்கரியது. அதிலும் செவித்திறன் குன்றிய மாணவர்கள் எனில், ஆசிரியரின் பணிச்சுமையும், பொறுப்புகளும் மிக அதிகம், அதை உணர்ந்து சிறப்பாசிரியர்களாகிய நாம் மேலும் பொறுப்புடன் நமது பணிகளைச் செய்வது சிறப்புடையதாகும்.

## கற்றல் சூழலை உருவாக்குதல்

புதிதாகப் பள்ளிக்கு வருகின்ற செவித்திறன் குறையுடைய குழந்தை புதிய சூழலைக் கண்டு மிரட்சியுடனும் புதியவர்களுடன் பழகுவதில் தயக்கமும், பெற்றோரைப் பிரிந்த ஏக்கமும் என பல்வேறு பிரச்சனைகளையும் எதிர்கொள்கிறது. ஆதலால் ஆசிரியர்களாகிய நாம் அக்குழந்தைகளை ஒரு தாயின் அரவணைப்போடு அணுகுதல் வேண்டும்.

செவித்திறன் குறையுடைய தொடக்கக் கல்வி மாணவர்களுக்குப் பாடங்களைக் கற்பிக்கும் முன் ஆசிரியர் கற்பிக்கப் போகும் பாடத்திற்கேற்ப தேவையான படங்கள், நேரடிப் பொருட்கள், வரைபடங்கள், மின்னட்டைகள் எனப் பல்வேறு விதமான துணைக் கருவிகளை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும், அப்போது தான் பாடம் கற்பித்தலும் கற்றலும் எளிதாக நிகழும். செவித்திறன் குறையுடைய மாணவர்களுக்குத் தொடக்கக்கல்வி மிக இன்றியமையாதது. எழுத்து, மொழி, பேச்சு, ஒலி என எதைப்பற்றியும் அறியாமல்தான் அவர்கள் முதலில் பள்ளிக்கு வருவர். செவித்துணைக் கருவியின் முக்கியத்துவத்தை உணர்த்தி அதன் பயன்பாட்டினை விளக்கிக் கூற வேண்டும். சத்தங்களை வேறுபடுத்தி அறிய பயிற்சி அளிக்கவேண்டும். இதனை அதிகராப்பூர்வ பயிற்சியின் (authority training) மூலம் செய்யலாம்.

## பேச்சுப் பயிற்சியின் முக்கியத்துவம்

செவித்துணை குறையுடைய மாணவர்களுக்குப் பேச்சுப்பயிற்சி மிக இன்றியமையாத ஒன்றாகும். முதலில் அவர்களுக்கு மூச்சுப்பயிற்சி அளித்த பின் ஒவ்வொரு எழுத்தாக அது ஒலிக்கும் விதம், பிறக்குமிடம் போன்றவற்றைத் தெளிவாகக் கற்பிக்க வேண்டும். முதலில் சொற்களையும் பிறகு சிறு வாக்கியங்களையும் படிக்கக் கற்பித்தல் வேண்டும். இவ்வாறு தொடர்ந்து பயிற்சி அளிப்பதன் மூலம் உச்சரிக்கவும், பேசவும் பழகுவர்.

## செவித்திறன் குறையுடைய குழந்தையின் கற்றலில் பெற்றோரின் பங்கு

செவித்திறன் குன்றிய குழந்தைகளின் கற்றலில் முக்கிய பங்கு வகிப்பவர்களில் சிறப்பாசிரியர்களுக்கு அடுத்து இருப்பவர் பெற்றோராவர்.

முதலில் அவர்களை முழு மனதாக ஏற்றுக்கொள்ளும் பக்குவமும், பிற சாதாரண குழந்தைகளைப் பார்ப்பது போன்ற மனோபாவமும் பெற்றோருக்கு வேண்டும்.

அவர்களைத் தகுந்த மருத்துவரிடம் அழைத்துச் சென்று முறையான பரிசோதனைகளைச் செய்து தகுந்த செவித்துணைக் கருவியைப் (Hearing aid) பொருத்த வேண்டும்.

தினசரி செவித்துணைக் கருவியைப் பரிசோதித்தும், அவற்றை முறையாகப் பயன்படுத்தும் விதத்தையும் அவர்களுக்குச் சொல்லித் தரவேண்டும். தூங்கும், குளிக்கும் நேரங்கள் தவிர்த்து ஏனைய நேரங்களில் காது கருவியை அணிந்திருக்கப் பழக்கப்படுத்துதல் வேண்டும்.

குழந்தையின் தினசரி நிகழ்வுகளையும், அவர்களின் மனவெழுச்சி அனுபவங்களையும்

கேட்டு, அவர்களிடம் பெற்றோர் மனம் விட்டுப் பேசுதல் வேண்டும்.

குழந்தைகளிடம் பேசும் போது உதட்டசைவுகள் புரியுமாறும், சிறு சொற்களாகவும், சிறு சிறு வாக்கியங்களாகவும் பேசுதல் வேண்டும். அவர்கள் காணும் பொருட்களின் பெயர்களை மீண்டும் மீண்டும் கூறி, அவர்களையும் கூறச் செய்ய வேண்டும்.

பெற்றோர் எவ்வித தயக்கமுமின்றி வெளியிடங்களுக்கு அழைத்துச் சென்று அங்கு அவர்கள் பார்க்கும் பொருட்களுக்குப் பெயர்களைக் கூறி, பல்வேறு விதமான ஒலிகளையும் கேட்கச் செய்ய வேண்டும். அவர்களை உரிய வயதில், சிறப்புப் பள்ளியில் சேர்த்து, சிறப்புக்கல்வி கற்க செய்திட வேண்டும்.

இவ்வாறு பெற்றோரும், ஆசிரியரும், சமூகமும் இணைந்து செயல்பட்டு மாற்றுத்திறனாளிகளின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தல் வேண்டும்.

---



**வசந்தமாலா**
சிறப்பு ஆசிரியை,
ஆனந்தரங்கப்பிள்ளை அரசு மாற்றுத்திறனாளிகள் சிறப்புப் பள்ளி, பிள்ளைச்சாவடி.

# பள்ளி செயல்பாடுகளில் SMC, PTA அமைப்புகளின் பங்களிப்பு

## எங்கள் பள்ளியின் சிறப்பு:

எங்கள் பள்ளி மரங்கள் சூழ்ந்த காற்றோட்டத்துடன் கூடிய விசாலமான வகுப்பறைகளைக்கொண்ட பள்ளி. எங்கள் பள்ளியில் முன்மழலையர் நிலை முதல் தொடக்கநிலை வரை 272 மாணவ மாணவிகளும் 13 ஆசிரிய- ஆசிரியைகளும் உள்ளனர். எங்கள் பள்ளியில் பயிலும் குழந்தைகளுடைய பெற்றோர்களின் பொருளாதார நிலை வறுமைக்கோட்டிற்குக்கீழ் நிலவுகிறது.

எங்கள் பள்ளி ஒரு சாதனைப்பள்ளியாக விளங்குகிறது. ஏனெனில், ஒவ்வொரு வருடமும் அரசு சார்பில் நடத்தப்படும் மழலையர் விழா மற்றும் விளையாட்டுப் போட்டிகளில், எங்கள் பள்ளி பல பரிசுகளை வென்று , வட்டம் - 1 க்கான Overall Trophy என்கிற சுழல்கோப்பையைக் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பெற்றுக் கொடுத்ததில் எங்கள் பள்ளியின் அனைத்து மாணவர்கள், தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களின் பங்கு நிகரில்லாதது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## பள்ளி சமூகத்தின் ஓர் அங்கம்

‘கப்பலுக்கு நங்கூரம் போல்’, ‘வண்டிக்கு அச்சாணி போல்’ எங்கள் பள்ளியின் தலைமையாசிரியை எங்கள் பள்ளியின் வளர்ச்சிக்கும், மாணவர்களின் வெற்றிக்கும் வேராக அமைந்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தேவையான ஊக்கத்தை எப்பொழுதும் வழங்கிக்கொண்டிருப்பார். ஒரு பள்ளி என்றால் தலைமையாசிரியர், ஆசிரியர் மற்றும் மாணவர்கள் என்று முடிந்துவிடாமல், பள்ளியில் செயல்படும் அமைப்புகளான பள்ளி மேலாண்மைக்குழு (SMC) மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கம் (PTA) போன்றவைகளின் செயல்பாடுகள் மற்றும் கடமைகளை எடுத்துக்கூறி, அவர்களையும் கல்வி செயல்பாட்டில் இணைத்துச் செயல்படுவது எங்கள் பள்ளிக்குப் பெருமையே. அதன் தொடர்ச்சியாக நடந்த ஒரு சில நிகழ்வுகளைத் தங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

## கல்வி மேலாண்மைக்குழுவின் ஈடுபாடு:

23-01-2018 அன்று எங்கள் பள்ளியில் மாணாக்கர்களின் கற்றல் அடைவுகளைப் பரிசோதிக்க SMC மற்றும் PTA உறுப்பினர்கள் மற்றும் ஓர் ஆசிரியர் அடங்கியக்குழு ஒன்று முன் மழலையர்நிலை முதல் தொடக்கநிலை



வரை உள்ள அனைத்து வகுப்புகளுக்கும் சென்று, பாடவாரியாகக் குழந்தைகளின் கற்றல் அடைவுகளையும், ஆசிரிய - ஆசிரியைகளின் கற்றல் - கற்பித்தல் செயல்பாடுகளையும் மற்றும் வகுப்பறைகளில் குழந்தைகள் பயன்படுத்தும் கற்றல் - கற்பித்தல் பதிவேடுகளையும் மேற்பார்வையிட்டனர். மேலும், குழந்தைகளுக்குப் பள்ளி மற்றும் வகுப்பறையில் ஏற்படும் இன்னல்களைப் புகார் பெட்டியில் போடுமாறு அறிவுறுத்தப்பட்டனர். அப்பெட்டியில் வரும் புகார்களைத் தலைமையாசிரியர் அவர்கள் ஒவ்வொரு மாதம் கூடும் பள்ளி மேலாண்மைக்குழு கூட்டத்தில் படித்து, அதற்கான தீர்வை பெற்றோர் மற்றும் தலைமையாசிரியர் சேர்ந்து எடுப்பார்கள்.

## கல்வி மேலாண்மைக்குழுவினால் நடந்த மாற்றங்கள்:

குழுவின் உறுப்பினர்கள் பள்ளி வளாகத்தில் அடர்ந்து கிடந்த மரக்கிளைகளையும், புதர்

செடிகளையும் அகற்றி மாணவர்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தனர்.

அதுமட்டுமில்லாமல் மாணவர்கள் பயன்படுத்தி வந்த கழிவறைகளில் ஏற்பட்டிருந்த பழுதுகளையும் சரி செய்து கொடுத்தனர். பள்ளியில் நடைபெறும் ஆண்டுவிழா, சுதந்திர தினம், குடியரசு தினவிழாக்களுக்குத் தாங்களாகவே முன்வந்து அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தனர். பள்ளியில் மாணவர்கள் சேர்க்கையை அதிகரிக்கக் கல்வி மேலாண்மைக்குழுவும், பெற்றோர் ஆசிரியர் கழகமும் தலைமை ஆசிரியருடன் கலந்தாலோசித்து புதிய மாணவர்களின் சேர்க்கைக்காக ஒரு சிறப்பான பேரணியையும் நடத்தினர். இதன் பயனாக இன்று எங்கள் பள்ளியில் மாணவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்பதில் மிகுந்த மகிழ்ச்சியே.

## வகுப்பறை செயல்பாடுகளில் பங்கேற்பு

இக்குழு மேலும் குழந்தைகளுக்குத் தினமும் வழங்கப்படும் பால் மற்றும் மதிய உணவைச் சுவைத்துப்பார்த்து அவர்களது கருத்துகளைப் பதிவேட்டில் பதிவு செய்தனர். அதுமட்டுமல்லாமல், பள்ளியின் சுற்றுப்புறம் மற்றும் குழந்தைகள் பயன்படுத்தும் கழிவறைகள் சுகாதாரமாக உள்ளதா? என்று பரிசோதித்தனர். இந்நிகழ்வு அன்றோடு நின்று விடாமல் தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும் நிகழ்வாக மாறிவிட்டது

பெற்றோர் ஆசிரியர் சங்கம் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு போன்ற அமைப்புகள், தலைமையாசிரியர் விடுப்பிலிருந்த போதும் தாங்களாகவே வந்து, அவர்களின் கடமைகளைச் செய்யத் தவறியதில்லை. கல்விப் பணியில் கடைநிலையில் உள்ள பெற்றோர்களும், சமுதாயத்தினரும் தங்கள் கடமையைச் செவ்வனே செய்வது எனக்கும் பெருத்த பொறுப்புணர்வை உண்டாக்கியது. இதனால் எனது தேடல்களும் நாளுக்கு நாள் அதிகரித்தது.



## நீள்கனவு

அதற்கு தீனி போடும் விதமாக சக தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் இணைந்து செயல்படும் நீள்கனவு குழு மூலம் சமூகம் சார்ந்த உரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றேன். இந்த ஈடுபாடு குழந்தைகளின் பாடம் தொடர்பான கல்விச் செயல்பாடுகளில் என்னை வெவ்வேறு விதங்களில் செழுமைப்படுத்தி வருகின்றது. பாரதியார் பாடலை நடத்தும்பொழுது, பாரதியார் வீட்டிற்கே செல்லுதல் , குடும்பம் தொடர்பான பாடத்திற்கு வித்தியாசமான கதை வாசிப்பு மற்றும் அனுபவங்களுடன் இணைத்தல் எனச் செயல்படத் துவங்கியுள்ளேன். அவ்வகையில் நான் ஈடுபட்ட இச்செயல்பாட்டையும் முக்கியமான ஒன்றாகக் கருதி இங்குப் பகிர்ந்து கொள்கிறேன்

## முடிவுரை

ஒரு பள்ளியின் வளர்ச்சிக்கு ஆசிரியர், தலைமையாசிரியர் மற்றும் அரசு அதிகாரிகள் மட்டும் போதாது பெற்றோர்களின் பங்கும் வேண்டும். அப்போது தான் அப்பள்ளி முழு வளர்ச்சியடைந்த பள்ளியாகத் திகழும் எனக்கூறி, அவற்றை எங்கள் பள்ளியில் செயல்படுத்தி, முழு வெற்றியும் கண்டோம். நீள்கனவு நிகழ்வுகளில் என் வகுப்பறை செயல்பாடுகள் மற்றும் பள்ளி செயல்பாடுகளைப் பகிர்ந்து கொள்வேன். ஆசிரிய நண்பர்களுடன் உரையாடுவது ஆசிரியப்பணிக்குப் பேருதவியாக இருக்கின்றது என்பதை இங்குப் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.



**பத்மினி**
தொ.ப.ஆ
அ.தொ.ப. தட்டாஞ்சாவடி

# கடமைகள் மெய்ப்பட...

## தலைமைப் பொறுப்பும் தயக்கமும்

தலைமையாசிரியர் பதவி உயர்வு கிடைத்த நாளில் எனக்குக் கால் பங்கு மகிழ்ச்சி, முக்கால் பங்கு கவலை ஆசிரியராகப் பணியாற்றிய பொழுதிலிருந்தே பள்ளி அலுவலகப் பொறுப்புகளை மிகச்சிறப்பாகச் செய்யும் ஆர்வமும் பயிற்சியும் இருந்தது எனக்குக் கால் பங்கு மகிழ்ச்சியை அளித்தது ; குழந்தைகளுடன் வகுப்பறையில் அதிக நேரம் செலவிட வாய்ப்பு குறைவு மற்றும் இக்கட்டான, மகிழ்ச்சியான, வருத்தமான, சிறப்பான, பேரின்பமான இனிய வகுப்பறை அனுபவங்களை இழக்கப்போகிறேன் என்பது முக்கால் பங்கு கவலையை அளித்தது. ஆனால் அன்றே வகுப்பறைக்கும் சென்று தொடர்ந்து பாடம் நடத்தவேண்டும் என்ற முடிவோடுதான் இருந்தேன்.

நான் பணியாற்றும் அரசுத்தொடக்கப்பள்ளி வடுவக்குப்பம் எனும் இயற்கை எழில் சூழ்ந்த ஓர் அழகிய கிராமத்தில் அமைந்துள்ளது. முதலில் சென்ற இரண்டு நாட்கள் மிகுந்த வருத்தத்துடன் இருந்தேன். குழந்தைகள் ஒரு புறம், ஆசிரியர்கள் ஒரு புறம், அலுவல் பணி ஒரு புறம் என ஒன்றுடனும் ஒட்டாது இருப்பதை உணர்ந்து மிகவும் வருத்தமடைந்தேன். தாமரை இலைத் தண்ணீரைப் போலப் பள்ளியில் நான் இருப்பதாக என் மனதிற்குப்பட்டது. திருவிளையாடல் நாகேஷ் போல புலம்பித் தவித்தேன். உடன் பணியாற்றிய ஆசிரியர்கள் ‘கவலைப்படாதீர்கள், எல்லாம் சரியாகிவிடும், பொறுமையாக இருங்கள்’ என்று என்னைப் பலவாறு தேற்றி ஆறுதல் அளித்தனர். என்ன செய்வது என்று எனக்குப் புரியாமலேயே இருந்தது. ஓர் ஆசிரியராக இருந்த பொழுது அத்தனை வேலைகளையும் என்னால் மிகச்சிறப்பாகச் செய்ய முடிந்தது. ஆனால் பிவி ஆன பிறகு வேலையின் கடினம் புரிந்தது. ஆசிரியராக இருந்தபொழுது உடன் பணிபுரியும் ஆசிரியர்களிடம், நீங்கள் இதைச்செய்யுங்கள், நீங்கள் அதைச்செய்யுங்கள் என்று பணிகளைப் பிரித்து அனைவரும் ஒன்றாக வேலை செய்வோம். உதாரணமாக, Science Exhibition, Cultural Activities, Sports Day, Annual Day போன்ற எந்த வேலையாக இருந்தாலும் அதிகாரமாக மற்றவர்களிடம் ‘‘நீ இதைச் செய்பா’’, ‘‘என்னுடன் கடைக்கு வா’’ என்றெல்லாம் கூறி வேலைகளைப் பிரித்துச் செய்து முடித்துப் பல வெற்றிகளைக்



கண்டு மகிழ்ந்தோம். அன்று எளிதாகவும் சாத்தியமானதாகவும் இருந்த செயல்கள் இன்று எனக்குப் பெரிய சவால்களாக அமைந்து விட்டன. என்ன செய்யப் போகிறோம் என்று எதுவும் புரியவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல் இருந்தது.

**அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க**
**இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்**

எனும் குறளுக்கு ஏற்றார்போல தலைமைப் பதவி என்பது தீயைப் போன்றே இருந்தது, தீயைத் தொடாமலும் தீயை விட்டு விலகாமலும் இருக்கும் குளிர்காய்பவன் போல என்னுடைய நிலைமை ஆகிப்போனது.

பிறகு அவர்களின் அன்புக்கனிகள் தானாய் விழுந்தன. முதலில் KG குழந்தைகள் என்னைச் சுற்றி வலம்வர ஆரம்பித்தனர். எப்பொழுது நான் வருவேன் என்று எனக்காகக் காத்திருந்து என்னுடன் நன்கு கலந்து பேச ஆரம்பித்தனர். அதன்பிறகு ஒவ்வொரு குழந்தையாக அனைத்து வகுப்புக் குழந்தைகளும் எவ்வித தயக்கமும் பயமும் இன்றி அவர்கள் குடும்பத்தின் செய்திகள், நிகழ்வுகள் முதல் அவர்களின் ஆசைகள், எண்ணங்கள், நோக்கங்கள், எதிர்பார்ப்புகள் என அனைத்தையும் என்னுடன் பகிர்ந்துகொண்டனர். இது இப்பள்ளியில் நான் அடைந்த முதல் வெற்றி. முதல் வெற்றியே பெரும் வெற்றியாக அமைந்ததால் அதில் ஒரு பெருமிதமும் மகிழ்ச்சியும் ஏற்பட்டு



## முதல் வெற்றி :

முதலில் குழந்தைகளிடம் இருந்து ஆரம்பித்தேன். குழந்தைகளிடம் அவர்களுக்கு ஏற்றாற்போல் அதிகம் பேசி அவர்களின் நம்பிக்கையைப் பெற்றேன். வகுப்பு நேரம் தவிர காலை, மாலை மற்றும் மதிய உணவு இடைவேளைகளின் பொழுது அவர்களுடன் ஓடியாடி விளையாடுவது, கதை கூறுவது, என்னைப் பற்றி அறிமுகப்படுத்திக்கொள்வது போன்ற பல அம்புகளை ஒன்றன்பின் ஒன்றாகச் செலுத்திய நம்பிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து இன்று என் பணியில் எனக்கு முழு திருப்தி ஏற்பட்டிருப்பது உண்மை.

## முன்மாதிரியான தலைமை :

நல்ல தலைவனாக இருக்கவேண்டும் என்றால் ஆணையிடுவதைவிட அதிகாரத்தைவிட நாமே இறங்கி செய்யவேண்டும். முன்மாதிரியாக முதல் அடி எடுத்து வைத்தால் அனைவரும் அடுத்த அடி எடுத்து வைப்பர் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. படிக்கும்

வயதிலிருந்தே எனக்குள் அப்படி ஒரு நம்பிக்கை பசுமரத்தாணிபோல் பதிந்துவிட்டது. எந்த வேலைக்கும் என்னை முன் நிறுத்திப் பழக்கிய என் தாய்க்கும், ஆசிரியர்களுக்கும் எனது பணிவான வணக்கங்களையும், நன்றிகளையும் இந்நேரத்தில் சமர்ப்பிப்பதில் பேருவுவகை கொள்கிறேன்.

## களத்தில் இறங்கிப் பணியாற்றுதல்

எங்கள் பள்ளி மைதானம் துண்டு துண்டாக 6 இடங்களில் இருக்கும். நிறைய மரங்கள் இருப்பதால் இடையிடையே கண்டிப்பாகச் சுத்தம் செய்தே ஆகவேண்டும். எனக்கென்று ஒரு இடம் ஒதுக்கித் தினமும் காலையில் வந்ததும் பெருக்கிச் சுத்தம் செய்ய ஆரம்பித்தேன். பள்ளி ஊழியர்கள் தடுத்தும் கேளாமல் இருக்கட்டும் பரவாயில்லை என்று கூறி சுத்தம் செய்வேன். நான் பெருக்கிச் சுத்தம் செய்ய ஆரம்பித்தவுடன், குழந்தைகளும் என்னுடன் சுத்தம் செய்ய ஆர்வம் காட்டினர். மைதானம் சுத்தமானதும் பிற இடங்களை ஒவ்வொன்றாகச் சுத்தம் செய்ய இறங்கியதால் பள்ளி வளாகம், வராண்டா வகுப்பறை என அனைத்து இடங்களும் சுத்தமாகின.

## விழாக்களைக் கொண்டாடுதல்

பள்ளி விழாக்களைக் கொண்டாட ஆரம்பித்தேன். ஒவ்வொரு விழாவிற்கும் என்னென்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்று முன்கூட்டியே ஆசிரியர்களுடனும் பள்ளி ஊழியர்களுடனும் கலந்துரையாடிப் பின்னர் பெற்றோருக்குத் தெரியப்படுத்தி, நடைமுறைப்படுத்தினேன். என் சொந்த செலவில் அனைத்து நிகழ்ச்சிகளையும் சிறப்புற நடத்தினேன். ஆசிரியர்கள் தாமாகவே முன்வந்து நாங்களும் எங்களால் இயன்ற பொருளுதவி அளிக்கிறோம் என்று குழந்தைகளின் ID, BELT போன்ற பல அத்தியாவசியப் பொருள்களுக்கும் சேர்த்து பொருளுதவி அளிக்க முன்வந்தனர்.

## போட்டிகளுக்குக் குழந்தைகளை ஊக்குவித்தல்

குழந்தைகளைப் பல போட்டிகளுக்கு அழைத்துச் செல்ல ஊக்குவித்தேன். குழந்தைகள் தின விழாவில் வட்ட அளவில் மற்றும் மாநில அளவில் முதல் பரிசு கிடைத்தது. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அது பெரிய மகிழ்ச்சியை அளித்ததுடன் என் மீதான நம்பிக்கையையும் அதிகரித்திருக்கும் என்று நினைக்கிறேன். அது மட்டுமல்ல, பள்ளித்துணை ஆய்வாளர் அவர்களின் பாராட்டுதலும், வட்ட அளவில் எங்கள் பள்ளிக்குப் புகழும் கிடைத்தது. தொடர்ந்து பல நிகழ்ச்சிகளை நடத்தினேன்.

## வித்தியாசம்/புதுமை - வெற்றிக்கான வழி

அனைத்துப் பள்ளி விழாக்கள் மற்றும் அறிவியல் கண்காட்சி , முதியவர்கள் தினம் என அனைத்தையும் வித்தியாசமாக/புதுமையாகச் செய்யத் தொடங்கினேன். உதாரணமாக Swachh Bharat நிகழ்வின் போது சாலைத் துப்புரவுப் பணியாளர்களை அழைத்து அவர்களை கௌரவித்தது; சுதந்திர தினத்தன்று குழந்தைகளுக்கு இந்தியத் தலைவர்கள் வேடமிட்டுப் பேரணி நடத்தியது; ஊர்ப் பெருமக்களுக்கு ‘கை கழுவும்நாள், டெங்கு விழிப்புணர்வு நாள் ’போன்றவற்றிற்குத் துண்டறிக்கைகள் அளித்தது; வெளியிலிருந்து யோகா, கராத்தே போன்றவற்றிற்கு மாஸ்டர்களை அழைத்து வந்து பயிற்சி அளித்தது எனப்பல புதுமைகளைப் புரிந்து பள்ளி மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டேன். மகளிர் தினத்தன்று அழகுக்கலை நிபுணரையும் வழக்கறிஞரையும் அழைத்து வந்து விழாவில் பேசவைத்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஊட்டினேன். மருத்துவரை அழைத்து வந்து சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது, நிலவேம்பு கசாயம் மூலம் மாணவர்களின் நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்தியது , பேரிடர் மேலாண்மை குறித்த பயிற்சிகளை மாணவர்களுக்கு அளித்தது என எந்த ஒரு நிகழ்ச்சியாக இருந்தாலும் சாதாரணமாக அல்லாமல் அதில் ஒரு புதுமையைப் புகுத்திச் செய்தது பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றுத் தந்ததுடன், என் பக்கம் அவர்களின் பார்வை பட நல்ல வாய்ப்பாகவும் அமைந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக அவ்வப்பொழுது பள்ளிச்செய்திகள், நியூஸ் பேப்பர் மற்றும் டிவியில் வந்ததால் மேலும் மதிப்பு கூடியதுடன் இயல்பாக என்னுடன் இணைந்து செயல்பட்டனர்.

## பெற்றோர்களின் ஆதரவைப் பெறுதல்

அனைத்து பெற்றோர்களிடமும் பள்ளிச் செயல்பாடுகள் குறித்துக் கலந்துரையாடுவேன். குறிப்பாக SSA ACCOUNTS பற்றி SMC (பள்ளி மேலாண்மைக் குழு) உறுப்பினர்கள் மட்டுமல்லாது அனைவரிடமும் பேசுவேன். 'எறும்பு ஊர கல்லும் தேயும்' என்பது போல பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களின் நம்பிக்கையும் பாராட்டுக்களும் தானாக எம்பள்ளியை வந்தடைந்தன. இதுநாள் வரை இப்பள்ளியை ஒரு பொருட்டாக நினைக்காமல், இந்தப் பக்கம் திரும்பாது இருந்தவர்களின் பார்வை எங்கள்



பள்ளியின் பக்கம் திரும்பியது. மாணவர்களின் வீட்டிற்கே சென்று வகுப்பறை தாண்டிய உணவு பற்றிய, உணவுப் பாத்திரங்கள் பற்றிய கற்றல் செயல்பாடுகளில் ஈடுபடவும் பெற்றோர்கள் உறுதுணையாக இருந்தார்கள்.

## கற்றல் - கற்பித்தல் செயல்திட்ட மாற்றங்களும் மேம்பாடுகளும்

அதன்பிறகு, கற்றல்-கற்பித்தல் கல்விச்செயல்பாடுகளைச் சரிசெய்ய வேண்டும் என்று நினைத்துச் செயல்பட்டேன். அச்சு வள வகுப்பறையின் (PRINT RICH CLASSROOM) தேவையை எடுத்துக் கூறினேன். முன் உதாரணமாக அலுவலக அறையையும் அவ்வாறே மாற்றினேன். அலுவலக அறையில் வைத்திருக்க வேண்டிய அனைத்தையும் சரியாக முறையாக வைத்தேன். பின்னர்ப் பதிவேடுகள் அனைத்தையும் சரிசெய்து ஒவ்வொன்றாய்த் தனியாகப் பிரித்து அடுக்கி வைத்து, அனைத்தையும் அவ்வப்பொழுது பதிவுசெய்து ஆசிரியர்களின் ஒப்பம் பெற்றேன். மேலும் அனைத்துப்பதிவேடுகள் பற்றியும் அவற்றின் முக்கியத்துவங்கள் என்னென்ன, எப்படி எழுத வேண்டும் போன்ற அனைத்தையும் அனைவருக்கும் எடுத்துக்கூறினேன். SSA, CASHBOOK, RESOLUTION, NGC பதிவேடுகள் பற்றி யாராவது வந்து கேட்டால் நான் பள்ளியில் இல்லை என்றாலும் எம் ஆசிரியர்களால் எடுத்துக் காண்பிக்கவும் விளக்கம் கூறவும் முடியும்.

அடுத்ததாக வகுப்பறையில் பாடம் எடுப்பது. குழந்தைகளின் கற்பித்தலுக்கு உதவுவது, பயன்படுத்துவது போன்றவற்றில் கவனம் செலுத்தத் துவங்கினேன். நான் தவறாமல் NOTES OF LESSON/ 5E எழுதி வகுப்புகளுக்குச் சென்று பாடம் கற்பிக்க ஆரம்பித்தேன். செயல்பாடுகள் செய்து கற்பிக்கத்தொடங்கினேன். செயல்திட்ட ஒப்படைப்புகளை (PROJECT) அதிகமாக அளித்து குழந்தைகளுடன் பல செயல்திட்டங்களைச் செய்தேன். குழந்தைகளின் ஆர்வம் அதிகரித்ததை மற்ற ஆசிரியர்கள் பார்த்தனர். HOMEWORK கொடுத்தால் செய்ய மாட்டார்கள், படிக்க மாட்டார்கள் என்று கூறிவந்த ஆசிரியர்களின் பார்வை சிறிது சிறிதாக மாறத்தொடங்கியது. குறிப்பாகக் குழந்தைகளைக் களப்பயணம் அழைத்துச் சென்றது ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் மனப்பான்மையை நேர்மறையாக மாற்றக்கூடிய அளவிற்கு சிறந்த ஊக்கமாய் அமைந்தது உண்மை. குழந்தைகளின் மாற்றம் படிப்படியாய் ஆசிரியர்களிடமும் வந்தது.

வகுப்பறை உற்றுநோக்கலுக்குச் (Class Observation) சென்று அவர்களின் கற்பித்தல் சிறப்பம்சங்களை நிழற்படங்களாக எடுத்து அவற்றை வாட்ஸப் குழுவில் பகிர்ந்து, அவற்றிற்குக் கிடைக்கும் மற்றவர்களின் பாராட்டுதல்களைக் காட்டி ஆசிரியர்களுக்கு ஊக்கம் அளித்தேன். மற்ற ஆசிரியர்களின் தொடர்ந்த பாராட்டும் அவர்களுக்கு ஊட்டச்சத்து பானம் சாப்பிடுவது போல் அமைந்தது. மேலும் புத்துணர்ச்சியுடனும், ஊக்கத்துடனும் கற்பித்தலில் புதுப்புது உத்திகளைக் கையாளத் தொடங்கினர். முக்கியமாக வகுப்பறை

உற்றுநோக்கல் செய்யும் பொழுது ஆசிரியர்கள் வகுப்பு எடுப்பதை அப்படியே எழுதிப் பதிவு செய்வதை என் வழக்கமாக்கிக் கொண்டேன். அந்த வகுப்பு எப்படி இருந்ததோ அப்படியே எழுதுவேன். உம் - ஆசிரியர் கேட்ட கேள்விகள், குழந்தைகளின் பதில்கள், ஆசிரியரின் விளக்கம், அந்த வகுப்பின் சிறப்பம்சங்கள் என அனைத்தையும் பற்றி எழுதுவேன். பின்னர் அந்த வகுப்பின் சிறப்பம்சங்களை எழுதி அதைத்தொடர்ந்து பரிந்துரைக்கப்படும் கருத்துக்களை எழுதிப் பதிவு செய்வேன். மேலும், எப்படி எடுத்தால் குழந்தைகளின் திறன் மேன்மை அடையும் இன்னும் சிறப்பாக எப்படி எடுக்கலாம் போன்ற கருத்துக்களையும் பதிவு செய்து உரிய ஆசிரியரிடம் அந்த நோட்டைக் காண்பித்து ஒப்பம் பெறுவேன். இதையொட்டி உற்றுநோக்கல் அறிக்கை (OBSERVATION REPORT) எழுதி அலுவலகத்திற்கு அனுப்புவேன். அனுப்புவதற்கு முன் உரிய ஆசிரியரிடம் காண்பித்து ஒப்பம் பெறுவேன். இது ஆசிரியர்களிடம் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியது. முன்பெல்லாம் கற்பித்தல் சிறப்பம்சங்களை முயன்று தேடி எழுதுமாறும் பரிந்துரைக்கப்படும் கருத்துக்களை அதிகமாக எழுதுமாறும் நிலைமை இருக்கும். ஆனால் நாளடைவில் இந்நிலை மாறியது. இப்பொழுதெல்லாம் பரிந்துரைக்கப்படும் கருத்துக்கள் எழுதுவதற்கு ஆசிரிய நண்பர்கள் எனக்கு வாய்ப்பு தருவதில்லை. கற்றல் கற்பித்தல் மிகச்சிறப்பாக இனிமையாக மகிழ்ச்சிகரமாக நடைபெறுகிறது.

## பன்முகத்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்:

கராத்தே பயிற்சி, சிறப்பு ஆசிரியரின் மந்திர விளையாட்டுகள் மூலம் சொற்களஞ்சிய மேம்பாடு, அகராதிப் பயன்பாட்டுப் பயிற்சி, பொது அறிவு, மூலிகைகளைப் பற்றிய அறிவு, தலைவர்களைப் பற்றிய அறிமுகம் என மாணவர்களின் பன்முகத்திறன்களை மேம்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளும் காலை வழிபாட்டுக் கூடுகையிலும் வகுப்பறை கற்றல்-கற்பித்தல் செயல்பாடுகளிலும் மேற்கொள்ளப்படுகின்றன. இவைகளில் பெரும்பாலானவை என் சொந்த முயற்சியால் பள்ளி மேம்பாட்டிற்காகவும் மாணவர்களின் நலனிற்காகவும் நடத்தப்பெறுபவை.

என் பள்ளியைத் தரமுள்ள பள்ளியாக மாற்றிய பெருமையும், மகிழ்ச்சியும் என்னுள் ஊற்றெனப்பொங்கி மென்மேலும் சிறந்த பள்ளியாக என் பள்ளியை மாற்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள அடுத்த அடி எடுத்துவைக்கத் தயாராகி உள்ளோம். வருவோம்ல!



**ம. சாந்தகுமாரி**
தலைமையாசிரியர்
அ.தொ.ப. முருங்கப்பாக்கம்




# கற்றலின் வித்தே பள்ளி செயல்பாடுகள் தான் !!!

இதோ ஒரு சீனப் பழமொழி

Teach me, and I will forget
Show me, and I might remember
Involve me, and I will never forget.

பல்வேறு வகையான சூழல்கள், தாக்கங்கள், குணாதிசயங்கள் வாழ்வியல் சிந்தனைகளோடு பள்ளிக்கு வரும் குழந்தைகளை வரவேற்று, கற்றலுக்கேதுவான சூழலை அமைத்து தருவது பள்ளியில் அடிக்கடி நிகழும் பள்ளிச் செயல்பாடுகளே எனலாம். பள்ளிச் செயல்பாடுகள் பாடங்களையும் (subjects) தாண்டி, மாணவர்களுக்கான கற்றல் களங்களாக (learning field) உள்ளன. நைனார்மண்டபம் அரசு தொடக்கப்பள்ளியில் இந்த கல்வி ஆண்டின் பள்ளி செயல்பாடுகள், கற்றல் விளைவுகள் மற்றும் கற்பித்தலில் அடைந்த வெற்றிகளை மீள் சிந்தனையாக பகிர்வதில் அகமகிழ்தேன்.

தலைமையாசிரியையாகிய நானும், ஆசிரியர்களும் பிற பணியாளர்களும் இணைந்து பணியாற்றி பள்ளிச் சமுதாயத்தை உயர்த்துகிறோம்.

**பிரவேச உத்சவ்** பள்ளி திறக்கும் நாளைப் (04.06.18)புது வகுப்பு புகுவிழாவாகவும், பள்ளிக்குச் சேர வரும் புது முகங்களை வரவேற்கும் விழாவாகவும் ஏற்பாடு செய்யப்பட்டு, முதல் நாளே பாடப்புத்தகங்கள், நோட்டுகள் சீருடை வழங்கி, இனிப்புகளோடு வரவேற்றோம். இந்நிகழ்ச்சி பெற்றோருக்கும், மாணவர்களுக்கும் பள்ளி மீது நம்பிக்கையை, பெற்றுத் தந்தது. பள்ளி என்பது இனிய வீடு என்ற சூழலை உருவாக்கியது.

**முக்கிய நாட்களை உபசரித்தல்**
சர்வதேச யோகா தினம் (21.06.18) அன்று காலைப்பேரவையின் போதே யோகாவின் முக்கியத்துவம் விளக்கப்பட்டு, கவனமும், ஞாபக சக்தியும், உடல் வலிமையும் அளிக்க யோகாப் பயிற்சிகள் செய்யப்பட்டன. மாணவர் தினம் (15.07.2018) அன்று, சமூக சேவகர் J.M நாராயணன் உதவியுடன் பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன . டாக்டர். A.P.J அப்துல் காலம் நினைவு நாள் 27.07.2018 அன்று, கலாம் விருப்பப்படி மரக்கன்றுகள் மாணவர்களுக்கு



விநியோகம் செய்து, எங்கள் கலாம் தோட்டத்தில் அவற்றை நட்டு, இளம் விவசாயிகளை உருவாக்கினோம். 15.10.18, உலக கைகழுவும் நாள் (World handwashing day) அன்று, மாணவர்களுக்கு கைகழுவும் 8 படி நிலைகளை விளக்கி நேரடி பயிற்சி கொடுத்தோம். 29.03.19 தேசிய நுகர்வோர் தினம் அன்று, விழிப்புணர்வு பேரணி மூலம் வாழ்வியல் நெறிகளைக் கற்றுக் கொடுக்க முயற்சித்தோம். மேற்கண்டவாறு முக்கிய தினங்களை எண்கள் பள்ளியில், அது தொடர்பான செயல்பாடுகளைச் செய்து அந்த நாட்களின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு உணர்த்த முயற்சித்தோம்.

## பண்பாட்டு மற்றும் கலாச்சார விழாக்கள்

31.10.18 அன்று புகையில்லா தீபாவளி பேரணி நடத்தினோம். இதில், மாணவர்கள் பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் புகையின் தீமைகள், அசௌகரியங்களை உணர்ந்ததோடு, சுற்றுச் சூழல் - காற்று, ஒலி மாசுபடாமலிருக்க புகையில்லா தீபாவளி கொண்டாடுவது பற்றி விழிப்புணர்வையும் பெற்றனர். 11.01.19 அன்று பொங்கல் திருநாள் கொண்டாட்டத்தில் கலாச்சாரம் தொடர்பான விழாக்களைக் கொண்டாடியதால் இயற்கையை நேசிக்கவும் பாதுகாக்கவும் கற்றனர். சில கலசார நற்பண்புகளும் கற்றுக்கொண்டனர். 24.01.19 அன்று பாரம்பரிய விளையாட்டுகள் விழா நடத்தினோம். கபடி, நொண்டி, கயிறு இழுத்தல், கல் தூக்குதல் கோலப்பபோட்டி என பலவேறு பாரம்பரிய விளையாட்டுகள் நடத்தியதால், நம் பண்பாடு, கலாச்சாரம், குறித்து அறிந்து பள்ளியின் மீது அதிகம் நேசத்தை மாணவர்கள் காட்டினர்.

முருங்கப்பாக்கம் Art and Craft village-க்கு களப்பணயம் சென்று நேரடி அனுபவமாக மண்பாண்டங்கள் செய்தல்,

பிளாஸ்டிக்கை தவிர்த்து காகிதப்பைகள் செய்தலைக் கற்றுக்கொண்டனர். கற்சிற்பங்கள், கைவினைப், பொருட்கள், கலை இவற்றைக் கண்டு மகிழ்ந்து அவற்றை செய்தும் காட்டினர். பள்ளி அளவிலான அறிவியல் கண்காட்சியில் (10.08.18) இடம்பெற்ற அறிவியல் படைப்புகள்,




அறிவியல் அறிவை வளர்த்ததோடு இல்லாமல் மாணவர்களை ஆக்கப்பூர்மாக சிந்திக்கவும், செயல்படவும் வைத்தன. இதன் விளைவாக, தேவையற்ற பொருட்களிலும் எதையாவது செய்து படைப்பாற்றலை வெளிப்படுத்தும் அவர்களுடைய creativity வளர்ந்துள்ளது. 1.9.18 தொடங்கி 15.09.18 வரை 15 நாட்கள், தனியாள், பள்ளி, சமூகம், என அனைத்து இடங்களிலும் தூய்மைப்பணிகள் செய்து சுத்தம், சுகாதார வாழ்வு இவற்றில் தன் பங்களிப்பு ஈடுபாட்டின் அவசியத்தைக் கற்றனர்.

கல்வி என்பது வகுப்பறையில் நான்கு சுவர்களைத் தாண்டி ஒரு அழகான பறந்த நோக்கம் வகுப்பறையில் இனிமையாக அமைய பள்ளிச் செயல்பாடுகள் அடித்தளமாக அமையும்.



**அனந்தநாயகி**
தொ.ப.ஆ
அ.தொ.ப, நைனார்மண்டபம்

# மறுவாழ்வு தந்த மருத்துவ நிதி : ஒரு பகிர்வு

"தலைவாரி பூச்சூட்டி என்னை - பாட
சாலைக்குப் போ என்று சொன்னார்.- உன் அன்னை"

- புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

2007 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் தேதி தமிழ் ஆண்டுத்தேர்வு எழுதிவிட்டு வீடு திரும்பிய 2 ஆம் வகுப்பு மாணவன் ஏ. சதீஷ் சாலை விபத்தில் அடிபட்டச் செய்தி அறிந்து அதிர்ச்சியில் உறைந்துபோனேன். அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சதீஷைக் காணச்சென்ற என்னை அவனது தாயார் கட்டிக்கொண்டு "மேடம்! எம் புள்ளையை வந்து பாருங்க ! மேடம், எம் புள்ளையை வந்து பாருங்க !" எனக் கதறியது என் காதுகளில் இன்றளவும் ஒலித்துக்கொண்டிருக்கிறது. வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்தபடி அந்தத் தாய்மையுடன் Trauma Wardக்குச் சென்றேன்.

முகம் மட்டும் தெரிய, உடல் முழுவதும் bandage சுற்றப்பட்டு படுக்கவைக்கப்பட்டிருந்த சதீஜைப் பார்த்ததும், சுவாசம் ஒரு கணம் நின்று வந்தது எனக்கு. "சதீசூ! மேடம் வந்திருக்காங்க, கண்ண தொறந்து பாருய்யா !!" என்று கதறிய தாயின் குரல் கேட்டு ,என்னைக் கண்திறந்து பார்த்த சதீஷைக், கட்டிப்பிடித்து கதறமுடியாத நான் அவனது தாயைக் கட்டிக் கொண்டு "உங்க புள்ளையை காப்பாத்திடலாம்மா, கண்டிப்பாக காப்பாத்திடலாம்" என்று ஆறுதல் கூறி கண்ணீருடன் அறையை விட்டு வெளியேறினேன்.

மருத்துவர்கள், சதீஷின் ஒரு காலை எடுத்துவிடவேண்டும் என்று கூறியது என் காதுகளில் இடியாய் விழுந்தது. மேற்கொண்டு அவர்களிடம் பேசியபோது, சென்னை மியாட் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றால் உடைந்த காலைச் சேர்த்துவிடுவார்கள், ஆனால் அதற்கு நிறைய பணம் செலவாகும் என்றும் கூறினார்கள். நேற்றுவரை மான்குட்டி போல துள்ளியோடிய சதீஜை ஒரு கால் இல்லாமலா பார்க்கவேண்டும் !! அப்படிப்பட்ட கொடுமையை ஒரு தாயாக என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. அதனால் மியாட் மருத்துவமனையில் சேர்த்துக் குணப்படுத்திவிடலாம் என்று சதீஷின் தாய்க்கு ஆறுதல் கூறிவிட்டு கலங்கியக் கண்களுடன் இரவு 1.00 மணிக்கு வீடு திரும்பினேன். அன்று பின்னிரவு வரை DIS V திருமிகு. பூபாளன் ஐயா அவர்களும், முதன்மைக்கல்வி அதிகாரி திருமிகு. கிருஷ்ணராஜ் ஐயா அவர்களும் இரவு முழுவதும் எனக்கு ஆதரவாக இருந்தார்கள் .

உறக்கம் வராமல் யோசித்துக் கொண்டேயிருந்த எனக்கு, மின்னல் ஒளிபோல ஒரு நினைவு வந்தது. ஆம் ! மாணவ மருத்துவ நிதி (students medical fund) . இந்தியா முழுவதும் உள்ள பள்ளிகளில் LKG முதல் 12 ஆம் வகுப்புவரை படிக்கும் மாணவர்கலிடமிருந்து மருத்துவ நிதியாக ஆண்டுக்கு 2 ரூபாய் பெறப்படுகிறது. விபத்து போன்ற ஆபத்து காலங்களிலும், அதிக மருத்துவச் செலவை எதிர்கொள்ளவேண்டிய நோய்க்கு ஆளாகும் சமயங்களிலும், மாணவர் மருத்துவநிதி மாணவர்களுக்குப் பேருதவியாக கைக்கொடுக்கும் என்பதை நான் அறிந்திருந்தேன். அடுத்த நாளே சதீஷை மியாட் மருத்துவமனையில் சேர்த்து அவன் காலை இழக்காமல் காப்பாற்றிவிடலாம் என்ற நம்பிக்கை எனக்கு வந்தது. ஆனால், சதீஷின் பெயர் மருத்துவநிதி பெயர்பட்டியலில் இருக்க வேண்டும் ! என்ற சிறு ஐயம் வந்தது. ஆனால் அரசு பள்ளி ஆசிரியர்கள் மாணவன் கொடுக்கவில்லையென்றாலும், தனது பணத்தைக் கொடுத்து, அனைத்து மாணவர்களது பெயர்களையும் பட்டியலில் கொண்டு வந்திருப்பார்கள் என்ற நம்பிக்கை மிக அதிகமாக இருந்தது. அதுதான் உண்மையாகவும் இருந்தது.

பிறகு, 2 வகுப்பு ஆசிரியை பத்மாவதி அவர்களுக்கு நன்றி கூறினேன். ஓர் ஆசிரியர் தன் குழந்தை பாதிக்கப்பட்டால் என்ன மனநிலையில்

இருப்பாரோ, அதே மனநிலையில்தான் நானும் இருந்தேன் . விடிந்ததும், முதல் வேலையாகத் திருவாண்டார்கோவில் ஆரம்பப்பள்ளிக்குச் சென்று ஆவணங்களைத் தயார் செய்தேன். ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பதால் சிறப்பு வகுப்பு எடுத்துக்கொண்டிருந்த உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் திரு. கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரு. தன்ராஜ் ஆகியோரும் எனக்கு உதவி செய்தார்கள்.

மாணவர் மருத்துவ நிதி உதவிபெற இணைக்கவேண்டிய ஆவணங்கள் :

1. Letter of the head of the institution (original)
2. Letter of the parent (original)
3. Study certificate of the student (original)
4. Class name list of medical funds with the concerned student's name encircled (Xerox copy)
5. School medical fund remittance bill from the inspecting officer (Xerox)
6. NOC from Government Hospital and JIPMER
7. Sometimes, according to the treatment, we should enclose the date wise medical bills also (Xerox copy)

முதலில், பெற்றோரிடம் நிதிக்கான விண்ணபத்தில் அனுமதி வாங்கவேண்டும். பின்பு, தொடக்கப்பள்ளிகள் DIS இடமும், மேனிலைப்பள்ளிகள் CEO,DDW மற்றும் JD இடமும் அனுமதி வாங்கவேண்டும். அடுத்து, அந்த மாணவர் மருத்துவ நிதிக்கு 2 ரூபாய் கட்டியிருக்கிறாரா? என்று பார்த்து, பள்ளிச் சான்றிதழ் ஒன்றைத் தயார் செய்ய வேண்டும்.

தேவையான அனைத்து ஆவணங்களையும் தயார் செய்துக்கொண்டு பள்ளித்துறை ஆய்வாளருடன் சேர்த்து உயரதிகாரிகளைச் சந்தித்தப் பிறகு, அன்று மாலையே சதீஷைச் சென்னை மியாட் மருத்துவமனையில் சேர்த்தோம். சதீஷின் பிஞ்சு உடலில் 8 இடங்களில் அறுவை சிகிச்சை செய்து அவனது காலை இணைத்து சாதனைப் படைத்தனர் மருத்துவர்கள். ஆம் ! மருத்துவர்கள் வாழும் தெய்வங்கள்தான் ! ஒரே மாதத்தில் மாணவர் மருத்துவ நிதியிலிருந்து, சதீஷின் மருத்துவச் செலவான ரூபாய் 2.25 இலட்ச ரூபாய்க்கான காசோலையை, அப்போதைய கல்வியமைச்சர் மாண்புமிகு ஷாஜகான் ஐயா அவர்கள் வழங்கினார். மாணவர் மருத்துவ நிதியின் உதவியால் சதீஷிக்கு மறுவாழ்வு கிடைத்தது. இன்று கல்லூரியில் படிக்கும் இளைஞராக சதீஷைப் பார்க்கும் போது எனக்கு பெருமிதமாகவும், பிரமிப்பாகவும் இருக்கிறது.

மேற்கண்ட நிகழ்ச்சிக்குப்பின் உடனடியாக வில்லியனூர் காவல்நிலையத்தில் ஒரு கடிதம் கொடுத்தேன். காவல்துறையின் மூலம் பள்ளிக்கு எதிரில் barricade வைக்கப்பட்டது. காலை மற்றும் மாலை வேளைகளில் ஒரு போக்குவரத்துக் காவலர் பணியமர்த்தப்பட்டார். மாணவர்கள் நெடுஞ்சாலையைக் கடக்க உதவியாக இருந்தார். காவல்துறை அதிகாரிகளுக்கும் எனது நன்றியினை நேரில் சென்று சமர்ப்பித்தேன்.

பள்ளிக்கு அருகாமையில் தேசிய நெடுஞ் சாலையில், பள்ளிக்கூடம் இருப்பதற்கான எச்சரிக்கை பலகையும் காவல் துறையினரால் வைக்கப்பட்டது.

நமது கல்வித்துறை உயர் அதிகாரிகள் அதற்கான வழிமுறைகளை மிகத்துரிதமாகச் செய்து கொடுத்திருந்தனர்.

நான் தற்போது அ தொ ப தட்டாஞ்சாவடியில் தலைமை ஆசிரியர் பொறுப்பு வகிக்கிறேன். எங்கள் பள்ளி கிராமப்புறத்தில் உள்ளது. பெற்றோர் பெரும்பாலும் கூலி வேலை செய்பவர்களே . அவர்கள் , அவர்களுடைய வேலைப் பளு காரணமாக குழந்தைகளுக்குப் போதிய கவனம் செலுத்த இயலுவதில்லை. இம்மாதிரியான சூழலில், என்னால் இயன்ற அளவிற்கு, இந்த மருத்துவ நிதியைப் பயன்படுத்தி, குழந்தைகளின் மருத்துவ தேவைகளை நிவர்த்தி செய்துள்ளேன். எங்கள் பள்ளியில் ஒரு குழந்தைக்கு hearing aid வாங்கித்தந்தோம் .மேலும், நாவற்குளம்

பள்ளியில் நாங்கள் இரு மாணவர்களுக்கு இந்நிதி மூலம் மாறு கண் வைத்தியம் மற்றும் விபத்து நிவாரணம் பெற்று தந்தோம் . மேலும், கண் பாதிப்புகள் இருந்த பல மாணவர்களுக்கு ஒரு கண் மருத்துவ முகாம் நடத்தினோம். எங்கள் பெற்றோர் ஆசிரியர் சந்திப்புகளில், polio சொட்டுமருந்தின் முக்கியத்துவம் குறித்து கூறி, அவர்களை, அதை போட்டுக்கொள்ளுமாறு அறிவுறுத்துகிறோம். Dyslexic குழந்தைகள் மருத்துவ நிதி மூலம் பயனுறச் செய்துள்ளோம் .

**சவால்கள்**:

JIPMER மற்றும் GH இலிருந்து NOC வாங்குவது கொஞ்சம் சிரமமாக இருந்தது . நாள் தேதி வரிசையில் மருத்துவச் செலவு சீட்டுகள் இல்லாவிட்டால், மனுவை நிராகரிக்க வாய்ப்புகள் உள்ளன.

"மலை வாழையல்லவோ கல்வி - அதை

வாயார வந்து உண்ண வா என் புதல்வி !"

-புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்



**மல்லிகா,**
தலைமை ஆசிரியை,
அ .தொ. ப., தட்டாஞ்சாவடி.

# STRATEGIES EMPLOYED TO IMPROVE THE ATTENDANCE OF LOW PROFICIENT LEARNERS

**My Students: My Inspiration**

I am the class teacher of the first-graders at GPS Reddiyarpalayam, and the eight students I teach are full of innocence and freshness. They are all active young minds who participate in classroom activities with keen interest. They kindle my interest in teaching, which further motivates me to plan and engage them in useful learning experiences. Initially, one of my students was very hesitant and showed signs of being a low-proficient learner. In this article, I have discussed the ways in which the attendance of students, particularly that of low-proficiency ones, can be improved.

## Factors Affecting Students' Attendance

In general, students are far more likely to have poor attendance rates if they feel anxious at school. Especially if they are first-generation learners and lack confidence, they are more likely to avoid attending school regularly. Other factors that influence students' attendance at a personal level may include their attitude towards and relationship with the society they live in. Moreover, if they are intimidated by their surroundings or subjected to any level of injustice, they may withdraw themselves and not engage in any activity performed in the classroom. All of these factors could lead students to perform poorly in classrooms and demotivate them from doing well in school.

To elaborate, a major concern that can affect students' attendance is the attitude of their parents; if they are uneducated or do not value school education, they may not encourage their children to attend school regularly.

In addition, we cannot brush away the general attitude held by teachers and the school community regarding the way they interact with students. A majority of the social as well as personal issues faced by them can be effectively addressed and improved by teachers. Therefore, a huge part of the responsibility of ensuring students' regular attendance and progress rests on our shoulders.The teaching community, having taken ownership of this responsibility, should always remember that 'low attendance equals to low achievement'.

According to the aforementioned statement, if regular attendance of students, including low-proficiency learners, is achieved, their academic performance can be gradually improved over the course of a school year. Further, a final and critical factor in this regard is the relationship between teachers and their students. In fact, chronically absent students view the said relationship (or the lack of it) as the most important factor of all.



## Proven Strategies to Improve Students' Attendance

### 1. Be Passionate About Teaching and Learning

I have always held the belief that the passion and love we hold for the job of teaching has a direct impact on our students. We must remember that as teachers, we must act as responsible learners for a lifetime. Teachers need to be effective learners themselves in order to attain progress in their careers. In my personal experiences, I have always tried to do what suits me the best; I prefer to teach all subjects for Class 1 students and have discussed my interest areas with the seniors in my school. I am thankful to my school's headmistress, who allowed me to experiment with my independent ideas in the classroom. It is most beneficial when your students understand that you are passionate about helping them progress in their learning.

### 2. Show Students They Matter

The students in our schools come from diverse familial backgrounds. It is also very common for us to have students from broken families or families wherein domestic violence is quite prevalent. As responsible teachers, it is therefore important that we make such students feel wanted, accepted and cared for in our school. However, as generic as this may sound, we often forget to do so when we find our students to be too uncontrollable or undisciplined. But, we should always remember to make them feel important and listened for.

### 3. Encourage Extracurricular Participation

In my class, I organise a lot of extracurricular activities for the students. They are more likely to attend classes regularly when they feel a connection with the school. Schools with high rates of participation in school-based extracurricular activities have significantly lower rates of student absenteeism than that of other schools.

A few effective extracurricular activities involve sports and community service. Moreover, science exhibitions and engagement in project-based activities performed in class were also found to be useful.





### 4. Adopt Socio-Emotional Learning Programs

Many of the students who demonstrate chronic absenteeism suffer from personal as well as interpersonal issues. Research shows that in schools which implement socio-emotional training programs, a significant increase in attendance rates is often observed. However, this is not a general practice among the government schools in Pondicherry. But, if the teachers are well informed and independently involved in learning about practices to improve their students' socio-emotional well-being, this can bring about significant progress in the lives of their students.

### 5. Enhance Parent-Teacher Relationship

The parents who value education send their children to school regularly. Therefore, we should spend some time with our students' parents to explain the value of education.

There is a clear link between students and education, which when strengthened enhances their health, wealth and happiness. Thus, teachers need to convey this general message to all parents and ask them to reinforce it in their children.



### 6. Include Peer Group Activities

Low-proficiency learners tend to actively participate in group activities. By means of such activities, they can overcome their hesitation to discuss matters with their peers and clear their doubts. Concrete concepts can be easily taught through group activities.

In my class, I engage my students in such activities as and when possible. All kinds of activity-based learning tasks are performed in groups.

Further, assigning responsibilities to students in class gives them a sense of ownership and fosters their willingness to participate in class room activities.

### Conclusion

By using the strategies, I was able to improve the attendance of one of my students who seemed very disinterested in class at the beginning of the academic year. Using the aforementioned strategies in our classroom, we can surely increase the percentage of students' attendance and help the low proficient learners understand the value of and happiness in learning.



**JAYA R**
PST
GPS REDDIYARPALAYAM

# கற்றலும் அதற்கான உத்திகளும்

## மாணவர்களின் சமூகப்பொருளாதாரச் சூழ்நிலையும் தற்காப்பும்

எமது பள்ளியானது நகரத்திற்கு அருகாமையில் அமைந்திருந்தாலும் கிராம அமைப்பையே பெற்றுள்ளது. பெற்றோர்கள் பெரும்பாலும் தொழிற்சாலைகளுக்கு வேலைக்குச் செல்பவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் பள்ளிநேரம் போக மற்ற நேரங்களில் தற்காத்துக்கொள்ளும் நிலையிலும் தமது உடன்பிறப்புக்களைக் கவனித்துக்கொள்ளும் நிலையிலும் மாணவர்கள் உள்ளனர். எனவே ஆசிரியர்களாகிய நாம் அவர்களின் பாதுகாவலர்களாக இருந்து தாங்களாகவே தற்காத்துக்கொள்ளும் வலிமையை அவர்கள் பெற நாம் உதவிபுரிய வேண்டும். இந்த இளம் வயதிலேயே அவர்களின் கடமைகள் மலையளவினதாக இருக்கின்றன.

## மாணவர்களின் கற்றல் நிலைகள்

மேற்கூறிய சூழல்களால் மாணவர்களுக்கு வாழ்க்கைக்கல்வி என்பது மிகவும் அவசியம் என்பதை நான் உணர்ந்தேன். ஆகையால், வகுப்பறையில் மாணவர்களுக்கு நல்லொழுக்கக்கதைகளைக் கூறுவேன். உண்மை சம்பவங்களின் video பதிவுகளைக் காண்பிப்பேன். மாணவர்கள் தத்தம் வேலைகளைத் தாங்களே செய்து கொள்ள வேண்டிய நிலையுள்ளது. தற்காத்துக்கொள்ளும் வழிமுறைகள் மற்றும் செயல்பாடுகள் குறித்தும் கலந்துரையாடினேன். அதற்கான பொறுப்புக்களை ஒவ்வொரு மாணவர்களிடமும் தனித்தனியே ஒப்படைத்துத் தலைமைப் பொறுப்புக்களை மாணவர்களுக்குப் பகிர்ந்தளித்தேன். சிறிது நாட்களுக்குப் பிறகு நான் மறந்தாலும்கூட ஏதாவது ஒரு மாணவன் தூய்மையாகக் காணப்படவில்லை எனில் மற்ற மாணவர்கள் அவனை வழி நடத்தி நகங்களைக் களைந்துவரச் சொல்வார்கள். உடைகளைத் தூய்மையாக அணிந்துவர அறிவுறுத்துவார்கள்.

## முதன்மையான சிறப்புகள்:

முதல் பாடவேளையின் 10 நிமிடத்தினை நானும் என் வகுப்பு மாணவர்களும் கதை கூறலுக்காக ஒதுக்கினோம். நிறையக் கதைகளை நானும் அவர்களும் பகிர்ந்து கொண்டே இருக்கிறோம்.

முந்தையநாள் வகுப்புகளில் நாங்கள் கற்றுக் கொண்ட அனைவற்றையும் மறுநாள் காலை வழிபாட்டுச் செயல்களுக்குப்பின் நாங்கள் குழுவாகப் பாடல்கள், திருக்குறள், புதிய வார்த்தைகள், கதைகள் ஆகியவற்றைக்கூறி முடிப்போம்.

## சவால்கள்

மிகப்பெரிய வார்த்தைகள் மற்றும் புதிய வார்த்தைகளின் Spelling-யை மனப்பாடம் செய்வது சவாலாக இருந்தது. Syllable பிரித்து வார்த்தைகளைப் புரிந்தும் அறிந்து கொள்கிறோம். எ.கா: Iron/smith, Car/pen/ter. இதனுடன் Phonetic sounds-யையும் பின்பற்றுகிறோம். இதனால், இப்பொழுது பெரிய வார்த்தைகளையும் வாசிக்க எளிமையாக உள்ளது.

## கையாளும் உத்திகள்

- கரும்பலகை மற்றும் புத்தகத்தில் உள்ளதை அனைத்து மாணவர்களையும் வாசிக்கச்செய்தல்.
- குழுக்கற்றலில் மாணவர்கள் அவர்களுக்குள்ளாகவே தங்கள் கற்றல் திறன்களை மேம்படுத்திக்கொள்ளுதல்.
- கதைப்புத்தகங்கள் மற்றும் நூலகப்புத்தகங்களை வாசித்தல்.

மாணவர்கள் மற்ற புத்தகங்களை சகமாணவர்களின் முன்னிலையில் வாசிப்பதால், வாசிப்புத்திறனும் தன்னம்பிக்கையும் மேம்படுகிறது.

பாடத்தில் உள்ள வார்த்தைகளைப் பார்த்துக் குறிப்பிட்ட நேரத்தில் எழுதி முடிப்பதால் அவர்களின் உற்று நோக்கும் திறனும் Time

Management (நேரமேலாண்மை) திறனும் மேம்பட்டன என சக ஆசிரியை என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

## வகுப்பறையில் செயல்படுத்திய முயற்சிகள்

இரண்டு மாணவர்கள் ஒரு தனியார் பள்ளியில் இருந்து எனது வகுப்பில் சேர்ந்தார்கள். அவர்கள் ஆங்கிலம் மற்றும் கணிதப்பாடத்தில் சிறப்பாகச் செயல்பட்டார்கள். ஆனால் அவர்களுக்குத் தமிழ் எழுத்துக்களில் தடுமாற்றம் இருந்தது.



அவர்களுக்குத் தமிழ் எழுத்துக்களை முதலில் தெளிவு படுத்தினேன்.

எ.கா:

ஒலி வேறுபாட்டினை முதல் ஐந்து நாட்கள் தெளிவுபடுத்தினேன். திறமைக்குக் குறைவேதும் இல்லாத எம்மாணவர்கள் எழுத்துக்களை நன்கு புரிந்து கொண்டு முதலில் வார்த்தைகளை வாசித்தனர். இப்பொழுது வாக்கியங்கள் மற்றும் பாடப்புத்தகங்களை வாசிக்கின்றனர்.

## மீள்சிந்தனை

மாணவர்களின் திறனுக்கேற்ப அவர்களை வகைப்படுத்தி, என்னுடைய கற்பித்தல் முறைகளை மேம்படுத்தி, மாணவர்களின் கற்றலை எளிமையாக்குவேன். விளையாட்டு வழி கற்பித்தல் உத்திகளால் கரும்பினும் இனிய கல்வியை மாணவர்கள் எளிமையாகவும் இனிமையாகவும் சுவைக்க என்னால் இயன்றவரை முயற்சிப்பேன்.

---

**இரா. பிருந்தாவதி,**
தொ.ப.ஆ,
அ.தொ.ப, பொறையூர்பேட்.

# பாடல்கள் வழிப்பாடம்

ஆனந்தரங்கப்பிள்ளை அரசு சிறப்புப்பள்ளியில் நான் செவித்திறன் குறையுடைய மாணவர்களுக்கு ஆசிரியராகப் பணிபுரிகின்றேன். நான் சென்ற ஆண்டு என்னுடைய இளமுனைவர்பட்ட ஆய்வுக்காகச் சிறுவர் இலக்கியங்கள் சிலவற்றை படித்தேன். அவற்றில் புதுவைக் கவிஞர் துரை. மாலிறையன் இயற்றிய சிறுவர் இலக்கியங்கள் பற்றி நான் ஆய்வு மேற்கொண்ட போது அவருடைய சிறுவர் நூல்களில் அமைந்துள்ள பெரும்பாலான பாடல்கள் மாணவர்களின் பாடப்புத்தகத்தோடு தொடர்புடையதாக அமைந்துள்ளதை உணர்ந்தேன். இந்தப்பாடல்கள் அனைத்தும் மாணவரின் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும், அறிவை வளர்ப்பதாகவும் அமைகின்றன. அதனால் இத்தகைய பாடல்களை என்னுடைய மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்று எண்ணினேன். வகுப்பறையில் நாம் படங்கள், வரைபடங்கள், உண்மைப்பொருட்கள் எனப் பல விதமான கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்துகின்றோம். நாம் நேரத்தையும் உழைப்பையும் செலவழித்து உருவாக்கும் இது போன்ற உபகரணங்கள் பல சமயங்களில் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் மட்டுமே அமைகின்றன. மேலும், இவை மாணவர்களுக்குக் குறிப்பிட்ட பாடப்பொருளை மட்டும் விளக்குவதாக அமைகின்றன. ஆனால், சிறுவர் பாடல்கள் பாடப்பொருளை நன்றாகப் புரிந்து கொள்வதற்கும் ஏற்ற சிறந்த கருவியாகப் பயன்படுகின்றன. நான் என்னுடைய வகுப்பறையில் பாடத்தோடு தொடர்புடைய நிறங்கள், விலங்குகள், பறவைகள், எண்கள் பற்றிய பல பாடல்களைப் பயன்படுத்தியுள்ளேன் பின்வரும் பாடல்களைப் அதற்கு உதாரணமாக அமைகின்றன.

### நிறத்தொடர்கள்

பச்சை பசேல் என்று
பச்சைக்கிளி பறக்கும்
செக்கச் செவேல் என்று
சேவல் கொண்டை இருக்கும்
வெள்ளை வெளேர் என்று...

### ஆலமரம்

தாடிவைத்த சாமியார் போல்
தனியே நிற்கும் ஆலமரம்
ஓடிச்சென்று சிறுவரெலாம்
ஊஞ்சல் ஆடும் ஆலமரம்
பாட்டி தையல் இலை தைக்கப்...

செவித்திறன் குறையுடைய மாணவர்களுக்கு மொழி கற்பிக்க நாங்கள் பாடல்களை அதிகமாகப் பயன்படுத்துகின்றோம். மேலும், அவர்களின் பேச்சு வளர்ச்சிக்காகவும் குரல் வளத்தை இனிமையாக்கவும் பாடல்களைத் தாளத்துடனும் அபிநயத்துடனும் கற்பிக்கின்றோம்.

பின்வரும் பாடல்கள் படத்தோடு தொடர்புடைய பாடல்களுக்கு உதாரணமாக அமைகின்றன.

### பாடம்: தமிழ் வகுப்பு: 5 செய்யுள் பகுதி: திருக்குறள் - வான் சிறப்பு

வானம் இன்றேல் வாழ்வில்லை
வயிற்றுப் பசிக்குச் சோறில்லை
தானம் இல்லை தவமில்லை
தாவரத்தின் வேரில்லை

இப்பாடல் திருக்குறளின் வான்சிறப்பு என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களைத் தெளிவாக விளக்கும் வகையில் எளிய நடையில் அமைந்துள்ளது.

### பாடம் : தமிழ் வகுப்பு : 5 தலைப்பு : இலக்கணம் - மயங்கொலிகள்

### வளையும் வலையும்

எலியும் மண்ணில் வளை தோண்டும்
எந்த நண்டும் வளை தோண்டும்
மீனைப் பிடிக்க வலை வேண்டும்

### கூத்துக்கலை

கல்லால் ஆனது மலை
கடலில் வருவது அலை
கோவில் உள்ளே சிலை

லகர, ளகர ஒலிகள் மயங்கொலிகளாக உள்ளன. அதனை மாணவர்களுக்குத் தெளிவாக விளக்கும் வகையில் மேற்கண்ட பாடல்கள் அமைந்துள்ளன.

## பாடம் : கணிதம் வகுப்பு : 5
## தலைப்பு : பின்னம்

### பின்னம்

ஒற்றை இரண்டாய்ப்
பிரிப்பதும் பின்னம்
ஒன்றை நூறாய்
உடைப்பதும் பின்னம்

இப்பாடல் பின்னம் என்றால் என்ன என்பதை மாணவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது.

இவை போன்று மேலும் பல, பாடப்புத்தகத்தோடு தொடர்புடைய பாடல்கள் துரை மாலிறையனின் சிறுவர் இலக்கிய நூல்களில் உள்ளன. மேலும், கணிதம், அறிவியல் பற்றிய பாடல்களும், தேசத்தலைவர்கள் பற்றிய பாடல்களும் பல உள்ளன.

### முடிவுரை

1. பாடல்களாகக் கற்பிக்கும் பொழுது மாணவர்கள் ஆர்வமுடன் கற்றலில் ஈடுபடுகின்றனர் மற்றும் மாணவர்களின் நினைவாற்றல் வளர்கிறது.
2. மாணவர்களுக்கு மொழி கற்பிக்கப் பாடல்கள் சிறந்த கருவியாக அமைகின்றன. உதாரணமாக, சொற்களஞ்சியம் வளர்த்தல் மற்றும் அருஞ்சொற்பொருள் எதிர்ச்சொல், சேர்த்து எழுதுக, பிரித்து எழுதுக, ஒருமை, பன்மை, அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி, உவமை, உருவகம், உள்ளிட்ட அனைத்தையும் எளிமையாகக் கற்பிக்கப் பாடல்கள் பயன்படுகின்றன.
3. ஒரு குறிப்பிட்ட பாடத்தைப் பற்றி மாணவர்களுக்கு ஆர்வமூட்டவும், பாடக்கருத்தைத் தெளிவுபடுத்தவும் நாம் பாடல்களைப் பயன்படுத்தலாம்.

பாடல்கள் வழியாகக் கற்பித்தலில் பல நன்மைகள் உள்ளன. மகிழ்ச்சியாக இருக்கும் குழந்தை தான் நன்றாகப் படிக்கும் குழந்தைகள் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

இத்தகைய பாடல்களை இசை கூட்டிப் பாடினால் பசை தடவிய அஞ்சல் தலைபோல் மாணவர்கள் இதயத்தில் ஒட்டிக்கொள்ளும்.



**ஸ்ரீ. ஜெயஸ்ரீ**
**சிறப்பாசிரியை**
தொ.ப.ஆ,
ஆ.அ.சி. பள்ளி பிள்ளைச்சாவடி

# பேசுதலும் கலந்துரையாடலும்-ஒரு பார்வை

பொதுவாக நம் பள்ளிகளில் பேசுவது என்பது நல்ல நடத்தைக்கான அடையாளம் என்று கருதப்படுவதில்லை. பேசுபவர்கள் கற்பதில் கவனம் செலுத்த முடியாது என்று கருதப்படுகிறது. ஆகையால் குழந்தைகள் பேசுவதை ஆசிரியர்களாகிய நாம் தடை செய்கிறோம். ஆனால் உண்மை என்னவெனில் கற்பதற்குப் பேசுதலும், கலந்துரையாடலும் இன்றியமையாதது.

## செலவில்லாத அடிப்படை

ஆசிரியர்கள் குழந்தைகளின் பேச்சைக் கவனமாகக் காது கொடுத்துக் கேட்க வேண்டும். நம்முடைய வேலை குழந்தைக்குச் சொல்வது, அவர்களுடைய வேலை நாம் சொல்வதைக் கேட்பது என்ற நம்முடைய கண்ணோட்டம் மாற வேண்டும். குழந்தைகளின் பேச்சில் அப்படி என்னதான் உள்ளது? இரண்டு குழந்தைகள் பேசிக் கொண்டிருக்கும்போது அவர்கள் சில நோக்கங்களை நிறைவேற்றுகிறார்கள். உதாரணமாக,

- இதுவரை கவனிக்காததைக் கவனித்தல்
- கவனித்ததை உற்று நோக்குதல் ஆகியவற்றைக் கூறலாம்.

இவை எல்லாமே அறிவு வளர்வதற்குத் தேவையான ஆய்வு செய்தல், காரணங்களை ஆராய்தல் போன்ற திறமைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

ஆசிரியர், குழந்தைகளிடம் அவர்களுடைய பேச்சு முக்கியம், அது கேட்கப்படுகிறது, ஆசிரியர் அதை கேட்க விரும்புகிறார் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது அவசியமாகிறது. குழந்தைகளை வகுப்பறையில் பேசத் தூண்டுவதற்குப் பலவகையான வாய்ப்புகளை ஆசிரியர் ஏற்படுத்திக் கொடுக்கலாம். அவைகளில் முக்கியமானவை:

## தன்னைப் பற்றி பேசும் வாய்ப்புகள்

எல்லாக் குழந்தைகளுமே தங்களுடைய வாழ்க்கை சார்ந்த நிகழ்ச்சிகள், எதிர்பார்ப்புகள் போன்ற பல விசயங்களைப் பேச விரும்புவார்கள். வாழ்க்கையுடன் தொடர்பு இல்லாத விசயங்கள் அவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதில்லை.

ஆசிரியர் சிலர் குழந்தையின் சொந்த வாழ்க்கைப் பற்றிய பேச்சுக்கும், கற்பதற்கும் சம்பந்தம் இல்லை என்று நினைக்கிறார்கள். புத்தகத்தில் கொடுக்கப்பட்ட, சொந்த வாழ்க்கைக்குத் தொடர்பு இல்லாதவைகளைக் குறித்து கலந்துரையாட வேண்டும் என்றும் கருதுகிறார்கள். அம்மாதிரியானச் சூழலில் குழந்தைகளின் ஆர்வம் குறைவதோடு அனுபவம் இல்லாத விசயத்தில் பங்கு பெற முடியாமலும் போகிறது.

## பள்ளி மற்றும் சுற்றுச்சூழல் குறித்த உற்றுநோக்குதலும் கலந்துரையாடலும்

பள்ளியின் சுற்றுப்புறத்தில் பல பொருள்கள், விசயங்கள் இருக்கலாம். அவை ஆய்வு செய்யவும், கலந்துரையாடவும் பயன்படுபவை. பள்ளியைச் சுற்றி கடைகள், மரங்கள், கற்கள், வீடுகள், தெருக்கள், வேலி, மண், கதவுகள், பறவைக்கூடுகள், தேன்கூடு, பூக்கள், வண்ணத்துப் பூச்சிகள், திறந்த சாக்கடை, தண்ணீர் குழாய் ஆகிய பல பொருட்கள் இருக்கலாம். இவற்றில் எதை வேண்டுமானாலும் கவனித்துப் பார்க்கவும், பார்த்தவைகளைப் பகிர்ந்து கொள்ளவும், உண்மைகளைக் கண்டறியவும், ஒன்றுடன் மற்றவைகளுக்குள்ள தொடர்புகளை ஆய்வு செய்யவும் பயன்படுத்தலாம். இவற்றை செய்வதற்குப் பேசுதலும் கலந்துரையாடலும் ஒரு சிறந்த கருவியாகும்.

## படங்களைக் குறித்து பேசும் வாய்ப்புகள்

புத்தகங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற பயிற்சி இத்துடன் தேவைப்படும். எளிதில் கிடைக்கும் படங்களைப் பயன்படுத்தலாம். புத்தகங்களை எவ்வாறு கையாளுவது என்பது குறித்த செய்திகளும் பகிர்ந்துகொள்ளுவது இன்னும் சிறப்பு. செய்தித் தாள்கள், வார - மாத ஏடுகளில் வரும் விளம்பரப் படங்கள், காலண்டர்கள், தபால் தலைகள் இவற்றைப் பயன்படுத்தலாம். இவற்றைத்

தவிர பள்ளிகளில் படக்கதைப் புத்தகங்களை வாங்கி உபயோகிக்கலாம்.

ஒரு படத்தை வைத்துக் கொண்டு குழுவாக அது குறித்து கலந்துரையாடுவது பயனுள்ளது. கண்டுபிடித்தல், காரணத்தை ஆராய்தல், தன்னைப் படச்சூழலில் பொருத்திப் பார்த்தல், குழந்தைகள் தங்களையே படத்தில் பொருத்திப் பார்த்துக் கொள்ள உற்சாகப்படுத்தும் கேள்விகள், நடக்கப் போவதை முன்கூட்டிக் கூறுதல், படத்தையும், வாழ்க்கையையும் தொடர்புபடுத்திப் பார்த்தல் போன்றவற்றால் குழந்தைகளின் பார்வையும் LSRW திறனும் வளர்கிறது.

## கதைக்கூறுதலும் கலந்துரையாடுதலும்

கதைகள் உண்மை நிகழ்ச்சிகளைக் கொண்டதாக இருந்தாலும் எவரோ ஒருவரின் கற்பனையில் எழுந்ததாக இருந்தாலும் புதிய விசயங்களை நமது கவனத்திற்குக்கொண்டு வருகின்றன. அதிக முயற்சியோ, சிரமமோ இல்லாமல் நம்மால் இவற்றை ஏற்றுக் கொள்ள முடிகிறது. கதை சொல்வது என்பது கீழ்காணும் அம்சங்களை உள்ளடக்கியது,

1. வாழ்க்கை, அவற்றின் நிகழ்ச்சிகள், பாத்திரங்கள் முதலியவற்றை கோர்வைப் படுத்துதல்.
2. கதையைக் கேட்பவர்களுக்கு ஆவலைத் தூண்டும் விதத்தில் அமைத்தல்.

இவை இரண்டுமே மொழியை வளமாகப் பயன்படுத்த வழி செய்கின்றன. ஆசிரியருக்குக் கதைகூறுவதும் உரையாடுவதும் அடிப்படைத் திறமையாக இருப்பது அவசியம். பயிற்சியாலும், பல காலம் சொல்லிப் பழகுவதாலும் கதை சொல்லும் திறன் வளர்ச்சி அடையும்.

கதை சொன்னப் பிறகு அது குறித்து உரையாடுவது முக்கியமானது. கதை கூறலில் கவனமாகச் செய்ய வேண்டிய ஒன்று, குழந்தைகளுக்குக் கதை தான் முக்கியம். நிகழ்வுகளும் பாத்திரங்களும் முக்கியமல்ல. கதையின் நீதி முக்கியமல்ல, ஆனால் பல ஆசிரியர்கள் நீதியைத் தான் முக்கியமாக கருதுகிறார்கள். இதைத் தவிர்க்க வேண்டும். ஆசிரியர் தெரிந்துகொள்ள வேண்டியது ஒவ்வொரு குழந்தையும், தன்னுடைய விருப்பப்படி கதையுடன் தொடர்பு கொள்கிறது. இது குழந்தையின் அடிப்படை உரிமை. ஆகையால் ஆசிரியர்கள் குழந்தைகளுக்குக் கதைகளைக் குறித்து விருப்பப்படி பேசவும், அதை மாற்றவும், விரிவாக்கவும், சில பாத்திரங்களை மாற்றவும் வாய்ப்புகள் அளித்தல் வேண்டும். இதில் தான் குழந்தையின் வளர்ச்சி உள்ளது என்பதை உணர வேண்டும்.

## நடித்து வெளியிடுதல்

கதையும் நாடகமும் நெருங்கியத் தொடர்புள்ளவை. கதையில் குழந்தை தனக்குள்ளே பல கதாப்பாத்திரங்களாக மாறுகிறது. நாடகத்தில் வசனம், உடல் அசைவுகள் மற்றும் சைகைகள் வழியே பல கதாப்பாத்திரங்களாகப் பங்கேற்று நடிக்கும் வாய்ப்புகள் குழந்தைகளுக்குக் கிடைக்கின்றன. ஒருவர் மற்றொருவராக மாறி அதற்குத் தகுந்த வார்த்தைகளையும், சைகைகளையும் அறிந்துகொள்ள வேண்டும். பல பாத்திரங்களாக மாறும் வாய்ப்பு இதில் உள்ளது. நாடகம் பேச்சை விரிவுபடுத்த உதவும்.

நாடகத்தை மொழிக் கற்றுக் கொடுக்கும் சாதனமாகப் பயன்படுத்த நினைக்கும் ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை - நாடகம் குழந்தைகளின் அன்றாட வாழ்க்கையின் ஒரு அம்சம். நடிக்கும் திறமை இல்லாதது, மற்றவர்கள் குரல் போல் மாற்றிப் பேசுதல், சில சிறு விசயங்களைப் பெரிதாக்கிக் கூறுதல், பாசாங்குச் செய்தல் இவையனைத்தும் எல்லாக் குழந்தைகளும் செய்யும் செயல்களே. இவைதான் நடிப்புத் திறமைக் கருவிகள். ஆசிரியர் பணியில் முக்கியமானது குழந்தைகளின் இந்தத் திறமைகள் வளர ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவதுதான். சாதாரண அன்றாட நிகழ்ச்சிகளை, உதாரணமாக, ஒரு பஸ் எப்படி நின்றது, மறுபடியும் எப்படி கிளம்பியது என்பதை நடித்துக் காட்டுவதில் எல்லாக் குழந்தைகளும் பங்கேற்கலாம். சில கதைகளும் நடிக்கப்படலாம். இவற்றைச் செய்யும் போது போட்டித் தேவையில்லை. ஏனெனில் போட்டி இயல்பான நடிப்புக்குத் தடையாக இருக்கலாம். சூழலை இறுக்கமாக்கச் செய்யும்.

குழந்தைகள் பள்ளிக்கு வருவதற்கு முன்பே தங்களுடைய தாய்மொழியின் அமைப்புகளை

அறிவதில் தேர்ச்சி பெற்று இருக்கிறார்கள். பல தரப்பட்ட தொடர்புகளுக்கும் மொழியை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அறிந்திருப்பதோடல்லாமல், பலதரப்பட்ட மனிதர்களுக்கும் சூழலுக்கும் ஏற்றவாறு மொழியை மாற்றிக் கொள்ளும் அவசியத்தையும் அறிந்திருக்கிறார்கள். மேலும், மற்ற நபர்களின் தன்மையையும், அவர்களின் உறவுகளையும் அறிவுப் பூர்வமாக கணிக்கும் திறமையை அடைந்திருக்கிறார்கள். இந்தத் திறமைகளை அன்றாட வாழ்வின் அனுபவங்களில் இருந்து அவர்களே கற்றுக் கொள்கிறார்கள். தன்னுடைய கவனத்தில் வரும் நிகழ்ச்சிகளைத் தன்னுடைய அனுபவம் என்ற வடிகட்டி வழியே செலுத்தித் தன்னுடைய மொழியைக் குழந்தை வளர்த்துக் கொள்கிறது.

## கலந்துரையாட சில பரிந்துரைகள்

## நீ என்ன பார்த்தாய்?

உதாரணமாக, ஒரு குழந்தையை வெளியில் அனுப்பி வெளியில் என்ன நடக்கிறது என்பதை திரும்ப வந்து மற்றவர்களுக்குச் சொல்ல சொல்வது.

## ஆய்வு செய்தவர்களைக் கேட்டறிதல்

பள்ளிக் கூடத்தின் உள்ளோ, வெளியிலோ குழந்தைகளின் சிறு குழுவை (5 அல்லது 6 பேர்) அனுப்பி ஒரு குறிப்பிட்ட பொருளை ஆய்வு செய்து வருமாறு சொல்லவும். உம். மரங்களின் ஒரு கூட்டம், டீக்கடை, உடைந்த பாலம் அல்லது ஒரு பறவைக் கூடு. குறிப்பிடப்பட்ட பொருளைக் கவனமாக ஆய்வு செய்து அங்கு பார்த்தவைகளை அவர்களுக்குள் கலந்துரையாடிப் புரிந்துக் கொண்டு வரச் சொல்லவும். வெளியில் சென்றக் குழு திரும்ப வரும் வரை மற்ற குழந்தைகளுக்குக் குறிப்பிட்டப் பொருளைக் குறித்து சிறிது விவரமாக ஆசிரியர் கூறுவார். ஆய்வுக்குப் பிறகு குழு திரும்பியவுடன், மற்றவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். ஆசிரியரும் தன்னுடைய முறை வரும்போது கேள்வி கேட்பார்.

## நான் பார்த்தவற்றை ஊகியுங்கள் பார்க்கலாம்

ஒரு குழந்தை வெளியில் செல்லும் கதவருகிலோ அல்லது வகுப்பறைக்குச் சிறிது தூரத்திலோ நிற்கலாம். அங்கிருந்து அவள் பார்க்கும் பல பொருட்களில் ஒன்றைத் தேர்வு செய்கிறாள். உரையாடலுக்கான கேள்விகள் கீழ்க்கண்டவாறு அமையலாம்.

| | | |
|---|---|---|
| குழந்தை 1 | : | அது மெல்லியதாக இருக்குமா ? |
| பதில் 2 | : | இல்லை |
| குழந்தை 2 | : | எவ்வளவு பெரியது ? |
| பதில் | : | அது மிகப் பெரியது... |

கடைசியில் பொருள் சரியாக ஊகிக்கப்பட்டவுடன், சில குழந்தைகள் தங்களுடைய கேள்விகளுக்கானப் பதில்கள் குறித்து ஆட்சேபங்களைத் தெரிவிக்கலாம்.

## ஒப்பிடுதல்

பார்ப்பதற்குக் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான பொருள்களைச் சேர்த்துக் குவித்து வைக்க குழுவாகச் செயல்படுங்கள் என்று அறிவுறுத்தல். உம். இரண்டு, மூன்று மரங்களில் இலைகள், பலதரப்பட்ட செடிகளில் இருந்து பூக்கள், கற்கள் பல வித வடிவங்களில் கத்தரிக்கப்பட்ட காகிதத் துண்டுகள்.

ஒரு கணத்தில் குவியலில் உள்ள ஒரு பொருளின் விவரத்தை நீங்கள் கூறும்போது குழந்தைகள் கவனமாகக் கேட்டு, நீங்கள் நினைக்கும் பொருள் எது என்ற விவரத்தின் அடிப்படையில் முடிவு எடுக்கச் சொல்ல வேண்டும். உம். நான் நினைத்துக் கொண்டிருக்கும் இலை வழுவழுப்பாகவும், நீளமாகவும், ஒரே சீரான ஓரங்களையும் உடையது.

ஒரு சில முறை இந்தச் செயலைச் செய்தப் பிறகு குழந்தைகளையே ஒவ்வொருவராகப் பொருளைத் தேர்ந்து விவரிக்கச் சொல்லவும்.

## கதைப் புனைதல்

மூடிகள், துணித் துண்டுகள், உடைந்த வளையல்கள், காலியான பற்பசைக் குழாய், சிறிய கற்கள், இலைகள் போன்ற பலதரப்பட்ட பொருள்களைச் சேகரியுங்கள். இவைகளை 5, 6 பொருள்களைக் கொண்ட குவியல்களாகச் செய்யுங்கள். ஒவ்வொரு குவியலையும் 5 அல்லது

6 குழந்தைகள் உள்ள குழுவிடம் கொடுங்கள். ஒவ்வொரு குழுவும் அவர்களுக்கு விருப்பப்பட்ட இடத்தில் அமர்ந்து, கொடுக்கப்பட்ட குவியலில் உள்ள பொருட்களைக் குறித்துப் பேசுவார்கள். 15 அல்லது 20 நிமிடங்களில் கதைகள் தயாரிப்பதே இதன் நோக்கம். எல்லாக் குழுக்களும் வகுப்பறைக்குத் திரும்பும் பொழுது ஒவ்வொரு குழுவிலிருந்து ஒரு குழந்தை கதைச் சொல்வர்.

குழந்தைகள் கதைக் கேட்பதில் எத்தனை அனுபவம் உள்ளவர்களாக இருக்கிறார்களோ அந்த அளவுக்கு இந்தச் செயல்பாடு வெற்றிபெறும். ஆசிரியர்கள் இம்மாதிரி கற்பனை வளத்தைத் தூண்டினால் குழந்தைகள் சீக்கிரமே கற்றுக் கொள்வார்கள்.

**பச்சையப்பன்**
மருதம் பண்ணைப் பள்ளி,
திருவண்ணாமலை.

# மாற்றம் ஒன்றே மாற்றம் தரும்

## எனது பள்ளி:

என் பள்ளியில் 902 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அதில் 131 தொடக்கப்பள்ளி மாணவர்கள் ஆண்கள். பெரும்பாலான மாணவர்கள் ஏழ்மை குடும்பத்தைச் சார்ந்தவர்களே.

எங்கள் பள்ளியின் இடப் பற்றாக்குறையின் காரணமாகத் தொடக்கப்பள்ளி திருமண மண்டபத்தில் இயங்குகிறது. எனவே இம்மாணவர்களுக்குப் பாடம் கற்பித்தல் எங்களுக்குப் பெருஞ்சவாலாக இருந்து வருகிறது.

## நான் மேற்கொண்ட முயற்சிகள்:

இரண்டாம் வகுப்பில் 18 மாணவர்களுக்கு நான் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகள் மற்றும் செயல்பாடுகளை இவ்வாய்வறிக்கையின் மூலம் பகிர்ந்து கொள்கிறேன்.

## வகுப்பறைச் சவால்கள்:

வகுப்பறை என்று கூறுவதை விட மண்டபம் எப்பொழுதும் இரைச்சலாகவே இருக்கும். தினமும் பள்ளிக்குச் செல்வதைப் போல் இல்லாமல் திருமண விழாவிற்குச் செல்வதைப் போன்ற அனுபவம் அதிகமாகவே இருக்கும்.

மாணவர்களை வகுப்பறையில் அமரவைப்பதே கடினமாக இருக்கும் அதிலும் அவர்களுடைய கவனம் மற்றும் ஆர்வத்தைத் தூண்டுவது ஆரம்பத்தில் சற்று சிரமமாக இருந்தது. பாடம் கற்பிக்கும் போது நாம் கூறும் வார்த்தைகள் சரியாகச் சென்றடையாது. ஆதலால் படிப்பில் ஆர்வமின்மை காணப்பட்டது.

மாணவர்கள் ஒருவரையொருவர் அடித்துக் கொள்ளுதல் தவறான வார்த்தைகள் பேசுதல் போன்ற செயல்கள் அதிகமாகவே எங்களது பள்ளியில் காணப்படும். விளையாட்டு வகுப்பு பெரும் சவால் நிறைந்ததாக இருக்க இடப் பற்றாக்குறையே காரணம்.

## நோக்கத்தை அடைய மேற்கொண்ட முயற்சிகள்:

மாணவர்களை முதலில் வகுப்பறையில் முழு ஈடுபாட்டுடன் இருப்பதற்கு சில செயல்களைச் செய்தேன். பாடம் மற்றும் பாடம் சார்ந்த செயல்களைச் செய்ய வைத்தேன்.





## செயல்பாடு 1: களிமண் உருவங்கள்

களிமண் கொண்டு வரச் செய்து அவர்களுக்குப் பிடித்த உருவங்கள், பொம்மைகள், காய்கறிகள், பழங்கள் போன்றவற்றைச் செய்ய வைத்தேன். மாணவர்களின் பேச்சு குறைந்தது அவர்களுடைய கற்பனைத் திறன் வெளிவந்தது.

## செயல்பாடு 2: மரத்தடி வகுப்பறை

வகுப்பறைச் சூழலை மாற்றி அமைக்க 'யார் யார் யார்' பாடம் உதவியது பள்ளி அருகில் இருக்கும் ஏரிக்கரைக்கு அழைத்துச் சென்றேன். காற்றின் செயலை மரங்களின் அருகாமையில் அமர்ந்து அறிந்து கொண்டனர். மேலும் பறவைகள் மற்றும் அதன் பெயர்களைக் கேட்டு அறிந்தனர். சற்று நேரம் அமர்ந்து பறவைகள் அதன் பெயர்கள், உணவுப் பழக்கங்கள் மரங்களின் பயன்கள் ஆகியவற்றைப் பற்றிக் கலந்துரையாடினோம்.

## செயல்பாடு 3: நகைச்சுவை நாடகம்

மாணவர்கள் ஒருவரையொருவர் அடித்துக் கொள்வது போன்ற பழக்கங்களைக் கைவிடவும் நல்ல பழக்க வழக்கங்களை வளர்க்கவும் ஒழுக்கத்தை மேம்படுத்தக் கற்பித்தல் மட்டும் போதாது என்பதைப் புரிந்து கொண்டேன். அதனால் நடிப்பை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தினேன்



எனவே நடிகர் வடிவேலு போன்று வேடம் அணிந்தேன்.

நகைச்சுவையாக நடிகரைப் போல் பேசி நடித்தேன். மாணவர்களிடம் ஆர்வம் அதிகரித்தது நல்ல பழக்கங்கள், நீதிக்கதைகளை பேசி நடித்தேன். அவ்வாறாகச் செய்யும் போது மாணவர்களின் மனதில் நீதிக்கதைகள் பதிந்தது. எது தவறு, எது சரி என்று அவர்கள் உணர்ந்தனர். அடித்துக்கொள்ளுதல் போன்ற செயல்கள் மெல்ல மெல்ல குறைந்தது. வாரம் மற்றும் மாதத்தின் இருமுறை இதைப் பின்பற்றினேன்.

## செயல்பாடு 4: முகமூடியை அகற்றிய முகமூடி

மாணவர்களைப் பாடங்களில் வரும் கதைமாந்தர்கள் மற்றும் நீதிக்கதைகளில் வரும் கதைமாந்தர்கள் போல முகமூடியை வகுப்பறை-யிலே செய்து, முகமூடி அணிந்து நாடகம் நடிக்கச் செய்தேன். இதன் வழியாகவும் நல்லவை கெட்டவை எது என அறிந்தனர்.

## பெற்றோர்களுடன் கலந்துரையாடல்:

மெல்ல மெல்ல படிப்பில் ஆர்வத்தைத் தூண்டுவதற்கு இவை போன்ற செயல்பாடுகள் உதவின. மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர் மாணவர் பங்கு மட்டும் போதாது பெற்றோரின் பங்களிப்பும் தேவைப்பட்டது. எனவே பள்ளியில் அவர்களது குழந்தைகள் செய்யும் அனைத்துச் செயல்பாடுகளையும் கைப்பேசி மூலம் பகிர்ந்து கொள்வேன்.

பெற்றோர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர் அவ்வப்பொழுது அவர்களிடம் மாணவர்களின் கல்வித்திறன் வளர்ச்சியை மேம்படுத்தக் கலந்துரையாடினேன்

## நூலகத்தின் பயன்பாடு:



நூலகம் பற்றி அறிந்துகொள்ள மாணவர்களை அருகில் உள்ள நூலகத்திற்கு அழைத்துச்சென்றேன். மாணவர்கள் அங்குப் பொதுமக்கள் அமைதியாகப் படிப்பதைக் கவனித்தனர் (வகுப்பறையில் எவ்வாறு நூலகத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் கூறினேன்) மாணவர்கள் அங்கு மேசையின் மீது உள்ள சிறுவர் மலர் செய்தித்தாள்கள் கதைப்புத்தகம் போன்றவற்றை அவர்களாகவே எடுத்து வாசிக்க ஆரம்பித்தனர்.

அடுத்த நாள் ‘Reading Corner’ மற்றும் திசைமானியில் கொடுத்த புத்தகத்தைப் பயன்படுத்தி வகுப்பறையைச் சிறு நூலகம் போன்று மாற்றியமைத்து அவர்களைப் படிக்கச் செய்தேன்.

எனது சிறு முயற்சியாக மாணவர்களின் திறனை வெளிக்கொணரும் விதமாக அவர்களுக்குத் தெரிந்த பாடல் எழுதுதல், படம் வரைதல் விடுகதை எழுதுதல், கதை எழுதுதல் போன்றவைகளைச் செய்யச் சொன்னேன். மாணவர்கள் அவர்களுடைய திறனை வெளிக்கொண்டு வந்தனர். அவர்கள் கொடுத்த அனைத்தையும் ஒன்றுதிரட்டி சிறுவர் மலராக உருவாக்கினேன்.

அவற்றை மற்ற வகுப்பு ஆசிரியர்கள் மாணவர்கள்



மற்றும் பெற்றோர்களிடமும் பகிர்ந்தோம்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் கைவண்ணத்தைக் கண்டு வியந்தனர். மாணவர்கள் அவர்களுடைய படைப்பைப் புத்தகமாகப் பார்த்த பொழுது மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்.

## பிரதிபலிப்பு:

எப்பொழுதும் இரைச்சலாக காணும் மண்டபம் (பள்ளி) சில மாற்றங்களைக் கண்டது. வகுப்பறையில் கவனம் இல்லாத மாணவர்கள் தற்பொழுது என்ன செய்யப் போகிறோம் என்ற ஆர்வம் வந்தது.

பாடத்துடன் சிறிது அன்பும் நகைச்சுவையும் சில செயல்பாடுகளையும் சேர்த்ததால் மாணவர்களுக்குப் படிப்பின் மீது ஆர்வம் பிறந்தது. மாணவர்கள் செய்யும் செயல்பாடுகளைப் பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்தியதால் அவர்களின் முழு ஒத்துழைப்பும் கிடைத்தது.

வாசிப்பதில் இன்னும் சில மாணவர்கள் தடுமாறுகின்றனர். இருப்பினும் அவர்களிடம் ஆர்வத்தைத் தூண்டியதே எனக்குக் கிடைத்த வெற்றி. அனைத்து செயல்பாடுகளுக்கும் அனுமதி கொடுத்து உதவிய எனது தலைமையாசிரியை அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**ரா. பரிமளா**
தொ.ப.ஆ,
அரசு உயர்நிலைப்பள்ளி,
திருக்கனூர்

# சதீஷுடன் எனது பயணம்

நான் நான்காம் வகுப்பு வகுப்பாசிரியர், எனது வகுப்பில் சதீஷ் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்னும் மாணவன் படிக்கிறான். நான்காம் வகுப்பு மாணவன் என்றாலும் அவனிடம் கற்றல் குறைபாடுகள் அதிகம் காணப்பட்டன. ஏனெனில், அவனின் யோசிக்கும் திறன், பேசும் திறன், எளிய கேள்விகளுக்குப் பதில் கூறும் திறன் போன்றவை ஒன்றாம் மற்றும் இரண்டாம் வகுப்பு மாணவர்களைப் போன்று காணப்பட்டன. நான் பாடம் நடத்தும் போதும் அவனது பார்வை மற்றும் சிந்தனைகள் வகுப்பிற்கு வெளியே தான் இருக்கும். கற்றல் துணைக்கருவிகள் மற்றும் காணொலிகளை நான் பயன்படுத்தும் பொழுதும் அவன் அதனைப் பார்க்கக்கூட மாட்டான். அவன் உணவு உண்ணும் முறை, மற்ற மாணவர்களிடம் நடந்து கொள்ளும் விதம், நடத்தைகள் போன்றவை எல்லாம் எனக்கு பெரும் சவாலாகவே இருந்தது.

## படித்தல் திறன் :

சதீஷ் என்னிடம் வரும்பொழுது தமிழ் மற்றும் ஆங்கில எழுத்துக்களை அடையாளம் கண்டு கொள்வதில் சற்று சிரமம் இருந்தது. வாய்ப்பாடு 4 வரை தெரிந்திருந்தது சற்றுத் தடுமாற்றம் இருந்தது.

## தமிழ் எழுத்துக்களைக் கண்டறிதல்

வரைபட அட்டை மூலம் தமிழ் எழுத்துக்களைச் சொல்லி கண்டறியச்செய்தேன் ஐ-வரிசை வரை நன்றாக அடையாளம் காண முடிந்தது. ஒ, ஓ, ஔ, வரிசையில் சற்றுத் தடுமாற்றம் இருந்தது. பின்பு கூழாங்கற்களில் அதே போன்று அனைத்து உயிர்மெய் எழுத்துக்களையும் மூன்றுமுறை Box-ல் போட்டு எழுத்தினைக் கண்டறிந்து அடுக்கச்செய்தேன்.

பின் அவனுக்குத் தெரிந்த எளிமையான வார்த்தைகளைப் படிக்கச்சொன்னேன். (உ.தா சிங்கம், ஆப்பிள், திராட்சை, மாம்பழம்) மற்றும் அவனைச்சுற்றியுள்ள பொருட்களின் பெயர்கள்.

## ஆங்கில எழுத்துக்கள் :




ஆங்கில Alphabets அனைத்தும் அவனுக்குத் தெரியும் என்பதால் எளிமையான வார்த்தைகளை வரைபடம் மூலம் படிக்கச்செய்தேன்.

பின் (3 letter words) ஒவ்வொரு மாணவர்களிடம் கொடுத்து சதீஷ் அருகில் நிற்கச் செய்தேன். பின் நான் அந்த word -யைக் கூற அது எந்த மாணவனிடம் உள்ளது என்பதைக் கண்டறியச் செய்தேன். இதே Activity பல வார்த்தைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது.




பின் அவனாகவே புத்தகத்தில் உள்ள சில words-ஐ கூறினான். சில 5 - 6 letters , words, pronunciation அவனிடம் சிறு தவறாக இருந்தாலும் ஓரளவிற்குச் சரியாகவே இருந்தது. அவன் தவறாக உச்சரித்த சொற்களை மீண்டும் Puzzle Board மூலம் சொல்லிக் கொடுத்தேன். அதன்பின் சரியாக உச்சரிக்க ஆரம்பித்தான்.

## கணித எண்கள் 1 - 100




1 முதல் 100 எண்களை வரைபட அட்டையில் அவனிடம் காண்பித்து அடையாளம் காணச் செய்தேன். பின்பு 1 முதல் 100 வரை எண்களைக் கூழாங்கற்களில் எழுதி அதனைப் பத்துப் பத்தாகப்



பிரித்து ( 1-10, 11 - 20) box-ல் போடச் செய்தேன்

எண்களைக் கூட்டுவதில் அவனுக்குச் சிரமம் இருந்தது. மூன்று வட்டத்தில் ஒரு வட்டத்தில் சில கற்களும் (5) மறுவட்டத்தில் (4) கற்களும் வைத்து அதே எண் கற்களை சதீஷ்-ன் இரு கைகளிலும் கொடுத்துக் கூட்டச்செய்தேன்.

இன்று, சதீஷால் எழுபது சதவிகிதம் வார்த்தைகளை புத்தகத்திலிருந்து படிக்க முடிக்கிறது. முன்னிருந்த நிலையிலிருந்து மாற்றம் தெரிகிறது. படிப்பில் ஆர்வம் காட்டுகிறான், வகுப்புகளைக் கவனிக்கிறான். நான் தொடர்ந்து அவனுடன் அடுத்த வருடமும் பயணிக்க உள்ளேன்.



**அ.சந்தோஷ் குமார்,**
தொ.ப.ஆ,
அ.தொ.ப, வடுவக்குப்பம்.

# வரைபடங்களும் என் வகுப்பும்

### பள்ளியின் பின்புலம் :

எனது பள்ளி அமைவிடமானது, கிராமமும் அல்லாத நகரமும் அல்லாத பகுதி ஆகும். அதிக விவசாய நிலங்கள் கிடையாது. பெரும்பாலும் தனியார் கம்பெனிகளை நம்பியே அப்பகுதி மக்கள் வசிக்கின்றனர். எனவே எம்பள்ளி குழந்தைகள் அவரவர் பெற்றோருடன் செலவிடும் நேரம் குறைவானதே.

ஆகவே என்னிடம் பயிலும் மாணவர்களின் பெரும்பான்மையான வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் வகுப்பறையில் தான் நிகழ்கிறது என்பதை உணர்ந்து வகுப்பறைச் சூழலை இனிமையாக்க விரும்பினேன்.

### கற்பித்தல் குறித்த கண்ணோட்டம்:

தற்போதுள்ள CBSE பாடத்திட்டமானது எந்தக் கருத்தையும் பாடப்பொருளையும் நேரடியாக எடுத்துரைக்காமல் சிறு சிறு செய்திகளாக வழங்குகிறது. எனவே அதிக பொறுப்பு ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. அந்த பொறுப்பினை உணர்ந்து செயல்படத் தொடங்கும்போது மாணவர்கள் தம் குழந்தைத்தனமும் கற்கும் திறன் குறைபாடுகளும் பெரும் சவால்களாக இருந்தன.

அனைத்துப் பாடங்களையும் ஒப்பிடும்போது சூழ்நிலையியல் கல்வி மிகவும் அதிக எண்ணிக்கையுள்ள பாடங்களும், கடினமான பாடக்கருத்துகளுமாக, ஆசிரியர்களைத் திக்குமுக்காடச் செய்கிறது.

### கடந்த கல்வி ஆண்டில் நான் எடுத்த சில முயற்சிகள்

சூழ்நிலையியல் பாடம் என்பது அறிவியல் மற்றும் சமூக அறிவியல் பாடங்களை உள்ளடக்கியது ஆகும். எனவே அறிவியல் கருத்துகளையும் சமூக அறிவியல் கருத்துகளையும் ஒருங்கே கற்பித்தல் வேண்டும். அத்தகைய கருத்துகளைக் கற்பித்து வார்த்தைகளை மனதில் பதியவைத்து பிறகு அவற்றை மாணவர்களிடமிருந்து திரும்பப் பெறுவது என்பது ஆசிரியர்களின் வழக்கமான பணி. அவ்வாறு, பாடம் தொடர்பான புதிய வார்த்தைகளையும், கேள்வி பதில்களையும் வரைபடங்களோடு கூடிய வார்த்தைகளாக ஏடுகளில் எழுதிப்போடும் போது மாணவர் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். பின்னர் வரையும் முயற்சிகள் எதிர்கொள்கின்றனர்.

முதலில் விளையாட்டாகத்தான் தொடங்கியது படங்கள் வரையும் வழக்கம். மாணவர்களுக்கும் பிடித்துப்போகவே பாடப்பகுதியில் காணப்படும் படங்களையும், பாடக்கருத்துக்கள் தொடர்பான படங்களையும் கரும்பலகையில் வரைய ஆரம்பித்தேன். மாணவர்கள் ஆர்வத்துடன் அவற்றைப் பார்த்து ஏடுகளில் வரையத் தொடங்கினர். ஒரு சிலர் மிக நன்றாக வரைந்தனர். சிலர் சுமாராக வரையத் தொடங்கினர்.

**அனைவரும் வட்டமாக அமர்ந்துகொண்டு நமது நாட்டைப் பற்றியும், மாநிலங்களின் அமைவிடம், முக்கியத்துவம் குறித்தும், வரலாற்றுக் கதைகள், புகைப்படங்கள் மூலம் அறிமுகப்படுத்தினேன். மாநிலங்கள் எந்த அடிப்படையில் பிரிக்கப்பட்டவை என்பது குறித்தும் எடுத்துரைத்தேன்.**



அவர்கள் ஆர்வத்திற்குத் தீனி போடும் விதமாக வரைவதற்குத் தேவையான பென்சில்கள், வண்ணப்பென்சில்கள், மெழுகு வண்ணங்கள், ஸ்கெட்ச், போன்றவற்றை அனைவரின் பயன்பாட்டிற்காகவும் வகுப்பறையில் தயார் நிலையில் வைக்கத் தொடங்கினேன்.

மாணவர்களின் பொறுப்பு அதிகமாவதை உணர்ந்து தெளிவாக வரையத் தொடங்கினர்.

அத்திறமையை நான் சூழ்நிலையியல் பாடத்தின் வினா - விடைகளைப் படங்களாக வரைந்து கொள்ளப் பயன்படுத்தத் தொடங்கினேன்.

வகுப்பறை, கற்றல் கற்பித்தல் மற்றும் மகிழ்ச்சியால் நிரம்பி வழிந்தது.

## கற்பித்தலுக்கான கண்ணோட்டம்

## நோக்கம் :

அரசுப்பள்ளி மாணவர்கள் கடந்து வரும் குடும்ப சூழ்நிலைகள் நம்மால் நினைத்துக்கூட பார்க்க இயலாதவை. எனவே அத்தகைய மாணவர்களின் மனநிலையை நாம் மேலும் கலக்கமடையச் செய்யாமல் கல்வியைப் பாடப்பகுதியைக் கருப்பொருளைக் கற்றல் அடைவுகளைக் கொண்டு சேர்ப்பது இமாலயப் பணியாக இருந்தது. மாணவர்களை அவசரப்படுத்தாமல் அவதிப்படுத்தாமல் அச்சுறுத்தாமல் பாடங்களைப் போதிப்பதே எனது தலையாய நோக்கமாக ஆனது.

## கற்பித்தல் அணுகுமுறை:

நான் பணிபுரிந்த கடந்த 12 ஆண்டுகளில் நான்கு வகையானப் பாடத்திட்டங்களைக் (Curriculum) கையாண்டு உள்ளேன். அவை அனைத்திலும் மாணவர்களின் கற்றல் சவால்கள் என்பது ஒரே மாதிரியாகத்தான் இருந்தது.



"பாடக்கருத்துகளை மனப்பாடம் செய்வது". எனவே பாடக்கருத்துகளை ஓவியங்களாக வரையத் தொடங்கினேன். குழந்தைகளுக்கு ஓவியங்கள் எவ்வளவு பிடிக்குமென அப்பொழுதுதான் முழுமையாக உணர்ந்தேன். அன்றிலிருந்து ஓவியங்களைப் பழகத் தொடங்கினேன்.

## வகுப்பறை பரிவர்த்தனை - வகுப்பறைச் செயல்பாடுகள்:

புத்தகங்களில் இடம்பெற்றுள்ள படங்களைக் கரும்பலகையில் வரையத் தொடங்கினேன் ஆங்கிலப் புத்தகங்களில் உள்ள படங்கள் வண்ணமயமாக இருக்கவே, அவற்றை வரையத் தொடங்கினேன்.

மாணவர்கள் ஆர்வத்துடன் கரும்பலகையைக் கவனிக்கத் தொடங்கினர். அதன் பின்னர் கரும்பலகை முழுவதும் சிறு சிறு ஓவியங்களால் நிரப்பத் தொடங்கினேன்.

மாணவர்கள் தினமும் ஆர்வத்துடன் வகுப்பறைக்கு வரத் தொடங்கினர். அதன் பின் எனது பொறுப்பு அதிகமானது. புதிய ஓவியங்கள் வரைந்துப் பார்த்துச் செல்லத் தொடங்கினேன். ஓவியங்களை நான் வீட்டுப்பாடமாக வரையத் தொடங்கினேன்.

கரும்பலகையில் நான் ஓவியங்கள் வரைவதைப் பார்த்து மாணவர்களும் அவரவர் ஏடுகளில் வரையத் தொடங்கினர். அவர்தம் ஆர்வத்தைக் கற்றல் பக்கம் திசைத்திருப்ப எண்ணினேன்.

CBSE பாடங்களுள் சூழ்நிலையியல் பாடத்திட்டமானது சமச்சீர் பாடத்திட்டத்தில் உள்ளதுபோல் அல்லாமல் சற்று விரிவானப் பாடக்கருத்துகளோடு உள்ளது. அவற்றில் இடம் பெறும் புதிய வார்த்தைகளில் அறிவியல் கூறுகளும் (terminology) மாணவர்களுக்குச் சற்று கடினமானதாக உணர்ந்தேன். எனவே அறிவியல் பாடம் தொடர்பான சிறு சிறு படங்கள் வரையத் தொடங்கினேன். வகுப்பறை மகிழ்ச்சியானது.



## வரைபடங்கள் கற்பித்தல்:

சூழ்நிலையியல் புத்தகத்தில் ஒவ்வொரு பாடமும் ஒவ்வொரு இந்திய மாநிலத்தில் நிகழ்வதைப்போல் கொடுக்கப்பட்டுள்ளது. அதனால் ஆசிரியர்கள் அம்மாநிலத்தைப் பற்றிக் கற்பிப்பதா? அல்லது அப்பாடக்கருத்துகளைக் கற்பிப்பதா? என்ற சந்தேகத்தில் இரண்டுமே அரைகுறையாகக் கற்பிக்கப்படுகிறது என்பது தான் நடைமுறை.

எனவே நான் ஏதேனும் ஒன்றை முழுமையாகக் கற்றுக் கொடுக்க எண்ணி இந்திய வரைபடத்தைத் தேர்ந்தெடுத்தேன். அதற்காகப் பாடக்கருத்துகளை விட்டுவிடவில்லை.

தினமும் ஒரு பாடவேளை அல்லது சலிப்பாக தோன்றும் நாட்களில் இரண்டு பாடவேளை வரைபடத்தின் அருகில் அனைவரும் வட்டமாக அமர்ந்துகொண்டு நமது நாட்டைப் பற்றியும், மாநிலங்களின் அமைவிடம், முக்கியத்துவம் குறித்தும், வரலாற்றுக் கதைகள், புகைப்படங்கள் மூலம் அறிமுகப்படுத்தினேன். மாநிலங்கள் எந்த அடிப்படையில் பிரிக்கப்பட்டவை என்பது குறித்தும் எடுத்துரைத்தேன்.

இந்தியாவின் அமைவிடம், இயற்கை வளங்கள், நில அமைப்புகள், பருவநிலைகள், எல்லைகள், அண்மைய நாடுகள், இந்தியாவிலிருந்து பிரிந்த நாடுகள், யூனியன் பிரதேசங்கள் உருவான விதம் ஆகியவற்றை எடுத்துக் கூறினேன்.

மாணவர்கள் சலிப்படைவர் என நினைத்தேன், மாறாக குதூகலமாகக் கவனித்தார்கள், சில நாட்களில் அவர்களே குழுக்களாக அமர்ந்து வரைபடங்கள் வாசிக்கத் தொடங்கினர்.

பின்னர் அவர்களே, இந்திய வரைபடத்தை வரைவது மாநிலங்கள் பிரிப்பது போன்றவற்றைச் செய்யத் தொடங்கினர், எனவே நான் அவ்வப்போது வரைபடங்கள் கொடுத்து வண்ணம் தீட்டச் செய்வது, இந்திய இயற்கை அமைப்புகளை கைஅச்சுகள் கொண்டு வண்ணம் தீட்டுதல் போன்ற செயல்பாடுகள் செய்வதன் மூலம் மாணவர்கள் வரைப்படத்தில் சிறிது தெளிவு பெற்றனர்.

## மீள் சிந்தனை:

வினா விடைகளை வரைபடங்கள் மூலம் அறிமுகப்படுத்துதல் என்பது புதுமையான முயற்சியாக எனக்குத் தோன்றினாலும் அனைத்து பாடங்களிலும் வரைபடங்கள் வரைய இயலாது. அந்தக் குறிப்பிட்ட பாடம் சரியாகச் சென்று சேராது. ஓவியம் பிடிக்காத சில குழந்தைகளும் என் வகுப்பில் இருந்தனர்.அவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்யச்சற்று சிரமமாக இருந்தது. அதனால் அடுத்தக் கல்வியாண்டில் இன்னும் சில நல்ல மாற்றங்கள் கொண்டு வந்தால் ஒழிய மாணவர்களுக்குப் பாடம் ருசிக்காது.




அடுத்தக் கல்வியாண்டில் ஓவியங்களுடன் காகித வடிவங்கள் (paper cut-outs) அறிமுகப்படுத்தலாம் என்ற யோசனை உள்ளது. கல்வியை இனிமையாக்கும் முயற்சியை நான் என்றும் தொடருவேன்.

**மு. ஹேமாசரஸ்வதி**
தொ.ப.ஆ
அ.தொ.ப. பொறையூர்பேட்

# பிரம்புபதேசம்

பள்ளிக்கூடத்துக்கே உரிய உயிரோட்டமுள்ள ஓசைகளான ஓர்.. ஒன்..ஒன்னே..ஈ..ரெண்டா நாலே.. பூ பூ புளியம் பூ, ஆத்திச்சூடி, அறம் செய்ய விரும்பு, ஏ பார் ஆப்பிள், ஏ! மக்கு மாடசாமி, ஏ பார் ஆப்பிள்..கொலக்கட்டையே, கொலக்கட்டையே ஏன் வேகலை? என்று பள்ளியின் ஒவ்வொரு மூலையிலும் மழலையரின் சத்தம் ஒலித்துக் கொண்டிருக்கும் பொழுதே மணி அடித்து தொடங்குகின்றது பிரம்புபதேசம். பின்னனி இசையின் ரிங்காரத்துடன் வண்ண வண்ணமாய் சிறகடித்து வட்டமிட்டு, அங்கிருக்கும் நாற்காலியில் வந்து உட்காருகின்றது, ஓர் வண்ணத்துப் பூச்சி. சற்றே யோசித்துவிட்டு கூட்டத்தைப் பார்த்து உங்கள் வீடுகளில் 3 வயதுள்ள குழந்தைகள பார்த்திருக்கீங்களா? அவர்களுடைய செயல்பாடுகளையெல்லாம் கவனித்திருக்கின்றீர்களா?. எப்பொழுதும் துறு, துறு வென்று, ஏதேனும் செயல்பாடுகளிலோ அல்லது கேள்விகளை கேட்டுக் கொண்டோ தங்கள் உலகில் முழுவதும் மகிழ்ச்சியாய் மூழ்கி இருபார்கள். ஆனால் இந்த பள்ளிக் கூடங்களெல்லாம் என்ன செய்கின்றன? வாயை மூடு, கையை கட்டு, ஓர் இடத்தில் அமைதியாய் உட்காரு என்றே கட்டளையிடுகின்றனர். இந்த மாதிரி கட்டளைகள் தேவை தானா என்று கேட்டுக் கொண்டே இருக்கையிலிருந்து எழுந்து சிறகடிக்கின்றது.

## கல்வியாளர்களின் கேள்வி

ஒவ்வொரு அவமதிப்பும் ஓர் மரணம், மரணத்தை விட மோசமானது 'வலி' என்கின்றது மருத்துவம். அவமதிப்பும் அப்படித்தான். மரணத்தை விட மோசமானது. கூப்பாடு போட்டு இறுதியில் வரும் மரணங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன. ஆனால் சத்தமில்லாமல் வீடுகளிலும், வகுப்பறைகளிலும் நிகழும் மரணங்களை எப்பொழுது நாம் வாசிக்கப் போகின்றோம், என்கிற பேராசிரியர் மாடசாமி அவர்களின் கேள்வியை நம்மால் சகஜமாக கடந்துவிட முடியுமா? என்று கேட்டுக் கொண்டே அங்கும் இங்கும் பறக்கின்றது, நம் மனங்களின் எதிரொலியாக பட்டாம்பூச்சியின் குரல். குழந்தைகளை எப்படி அணுகவேண்டுமென்று ஷோனஸ் கோட்சா ரொம்ப அழகா சொல்லியிருப்பாரு, குழந்தைங்க எடை குறைந்தவுங்க, பலகீனமானவுங்க. குழந்தைகளோட கண்ணுக்கு நாம எப்படித் தெரியுவோம்னு நாம் எப்பொழுதாவது யோசித்து பார்த்திருப்போமா? அங்கிருக்கும் நாற்காலியின் மீது ஏறி, கை உயர்த்தி நாம பெரிசு, உடனே கீழே இறங்கி குழந்தைங்க சிறிசு என்று செய்து காட்டுகின்றது. அவங்கள அணுகிறதுக்கு நமகிட்ட இருக்கின்ற ஒரே ஒரு வழி நாம மண்டியிட்டு பேசுவது மட்டும் தான் என்று கூறிவிட்டு ஒரு ஊரல ஒரு பள்ளிக் கூடம், அந்த பள்ளிக்கூடத்தப் பாருங்க என்று சொல்லிக் கொண்டே அங்கிருந்து நகர்ந்து செல்கின்றது வண்ணத்துப் பூச்சி.

## பிரம்பு வாத்தியார் வருகை

டிங் டிங், டிங் டாங்கி டிங், டிங் டாங் டிங் டாங், டங் டாங்கி டாங், துள்ளிக் குதிக்கலாமே, நாம துள்ளிக் குதிக்கலாமே என்ற பாடல் வரிகளுக்கேற்ப வகுப்பறைக்குள் துள்ளி குதித்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் திடீரென்று ஏ பிரம்பு வாத்தியார் வாராருடி என்று சொல்லி விடு இருக்கையை நோக்கி ஓடுகின்றனர். பின்னனி இசை இசைப்பதற்கேற்ப வாத்தியாருக்கே உரிய விரைப்புடனும் தோரணையுடனும் நடந்துவரும் பரமசிவம் (பிரம்பு வாத்தியார்) அங்கு மேசையின் மீது வைத்திருக்கும் பிரம்பை கர்வத்துடன் பார்க்கின்றார். பின்பு அதை கையில் ஏந்தி தனக்குத் தானே இந்த உத்தியோகம் இவ்வளவு அற்புதமானதா? இவ்வளவு அருமையானதா? இதுக்கு இவ்வளவு மவுசு, மரியாதை. வாத்தியார்! வாத்தியார்! என்ற அகந்தையுடன் பேசிக்கொள்கின்றார். பின்பு பள்ளிநிகழ்வு ஒன்றில் தான் பேசியதை நினைவு கூறுகின்றார். "அகரம் கற்றுக் கொடுத்து சிறுவர்களை சிகரம் ஏற்றுகின்ற ஆசிரியர்கள், பிள்ளைகளின் மூன்றாவது கண் ஞானக்கண். பிள்ளைகளின் பிறவிக் கண்களுக்கு முழு வெளிச்சமும், அர்த்தமும் வழங்குவதே,

இந்த மூன்றாவது கண் தான். இந்த ஞானக்கண் தான், பிள்ளைகளுக்கு மொழிச் சாளரத்தை விரியத் திறந்து பிரபஞ்சத்தையே உணர வைக்கிறது.” ஒவ்வொரு வரிகளுக்குமிடையே கைத்தட்டும் சத்தம் விண்ணை பிளக்கின்றது. கை தட்டும் சத்தத்தின் பூரிப்பிலே கண் திறந்து, தன் இரு கைகளையும் வானுக்கும் பூமிக்கும் விரித்து இந்த உலகமே வாத்தியார் என்ற சொல்லுக்கு கட்டுண்டு கிடப்பது போல “நான் வாத்தியார்” என்று மீண்டும் அழுத்தமாக தன்னை நோக்கி கூறிக்கொண்டிருக்கும் பொழுதே அங்கு வகுப்பறைக் காட்சிகள் அரங்கேறுகின்றன.

## பிரம்பு வாத்தியாரின் கண்டிப்பான வகுப்பறை

பிரம்பு வாத்தியார் வகுப்பறை என்றால் எப்படியிருக்கும் என்பதற்கேற்ப மாணவர்கள் வாயில் கை வைத்தவாறே கப்சிப் என்று அமைதியாக பயத்துடன் உட்கார்ந்திருக்கின்றார்கள். நாளைக்கு சுதந்திர தினமில்லையா? நமக்கெல்லாம் எப்படி சுதந்திரம் கிடைத்தது? “மகாத்மா காந்தி! மகாத்மா காந்தியடிகள் தான் நமக்கெல்லாம் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தாரு.” எப்படி? அகிம்சை, அகிம்சை முலமாதான் நமக்கெல்லாம் மகாத்மா காந்தியடிகள் சுதந்திரம் வாங்கிக் கொடுத்ததனால் தான் நாமெல்லாம் இப்போ இவ்வளவு சுதந்திரமா இருக்கோம் என்று கையைக் கட்டி வாயில் கைவைத்து உட்கார்ந்திருக்கும் குழந்தைகளிடம் கை நீட்டி கூறுகின்றார். சரி ஹோம் ஒர்க் கொடுத்தேனே முடிச்சுடீங்களா? முடிச்சுட்டோம் சார் என்று மெல்லிய சத்தத்தில் பதில் வருகின்றது. முதலில் உட்கார்ந்திருக்கும் குழந்தையைப் பார்த்து உனக்கென்ன ஹோம் ஒர்க்? என்று கேட்க, 3 ஆம் வாய்ப்பாடு சார் என்றது சரி சொல்லு என்று சொல்கின்றார். உடனே அந்த மாணவி எழுந்து ஓர் மூனு..மூனே என்று சொல்லி முடித்தவுடன் வாசலில் இருந்து சார், சார் என்று சத்தம் போட்டுக் கொண்டே உள்ளே வருகின்றான் ஓர் மாணவன்.

என்னடா இன்னைக்கும் லேட்டா என்று வத்தியார் அதட்ட, இல்ல சார் எங்க ஊர்ல யாருக்கோ கல்யாணம் ஆச்சாம், அதனால் எங்க அம்மா லேட்டா ஸ்கூலுக்கு போனு சொல்லுச்சு சார், அதனால தான் சார் என்று சொன்னதும், ஏன்டா வந்தது லேட்டு, அதுக்கு காரணம் சொல்லுரியா, இன்றைக்கு நான் உனக்கு கொடுக்கப்போகின்ற தண்டனையில இனிமேல் நீ லேட்டாவே வரக்கூடாது என்று கோபத்துடன் அவனை உட்கார வைக்கின்றார். நோட்டை எடுத்து இனிமேல் லேட்டா வர மாட்டேன் என்று 100 முறை எழுது என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே வகுப்பில் சிரித்துக் கொண்டிருக்கும் இன்னோரு மாணவியை எழுப்பி, உனக்கென்ன சிரிப்பு, 3 ஆம் வாய்ப்பாடு சொல்லு என்கின்றார். அந்த மாணவி வாயிலிருந்து கையைக் கூட எடுக்காமல் சொல்ல முயற்சிக்கின்றார், ஆனால் பயத்தில் வாய்ப்பாடு வராததால், வாய்ல என்ன கொலுக்கட்டையா வச்சிருக்க சத்தமா சொல்ல மாட்ட? போடு, முட்டி போடு என்று முட்டி போட வைக்கின்றார் அந்த மாணவியை.

## பிரம்பு வைத்தியம்

அருகிலிருக்கும் சின்னச்சாமியை எழுப்பி, டே! சின்னசாமி நீ சொல்லு என்றதும் ஒரே பதற்றத்துடன் எழுந்திருக்கும் சின்னசாமி அருகில் இருக்கும் மாணவியைப் பார்த்துக்கொண்டே அவள் சொல்லச் சொல்ல தானும் சொல்ல முயற்சிக்கின்றான். இதைப் பார்த்துவிடும் பிரம்பு வாத்தியார் சின்னச்சாமியை தலையிலே கொட்டுகின்றார். வலி தாங்காத சின்னச்சாமி கீழே விழுந்து முட்டி போட்டு அழுகின்றான். அங்கிருந்து நகர்ந்து கரும்பலகையில் 3 ஆம் வாய்ப்பாட்டை எழுத ஆரம்பிக்கின்றார். அப்பொழுது மாணவர்களிடமிருந்து வந்த பேச்சு சத்தத்தால் கோபமடையும் வாத்தியார், மிகுந்த ஆவேசத்துடன் பிரம்பை எடுத்து முன்னாள் இருக்கும் மாணவியை அடிக்க ஆரம்பிக்க, அவள் சார் நான் இல்ல சார் நான் இல்ல சார் என்று கத்த அங்கிருந்து சின்னசாமியை நோக்கி நகர்கின்றார். தன்னை நோக்கி வருவதைப் பார்த்ததும் நடுங்கி எழுந்து சார், சார் என்று கத்துகின்றான். அடி தாங்கமுடியாமல் ஒரு கட்டத்திற்கு மேல் சார் நிறுத்துங்க, நிறுத்துங்க இனிமேல் உங்கள் பள்ளிக்கூடமும் வேணாம், உங்க அடியும் வேணாம் என்று பள்ளியை விட்டே ஓடி விடுகின்றான். போ, போயிரு என்று ஆவேசத்துடன் கத்தும் வாத்தியார் “அடியாத



மாடு படியாது, பிரம்புதான் பிள்ளைகளின் போதிமரம்” கூப்பாடு போடுகின்றார்.

வகுப்பறையில் ஓர் மையான அமைதி நிலவும் போது சிறகடித்து வரும் வண்ணத்துப் பூச்சி, சுதந்திர நாட்டில் சுக்குநூறாய் உடைந்து வகுப்பறையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் குழந்தைகளை ஒவ்வொருவராக நோக்கியதில் தன்னுடைய வண்ணமிழந்து காணப்படுகின்றார். “நமது கல்வி கட்டளைகளும் தண்டனைகளும் சிறைச்சாலைகளுக்கு ஒப்பாக இருக்கின்றன. கல்வி ஒருவகை ஒடுக்குமுறையாகத் தான் இருக்கின்றது. பலமான ஆசிரியர்களிடமிருந்து பலவீனமான மாணவர்களை நோக்கி அதிகாரம் பாய்ச்சுவதை பாருங்கள்.

“ஒரு ஊர்ல ஒரு பள்ளிக்கூடங்க, அந்த பள்ளிக்கூடக் கதையைக் கேளுங்க” கோலெடுத்தா ஆடுகின்ற குரங்கைப்போல, வாளெடுத்தா வீழுகின்ற படையைப் போல, பிள்ளைக்கூட்டம் பரபரக்குது.” என்று பாடும் போதே குழந்தைகளும் சேர்ந்து பாடுகின்றனர். அப்பொழுது பிரம்பு வாத்தியார் அங்கு பிரம்பைக் கையில் ஏந்தி அதிகாரத் தோரணையில் சிலை போல நின்று கொண்டிருக்கின்றார். அவரை நோக்கி பிரம்புகள் மனிதனை உருவாக்குமா? பயங்களால் படிப்புகள் அரங்கேறுமா? என்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டே சிறகொடிந்த பூச்சியைப் போல் சிறகடிக்க முடியாமல் தவிக்கும் கனத்த இதயமாக நம்மையும் சேர்த்து சோகத்தில் ஆழ்த்திவிட்டு பறந்து விடுகின்றது, வண்ணத்துப் பூச்சி.

## குழந்தைகளை சூழலோடு ஒன்றவிடாத நிலை

பள்ளியறையை விட்டு வாய்க்கால் கரையை நோக்கி நகர்கின்றது காட்சி. காலை நேரத்தில் கந்தசாமி வாய்க்கால் கரையோரத்தில் குருவிச் சத்தங்களைக் கேட்டுக் கொண்டிருக்கும் வேளையில் வழக்கத்திற்கு மாறாக இன்று வாய்க்காலில் கொக்குகளின் கூட்டம் அதிகமாக இருப்பதைக் கண்டு குசியாகிவிடுகின்றான். இன்றைக்கு அதிக மீன்களை வேட்டையாடி விடவேண்டும் என்ற எண்ணத்தோடு தூண்டில் ரெடி செய்து மிகுந்த உற்சாகத்தோடு வாய்க்காலில் வீசுகின்றான். அந்த நேரம் பார்த்து பல் தேய்த்துக் கொண்டே அங்கு வரும் பிரம்பு வாத்தியார், வாய்க்காலில் குனிந்து வாய் கொப்பளிக்கும் போது யாரோ ஒரு சிறுவன் மீன் பிடிப்பதைப் பார்க்கின்றார். மேலே நிமிர்ந்து பார்க்கும் பொழுதுதான் அது தன் மாணவன் போல் தெரிகின்றதே என்ற சந்தேகத்தோடே டேய் நீ ராக்கம்மா மகன் கந்தசாமி தானே என்று கோபத்தோடு கேட்கின்றார். சற்றும் எதிர்பார்க்காத கந்தசாமி, சார், சார், என்னும் போதே, பள்ளிக்கூடம் போற நேரத்துல இங்க என்னடா வேலை உனக்கு என்று அவன் காதை பிடித்து கிள்ளுகின்றார். வலி தாங்காமல் துடிக்கும் கந்தசாமி அவர் பிடியிலிருந்து விடுபட முயற்சித்தாலும் முடியாமல் தவிக்கின்றார்.

என்னைப் பற்றித் தெரியுமில்ல? படிச்சாத் தானே ஆபிஸராக முடியும், இனிமேல் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்க வருவியா? வருவியா? என்று கத்துகின்றார். அதைக் கண்டுகொண்டிருக்கும் வண்ணத்துப் பூச்சி, தண்ணீர் ராஜ்யத்திற்கு மீன் தான் சக்கரவர்த்தி, அதற்கு மரம் ஏறுவதற்கு சொல்லிக் கொடுத்தால் கடைசி வரை தன்னை முட்டாளாகக் கருதிவிடாதா?'' என்று கேட்டுக் கொண்டே பறந்து விடுகின்றது.

## கிரீடம்

இது நடந்து பல வருடங்களுக்குப் பின்பு அதே கந்தசாமி பட்டாளத்தில் சேர்ந்து விடுப்புக்காக ஊருக்கும் வரும்பொழுது காஷ்மீரில் தன் பிரம்பு வாத்தியாருக்காக பனிகாலங்களில் பயன்படுத்தும் சால்வை ஒன்றை வாங்கி வருகின்றான். ஊருக்கு வந்ததும் பிரம்பு வாத்தியார் வீட்டிற்கு வருகின்றான். பேப்பர் படித்துக் கொண்டிருக்கும் வாத்தியார் கதவை யாரோ தட்டுவதால் தன் மனைவியை யார் என்று பார்க்கச் சொல்கின்றார். வந்திருப்பது ராக்கம்மா மகன் கந்தசாமி என்று அறிந்ததும், வாடா கந்தசாமி ஏதோ பட்டாளத்துல இருக்குறதா கேள்விப்பட்டேன், வா உட்காருநீயா என்று கேட்டுவிட்டு, ஆசிரியர் என்ற கர்வத்தால் நாற்காலி கொடுக்காமலே இருக்கின்றார். பின்னர் டீ, காபி எதும் சாப்பிடுகின்றீயா என்று கேட்டுக் கொண்டே தன் மனைவியை நமட்டாகப் பார்த்து வேண்டாம் என்று கண் அசைக்கின்றார். இதையெல்லாம் அறியாத கந்தசாமி தன் ஆசிரியருக்காக காஷ்மீரிலிருந்து வாங்கிவந்திருக்கும் சால்வையை எடுத்து, சார் அன்றைக்கு நீங்க அடிச்ச அடினால தான் இன்றைக்கு நான் பட்டாளத்துல நான் நல்ல நிலமையில இருக்கேன் என்றதும், அப்படியே பிரம்பு வாத்தியாரின் தலையில் கிரீடத்தைத் தூக்கி வைத்தது போன்று ஒரு பிரமிப்பு. சால்வையை தன் மீது போர்த்தியதும் தனக்கும், தன் பிரம்பிற்கும் கிடைத்திருக்கம் மிகப்பெரும் கவுரவமென்று கருதி கந்தசாமியை வாழ்த்தி வெறும் கையுடன் அனுப்பினார்.

கந்தசாமி சென்றதும் அங்கு அமர்ந்திருக்கும் தன் மனைவியை ஓர் இறுமாப்புடன் பார்க்கின்றார். அவர் மனைவியும் மனதுக்குள்ளே கடிந்து கொள்கின்றார். அப்பொழுது அங்கு வரும் வண்ணத்துப் பூச்சியும் பிரம்பு வாத்தியாரைப் பார்த்து ஏளனமாக பத்தாம் வகுப்பு முடிச்சுட்டு வேலைக்கு எதும் போகாம, வேலை வாங்க ஏதும் காசில்லாம, வறுமைப்பிடி தாங்காம்ம அம்மாவோட வகுத்தெரிச்சலும் தாங்காம வாலிபபுள்ள எங்கேயோ ஓடிப்போயிட்டான். அப்போது திருச்சியில வெயிலு கொடுமை தாங்காம அங்க நடந்த பட்டாளத்துக்கு ஆள் எடுக்கும் முகாமுக்குப் போனப்ப பட்டாளத்துக்கு தேர்வாயிட்டான். இதுலென்னங்க பிரம்பு வாத்தியாருக்குப் பெருமை என்று கேட்டுவிட்டுச் செல்கின்றது.

## கல்வி அதிகாரியின் கண்டிப்பு

அடுத்ததாக பிரம்பு வாத்தியாரின் வகுப்பறைக்கு வரும் கல்வி அதிகாரியிடம் மாணவர்களின் செயல்பாடுகளை காண்பிக்க முயற்சிக்கும் பொழுது சின்னசாமியின் செயல்பாடுகளை மறைக்கின்றார். ஆனால் கல்வி அதிகாரி சின்னசாமியின் ஓவியத்தையும், விளையாட்டுத் திறமையையும் பாரட்டுகின்றார். இதனை விரும்பாத பிரம்பு வாத்தியார் சற்று முகம் சுழித்து நிற்கும் பொழுது தலைமையசிரியர் நிமிடத்திற்கு ஒருமுறை பிரம்பு வாத்தியார், பிரம்பு வாத்தியார் என்று அழைக்கின்றார். இதை எதிர்க்கும் அதிகாரி, பிரம்பு வாத்தியாரின் செயல்பாடுகளை கண்டிக்கின்றார். மாணவர்களை கனிவுடன் அணுகுமாறு அறிவுறுத்துகின்றார். இந்த விசயம் பிரம்பு வாத்தியாரை துருத்த ஆரம்பித்தது. நான் அடிச்சதுனால தான் இன்னைக்கு கந்தசாமி ஆபிஸர் ஆகியிருக்கான். அவன் போர்த்திய சால்வை எனக்கும், எனது பிரம்புக்கும் கொடுத்த அங்கிகாரமில்லையா. இதெல்லாம் அவுங்களுக்கு எங்க தெரியப்போகின்றது என்று கடிந்து கொள்கின்றார்.

## சின்னச்சாமிகளின் ஏக்கங்கள்

பத்தாவது தடவையாக விரித்துப் பார்க்கின்றார். பிடிபடாத பெருமை. கந்தசாமி புகழ்ந்த புகழ்ச்சியில் அவருள் புதைந்து கிடந்த சாதனைகளெல்லாம் உயிர் பெற்று ஊர்வலம் வர, ஊருக்குள் வலம் வருகின்றார். அப்பொழுது அங்கு உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும்

ஊர் பெரியவர்கள், பெண்கள் என்ன சார், மார்கழி மாசம்னு நெனைச்சீங்களா? ஆடி மாசத்துல உல்லன் சால்வையை மூடிக்கிட்டு வாரீகளே? என்று கேட்கின்றனர். இவர் அள்ளி விட ஆரம்பிக்கின்றார். பிரம்பின் அருமை, பட்டாளத்தான் கந்தசாமியிலிருந்து, டாக்டர், வக்கீல் என்று வண்ணாரப்பேட்டை கடை முதலாளி வரைக்கும் பேசுகின்றார். அந்த நேரம் பார்த்து அங்கு வரும் சின்னச்சாமி அங்கு வருகின்றார். எங்கய்யாவுக்கு நான் ஒரே புள்ள. என்ன பாடு பட்டாச்சும் என்னைப் பெரிய படிப்பு படிக்க வைக்கணும்னு அவருக்கு ரொம்ப ஆசை. ஆனால் ஒருநாள் வகுப்பில் இன்னொருவன் பேசினதற்கு பிரம்பு வாத்தியார் என்னை அடித்த அடியால் வலிதாங்க முடியாமல் ஒடி வந்து மம்பட்டியைத் தூக்கினவன் தான். இந்தா.. கூலிக்காரனா இன்னைக்கும் மம்பட்டிப் பொழப்புதான். என்னை மாதிரி ஓடிப்போன பயக எத்தனை பேரோ? என்று கண்ணீர் மழ்க சொல்லுகின்றான் சின்னச்சாமி. இதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு ஒரே சிரிப்பு. பிரம்பு வாத்தியாருக்கும் உயிரில்லாத சிரிப்பு. உள்ளுக்குள் சின்னச்சாமியின் அனுபவம் ஊசியாகப் பாய்ந்து குத்துகின்றது. ஆசிரிய மனம் குற்ற உணர்வில் கூசுகின்றது.

## முகமூடி அகற்றம்

தன்னைச் சுற்றி இன்னும் எத்தனையோ சின்னச்சாமிகள் “படிக்கவிடாம துரத்தி அடிச்ச பாவினு” ஏசுவதாக் மனசாட்சி வேதனை தாளாமல் மௌன அலறலாய் அலறுகின்றார். கொடுமையான அழுக்கு முகங்களுக்குள் போய் ஒளிஞ்ச்சுக்கிறீயா நீ? எப்பவுமே ஆசிரியர்கள் தான் பேசனுமா? ஏன் மாணவர்கள் சொல்லுறத ஆசிரியர்கள் கேட்கக் கூடாதா? ஆசிரியர்களுக்குத் தான் எல்லாம் தெரியும்னு இல்ல, பிள்ளைகளுக்கும் எல்லாம் தெரியும், அவர்களுக்கும் ஓர் வாய்ப்பு கொடுங்க? வகுப்பறையில் பிள்ளைங்க ஏன், எதற்குனு கேள்வி கேட்குற சுதந்திரத்த கொடுத்துப் பாருங்க சார். வகுப்பறையில் வாத்தியார் கையில இருக்கின்ற அதிகாரம் வன்முறைக்குச் சமம் சார் என்று தனது பழைய மாணவர்கள் தனக்குள் வந்து பேசுவதாகத் தோன்றுகின்றது. கொடூரமான தனது முகமூடிக்குள் துடிக்கின்றார். அவர் மேல்



கிடக்கும் சால்வை முள்ளாக உறுத்துகின்றது. வேக்காடாக புழுங்கி வியர்க்கின்றது. சால்வையின் சுமை தாங்காமல் அவர் திணறி, அவர் கையில் இருக்கும் பிரம்பையும் ஒடித்து எறிகின்றார்.

## பரமசிவம் வாத்தியார்

அடுத்த நாள் வகுப்பறைக்குள் மாணவர்கள் வாத்தியார் வருவது கூடத் தெரியாமல் பந்தைத் தூக்கி எறிந்து விளையாடிக் கொண்டிருக்கின்றனர். மாணவர்களின் மகிழ்ச்சியான விளையாட்டைத் தானும் பார்த்து மகிழ்கின்றார். மாணவர்கள் நான் இன்னும் பழைய பிரம்பு சார்னு நினைச்சுகிட்டு இருக்காங்க ஆனால் உங்களுக்கு நல்லாத் தெரியும், நான் பிரம்பு வாத்தியார் இல்ல, பரமசிவம் வாத்தியார்னு. அடிச்சா தான் படிப்பு வரும், படிச்சா தான் ஆபிசராக முடியும்னு நினைச்சுட்டு இருந்தேன். ஆனால் அந்த நினைப்புகளெல்லாம் இப்போ சுக்குநூறாகிப் போச்சு. மாணவர்களின் மனதறிந்து கொடுப்பது தான் கல்வி, மாணவர்களுக்கு இணக்கமான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுப்பது தான் கல்வினு இப்போ நான் உணர்ந்துட்டேன் என்று பரமசிவம் வாத்தியார் பேசுவதைப் பார்த்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் மகிழ்ச்சியில் குதிக்கின்றனர். அவர்களோடு சேர்ந்து பரமசிவம் வாத்தியாரும் குதிக்கின்றார். “வா வா வா. உங்கள் எண்ணம் பேச, வா வா வா புது றெறக்கை வீச” என்று பாடி ஆடி சிறகடித்துப் பறக்கின்றனர்.

---

**Team Thisaimaani**

# ரோஸ் - நாடகம்

"பார்த்தேன் மறந்தேன்; கேட்டேன், சிறிது நினைவில் இருந்தது!

ஆனால் செய்து பார்த்தேன், நினைவிலேயே இருக்கிறது!!"

என்ற பொதுமொழி குழந்தைகள் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் பொருந்தும் என்பது உண்மைதானே. இதை மறந்து குழந்தைகளை ஓரிடத்தில் அமரச்செய்து போதிக்கும் கல்வியால் பயன்தான் என்ன? பாடம் நடத்துவது ஆசிரியரின் வேலை அல்ல. அதற்கு ஸ்மார்ட்போர்டு, மொபைல் ஆப், புத்தகம்ஞ்போன்ற பல இருக்கின்றன. இந்த இயந்திரங்களில் ஒன்றா ஆசிரியர்? சற்று சிந்தித்தால் போதும், நம் குழந்தைகள் கல்வித்தரத்தில் தாமாக முன்னேறுவர். எந்தக்குழந்தைக்கு எது வேண்டும் என அறிந்து வழிகாட்டுவது மிகவும் அவசியம். பொங்கிவரும் அவர்களின் ஆர்வத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி வழிகாட்டி உறுதுணையாக நாம் செயல்படும் பொழுது அங்குக் கற்றல் எளிதாக நிகழும். செயல்முறைக் கல்வி மட்டுமே குழந்தைகளின் கல்வித்தரத்தை மேம்படுத்தும்.

திரு. ஆயிஜா நடராசன் அவர்கள் 'ரோஸ்' மூலம் இதை உறுதிபூர்வமாக உணர வைக்கிறார்.

ஒரு குழந்தை காலை எழுந்தது முதல் ரோஷாவைப் பார்க்க வேண்டும், அதைத்தொட வேண்டும் என்று ஏங்குகிறது. பல கேள்விகள், சிந்தனைகள், கற்பனைகள் அந்தக் குழந்தையின் சிறிய மூளையில் ஆரவாரம் செய்கின்றன. (பெரியவர்களாய் இருந்தால் உடனே என்ன டென்ஜன் என்று பெருமைப்பட்டுக் கொள்வோம்) குழந்தை என்ன செய்யும்? பலகேள்விகள் அக்குழந்தையின் மனதில்ஞ் பதில் எங்கே? பெற்றோரிடமும் இல்லை, நம்மிடமும் இல்லை என்பது தான் உண்மை.

காலையில் எழுந்த அந்தக்குழந்தையைப் பெற்றோர் அனுமதித்திருந்தால் 'ரோஷாப்பூ' பற்றிய அக்குழந்தையின் கேள்விகளுக்கு மிக எளிதில் பதில் கிடைத்திருக்கும். தொடர்ந்து பள்ளியில் ஒரு ஆசிரியராவது அக்குழந்தையின் கற்றுக்கொள்ளும் ஆர்வ பசிக்கு உணவு அளித்திருந்தால் அக்குழந்தைக்குத் தேவையான பதில் கிடைத்தவுடன் அக்குழந்தை உணர்ந்திருக்கும், அது தன் வாழ்நாளில் மறக்க



முடியாத புரிதலாக இருந்திருக்கும், உண்மையான கற்றல் நடைபெற்று இருக்கும். அதை விடுத்துப் பாடத்திட்டம் முடிப்பதால் பயன் தான் என்ன என்பதை ஒவ்வொருவரும் உணரும் போது...நம் கற்றல் முறைகளை மாற்றும் பொழுது நாம் சரியான ஆசிரியராகக் குழந்தைகள் முன் நிற்கத் தகுதி உடையவராவோம். (மாறுவோம்/மாற்றத்தைக் கொண்டு வருவோம்). ஒவ்வொரு ஆசிரியரும் வந்து ஒவ்வொருவராக அக்குழந்தையைக் குழப்புவதைத் தவிர்ப்போம்.

குழந்தைகளுக்கான இடம் கொடுத்து, அவர்களின் கேள்விகளுக்கு விடைகளும், பொறுப்பும், கடமையும் நமக்கு உண்டு என்பதை உணர்ந்து செயல்படுவோம். பலனை எதிர்பார்க்காமல் முழுமனதுடன் ஈடுபடக் கல்வித்தரம் உயரும்.

## இக்கதையின் நாடக வடிவம்

## கதை நாயகி அறிமுகம்:

ஏய்! தேவி எழுந்திரு. நேரமாயிடுச்சி....எழுந்து தொலை. இன்னும் ஹோம்வொர்க்கே நிறைய மிச்சமிருக்கு. என்ற வழக்கமான காலை விடியலாக அன்றும் கதை நாயகியான தேவி

# நாடகம் பற்றி

பள்ளிக்கூடம் - மாணவன் - பெற்றோர் இவை மூன்றுக்குமான புரிதல் இன்றுவரை நிகழ்ந்திருக்கிறதா என்றால் கேள்விக்குறியும் மௌனமுமே நம்மிடம் மிஞ்சும். இந்த அடிப்படையான புரிதல் சரியாக நிகழாததால் தான் நாம் பல்வேறு சமூகச்சிக்கலில் உழன்று கொண்டிருக்கிறோம். குழந்தைகளின் குழந்தைத் தன்மைகளையும், விளையாட்டுப்பருவங்களையும், படைப்புணர்வுகளையும் உன்னதமான கனவுகளையும் கொஞ்சமும் சூடுசுரணையற்று கொள்ளையடித்துக் கொண்டிருக்கும் மனசாட்சிகளற்ற குற்றவாளிகளல்லவா நாம்? வண்டியில் பூட்டப்பட்ட குதிரை ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட பாதை வழியே சென்று பொதியை ஏற்றியும் இறக்கியும் முடித்துவிட்டு இரவு கூடாரத்திற்குள் வந்து படுத்துவிடும். மறுநாள் அதே பாதை, அதே பொதி, அதே கூடாரம்ஞ் சுய சுதந்திரத்துக்கு வாய்ப்பற்ற குதிரை, கொள்ளைத்தின்று சாணமிட்டு ஒரு 'பொதிக்குதிரையாகவே' மாய்ந்துவிடும்.



நமது கல்விச்சூழல் அந்தக்குதிரையைப் போலவே பிள்ளைகளை மாய்த்து விடுகிறது. குதிரையின் வலியை, உணர்வை அக்குதிரையின் முதலாளிகள் உணர்வதில்லை. அதேபோல பிள்ளைகளின் கேள்விகளை, ஆசைகளை, கனவுகளை, புதுப்பார்வைகளை நாம் கவனமின்றி கடந்து செல்கிறோம். காகித ரோஷாக்களைக் கைதட்டி வரவேற்கும் நாம், நிஷ ரோஷாக்களைக் கண்கொண்டுகூடப் பார்க்க விடுவதில்லை. பாடத்திட்டத்தில் ரோஷாவின் பாகங்களைப் படம் வரைந்து மதிப்பெண்களை மையமிடும் நாம், ரோஷா குறித்த கவிதைக்கோ, பாடலுக்கோ, பேச்சுக்கோ செவிமடுப்பதில்லை. ரோஷாக்கள் நம்மைக் கைநீட்டி அழைத்துக் கொண்டு தான் இருக்கின்றனஞ் நமக்கு தான் தெரியவில்லை... கதைகள் சொல்கின்றனஞ் நமக்குப் புரியவில்லை. எதையோ நோக்கி, எங்கேயோ தொலைவதின் அவசர கதியில் நம் பள்ளிக்கூடங்கள் குழந்தைகளை நசுக்கிக்கொண்டிருக்கின்றன. இந்நிலையை ரோஸ் என்னும் இந்நாடகம் சித்தரித்துக் காட்டுகிறது.

**திரு. சந்தோஷ், நாடக இயக்குநர்**

என்ற இரண்டாம் வகுப்பு பயிலும் பள்ளிச் சிறுமியின் பொழுது புலர்கிறது. தேவி ஆழ்ந்த உறக்கத்தில் அவள் கனவில் அவள் வீட்டுத் தோட்டத்து ரோஷாச் செடியில் மிக மிருதுவான சிகப்பு நிறரோஷா மலர்ந்திருக்கிறது. அவள் தன் தோழிகளுடன் அதைத் தொட்டு உணர்ந்து மகிழ்ந்து கொண்டிருக்கிறாள்.

## தேவி வீட்டின் காலைப்பொழுது:

தூக்கம் வருதுப்பா… உலுக்காதிங்கப்பா. மறுபடியும் படுத்திட்டியா… எழுந்திரு.. ரெண்டாம் கிளாஸ் வந்தாச்சு இன்னும் படு சோம்பேறியா இருக்கியே…உன் வயசுல நான் அஞ்சு மணிக்கே எழுந்து ஆத்துக்குக் குளிக்கப் போவேன். அப்பா ஒரு நாள் ஆத்துக்குக் குளிக்கக் கூட்டிட்டுப் போங்கப்பா… டயம் ஆச்சு பேசி வேஸ்ட் பண்ணாத. வா.. வந்து பல் விளக்கு. அப்பா ஷன்னல திறந்து விடுங்கப்பா… எனக்கு எட்டல.. ஏய் பல் தேய்டி சாம்பிராணி. அப்பா நேத்திக்கு நம்ம ரோஷாச்செடியில ஒரு மொட்டு இருந்திசிப்பா… இன்னிக்கு பூத்திருக்குமில்ல…இன்னும் பிரஷ்ஜ பல்லுல வைக்கல.. நீ இன்னைக்கு உதைதான் வாங்கப்போற..

தேவி என்ன பண்ற…வா.. வந்து சத்துமாவு கஞ் சியக் குடி…அப்பா எனக்கு பிடிக்கலைப்பா… வாங்கித்தரத சாப்பிடு அதிகப் பிரசங்கி…

ஆர்… ஓ.. எஸ்..இ… அய்யோ எவ்வளவு மெதுவா எழுதறா பாரு..கடவுளே ஆறே முக்காலுக்கு ரோட்டில் இருக்கணும். இல்லேனா ரெண்டு பேருக்குமே ஆபிஸ்ஸுக்கு லேட் ஆயிடும். கொஞ்சமாவது புரிஞ்சிக்கோயேன்..அம்மா ..ட்டூ பாத்ரூம் வருதும்மா… எழுதிட்டு போ அடக்கிகோ…

அம்மா.. என்ன?…வண்டில ஏறு…சாயங்காலம் அஞ்சரைக்கு கராத்தே கிளாஸ் முடிச்சிட்டு ஸ்கூல் கேட்ல நில்லு. ஒழுங்கா ஹோம்வொர்க்க டைரியில் குறிச்சிட்டு வந்து சேரணும்..

அம்மா… அந்த ரோஷாம்மா….ஸ்கூல் விட்டு வந்ததும் பாத்துக்கலாம். இப்போ டயம் இல்லை. வண்டில ஏறு. மூவரும் ஒருவாராகக் கிளம்பி பள்ளிக்கும், அலுவலகத்திற்கும் செல்கின்றனர்.

## பள்ளி வகுப்பறை நிகழ்வுகள்:

காலைப்பேரவை- ரோஷாப்பூவின் நினைவூட்டல்

தேவிக்கு இவ்வாறாகத் தொடங்கிய காலைப்பொழுது பள்ளியில் தொடர்கிறது. வகுப்பில் அந்த வயதுக்குரிய குழந்தைத்தனத்துடன், அன்று புதிதாக வாங்கிய கலர் பென்சில் தொடங்கி அன்றைய ஹோம்வொர்க் செய்து முடிக்கப்பட்டதா என்று உரையாடல் சக மாணவர்களுடன் தொடர்கிறது. தேவி தன் வீட்டுத் தோட்டத்து ரோஷாப்பூவைப்பற்றி சக மாணவர்களுடன் உரையாடுகிறாள். ப்ரேயருக்கான மணி அடித்தவுடன் ப்ரேயருக்குச் செல்கின்றனர். அங்கும் அன்று ரோஷாப்பூ செய்வதைப்பற்றி



கற்றுக்கொடுக்க நிபுணர் வந்திருப்பதைப் பற்றிய செய்தி சொல்லப்படுகிறது. இங்கும் தேவிக்கு ரோஷாப்பூவைப்பற்றிய நினைவூட்டல் நிகழ்கிறது.

## ஆங்கில வகுப்பில் ரோஜாப்பூ

பள்ளியில் முதல் பீரியட் இங்கிலீஷ். இங்கிலீஷ் மிஸ் புத்தகத்திற்கு அட்டை போடாத ஒரு மாணவனைக் கண்டித்துவிட்டு லோட்டஸ் என்ற போயம் நடத்துகிறார். அதிலும் ரோஷாவைப்பற்றிய தகவல். அதைப்பற்றி உரையாடும்போது தேவி தன் தோட்டத்து ரோஷாவைப்பற்றிக் கூறுகிறாள். உடனே ஆசிரியை செடியில் ரோஷாவைப் பார்ப்பது பெரிதல்ல அந்த வார்த்தைக்கு ஸ்பெல்லிங் எழுதிப் பழகு என்று சற்று கடுமையாகக் கூறுகிறார்.

தமிழ் வகுப்பிலும் தன் வீட்டுத் தோட்டத்து ரோஷாவைப்பற்றி தேவி நினைவு கூறும்போது அவள் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்காமல் ஆசிரியரால் கடுமையாக விமர்சிக்கப்படுகிறாள்

## அறிவியல் வகுப்பும் ரோஜாவும்

அன்று சயின்ஸ் பீரியடிலும் ரோஷாவைப்பற்றிய பாடத்தில் பதியன் முறை பற்றிய கேள்விகளுக்கு ஆசிரியரிடமிருந்து சரியான விளக்கம் சொல்லப்படவோ அவள் வீட்டு ரோஷாவைப்பற்றிப் பேசவோ அனுமதிக்கப்படவில்லை.

ரோஷாவைக் கோடுகளாக மட்டுமே வரைய

## அனுமதிக்கப்பட்ட வகுப்பறை

டிராயிங் பீரியடிலும் ஆசிரியர் ரோஷாவைக் கரும்பலகையில் வரைகிறார். தேவி வீட்டு ரோஷாச் செடியில் ரோஷாப்பூ பூத்திருப்பதாக ஒரு மாணவன் கூற அது ஒரு அதிசயமா! என்று அவரும் அதைப்பற்றிப் பேச அனுமதிக்கவில்லை.தொடர்ந்து கராத்தே வகுப்பிலும் ரோஷாவைப்பற்றிய நினைவூட்டல்.

## ரோஜாவும் நேரு மாமாவும்:

இரவு ஹோட்டலில் நேரு மாமாவின் கோட்டிலும் ரோஷா தொடர்ந்துகொண்டே இருந்தது. இறுதியாக வீட்டிற்கு வந்தவுடன் ரோஷாவைப் பார்க்கச் செல்கிறேன் என்று அம்மாவிடம் கூறியபோது இருட்டில் வெளியே செல்ல



வேண்டாம் என்று கூறுகிறார். ஏக்கத்துடன் தூங்கிய தேவி, தூக்கத்தில் பேசுகிறாள். எனக்கு நம்ம செடியில பூத்த ரோஷாவ பாக்கணும்.

தேவியின் அம்மா எழுந்து பார்த்த போது தேவி நல்ல ஷரெத்துடன் பேசிக்கொண்டிருந்தாள். தேவியின் தாய், தந்தை இருவரும் தங்கள் செயல் குறித்த வருத்தத்தில் அழுகின்றனர்.

## ஆசிரியர் குறிப்பு

தமிழின் முன்னணி அறிவியல் வரலற்றாளரான ஆயிஜா நடராஷன் சிறுவர் இலக்கியத்திற்கான சாகித்ய அகாதமி விருது பெற்றவர். (2014 ம் ஆண்டுக்கான) இவரது நூல்களில் உள்ள எளிமையும், அங்கதம் கலந்த நகைப்புணர்வும் முக்கிய எழுத்தாளராக அறிய வைத்துள்ளது.

இன்றைய கல்விமுறையும், வாழ்க்கைச் சூழலும், வளர்ச்சி குறித்த மதிப்பீடுகளும் எப்படி கேள்விகளையே விரும்பாமலும்,தேடலை முன்வைக்காததுமாக இயங்கி வருகிறது என்பதையும் அறிவுசார் தேடல் உள்ள ஒரு குழந்தை எப்படி இந்தக் கல்விமுறையால் வதைபட வேண்டியிருக்கிறது என்பதையும் ஆசிரியர் ஆயிஜா இரா.நடராஷன் தனது 'ரோஸ்' என்ற கதை மூலம் முன் வைக்கிறார்.

## நாடக இயக்குநர் பற்றி

திரு. சந்தோஷ் அவர்கள், ஒரு நாடக நடிகர் மற்றும் இயக்குநர் ஆவார். நாடகம், திரையரங்குகலை, தத்துவம், உளவியல் மற்றும் இலக்கிய விமர்சனம் ஆகிய துறைகளில் ஆர்வமுள்ளவர். தற்போது அவர், நாடகம் மற்றும் திரையரங்கு கலையில், பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டப்படிப்பு பயின்று வருகிறார்.

புகழ்பெற்ற பல புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளில் பன்னிரண்டு ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறார். மேலும், பத்துக்கும் மேற்பட்ட தேசிய மற்றும் சர்வதேசக் கருத்தரங்கங்களில் தனது ஆய்வுக்கட்டுரைகளைப் பகிர்ந்திருக்கிறார்.

## மேடையில்,

அம்மா...... நித்யா.
அப்பா....... சுரேஷ்
தேவி....... கவிதா
தமிழ் ஆசிரியர், தலைமையாசிரியர்....... சாந்தகுமாரி
ஆங்கில ஆசிரியர்........ சாண்டல்ரோஸ்லின்
அறிவியல் ஆசிரியர்........ காயத்ரி
சக்தி....... சங்கரபாண்டியன்
யோகா.....சசிரேகா
பிரியா........ சண்முகப்பிரியா

குழந்தைகளைச் செவிமடுப்போம்!

அவர்களின் உணர்வுகளை மதிப்போம்!!

## நாடகம் குறித்த ஆசிரியர்களின் கலந்துரையாடல்

நாடகத்தில் நடித்த அனைத்து ஆசிரியர்களும் சிறப்பாக நடித்தனர். ஆசிரியர் இரா. நடராஷனின் கதையை அவர் பாணியிலேயே நகைச் சுவை கலந்த தாக்கத்துடன் திறம்பட நாடகமாக்கப்பட்டுள்ளது. நாடகம் நம் ஒவ்வொரு வீட்டிலும் அன்றாடம் நடக்கும் நிகழ்வுகளை நம் கண் முன்னே படம் பிடித்துக் காட்டியது. பள்ளி மாணவர்களை மட்டுமல்லாமல் நம் குழந்தைகளை நாம் சரிவரக் கவனிக்கத் தவறிவிட்டோமோ என்ற குற்றவுணர்வையும் ஏற்படுத்துகிறது.

திரு. ஷே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், பங்குபெற்ற ஆசிரியர்கள் அனைவரும் மிகச் சிறப்பாக நடித்தனர் என்றும் நாடகம் பயிற்றுவிக்கும் பள்ளி ஒன்றை அசிம் பிரேம்ஷி அறக்கட்டளை தொடங்கலாம் என்று பரிந்துரை செய்தார். சிறந்த நாடக எழுத்தாளர்.திரு. Bertolt Brecht (German Drama Writer)அவர்களின் நாடகங்களைப் படிப்பதற்கும் அவற்றிலிருந்து நுட்பங்களைக் கற்றுக்கொள்ளலாம் என்றும் ஆலோசனை கூறினார். மேலும், கலிலியோ என்ற அவரின் மிகச்சிறந்த நாடகப்படைப்பை நாடகமாக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

மாறுவோம்! மாற்றத்தைக்கொண்டு வருவோம்!



**ம. சாந்தகுமாரி**
தலைமையாசிரியர்
அ.தொ.ப. முருங்கப்பாக்கம்

NOTES

NOTES





Azim Premji Foundation

ROLE OF THE SLOW LEARNERS


மேடையில் திசைமாணி




மேடையில் திசைமாணி











AZIM PREMJI FOUNDATION
#5 Nessa Illam, PSCB Nagar, Opp. RTO, Puducherry - 605 004.
www.azimpremjifoundationpuducherry.org, www.azimpremjifoundation.org

Send us your feedback :
thisaimaani@azimpremjifoundation.org
✆ 9500400446 - 8220001765

MOTHER'S GRACE 0413 2336204